வரு.74 இல. 18 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

2022 மே 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை — May 01 Sunday, 2022

24 பக்கங்கள் 80/-






02
IMF நிதியின் ஒரு பகுதி நிவாரணத்துக்கு



12
இது இடைப்பட்டியை இறுக்க வேண்டிய காலம்



13
சாதாரண தேமல் கூட ஆபத்தில் முடியலாம்



2022 உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடர்:
24
இதுவரை 29 நாடுகள் தகுதி!

## சவால்களை வெற்றிக் கொள்ள ஒன்றிணைந்து செயற்படுவோம்

### மே தின செய்தியில் ஜனாதிபதி கோட்டாபய



நாடு இன்று எதிர்கொண்டுள்ள சவாலை வெற்றிகொள்ள அனைவரும் ஒன்றிணைந்து மக்களுக்காக ஒருமித்த கருத்துக்கு வருமாறு இன்றைய தொழிலாளர் தினத்தில், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் நான் மீண்டும் ஒருமுறை அழைக்கிறேனென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது மே தின செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார்.

உழைக்கும் மக்களுக்காக அரசியலை 04

## பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் சேவை

### மே தினத்தில் பிரதமர் தொழிலாளருக்கு வாழ்த்து



நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றாக கைக்கோர்த்து, முதலில் இச்சவாலை வெற்றி கொள்ள வேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது மே தின செய்தியில் தெரிவித்துள்ளார். பிரதமரின் மே தினச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 04

## கறுப்பு மேதினமாக கொண்டாடும் நிலையில் தொழிலாளர்கள்

### மே தின செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடியான மற்றும் துயரமான தொழிலாளர் தினம் இன்று பிறந்துள்ளது. தற்போதைய பொறுப்பற்ற அரசாங்கம் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக எமது நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியுள்ளது.

உழைக்கும் மக்கள் தங்கள் உயிர், இரத்தம், வியர்வை, தியாகம் செய்து, நீண்ட காலமாக 04

### தற்போதைய நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்காக

# பௌத்த பீடங்களின் கடிதம்; அரசாங்கம் தீவிர அவதானம்

### பசில், ஜீ.எல்.பீரிஸ் ஆகியோருடன் ஜனாதிபதி கலந்துரையாடல் -சாகர காரியவசம் தெரிவிப்பு



மூன்று பௌத்த பீடங்களின் தேரர்களினால், தற்போதைய நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள யோசனை குறித்து, தீவிர அவதானம் செலுத்துவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இது குறித்து அவதானம் செலுத்தப்பட்டதாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ, தவிசாளரான அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், பொதுச் செயலாளர் சாகர காரியவசம் உள்ளிட்டோர், ஜனாதிபதியுடன் நேற்று முன்தினம் 7 மணியளவில், ஜனாதிபதி மாளிகையில் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர். தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு மத்தியில், கட்சி என்ற அடிப்படையில் நாட்டுக்கு முன்னுரிமையளிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இதன் போது தெரிவித்துள்ளது. 04

**'நெருக்கடிக்கு மத்தியில் கட்சி அடிப்படையில் நாட்டுக்கே முன்னுரிமை அளிப்பதாக SLPP பொதுச் செயலாளர்**

### இன்று தொழிலாளர் தினம்



### இ.தொ.காவின் அழைப்பின் பேரில்

## இலங்கை வந்துள்ளார் தமிழக பா.ஜ.க தலைவர்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அழைப்பின் பேரில் தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை தலைமையிலான குழுவினர் இலங்கை வந்துள்ளனர். இலங்கை 04

## SLPP ஆட்சியை எவராலும் கவிழ்த்துவிட முடியாது

### முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ சூளுரை



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆட்சியை எவரும் கவிழ்க்க முடியாது. அதேவேளை, ஜனாதிபதியையும் பதவியிலிருந்து எவரும் 04

## விற்பனை வரியை உயர்த்துவதை தவிர வேறுவழி தெரியவில்லை

### பொருளாதார நெருக்கடியை தவிர்க்க இதுவே ஒரு வழி



நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதால். தற்போது நாட்டின் விற்பனை வரியை உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லையென நிதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

லண்டன் பி.பி.சி.க்கு அளித்த நேர்காணலின் போது தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி,

கடந்த 2019 ஆம் ஆண்டில் மதிப்பு கூட்டப்பட்ட வரி விகிதத்தை 08 விகிதமாக பாதியாகக் குறைத்தபோது அரசாங்கம் தவறு செய்துவிட்டதாக ஒப்புக்கொண்டார்.

தினமும் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அடுத்த எட்டு மாதங்களில் நாட்டுக்கு 04 பில்லியன் டொலர் 04

## பொதுஜன முற்போக்கு ஊழியர் சங்க மேதினக்கூட்டம்



பொதுஜன முற்போக்கு ஊழியர் சங்கத்தின் மேதினக்கூட்டம் இன்று பொதுஜன முற்போக்கு ஊழியர் சங்கத்தின் நுகேகொட ஆனந்த சமரகோன் மேடையில் நடைபெறவுள்ளது.

"சவால்களுக்கு மத்தியில் பலத்து உரக்கும் குரல்" என்ற தொனியில் இந்தக்கூட்டம் நடை பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## குறைந்த விலையில் எரிவாயு இறக்குமதி

### புதிய நிறுவனத்தை தெரிவு செய்த லிட்ரோ



எரிவாயுவை குறைந்த விலையில் இறக்குமதி செய்வதற்காக நிறுவனமொன்று 04

## விலை அதிகரிப்பு

தினகரன் வாரமஞ்சரி

அச்சுத் தாள்களின் விலையுயர்வு மற்றும் இதர செலவுகளின் அதிகரிப்பின் காரணமாக தினகரன் பத்திரிகையின் விலை 40 ரூபாவாகவும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் விலை 80 ரூபாகவும் இன்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

## எங்கள் கருத்து...

### மக்களின் எகிறும் எதிர்பார்ப்புகளும் ஈடு செய்யத் தவறும் எதிர்த்தரப்பும்

நாட்டின் இன்றைய பொருளாதார நிலையை எவரும் புதிதாகச் சொல்லித் தெரிந்து கொள்ளும் தேவை இல்லை. இந்நிலையை 'பிரேக் பிடிபடாத கார் பள்ளத்தில் விரைந்து கொண்டிருப்பதைப் போல' என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஏற்கனவே ஒப்பிட்டு விட்டார். நாம் செய்ய வேண்டியதெல்லாம் பிரேக்குகளைப் பொருத்தி காரை நிறுத்துவதன் மூலம் அது நொறுங்கி சிதறி விடாமல் தடுப்பது தான் என்று கூறிய அவர், தான் என்ன செய்யப் போகிறேன் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

எமது பிரச்சினையெல்லாம் சரிந்து வீழ்ந்திருக்கும் பொருளாதாரத்தை முடிந்தவரை விரைவாக தூக்கி நிறுத்துவது எப்படி என்பதுதான். அதைச் செய்ய வேண்டுமானால் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை நிலவ வேண்டியது அவசியம். ஒரு ஜனநாயக நாட்டில் முதலில் மக்கள் அரசைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்கள் அந்த அரசை நம்ப வேண்டும். அப்போது தான் அந்த அரசுக்கு ஸ்திரத்தன்மை கிட்டும். இது அயல் நாடுகள் இந்நாட்டை நம்புவதற்கு வழி வகுக்கும். இந்நிலை உருவாக்கப்படும்போது பொருளாதாரம் தலை நிமிர்வதற்கான சூழல் உருவாகும்.

தற்போது மத்திய வங்கித் தலைவர் தன் கடமையைச் செய்வதற்கான பின்புலத்தை நமது அரசியல்வாதிகள் குறிப்பாக எதிர்க்கட்சிகள் உருவாக்கித்தர வேண்டியது அவசியம். அரசியல் கட்சிகள் மக்களுக்காக பேசும் அமைப்புகள். அரசியல் அதிகாரம் தரப்படுமானால் நாட்டை முன்னேற்றி மக்கள் வசதியாகவும் பாதுகாப்புடனும் வாழ வழி செய்வோம் என்று சொல்பவை. அப்படிச் செய்திருந்தால் நாடு இந்த நிலைக்கு ஆளாகியும் இருக்காது. 04

## ஹக்கீமை பகிரங்க விவாதத்திற்கு அழைக்கும் நஸீர்



சமகால மற்றும் கடந்தகால விவகாரங்கள் தொடர்பில் சமூகத்துக்கு தெளிவுபடுத்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் றவூப் ஹக்கீமை, பிரபலமான 04

## கொழும்பில் இன்று வன்முறைகள் வெடிக்குமென அபாய எச்சரிக்கை

### அமெரிக்க தூதரகத்தினால் பல விடயங்களை சுட்டிக்காட்டி அறிக்கை

கொழும்பில் நடைபெறவுள்ள மே தினக் கூட்டங்களுக்கு முன்னதாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ஆர்ப்பாட்ட எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அமைதியான முறையில் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்கள் கூட மோதலாக மாறி வன்முறையாக மாறக்கூடும் என்று தூதரகம் எச்சரித்துள்ளது. போராட்டங்களை தவிர்க்குமாறு அமெரிக்க அரசு ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 04

## நோன்பு நேரங்கள்



ஸஹர் முடிவு: 04.23
நோன்பு துறக்கும் நேரம்: 06.19



**அறுபது வகையான மருந்துகளின் விலைகள் மீண்டும் அதிகரிப்பு** 04

மின்பற்றாக்குறையின் உச்சம்
**பாகிஸ்தானில் 18 மணிநேர மின்தடை** 04

### பாராளுமன்றில் அடுத்தவாரம்

## பெரும்பான்மையை நிரூபிக்க SJB தயார்

### லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி அடுத்த வாரம் பெரும்பான்மையை நிரூபிக்குமென பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அடுத்த வாரம் நாங்கள் 04

## மக்கள் எதிர்பார்ப்பது பொருளாதார தீர்வே

### அரசியலமைப்பு சீர்திருத்தம் அல்ல



பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கம் தீர்வுகாண்பதே மக்களின் எதிர்பார்ப்பாகுமென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

மாறாக இத்தருணத்தில் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை மக்கள் எதிர்பார்க்கவில்லை என அக்கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். மக்களுக்கு எரிவாயு, எரிபொருள், உணவு மற்றும் 04



# உலக வங்கி வழங்கும் நிதியின் ஒரு பகுதியை நிவாரணத்துக்காக பயன்படுத்துவோம்

## நீதி மற்றும் நிதி அமைச்சர் எம்.யு.எம்.அலி சப்ரி



**வரலாற்றிலேயே முதல் தடவையாக இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. பொதுமக்களும் மற்றும் அரசியல்வாதிகளும் தங்களுடைய கருத்தை ஒருபுறம் வைத்துவிட்டு ஒரு நாடு என்ற கொள்கையுடன் இணைந்து செயல்பட வேண்டும். இது ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டி காலம் கடத்த வேண்டிய சந்தர்ப்பமல்ல. ஒரே இனமாக இணைந்து செயல்பட வேண்டிய காலம் என்று எமது சகோதர பத்திரிகையான டெய்லி நியூஸுக்கு வழங்கிய செவ்வியில் நிதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். வொஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நிதியம் மற்றும் வருடாந்த உலகளாவிய வசந்தகால மகாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்பிய பின்னர் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். எரிபொருள் மற்றும் எரிவாயு பெறுவதற்காக பல மணித்தியாலங்கள் வரிசையில் நிற்பதாலும், பணவீக்கம் அதிகரித்துள்ளதாலும், பொருட்களின் விலை அதிகரிப்பாலும், உரப் பற்றாக்குறையாலும், மின்சார துண்டிப்பாலும் மக்கள் படும் சிரமத்தை அரசாங்கம் நன்கு புரிந்து கொண்டுள்ளது.**

உக்ரைன், ரஷ்ய யுத்தம் காரணமாக மசகு எண்ணெய் மற்றும் பொருட்களை கொண்டு செல்வதற்கான கட்டண அதிகரிப்புக்கும் மக்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இப் பிரச்சினைகளில் அதிகமானவை அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டவையல்ல, வெளிப்புற காரணிகளால் ஏற்பட்டது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்ட குறுகிய கால கொள்கைகள் பலவற்றிற்கு பொறுப்புக்கூற வேண்டியதோடு அவை நிரந்தரமான பிரச்சினைகள் அல்லவென்றும் ஒளிமயமான எதிர்காலம் முன்னால் உள்ளது என நான் கூற விரும்புகிறேன். ஒளிமயமான எதிர்காலம் உண்டு.

நாம் தற்போது நட்பு நாடுகளுடன் உலகளாவிய ஒத்துழைப்பை எதிர்பார்த்துள்ளோம். நன்கொடை வழங்கும் அமைப்புகள் பல உதவிக்கு வந்துள்ளன. அதன் பலன் மக்களுக்கு தற்போது கிடைத்து வருகின்றது.

அதன் காரணமாக எரிபொருளுக்கான கியூவரிசை குறைந்து வருகின்றது. மின்சாரத் துண்டிப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உர விநியோகம், எரிவாயு விநியோகம் விரைவில் சீராகும். பொருட்களின் அதிகரித்த விலை குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது. மக்களுக்கு மேலதிக சலுகைகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என அமைச்சர் அலி சப்ரி தனது செவ்வியில் தெரிவித்துள்ளார்.

**கே: உங்களுக்கு பரிச்சயமில்லாத நிதியமைச்சர் பதவியை வகிப்பது குறித்து உங்களது கருத்து என்ன?**

பதில்: நிதியமைச்சர் பதவியை வகிப்பது எனக்கு இலகுவானதாக இருக்கின்றது. மக்களுக்காக அப்பதவியிலிருந்து பணி செய்ய முடியும் என நம்புகிறேன். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எனக்கு இந்த பதவியை வழங்கியது அப்பதவியை வகிக்க யாரும் முன்வராத வேளையிலாகும். இது மக்களுக்கு சேவையாற்ற எனக்கு கிடைத்த ஒரு சந்தர்ப்பமாக நான் கருதுகிறேன்.

**கே: வொஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நிதியம் மற்றும் வருடாந்த உலகளாவிய வசந்தகால மகாநாட்டில் கலந்து கொண்டு நீங்கள் பெற்ற முன்னேற்றம் என்ன?**

பதில்: சர்வதேச நிதியத்திடம் செல்வது சரியா தவறா என்ற விவாதம் முன்னர் காணப்பட்டது. சிலர் ஐஎம்எப் உதவி செய்வதற்கு முன்னர் பல நிபந்தனைகள் விதிக்கும் என கூறினார்கள். அதன் காரணமாக ஐஎம்எப் இன் உதவியை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. அது பொருளாதார பிரச்சினை அதிகரிக்கவும் காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும் அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திய பின்னரே அவர்கள் மிகவும் உண்மையாக உதவ தயாராக உள்ளார்கள் என்பதை உணர்ந்தோம். அவர்கள் நிபந்தனை விதிப்பதற்கு பதிலாக ஆலோசனைகளையும் முன்னேறிச் செல்வதற்கான வழி வகைகளையும் தெரிவித்தார்கள்.

**ஐஎம்எப் உதவி செய்வதற்கு முன்னர் பல நிபந்தனைகள் விதிக்கும் என சிலர் கூறினார்கள். அதன் காரணமாக ஐஎம்எப் இன் உதவியை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. அது பொருளாதார பிரச்சினை அதிகரிக்கவும் காரணமாக அமைந்தது. ஐஎம்எப் உடன் தொடர்பை ஏற்படுத்திய பின்னரே அவர்கள் உண்மையாக உதவ தயாராக உள்ளார்கள் என்பதை உணர்ந்தோம். அவர்கள் நிபந்தனை விதிப்பதற்கு பதிலாக ஆலோசனைகளையும் முன்னேறிச் செல்வதற்கான வழிவகைகளையும் தெரிவித்தார்கள்.**

தற்போதைய நிலைமையில் மிகவும் பயனுள்ளதாகவும் வெற்றிகரமானதாகவும் இக்கலந்துரையாடல் அமைந்தது. நாம் தற்போது அதன் பலனை பெற்று வருகிறோம். இலங்கைக்கு சர்வதேச ரீதியில் உதவிகளை வழங்க முன்வந்தது விசேட அம்சமாகும். சில அமைப்புகளும் நாடுகளும் நல்லெண்ண ரீதியில் நடவடிக்கையில் ஈடுபடுவது தெரிகின்றது. நாம் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் கண்காணிப்பின் கீழ் இருகின்றோம். எதிர்காலத்தில் அது சரியான பாதையில் செல்லுமென நம்புகின்றோம். அதேபோன்று இது முதலீட்டாளர்களுக்கு நன்மை பயக்கும். அதேபோன்று இலங்கைக்கும் விவாதமின்றி நேரடியாக முதலீட்டாளர்களை கவர்வதற்கு உதவியாக இருக்கும்.

**கே: 2026 ஆம் ஆண்டளவில் இலங்கை 51 பில்லியன் அமெரிக்க டொலரை கடனாக செலுத்த வேண்டியுள்ளது. அண்மையில் மூலதனத்தை அதிகரித்துக்கொள்ள பல பொருளாதார யோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. விசேடமாக இந்தியாவுடன். அவற்றை மீள செலுத்துவது எவ்வாறு?**

பதில்: இலங்கையில் தற்போது முதலிடம் பெறுவது பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு செல்வதாகும். முதலில் அரசியல் ஸ்திரமற்றத்தன்மைக்கு தீர்வு காண தேவையாக அனைத்துக்கும் முன்னால் நாட்டை முன்னிறுத்தி செயல்பட வேண்டும். இரண்டாவதாக சிறப்பான பொருளாதாரக் கொள்கைகளை செயல்படுத்த வேண்டும். நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் வங்கி முறைகளோடு இலங்கைக்கு வரும் அந்நிய செலாவணியுடன் உல்லாசப் பயணத்துறையை மீண்டும் மேம்படுத்த வேண்டும். எமது அண்மைக் கால பண இருப்பு குறித்து முதன்மையான கவனம் செலுத்தப்பட்டது. அது சீரான நிலைமையை அடைந்தவுடன் அபிவிருத்தி குறித்து கவனம் செலுத்தலாம். அது எமது பொருளாதாரத்தை சரியான வழியில் இட்டுச் செல்லும். எமது விநியோக முறைமையை பழைய நிலைமைக்கு கொண்டு வர வேண்டும். ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். அது தற்போது நடைபெற்று வருகின்றது. இதன் மூலம் கடன் செலுத்துகையில் நாட்டுக்கு மீண்டும் கௌரவமான இடம் கிடைக்கும்.

**இலங்கைக்கு சர்வதேச ரீதியில் உதவிகளை வழங்க முன்வந்தது விசேட அம்சமாகும். சில அமைப்புகளும் நாடுகளும் நல்லெண்ண ரீதியில் நடவடிக்கையில் ஈடுபடுவது தெரிகின்றது. நாம் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் கண்காணிப்பின் கீழ் இருகின்றோம். எதிர்காலத்தில் அது சரியான பாதையில் செல்லுமென நம்புகின்றோம். அதேபோன்று இது முதலீட்டாளர்களுக்கு நன்மை பயக்கும். அதேபோன்று இலங்கைக்கும் விவாதமின்றி நேரடியாக முதலீட்டாளர்களை கவர்வதற்கு உதவியாக இருக்கும்.**



இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தர நிர்ணய நிறுவனங்களின் எதிர்மறையான தரப்படுத்தலில் இருந்து மீள முடியும். அதைத்தவிர கடன் மீள செலுத்தல் கட்டமைப்பை மீளமைக்கவும் மற்றும் பாதுகாப்பான நிதியுதவி நடவடிக்கைகளில் ஈடுபடவும் இறையான்மை கடன்முறி வைத்திருப்போருடன் கலந்துரையாடி வருகின்றோம்.

**கே: அதிகரிக்கும் டொலரின் பெறுமதியை கட்டுப்படுத்த நீங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?**

பதில்: அதிகரிக்கும் அமெரிக்க டொலரின் பெறுமதியை கட்டுப்படுத்த மத்திய வங்கிக்கு உதவி வழங்குவதற்காக நட்பு நாடுகள் சிலவற்றுடன் கலந்துரையாடி வருன்றோம். அதற்காக மத்திய வங்கிக்கு விசேட வழியில் நேரடியாக பணத்தை பெறுவதற்கு தீர்மானித்துள்ளோம். அத்துடன் வங்கிகள் ஊடாக அந்நிய செலாவணியை பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவிப்பு நடவடிக்கைகள் பல வற்றையும் மேற்கொள்ள எண்ணியுள்ளோம். தவிர டொலரின் பெறுமதி அதிகரிப்பைக் கட்டுப்படுத்த மத்திய வங்கியும் பயனுள்ள பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வட்டி வீதத்தை அதிகரித்தல் மற்றும் மேலும் பல நடவடிக்கைகள் அவற்றுள் அடங்கும்.

**கே: சீனாவிடம் இருந்து பெற்ற கடனை செலுத்துவது தொடர்பில் நீங்கள் முன் வைக்கும் தீர்வு என்ன?**

பதில்: சீனா இலங்கையுடனான நட்பு நாடு. அதேபோன்று இலங்கைக்கு பல வழிகளிலும் உதவிகளை வழங்கிய நாடு. கடந்த வருடத்தில் நிதிப்பரிமாற்ற (SWAP) முறைக்கு மேலதிகமாக covid19 தொற்று ஆரம்பத்தில் சீனா ஒருங்கிணைந்த கடன் தொகையை 1.3 பில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரித்தது. கடன் குறித்த பொதுவான ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபடுவதற்காக நாம் தொடர்ந்து அவர்களுடன் இணைந்துள்ளோம்.

**கே: வர்த்தகத்துறை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முனைவோர் நிதிப் பிரச்சினை பலவற்றிற்கும் முகம் கொடுத்துள்ளார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தாமத சலுகைக் காலத்தை மேலும் நீடிப்பதற்கு எதிர்பார்த்துள்ளீர்களா?**

பதில்: வர்த்தகத்துறையினர் அனுபவித்து வரும் பிரச்சினைகள் தொடர்பாக நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். எவ்வாறாயினும் தற்போதைய சலுகைக் காலத்தை மேலும் நீடித்தால் அது வங்கித் துறைக்கு பெரும் எதிர்மறையான பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். அதேபோன்று அதனை மேலும் நீடிக்க முடியாத நிலைமைக்கு உள்ளாகும். உலக வங்கி ஊடாக கிடைக்கும் 500 மில்லியன் டொலர் மூலம் வறுமையில் வாடுபவர்களுக்கு அவர்களின் வாழ்க்கைச் செலவை ஓரளவாவது பூர்த்திசெய்து கொள்வதற்கு அடுத்த மாதமளவில் உதவி வழங்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

**கே: தற்போதைய வட்டி வீத அதிகரிப்பால் உயர் கொள்முதல் வீத நிலைமை ஏற்படுவதால் முதலீடு தொடர்பாக ஏற்படும் பாதிப்பை தெளிவுபடுத்த முடியுமா?**

பதில்: இதில் இரண்டு பக்கத்தையும் நடுநிலையாக ஆழமாக சிந்திக்க வேண்டிய விடயமாகும். மத்தியவங்கி இதற்கான தீர்வை எதிர்காலத்தில் எடுக்கும். வட்டி வீதம் பழைய நிலைமைக்கு மாறிய பின்னர் இது தீரும் என நான் நம்புகிறேன்.

**கே: அரசுக்கு கிடைக்கும் வரி வருமானத்தை அதிகரிக்க மேற்கொள்ளப்படும் திட்டங்கள் என்ன?**

பதில்: நாம் மீண்டும் பழைய வரிக் கட்டமைப்புக்கு செல்ல வேண்டும். அது தற்போது நடைபெற்று வருகின்றது. அதைத் தவிர அரசுக்கு சொந்தமான வீதி அபிவிருத்தி திட்டங்கள் போன்ற அநாவசிய செலவுகளை குறைத்துள்ளோம். முக்கியத்துவமல்லாத சில திட்டங்களை நிறுத்த வேண்டும். ஆயினும் தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். இதனை செய்யாவிட்டால் சில பிரிவுகளுக்கு எதிர்மறையான பாதிப்புகள் ஏற்படலாம். அதன் பலனாக மக்களுக்கு பாரியளவில் வேலை வாய்ப்புகள் இல்லாமல் போகும். மற்றும் தனியார் பிரிவின் வருமானமும் பாதிக்கப்படும்.

**கே: நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மீட்டெடுப்பது தொடர்பாக உள்ள திட்டங்கள் என்ன?**

பதில்: எமக்கு வருமான வரி செலுத்துவோர் பணத்தால் அந்நிறுவனங்களை மீட்க முடியாது என்பதால் அது விரைவாக தீர்வு காணவேண்டிய விடயம் என்பதை நாம் அறிந்து கொண்டுள்ளோம். சர்வதேச நிதி நிறுவனத்திற்கும் இதுதொடர்பாக கவனம் செலுத்தும் அவசியம் உள்ளது. இதனை கட்டுப்படுத்துவதற்கு ஒரு வழி அவற்றை மட்டுப்படுத்துவதாகும். இலங்கையர்களாக நாம் அவர்களின் உயர் முகாமைத்துவத்துடன் இணைந்து செயல்படுவோம்.

**கே: வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதற்கான திட்டங்கள் என்ன?**

பதில்: பொருளாதாரத்தை மீண்டும் உறுதி செய்த பின்னர் மற்றும் நாட்டின் நிலைமையை புதுப்பித்ததன் பின்னர் உலகம் பூராவும் 'அந்தச் செய்தியைப் பரப்ப எதிர்பார்த்துள்ளோம். இதன் மூலம் நாம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அளிக்கும் செய்தி என்னவென்றால் இலங்கை மீண்டும் வர்த்தகத்துக்கு திறந்துவிடப்பட்டுள்ளது என்பதாகும். அதைத் தவிர நாம் பல முதலீட்டாளர்களுடனும் இணைய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பவுஸ் மொஹம்மட்...
தமிழில்: வீ.ஆர்.வயலட்



# அரசியல் அரங்கம்

அர்ஜூன்

# அரசியல் தீர்வு காண முயற்சிப்பதால் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்து விடாது!

## போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம அளித்த பேட்டி



**நாட்டில் காணப்படும் தற்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு–ள்ளன. இது நிதிநெருக்கடி என்பதால் நிதிமுகாமைத்துவத்தின் ஊடாகவே தீர்வைக் காண வேண்டும் என போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். எமக்கு வழங்கிய பேட்டியிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.**

**கே: ஜனாதிபதி மற்றும் அரசா–ங்கத்தை பதவி விலகுமாறு கோரி தொடர்ச்சியான போராட்ட–ங்கள் நடைபெறுகின்றன. இருந்த போதும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண பாராளுமன்றத்தில் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. இப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண முடியும் என எதிர்பார்க்கின்றீ–ர்கள்?**

பதில்: அடிப்படையில் இது அரசியல் நெருக்கடியல்ல, நிதி ரீதியான பிரச்சினையாகும். இதனால் விநியோகச் சங்கிலி, எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரம் தடைபட்டுள்ளது. இந்தப் போராட்டங்கள் யாவும் இவற்றுக்கு எதிராகவே முன்னெடுக்கப்படுகின்றன. பொருளாதார முகாமைத்துவத் திட்டத்தின் ஊடாக இதனைக் கையாளுவதே சிறந்த வழியாகும். அரசியல் தீர்வு காண முயல்வதால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது.

பிரதமர் உட்பட 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலக வேண்டும் எனக் காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறியதால், முழு அமைச்சரவையும் ராஜினாமா செய்தது. ஜனாதிபதியும் பிரதமரும் இராஜினாமா செய்தாலும் நாட்டை நடத்துவதற்கான பொறிமுறை என்ன? காலிமுகத்திடல் போராட்டக்காரர்களிடம் நாட்டை ஒப்படைக்க முடியாது. காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் நாட்டை நடத்த அனுமதிக்க முடியாது.

எவ்வித தீர்வையும் முன்வைக்காமல் போராட்டம் நடத்துகிறார்கள், அவர்கள் எதையும் பரிந்துரைக்கவில்லை. அடுத்து என்ன நடக்க வேண்டும் என்று அவர்களிடம் எந்த யோசனையும் இல்லை. அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தெரிவு செய்யப்பட்டதால் பொறுப்பற்ற முறையில் செயற்பட முடியாது. உண்மையில் என்ன நடந்தாலும் அதற்கு நாமே பொறுப்பேற்க வேண்டும். கொவிட்19 தொற்றுநோய் மற்றும் எடுக்கப்பட்ட முடிவுகள் சிலவற்றாலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஆனால் இது கடந்த இரண்டு வருடங்களில் என்ன நடந்தது என்பதன் அடிப்படையில் மட்டும் அல்ல.

நாங்கள் ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகளே பூர்த்தியடைந்துள்ளன. இந்த நெருக்கடி அந்த இரண்டு ஆண்டுகளுக்குள் உருவாகவில்லை. நிதி தொடர்பான நிலைமையை எடுத்து நோக்கினால் இது நீண்ட கால நெருக்கடியின் கடைசிக் கட்டமாகும். எனவே, நீண்ட கால நிதிமுகாமைத்துவ நெருக்கடியைத் தீர்க்கவே நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம் இதனைச் செய்வதற்கே தற்பொழுது முயற்சிக்கிறது. ஆனால் இந்த எதிர்ப்பாளர்கள் எவருக்கும் அதை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்த பரிந்துரைகள் இல்லை. தற்போது புதிய நிதியமைச்சர் பதவியேற்றுள்ளார். மேலும், நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கி ஆகியவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இப்போது நிதியமைச்சர் சர்வதேச நாணய நிதியத்துடன் மட்டுமல்லாமல் மற்ற நாடுகளுடனும் நிதி நிறுவனங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

ஒரு அரசாங்கம் என்ற வகையில், இந்த நெருக்கடியை முன்னரே கண்டறிந்திருக்க வேண்டும் என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். கண்டுபிடித்திருந்தால், இந்த நிலைக்கு வருவதற்கு முன்பே தீர்த்திருக்கலாம். நெருக்கடியான சூழ்நிலையைத் தீர்ப்பதற்கு மிகவும் முன்கூட்டியே தீர்வுக்கு செல்லாதது அரசாங்கத்தின் தவறு என்று நான் கூறுவேன்.

**நீண்ட கால நெருக்கடியின் கடைசிக் கட்டமே இதுவாகும். எனவே, நிதிமுகாமைத்துவ நெருக்கடியைத் தீர்க்கவே நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம் இதனைச் செய்வதற்கே தற்பொழுது முயற்சிக்கிறது. ஆனால் எதிர்ப்பாளர்கள் எவரிடமும் தீர்வுகள் கிடையாது!**

**கே: அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி–களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஒட்டுமொத்த அரசாங்கமும் வெளியேறி இடைக்கால அரசாங்கத்தை உருவாக்கி, மக்க–ளின் கோரிக்கைக்கு ஏற்ப உடனடி மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று கருதுகின்றனர். இதுபற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு எங்களுடன் கைகோர்க்க வருமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் நாம் அழைப்பு விடுத்த போதும் எவரும் அதற்கு முன்வரவில்லை. அரசாங்கம் இல்லாமல் ஒரு நாடு இருக்க முடியாது. நாங்கள் இரண்டு வாரங்களாக அரசாங்கம் இல்லாமல் இருந்தோம். அனைத்துக் கட்சிகளுடனும் தற்பொழுது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். ஆனால் எந்தக் கட்சியும் முன் வந்து பதவிகளை ஏற்று இடைக்கால அரசாங்கத்தை அமைக்க வேண்டிய கடப்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. நிலைமை அப்படியானால், அடுத்த கட்டமாக சொந்தமாக ஆட்சியை அமைத்து, தற்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி செய்ய வேண்டும்.

**கே: ரம்புக்கணை சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ள–துடன் மேலும் 27 பேர் காயமடைந்தனர்.இது தொடர்பாக பக்கச்சா–ர்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அரசு மற்றும் எதிர்க்கட்சி கோ–ருகிறது. இதனை விளக்க முடியுமா?**

பதில்: தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களால் எப்போதோ ஒரு நாள் நடக்க வேண்டியதொரு சம்பவமே அங்கு நடந்துள்ளது. ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லத்தை தாக்கச் சென்ற போது மிரிஹானவில் வன்முறையாக மாறியது. பின்னர் பொலிஸார் தடியடி நடத்தினர். அதேபோன்று, ரம்புக்கணையும் இன்னுமொரு சம்பவமாகும்.

போராட்டம் வன்முறையாக மாறியது. ரம்புக்கணை புகையிரத நிலையத்திற்கு சற்று அருகில் 650 பயணிகளுடன் புகையிரதமொன்று வழிமறிக்கப்பட்டது. 33000 லீற்றர் எரிபொருளைக் கொண்ட பௌசர் ஆர்ப்பாட்டக்காரர்களால் தீயிட்டுக் கொழுத்த முயற்சிக்கப்பட்டது. ஒருவேளை ஆர்ப்பாட்டக்காரர்களால் எரிபொருள் பவுசர் எரியூட்டப்பட்டிருந்தால் எதிர்ப்பாளர்களில் இன்னும் பல உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கும் என்பதால் அவர்களைக் கலைக்கப் பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர் என நான் நினைக்கின்றேன். துரதிர்ஷ்டவசமாக, பொலிசார் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். சில போராட்டக்காரர்கள் காயமடைந்தனர் மற்றும் ஒருவர் கொல்லப்பட்டார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இரண்டு வருட ஆட்சிக் காலத்தை நீங்கள் கணக்கில் கொண்டால், எந்தவொரு அமைதியான போராட்டத்திலும் அரசு தலையிடவில்லை.

சில நேரங்களில் இது தவறான முடிவாக இருக்கலாம். உண்மையில், பொலிசாரை குறை கூற முடியாது. அவர்கள் செய்தது சரி என்று நான் சொல்ல முயற்சிக்கவில்லை. வன்முறைப் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவர பொலிஸார் முயற்சிக்கும் போது அசம்பாவிதங்கள் நடந்திருக்கலாம். இவை அரசியல் உள்நோக்கம் கொண்ட போராட்டங்கள். பிரதான எதிர்க்கட்சியும், எதிர்க்கட்சியில் உள்ள மற்ற சிறிய கட்சிகளும், அரசாங்கத்தை தரைமட்டமாக்குவதற்கு இதனை ஒரு வாய்ப்பாகப் பார்க்கின்றன.

எனவே, அவர்கள் இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி போராட்டங்களை வளர்க்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக, அரசியல் குழுக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டங்கள் வன்முறையானவை. ரம்புக்கண சம்பவமும் அவ்வாறான மற்றுமொரு துரதிஷ்டமான சம்பவமாகும். இளைஞர்களை ஊக்குவிக்கும் மற்றும் அவர்களை முன்னிறுத்தும் அரசியல் உள்நோக்கம் கொண்ட குழுக்கள் உள்ளன.

**கே: ஆட்களை மாற்றுவதும் மீண்டும் அமைச்சரவையை மாற்றியமைப்பதும் மக்களின் எரியும் பிரச்சினைகளுக்கு தீர்வாகாது என்ற எண்ணத்தில் மக்கள் உள்ளனர். உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: ஆர்ப்பாட்டக்காரர்கள் சிரேஷ்ட உறுப்பினர்களை விரும்பவில்லை, அமைச்சுப் பதவிகள் இளைஞர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றனர். நாட்டிலுள்ள இளைஞர்களின் நிலைப்பாடு அதுவாக இருந்தால், அவர்களின் முக்கிய பதவிகளை இளைஞர்களிடம் ஒப்படைத்து விட்டு, வெளியில் இருக்கும் இளைஞர்களுடன் ஒத்திசைந்து, அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முயற்சிப்போம் என்று நமது மூத்தவர்கள் கடமைப்பட்டுச் சொன்னார்கள்.

அதைத்தான் நாம் இப்போது சரியாகச் செய்து வருகிறோம்.

நிதி நெருக்கடியாக இருக்கும் போது, தலைவர்களை மாற்றுவது பிரச்சினையைத் தீர்க்காது. இருப்பினும், முக்கிய பதவிகளை வகிக்கும் மூத்த உறுப்பினர்களுக்கு எதிராக எதிர்ப்பு இருந்தால் மற்றும் இளைஞர்கள் பொறுப்பில் இருக்க விரும்பினால், அவர்கள் கோருவதில் ஒரு சதவீதம் மட்டுமே. எங்கள் மூத்த உறுப்பினர்கள் கட்டாயப்படுத்தவில்லை என்றால், அந்த அமைச்சரவை மாற்றத்தை ஜனாதிபதி செய்திருக்க முடியாது. அவர் யாரையும் விலக வற்புறுத்தவில்லை. மூத்த உறுப்பினர்கள் ஒதுங்கி நின்று புதிய அமைச்சரவையை நியமிக்க அனுமதித்தனர்.




# உணவு கேட்கும் மக்களுக்கு அரசியலமைப்பை தயாரித்து கொடுப்பது பொருத்தமான செயலல்ல!

பொதுமக்கள் அன்றாட வாழ்க்கையை வாழ்வதற்காக போராடுகிறார்கள். அவர்கள் ஆவேசமாக உள்ளதோடு, வாழ்க்கைச் செலவு பற்றி கவலை கொண்டுள்ளார்கள். மக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் புதிய அரசியலமைப்புப் பற்றி விவாதித்து வருகின்றார்கள்.

பிரெஞ்சு புரட்சியில் நடந்தது என்ன? பட்டினியால் வாடிய மக்கள் பாண் கேட்டார்கள். மகாராணி மாரி ஆன்டோனோயிட் "பாண் இல்லையென்றால் கேக் சாப்பிடுங்கள்" என்று பதிலளித்ததாகக் கூறப்படுகிறது. சரித்திரத்தில் மாத்திரமல்ல, இன்றும் பாணுக்கும் கேக்கும் வித்தியாசம் அறியாத ஆட்சியாளர்கள் இருக்கின்றார்கள்.

இலங்கை மோசமான பொருளாதார பிரச்சினையிலுள்ளது. பொதுமக்கள் பாதையில் இறங்கியுள்ளார்கள். அரசியலே வேண்டாம் என்ற நிலை உருவாகியுள்ளது. முறைகளில் மாற்றம் வேண்டுமென்று அழுத்தம் கொடுக்கின்றார்கள். துயரப்படும் மக்களுக்கு கட்சி, நிற பேதம் இல்லை. ஒரு நேர சாப்பாட்டிற்கு எதையேனும் சம்பாதிக்க முயற்சி செய்யும் இலட்சக்கணக்கான மக்கள் முகம் கொடுத்துள்ள சிரமத்தின் அளவை புரிந்து கொள்ள வேண்டும். பாராளுமன்ற ஜனநாயகத்தை செயல்படுத்துவதற்காக இழப்பீடு செலுத்தும் நாம் கேட்பது தீர்வையே ஆகும்.

அரசியலமைப்பை மாற்றுவது மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைக்கு பதிலாகுமா? 1994 ஆம் ஆண்டு தொடக்கம் நிறைவேற்று ஜனாதிபதி பதவியை ஒழிப்பதாக உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. அதிகாரத்தை கைவிடும் போது மேடைகளில் உறுதிமொழி வழங்கும் அரசியல்வாதிகள், ஆட்சிக்கு வந்தவுடன் அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதில்லை. பதவியை பாதுகாத்து தங்களுடைய இருப்பை உறுதி செய்கிறார்கள். மூன்று தசாப்த காலம் அரசியலமைப்புப் பற்றி கதைத்த நேரத்தை பொருளாதாரத்தை வளர்ச்சி அடையச் செய்ய தேவையான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி இருந்தால் இன்று இலங்கை மிகவும் அபிவிருத்தியடைந்த நாடாக இருக்கும்.

அன்று மரம் செடி கொடிகளை நட்டிருந்தால் அதன் மூலம் இன்று பலனைப் பெற்றிருக்கலாம். முட்டாள்தனத்திற்கு முடிவில்லாத எம்மால் இன்றும் சரியான பாதையை கண்டுபிடிக்க முடியாது போயுள்ளது. முடிவில்லாத எதிர்ப்பு காலிமுகத்திடலில் நடைபெறும் வேளையில் கூட்டப்பட்ட பாராளுமன்றத்தில், பல விதங்களிலும் புதிய அரசியலமைப்புக்கு பெருமளவு திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசாலும் எதிர்க்கட்சி அணியினரால் மாத்திரமல்ல, சிவில் அமைப்புகள் கூட யோசனைகளை முன்வைத்துள்ளன. இந்த யோசனைகளை கலந்துரையாடி விவாதிக்கலாம். பலராலும் மேற்கொள்ளப்படும்விவாதம்இறுதியில்தீர்வின்றியே முடிவுக்கு வரலாம் என்பது நிச்சயம்.

உணவுப் பற்றாக்குறை, எரிபொருள் பிரச்சினை, மருந்து வகைகள், கல்வி மற்றும் நிதி தொகுதியின் தடைகள் காரணமாக மக்கள் முகம் கொடுத்துள்ள நிலைமையை அரசியலமைப்பால் தீர்க்க முடியுமா? மக்களின் பிரதிநிதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். ஜனாதிபதி மற்றும் பிரதமரின் நாற்காலியில் அடுத்து அமர்வது யார் மற்றும் அதிகாரங்கள் குறித்து இவ்வேளையில் கலந்துரையாடுவது செய்ய வேண்டிய செயலல்ல.

வறிய மக்கள் சிரமப்படும் இவ்வேளையில், வழமை போன்று அரசியலமைப்புப் பிரச்சினையை முன்னெடுத்து காலம் கடத்துவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ஒற்றுமை மற்றும் சமரசத்தை கருத்தில் கொள்ளாது முடிவு எடுத்ததன் விளைவுகள் இன்று எம் கண்முன்னே உள்ளன. பிரச்சினைகள் பற்றி கவனத்தில் கொள்ளாது செயல்படும் அரசியல் முறை பாரிய பிரச்சினையை ஏற்படுத்தி உள்ளதோடு, அது பெரும் தவறாகும்.

நடுத்தர வருமானம் உடைய சமூகம் சிக்கலான தேவைகளுடனானது. மக்களின் தேவைகள் பலவிதமானவை. அன்றாட வாழ்க்கையை தடை செய்யும் முடிவுகள் ஒருபோதும் பொருந்தாததோடு, பழைய கியூவரிசை முறைக்கு மீண்டும் மாறுவது பொருந்தாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். பிரச்சினைக்கு முகம் கொடுக்காத ஆட்சியாளர்களும், ஒட்டுப் போடும் தீர்வுகளை முன்வைக்கும் அதிகாரிகளும் இன்றைய நிலைமைக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

பொருளாதார அவசர நிலைமையை முகாமைத்துவம் செய்து நிர்வகிக்கக் கூடிய நிலைமையுள்ள வேளையில், அதனை அரசியல் பிரச்சினை வரை கொண்டு சென்றது துரதிர்ஷ்டமே. அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் சமூகத்தைப் பற்றிய புரிந்துணர்வுடன் தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளதோடு, அவை நடைமுறைச் சாத்தியமாகவும் இருக்க வேண்டும். ஜனநாயகம் எனக் கூறும் மக்கள் பிரதிநிதிகள் அரசியலமைப்பு பற்றிய விடயத்தை ஒருபுறம் வைத்து விட்டு, பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உடனடியாக முன்வர வேண்டும்.

இன்று பாராளுமன்றத்தில் உள்ள 225 பேர் இந் நாட்டின் இருப்பை முடிவு செய்பவர்கள். பயங்கரவாதத்தை தடுக்க சட்டம் இயற்றலாம். ஆனால் பொதுமக்களின் அலையை தடுப்பதற்கு அரசியலமைப்பால் முடியாது. அரசாங்கத்தை மாற்றுவது மற்றும் நபர்களை மாற்றுவதால் பொருளாதாரம் வளர்ச்சியடையாது. தற்போதுள்ள பேரழிவிலிருந்து மீள்வதற்கு அவசரமான மற்றும் முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. அரசியலமைப்பை திருத்துவதற்கு முன்னர் பொதுமக்களின் பிரதிநிதிகள் அனைவரும் இணைந்து பொருளாதாரத்தை மேம்படுத்த சரியான முடிவுகளை எடுப்பது மக்கள் அனைவருக்கும் புரியும் பாரிய சேவையாகுமென குறிப்பிட வேண்டும்.

தமிழில்: வீ.ஆர்.வயலட்

# நோன்பு பெருநாள் தினத்தில் சிறைக்கைதிகளுக்கு இஸ்லாமிய கலாசார பாரம்பரிய பகல் உணவு

*மாவத்தகம தினகரன் நிருபர்*

நோன்பு பெருநாள் தினத்தில் கொழும்பு சிறைச்சாலையிலுள்ள சிறைக்கைதிகள், அதிகாரிகள் உள்ளிட்ட 1600 பேருக்கு இஸ்லாமிய கலாசார பாரம்பரிய பகல் உணவு அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையினால் வழங்கப்படவுள்ளதாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,..

தடுப்புக் காவலிலுள்ள முஸ்லிம் சிறைக்கைதிகள் ஏனைய சிறைக்கைதிகள் 1400 பேர்,பாதுகாப்பு கடமையிலுள்ள அதிகாரிகள் 200 பேர் உள்ளிட்ட மொத்தமாக 1600 பேருக்கான நோன்புப் பெருநாள் விசேட இஸ்லாமிய கலாசார பாரம்பிய பகல் உணவு வழங்கி வைக்கப்படவுள்ளது.

அதேவேளையில் கொழும்பு ரிமான்ட் சிறைச்சாலையின் வேண்டுகோளின் பிரகாரம் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையினால் இரண்டாவது வருடமாகவும் சிறைச்சாலையிலுள்ள முஸ்லிம் கைதிகள் விசேடமாக 30 நாட்கள் நோன்பு நோன்பதற்காகவும் மற்றும் நோன்பு திறப்பதற்காகவும் அதற்குத் தேவையான அனைத்து உணவுப் பொருட்களும் சிறைச்சாலையின் அத்தியட்சகர் டி. ரஜீவ சில்வாவிடம் உத்தியோகபூர்வமாக சிறைச்சாலையில் வைத்து கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நோன்பு பெருநாள் உணவு வழங்கும் வைபவத்தில் வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி, அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் கே. என். டீன், பதில் செயலாளர் ஹாசிப் சுக்ரி, அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் பொருளாளர் யூ. எம். பாசில் முதலியவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

## குறைந்த விலையில்...

தெரிவு செய்யப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் அறிவித்துள்ளார்.

அதன்படி தாய்லாந்தின் சியாம் கேஸ் என்ற நிறுவனமே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரு ஆண்டுகளில் எரிவாயுவை இறக்குமதி செய்யும் நிறுவனமானது மெட்ரிக் தொன் ஒன்றுக்கு அறவிட்ட தொகையை விட 9 டொலர் குறைவாக புதிய நிறுவனத்திடமிருந்து எரிவாயுவை பெற முடியும்.

கடந்த 2 ஆண்டுகளாக, ஓமானில் இருந்து நாட்டுக்கு எரிவாயு இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.எனினும், குறித்த நிறுவனத்துடனான ஒப்பந்தம் இந்த மாதத்துடன் நிறைவடைகிறது.இதற்கமைய அடுத்த மாதம் முதல் 2 ஆண்டுகளுக்கு எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்காக விலைமனு கோரப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கை வந்துள்ளார்...

தொழிலாளர் காங்கிரஸானது, இந்தியாவில் ஆட்சி புரியும் பா.ஜ.க மற்றும் காங்கிரஸ் கட்சிகளுடன் நெருக்கமான உறவை பேணி வந்துள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இந்தியாவில் இருந்து மலையக மக்கள் சார்ந்த உதவிகளை முதல் முதலாக இலங்கை பெற வழிவகுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மறைந்த தலைவர்களான அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் காலம் முதல் அமரர் ஆறுமுகன் தொண்டமான் காலம் வரை இந்தியாவில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் இலங்கை தொழிலாளர் கங்கிரசுடன் காலம் தொட்டு நட்புறவை வலுப்படுத்தி வந்தது.

அவ்வாறே இன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அழைப்பை ஏற்று பாரத பிரதமர் நரேந்திர மோடியின் பிரதிநிதியாக அண்ணாமலை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இலங்கை வந்தடைந்தார்.

அவரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட உப தலைவர் திருக்கேஸ் செல்லசாமி மற்றும் அரசியல் அமைப்பாளர்களான ரகு, கோபி ஆகியோர் தலைமையிலான குழுவினர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

## விற்பனை வரியை உயர்த்துவதை...

தேவைப்படுகிறது. "வரிகளை அதிகரிக்க வேண்டும். எங்களிடமுள்ள வருவாய் மற்றும் செலவின இடைவெளியைக் குறைக்க வழிவகை செய்ய வேண்டும்" என்றார்.

அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியை நம்பியிருக்கும் இலங்கை போன்ற ஒரு நாட்டுக்கு தற்போதைய வற்வரி நிலை "நிச்சயமாக நிலையானதல்ல" என்று கூறிய அவர், 13 வீதம் அல்லது 14 வீதமாக உயர்த்தப்பட வேண்டும் என்றார்.

கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் 2019 இல் வரிகளை குறைக்கும் நடவடிக்கை தவறானது என்பதை ஒப்புக்கொண்ட அவர், சர்வதேசநாணய நிதியத்தின் உதவியை நாட அரசாங்கம் நீண்ட நாள் காத்திருந்துள்ளதாகவும் அலி சப்ரி கூறினார்.

மின்பற்றாக்குறையின் உச்சம்

# பாகிஸ்தானில் 18 மணிநேர மின்தடை

பாகிஸ்தானில் கடும் வெப்பத்திற்கு மத்தியில் மின் பற்றாக்குறையால் பல்வேறு இடங்களில் 18 மணி நேர மின் தடை ஏற்பட்டதால் மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நிலக்கரி, எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு மற்றும் விநியோகத்தலில் நிலவும் ஸ்திரத்தன்மையற்ற சூழலால் அனல் மின் நிலையங்களில் 6 ஆயிரம் முதல் 7 ஆயிரம் மெகாவோட் மின் உற்பத்தி தடைபட்டுள்ளது.

இதனால் நகர்ப்புறங்களில் 6 முதல் 10 மணி நேரம் மின் தடையும், கிராம புறங்களில் 18 மணி நேரத்திற்கும் மேலாக மின் தடை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர் மின் தடையால் தொழில், வர்த்தகம் உள்ளிட்ட துறைகள் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பௌத்த பீடங்களின் கடிதம்...

3 பௌத்த பீடங்களின் தேரர்களினதும், சிவில் அமைப்புக்களினதும் யோசனைகள் குறித்து தமது கட்சி மிகவும் அவதானத்துடன் உள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்காக, சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ள யோசனை தொடர்பில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அவதானம் செலுத்தியுள்ளது.

அந்த யோசனையை தமது கட்சிக்கு வழங்குமாறு கோருவதாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

குறித்த யோசனை தொடர்பில், தமது கட்சி கலந்துரையாடி, பெரும்பான்மையினரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில், அது குறித்து நடவடிக்கை எடுப்பதாகவும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

## SLPP ஆட்சியை எவராலும்...

விரட்டவும் முடியாது என முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை. ஒருவரையொருவர் பதவி விலகவும் கோரவில்லை.

நாட்டில் இன்று பெரும்பாலான ஊடகங்கள் எமது அரசுக்கு எதிராகவே செய்திகளை வெளியிடுகின்றன. இதன் பின்னணியில் யார் செயற்படுகின்றார்கள் என்று தெரியவில்லை.

ஊடகங்களில் வெளிவரும் செய்திகளின்படி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை. ஜனாதிபதியைப் பதவி விலகுமாறு பிரதமரோ அல்லது பிரதமரைப் பதவி விலகுமாறு ஜனாதிபதியோ கோரவில்லை.

எனவே, ஊடகங்கள் உண்மைத்தன்மையுடன் செய்திகளை வெளியிட வேண்டும். நடுநிலையுடன் செயற்பட வேண்டும்" எனவும் தெரிவித்துள்ளார்.

## ஹக்கீமை பகிரங்க விவாதத்திற்கு...

தொலைக்காட்சி ஒன்றில் தன்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்

நடந்தவற்றை உரியவாறு சமூகத்திடம் ஒப்புவிக்கும் பொறுப்பிலிருந்து நாமிருவரும் நழுவிவிட முடியாது. இதில், யார் குற்றவாளி அல்லது சுத்தவாளி என்பதையும் எவரது பொறுப்புக்கள் சமூகக் கடமைகளிலிருந்து நழுவியது என்பதையும் சமூகமே தீர்மானிக்க வேண்டும். இதற்காக ஒரு பகிரங்க விவாதம் நமக்குள் தேவைப்படுகிறது.

## கொழும்பில் இன்று வன்முறைகள்...

நாட்டின் பொருளாதார நிலைமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இன்று கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பல ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டங்கள் கொழும்பிற்கு வருதல், கொழும்பில் இருந்து செல்லல், கொழும்பிற்குள் பயணித்தல் போன்ற அனைத்தையும் மிகவும் கடினமாக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நாள் முழுவதும் வீதி மூடல் மற்றும் போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தும் என தூதரகம் தெரிவித்துள்ளது.

கொழும்பின் பல பகுதிகளில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் அமெரிக்க தூதரகம் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது.




## வீணாக்கி விடக்கூடாத வினாடிகள்

முஸ்லிம்கள் ரமழான் மாதத்தின் இறுதிக்கட்டத்தை அடைந்து விட்டனர். இது ரமழானின் இறுதிப் பத்து நாட்களிலுள்ள ஒற்றைப்படையான நாட்களின் இறுதி நாளாகவும் விளங்குகிறது.

இந்த நிலையில் நோன்பு பெருநாள் அமைந்திருக்கும் ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை இன்று மாலை இலங்கையில் பார்க்கப்பட உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் வழமை போன்று மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு ஏற்ப இன்று மாலை நாட்டில் எந்தப் பகுதியிலாவது தலைப்பிறை தென்பட்டால் நாளை ஈதுல் பித்ர் நோன்பு பெருநாளாக அமையும். அது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். இல்லாவிடில் நாளையும் நோன்பு நோக்கப்பட்டு ரமழான் மாதம் 30 ஆக பூர்த்தி செய்யப்படும். அதுதான் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல். அதற்கு ஏற்ப செயற்படுவது இறைவிசுவாசிகளின் பொறுப்பாகும்.

என்றாலும் மகத்துவம் மிக்க ரமழானில் எஞ்சி இருக்கும் இறுதிப் பகுதியையும் உச்சளவில் பயன்படுத்திக் கொள்வதில் அதிக கவனமும் அக்கறையும் எடுத்துக்கொள்ள வேண்டும். ரமழானில் உள்ள ஒவ்வொரு வினாடியுமே உச்ச பெறுமதி மிக்கவை. இம்மாதத்தில் ஆற்றப்படுகின்ற ஒவ்வொரு நற்காரியத்திற்கும் ஒன்றுக்கு பத்து முதல் எழு நூறு மடங்குகள் வரையில் நன்மைகள் அளிக்கப்படுகின்றன.

அதனால் இம்முறை நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட்ட போது ஏதாவது தவறுகள், பிழைகள் ஏற்பட்டுள்ளதா என்று மீள் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். அவ்வாறு ஏற்பட்டிருப்பின் அவற்றுக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அத்தோடு சிறுதவறுகள், பிழைகளுக்கான குற்றப்பரிகாரமாக விளங்கும் ஸகாதுல் பித்ரை நிறைவேற்றுவதிலும் அதிக அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் ரமழானில் பெற்றுக்கொண்டுள்ள உடல், உள ரீதியிலான பக்குவத்தை வாழ்நாள் முழுவதும் எடுத்து நடப்பதற்கு ஏற்ப தம்மை நெறிப்படுத்திக் கொள்வதிலும் கவனம் செலுத்த வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக எம்மில் எல்லா சந்தர்ப்பங்களிலும் இறையச்சம் மேலோங்கிக் காணப்படுவதற்கு ஏற்ப எம்மை நெறிப்படுத்திக் கொள்வோம். அதற்கான திட சங்கற்பம் பூணுவோம்.

மர்லின் மரிக்கார் ...

# அறுபது வகையான மருந்துகளின் விலைகள் மீண்டும் அதிகரிப்பு

60 வகையான மருந்துகளின் விலைகளை மீண்டும் திருத்துவதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த மருந்துகளின் விலைகள் 40%த்தால் அதிகரிக்கப்படுவதாக வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவின் கையொப்பத்துடன் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.மருந்துகளுக்கான அதிகபட்ச சில்லறை விலை குறித்த வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 375 மில்லி கிராம் அமோக்ஸிசிலின் கிளாவ்லினிக் அமில மாத்திரையின் விலை 59.79 ரூபாவிலிருந்து 83.71 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

250 மில்லி கிராம் குளோரித்ரோமைசின் மாத்திரையின் விலையும் ரூ.86.31 ஆக உயர்ந்துள்ளது.

100 மில்லிகிராம் டொக்சிசைக்ளின் மாத்திரையின் விலை 17.07 ரூபாவாக இருந்ததுடன், புதிய விலை 23.90 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், 75 மில்லி கிராம் எஸ்பிரின் மாத்திரையின் விலை ரூ.5.06ல் இருந்து ரூ.7.08 ஆக அதிகரித்துள்ளது.

மெட்ஃபோர்மின் 500 மில்லிகிராம் மாத்திரையின் விலை 6.64 ரூபாவாக இருந்ததுடன், புதிய விலை 9.34 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

10.29 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட 50 கிராம் தைரொக்ஸின் மைக்ரோகிராம் மாத்திரையின் விலையும் 14.41 ரூபாவாக உயர்ந்துள்ளதாக உரிய வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மருந்துகளின் விலைகள் முன்னதாக மார்ச் 15 ஆம் திகதி 2241/43 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எங்கள் கருத்து...

## மக்களின் எகிறும் எதிர்பார்ப்புகளும் ஈடு செய்யத் தவறும் எதிர்த்தரப்பும்

அரசியலை அரசியல்வாதிகளில் பெரும்பாலானோர் வர்த்தகமாகக் கருதியதன் விளைவே இன்றைய பொருளாதார சிக்கல்களுக்கான பிரதான காரணம். உயர் மட்டம் முதல் சாதாரண மட்டம் வரையிலான தொழில் வாய்ப்புகள் அரசியல் அல்லது கட்சி ரீதியாக வழங்கப்பட்டு வந்தமை, நிர்வாகத்துறையில் கட்சி/ அரசியல் ரீதியான செல்வாக்கு அதிகரித்தமை என்பனவற்றின் விளைவாக வினைத்திறன் குறைவடைந்தது. சேவை மனப்பான்மை அருகி எதைச் சுருட்டலாம் என்ற மனப்பான்மை மிகுந்தது. இலங்கையில் தகுதியற்றோருக்கு உயர் மற்றும் நிர்வாகப் பதவிகளை வழங்குவது நீண்ட கால வழக்கமானது.கட்டுக்கடங்காதபடி கட்சி அரசியல் நாடெங்கும் வியாபித்தது.

எனவே அரசை மாற்றுவதாலோ, பிரதமரையும், ஜனாதிபதியையும், அமைச்சரவையையும் மாற்றுவதாலோ புதிய சிந்தனை ஊற்றெடுக்கப்போவதில்லை. கால் புரட்சி அரைப்புரட்சி அல்ல, முழுப் புரட்சியே நாட்டில் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். ஆனால் இந்த சிஸ்டத்தை மாற்றுவதற்கான தகைமை எதிர்க்கட்சிகளிடம் உள்ளதா? என்பது மிகப் பெரிய கேள்வி. நடைபெற்ற சமீபத்திய பாராளுமன்ற அமர்வுகளில் எதிர்த்தரப்பினர் வெட்டிப் பேச்சு பேசியதை நாம் கண்டோம். நாட்டின் அவசர நிலைக்கு ஏற்றமாதிரி அவை செயற்படாமல் கட்சி, தேர்தல், வெற்றி வாய்ப்பு பற்றிய சிந்தனையுடனேயே செயல்படுவதை அவதானித்தோம். மக்கள், குறிப்பாக இளையதலைமுறையினர் எதிர்பார்க்கும் மாற்றங்கள் குறித்து வெளியில் புத்திஜீவிகள் பேசுகிறார்களே தவிர அரசியல்வாதிகள் பேசுகிறார்கள் இல்லை.

இன்று ஒரு ஆரம்பம் தேவை. சமூக ரீதியான ஆரம்பத்தை காலிமுகத்திடலிலும் நாடெங்கிலும் பார்க்க முடிகிறது. இதற்கு ஒரு அரசியல் முகம் கொடுக்கப்படவேண்டும். அது மக்களின் எதிர்பார்ப்புக்கு ஈடாகவும் அமைய வேண்டும். அதைச் செய்வதற்கு கட்சிகளிடம் ஒன்றுமையும் புரிந்துணர்வும் மிக மிக அவசியம். அதுவே இன்றைய தேவையும் கூட. ஆனால் வீதிப் போராட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்துபவர்கள் எப்படி மாற்றங்களைக் கொண்டு வரப்போகிறார்கள் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். 21ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவது, குற்றப் பிரேரணையை சமர்ப்பிப்பது, அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பித்து, பிரதமரை நீக்கி புதிய பிரதமரை தெரிவு செய்வது மற்றும் இடைக்கால அரசை உருவாக்குவது எனப் பல ஏற்பாடுகள் பற்றி பேசப்படுகின்றன. எனினும், இவற்றின் மீது இக் கட்சிகளுக்கிடையே பொது உடன்பாடு உள்ளதா?, எவற்றை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில் முடிவுக்கு வந்துள்ளனவா? என்று தெரியவில்லை. மக்கள் வெளியே காத்திருக்கிறார்கள். எதிர்க்கட்சிகளோ கேலியும் களியாட்டமுமாக பொழுதை வீணடிக்கின்றன.

## மக்கள் எதிர்பார்ப்பது பொருளாதார...

மருந்துப் பொருட்கள் சீராக வழங்கப்படாத நிலையில் தற்போதும் காணப்படுவதாக அவர் தெரிவித்தார். இந்நிலையில் அரசியலமைப்பின் 19, 20 அல்லது 21 வது திருத்தத்தை மக்கள் விரும்பவில்லை என வஜிர அபேவர்தன சுட்டிக் காட்டினார். மேலும் கடந்த அரசாங்கத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையை ரணில் விக்கிரமசிங்க உறுதி செய்திருந்தார் என்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை பொதுமக்கள் போராட்டத்தில் சில அரசியல் கட்சிகள் தங்கள் தனிப்பட்ட நலன்களை அடைய முயற்சிப்பதாகவும் வஜிர அபேவர்தன கடுமையாக சாடினார்.

## பொருளாதார நெருக்கடிகளுக்கு...

அனைத்து குடிமக்களின் முன்னேற்றத்திற்காகவும் இரவு, பகல் பாராது பாடுபடும் அன்பான உழைக்கும் மக்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு வருடங்களுக்கும் மேலாக உலகளாவிய தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் பல்வேறு பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்ட நீங்கள், நாட்டில் காணப்படும் இந்த பொருளாதார நெருக்கடியினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என்பது இரகசியமல்ல.

எதிர்பாராத விதமாக முகம் கொடுக்க நேரிட்டுள்ள இப்பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியிலும், மிகுந்த அர்ப்பணிப்புடனும், நிதானத்துடனும் செயல்பட்டு நீங்கள் நாட்டுக்கு சிறந்த முன்மாதிரியாக திகழ்கின்றீர்கள்.

தொழிலாளர் போராட்டத்துக்காக உங்களுடன் கைக்கோர்த்திருந்த நான், பொறுப்பு கூற வேண்டிய சகல சந்தர்ப்பத்திலும் உங்களது உரிமைகளுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் ஒருபோதும் புறக்கணித்ததில்லை.

எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள இப்பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றாக கைக்கோர்த்து, முதலில் இச்சவாலை வெற்றி கொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடியை நிர்வகிப்பதற்கு இதுவரை முன்னெடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்திருப்பதுடன், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அதற்கான ஆதரவை பெற்று வருகிறது.

இந்த அனைத்து முயற்சிகளினதும் இறுதி நோக்கம் ஒரு சிறந்த நாட்டை நிர்மாணிப்பதாகும். அதற்காக உழைக்கும் மக்களின் மகத்தான அர்ப்பணிப்பை சர்வதேச தொழிலாளர் தினமான இன்றைய தினத்தில் மிகுந்த மரியாதையுடன் நினைவு கூருகிறேன்.

## சவால்களை வெற்றிக் கொள்ள...

ஒதுக்கி வைத்துவிட்டு, போராட்டத்தை மக்கள் சார்பான புரட்சிகர மாற்றத்துடன் நேர்மறையான திசையில் கொண்டு செல்ல ஒன்றிணையுமாறும் உழைக்கும் மக்களிடமும் கௌரவமாக கேட்டுக்கொள்கிறேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் தினமான இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகவாழ் உழைக்கும் சமூகம் மிகப்பெரும் சவாலை எதிர்கொள்ளும் நேரத்தில், இவ்வருட சர்வதேச தொழிலாளர் தினம் நினைவுகூரப்படுகின்றது.

நமது நாட்டில் கடந்த மூன்று வருடங்கள் பாரிய சவாலுக்கு உள்ளாகியதும் தொழிலாளர் வர்க்கமே ஆகும். அத்தனை சவால்களையும் எதிர்கொண்டு விடாமுயற்சியுடன் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த உறுதி பூண்டவர்களும் அவர்கள்தான். நாளுக்கு நாள் அவர்கள் மீதான அழுத்தங்கள் தற்போது அதிகமாகியுள்ளன. அதிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கும், நிலவுகின்ற சிக்கலான நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசாங்கம் என்ற வகையில் பல்வேறு அணுகுமுறைகளை மேற்கொண்டு வருகின்றது.

அந்நியச் செலாவணி இழப்பு, பல பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. அவை அனைத்தையும் முகாமைத்துவம் செய்வதுதான் தற்போதைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழியாகும்.

ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமை யாரால் ஏற்படுத்தப்பட்டது என்பதைப் பின்தொடர்வதற்குப் பதிலாக, பொதுமக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதில் கவனம் செலுத்துவதுதான் இப்போது நாம் செய்ய வேண்டியது. அதற்கான மிகவும் பொருத்தமான மற்றும் செயற்திறன் மிக்க வேலைத்திட்டத்துக்கு சென்று மக்களின் தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க வேண்டும்.

இந்த நாட்டு மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான பொறுப்புடன் ஒன்றிணைந்து செயற்படுமாறு அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் அரச தலைவர் என்ற வகையில் மக்கள் சார்பாக நான் அழைத்தேன்.

ஒவ்வொரு நொடியும் மக்களின் துன்பத்தைத் தீர்க்கக்கூடிய வழிமுறைகளுக்குச் சென்று,தற்போதைய நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதே எமது குறிக்கோள்.

# பாலாங்கொடை பனான தமிழ் வித்தியாலய அதிபர் திடீர் இடமாற்றம்

### காரணங்கள் அறிவிக்கவில்லையென குற்றச்சாட்டு

பாலாங்கொடை பனான தமிழ் வித்தியாலய பதில் அதிபர் திடீர் இடமாற்றப்பட்டு அங்கு கடமையாற்றும் ஆசிரியருக்கு அதிபர் பதவி எவ்வித படிமுறைகளும் இன்றி பலாங்கொடை கல்வி அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளவர் இதற்கு முன்னர் அதிபராக கடமையாற்றி பாடசாலையில் கட்டட நிர்மாணத்தில் ஊழல் மற்றும் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டுகள் காரணமாக பதிவி நீக்கப்பட்டவராவார்.பனான அதிபரான மகேந்திரன் எவ்வித காரணங்களும் அறிவிக்காமல் இடமாற்றப்பட்டுள்ளது அவருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.எவ்வித பாரதூரமான குற்றங்கள் அற்ற நிலையில் சிறு தவறுகள் பெரிதுபடுத்தப்பட்டுள்ளது.இவ்வாறான தவறுகள் நாடு முழுதுமுள்ள பாடசாலைகளில் காணப்படுவதாகவும் அத்தோடு கொரோனா பாதிப்பால் இவை உருவாகியுள்ளது.இவ்வாறான பொய் காரணங்களால் அதிபர் மகேந்திரன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது உளவியல் ரீதியாக அவரை பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.இது தொடர்பில் சப்ரகமுவ கல்வி அலுவலக தமிழ் பிரிவு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பெரும்பான்மையை...

பெரும்பான்மையை நிரூபிப்போம் என்பதை அனைவரும் பார்க்க முடியும், இப்போது அதை எப்படிச் செய்யப் போகிறோம் என்பதை நான் வெளிப்படுத்த மாட்டேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கறுப்பு மேதினமாக கொண்டாடும்...

இடைவிடாத வெற்றியை நோக்கி கொண்டு சென்ற கசப்பான போராட்டத்தின் வரலாற்றை நினைவுகூரும் அடையாள தினமே தொழிலாளர் தினமாகும்.

ஆனால், எங்கள் நாட்டின் தற்போதைய ஆட்சியினால் தொழிலாளர்கள் கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட உரிமைகளும் பறிக்கப்பட்டுள்ளன.

ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் நாட்டு மக்களின் முழு எதிர்பார்ப்பையும் சிதைத்த அரசாங்கம், இதற்கு முன்னரான வரலாற்றில் எமக்கு காணக்கிடைத்ததில்லை. அரசு மற்றும் தனியார் துறைகளில் உழைக்கும் மக்களின் முழு எதிர்பார்ப்புக்களும் அரசாங்கத்தினால் சூறையாடியாடப்பட்டுள்ளது. அன்றாடம் உழைக்கும் கூலி வேலை செய்யும் மக்களுக்குக் கூட பாதைகளே சொந்தமாகியுள்ளன.

சுகாதாரம், விவசாயிகள், மீன்பிடித்துறை, பெருந்தோட்டங்கள், போக்குவரத்து உள்ளிட்ட அனைத்துத்துறைகளின் உழைக்கும் வர்க்கமும் கடும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். உயிரை பணயம் வைத்து பணியாற்றும் அத்தியாவசிய சேவையார்கள் கூட ஆட்சியாளர்களின் கவனத்திலிருந்து விலகியுள்ளனர்.

எனவேதான், இவ்வாறான நிலையில், கட்சி பேதங்களை மறந்து, இந்நாட்டில் உழைக்கும் அனைத்து மக்களும் அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமாக செயற்பாட்டுக்கு எதிராக ஜனநாயகப் போராட்டத்துக்கு வருகைத்தந்துள்ளனர்.

எனவே, இம்முறை கொண்டாடப்படும் தொழிலாளர் தினத்தை, இந்த அராஜக ஆட்சியின் கீழ் கொண்டாடப்படும் இறுதி மே தினமாக மாற்றுவதற்கும், பொருளாதார, சமூக,கலாசார,அரசியல் ரீதியாக மேம்பாடுகள் நிறைந்த மற்றும் அபிவிருத்தியடைந்த நாடாக எங்களுடைய தாய் நாட்டை உயர்த்துவதற்கு இருக்கும் மாற்றத்துக்கான சுதந்திர போராட்டத்தை வெற்றிபெறச் செய்யும் பலம் அனைத்து குடிமக்களுக்கும் கிடைக்கட்டும்

# பேராசிரியர் சோ.சந்திரசேகரம் நினைவஞ்சலி நிகழ்வு




















பேராசிரியர் சோ. சந்திரசேகரத்தின் நினைவஞ்சலி கூட்டமொன்று கடந்த ஞாயிறு (24) கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. முன்னாள் ராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ், பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், வே. இராதாகிருஷ்ணன், மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வி பீடாதிபதி பேராசிரியர் சசிகலா குகமூர்த்தி, பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை பீடாதிபதி பேராசிரியர் பிரசாந்தன், தமிழ்ச்சங்கத் தலைவர் சட்டத்தரணி என். காண்டீபன், மூத்த பத்திரிகையாளர் என்.எம்.அமீன் ஆகியோர் நினைவஞ்சலி உரைகள் நிகழ்த்த சந்திரசேகரம் குடும்பத்தினருடன் பேராசிரியர்களான எம். எஸ்.மூக்கையா, ஏ.எஸ். சந்திரபோஸ், எஸ்.கருணாநிதி, தை தனராஜ் உள்ளிட்டோர் மறைந்த பேராசிரியரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தியதோடு சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

படங்கள்: ஏ. கே விஜயபாலன்

# இலங்கை மக்களுக்கு 123 கோடி ரூபா மதிப்பிலான அரிசி, மருந்து வகைகள் வழங்க தமிழக அரசு முடிவு

**ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்காக நாம் உதவிகள் செய்தாக வேண்டும். அந்த வகையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்க தமிழக அரசு முடிவெடுத்துள்ளதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறுகிறார்.**

இலங்கை யில் கடும் இன்னலுக்குள்ளாகியிருக்கும் மக்களுக்கு உதவும் வகையில், அரசினர் தனித்தீர்மானத்தை முன்மொழிந்து சட்டமன்றத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

கடல் சூழ்ந்த இலங்கை நாடு, இன்று கண்ணீரால் சூழப்பட்டுள்ளது. ஈழத்தமிழ் மக்களுக்காக தி.மு.க. அரசு ஆளுங்கட்சியாக இருந்தபோதும், எதிர்க்கட்சியாக இருந்த போதும் ஆற்றிய பணிகளை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். 'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்பதைப் போல, நம்முடைய இ ரத்தத்தில், உணர்வில், வாழ்வில் கலந்த ஒரு பிரச்சினையாக இலங்கைப் பிரச்சினை இருந்து வருகிறது.

இலங்கையில் வாழக்கூடிய ஈழத்தமிழர் நலன் கருதி அரசியல் ரீதியாகப் பல்வேறு முழக்கங்களை வெவ்வேறு காலக்கட்டங்களில் நாம் முன்வைத்திருக்கிறோம்.

காலச்சக்கரம் இலங்கை மக்களை அலைக்கழித்து எங்கோ கொண்டு போய் நிறுத்திவிட்டது. இருப்பினும், மனிதாபிமான அடிப்படையில் நாம் கைகொடுக்க வேண்டும் என்பதே இந்த அரசினுடைய நிலைப்பாடா கும்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கான காரண, காரியத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. அதே நேரத்தில், அங்குள்ள மக்கள் படக்கூடிய துன்பங்கள், துயரங்கள் நம் அனைவருடைய மனதிலும் சோகத்தை உருவாக்கியிருக்கிறது.

இலங்கை முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கிறது. பெட்ரோல், டீசலுக்காக வாகனங்கள் பல மணி நேரம் வரிசையிலே காத்திருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மண்ணெண்ணெய் வாங்க பொதுமக்கள் 6 மணி நேரம் காத்திருக்க வேண்டிய ஒரு அவல நிலையும் ஏற்பட்டிருக்கிறது. எரிவாயு சிலிண்டர்கள் கிடைப்பதில் கடுமையான தட்டுப்பாடும் இருக்கிறது. இதனால் சமையல் செய்வதே சிக்கலுக்குரியதாக மாறியிருக்கிறது என்று செய்திகள் அவ்வப்போது வந்து கொண்டிருக்கின்றன. நாடு முழுவதும் மின்சாரத் தட்டுப்பாடு நிலவுகிறது. அரசு மற்றும் தனியார் அலுவலகங்களும் செயல்பட முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. பல அத்தியாவசியப் பொருட்களுடைய விலை பன் மடங்கு உயர்ந்து கொண்டே போகிறது. பேருந்துகள், ரெயில்கள் ஆகிய போக்குவரத்துச் சேவைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன; பல இடங்களில் அவை நிறுத்தப்பட்டிருக்கின்றன.

ரசாயன உரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதால், மலையகப் பகுதிகளில் தேயிலை விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலும் நமக்கு வருகிறது. இதனால், தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியக்கூடிய மலையகத் தமிழர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கை நாடு முழுவதும் உயிர்காக்கும் பல மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளில் ரசாயன உரம் கிடைக்காதது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. சாதாரணமாக 1200 ரூபாய்க்குக் கிடைத்த உர மூட்டை தற்போது 32,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பால் விலை, பால் மா விலை, உணவுப் பொருள்கள் விலை என அனைத்தும் பல நூறு மடங்கு உயர்ந்துவிட்ட காரணத்தால் பச்சிளம் குழந்தைகளும் கூட துன்பத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்ற செய்தி கேட்டு நம் நெஞ்சம் பதைபதைக்கிறது. மொத்தத்தில் இலங்கை மக்களின் வாழ்க்கை என்பது மிகமிக மோசமான நிலையை அடைந்துள்ளது.



அண்டை நாட்டுப் பிரச்சினையாக இதை நாம் பார்க்க முடியாது. அங்கு யார் ஆட்சியில் இருக்கிறார்கள். அவர்கள் எத்தகையவர்கள் எனப் பார்க்க இயலாது. அந்த நாட்டு மக்களுக்கு நம்மால் ஆன உதவியை நாம் செய்தாக வேண்டும் என்பதைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

இலங்கையில் இருந்து இத்தகைய செய்திகள் வந்ததுமே, ஈழத்தமிழ் மக்களுக்கு நம்மால் ஆன அனைத்தையும் வழங்குவோம் என்று நான் அறிவித்தேன். பிரதமரை 31. 3.2022 அன்று நான் நேரிலே சந்தித்து வலியுறுத்தினேன்.

அப்போது அதனை அறிந்து இலங்கைத் தமிழர் தலைவர்களும், சில தமிழ் அமைப்புகளும் எனக்கு வைத்த கோரிக்கை, 'தனியாகத் தமிழர்களுக்கு மட்டும் உதவி என்று அனுப்ப வேண்டாம். இலங்கை மக்களுக்கு என்று பொதுவாக அனுப்புங்கள். மக்களைப் பிரித்துப் பார்க்க வேண்டாம். அனைத்து இன மக்களும் சேர்ந்துதான் இந்த நெருக்கடியை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்' என்று சொன்னார்.

அதைக் கேட்டபோது நான் நெகிழ்ந்து போனேன். என்னால் உணர்ச்சிப் பெருக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதுதான் தமிழர் பண்பாடு. "பகைவர்க்கும் அருள்வாய் நன்நெஞ்சே" என்பதைப் போல, இலங்கைத் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

இந்த நிலையில், ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்காக நாம் உதவிகள் செய்தாக வேண்டும். அந்த வகையில் பின்வரும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கலாம் எனத் தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.

40 ஆயிரம் தொன் அரிசி, இதனுடைய ஒட்டுமொத்த மதிப்பு சுமார் 80 கோடி ரூபாய். அதேபோல், உயிர் காக்கக்கூடிய 137 மருந்துப் பொருட்கள், இதன் மதிப்பு 28 கோடி ரூபாய். குழந்தைகளுக்கு வழங்க 500 தொன் பால்பவுடர். இதன் மதிப்பு 15 கோடி ரூபாய். இவற்றையெல்லாம் இலங்கையில் வாழக்கூடிய அனைத்து மக்களுக்கும் நாம் வழங்க நினைக்கிறோம். இவற்றை மாநில அரசு நேரடியாக வழங்க முடியாது. ஒன்றிய அரசின் அனுமதியோடு இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் வழியாகத்தான் வழங்க வேண்டும். இலங்கையில் இத்தகைய நெருக்கடி ஏற்பட்டதுமே, இந்திய அரசிடம் இதுகுறித்த கோரிக்கையை நான் முன்வைத்தேன்.

31.3.2022 அன்று டெல்லி சென்று பிரதமரை சந்தித்தபோதும் இதனை நான் வலியுறுத்தியிருக்கிறேன். அதனைத் தொடர்ந்து ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரை தொலைபேசியில் தொடர்பு கொண்டும் நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். அவருக்கும் 15.4.2022 அன்று கடிதம் எழுதி நினைவூட்டியிருக்கிறேன். இன்றுவரை எந்தத் தகவலும் இல்லை. ஆனால் அங்கு நிலைமை தற்போது மிகவும் மோசமடைந்துள்ளது.

'உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்கிறார் வள்ளுவர். உதவி என்பதும் மனிதாபிமான அடிப்படையில் உடனடி உதவியாக இருக்க வேண்டும். காலத்தே செய்தால் தான் அது உதவி. இதனைத்தான் தமிழக மக்களும் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த எண்ணத்தை ஒன்றிய அரசுக்குச் சொல்லக்கூடிய வகையில் ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் நிறைவேற்றி அனுப்புவது காலத்தினுடைய கட்டளை என்று அரசு கருதுகிறது. அதன் அடிப்படையில், கீழ்க்காணும் தீர்மானத்தை நான் இங்கே முன்மொழியக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று அவர் பேசினார்.



# சர்வகட்சி அரசை அமைப்பதே உடனடித் தீர்வுக்கான ஒரேவழி!

**நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகள் பல முனைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய இடைக்கால சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கான விருப்பத்தை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வருகின்றார்.**

## ஜனாதிபதியின் இணக்கத்தையடுத்து அரசியல் களத்தில் சாதகமான நகர்வுகள்

பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டிய தன் தேவை பல்வேறு தரப்பினராலும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு அங்கமாக மகாசங்கத்தினர் இது குறித்து ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தனர். இதற்குப் பதிலளிக்கும் வகையில் மகாசங்கத்தினருக்கு அனுப்பியிருந்த கடிதத்தில், சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்குத் தான் தயாராக இருப்பதாகவும், இதற்காக அனைத்துக் கட்சிகளையும் சந்திப்பதற்கான அழைப்பை விடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கத்திலிருந்து பிரிந்து தற்பொழுது சுயாதீனமாகச் செயற்பட்டு வரும் 11 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய மற்றும் இடதுசாரிக் கட்சிகள் உள்ளடங்கலாக 11 கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில், புதிய பிரதமர் ஒருவரின் தலைமையின் கீழ் குறுகிய காலத்துக்கு சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான ஏற்பாடொன்றுக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததாக சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன ஊடகங்களுக்குக் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியதாக அரசாங்கம் அமைய வேண்டும் என்பது ஜனாதிபதியின் விருப்பமாக அமைந்துள்ளது. இதற்கிணங்க ஏனைய கட்சிகளையும் உள்வாங்குவது தொடர்பில் ஆராய்வதற்கும், சர்வகட்சி அரசாங்கத்தின் கட்டமைப்புத் தொடர்பில் ஆராய்வதற்கும் சுயாதீனக் குழுவைச் சேர்ந்த ஐவர் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.





## பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி தரப்பிலிருந்து, ஒத்துழைப்புக்கான சாதக சமிக்ஞைகள் இதுவரை இல்லை. அரசியலமைப்பு திருத்தம் பற்றியும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது பற்றியுமே அவர்கள் கரிசனை

அதேநேரம், தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை குறித்த பதவியிலிருந்து விலக்கி விட்டு புதியவர் ஒருவர் தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற ஒரு கருத்தும் அரசியல் அரங்கத்தில் காணப்படுகிறது.

இருந்தபோதும் கடந்த சில நாட்களாக பொதுஜன பெரமுன கட்சியின் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பிரதமரைச் சந்தித்து அவரைப் அப்பதவியில் நீடிக்குமாறு வலியுறுத்தி வருகின்றனர். இவ்விடயத்தில் பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களுக்கிடையில் மாறுபட்ட நிலைப்பாடு காணப்படுவதாக ஊடங்கள் அறிக்கையிட்டுள்ளன.

இருந்தபோதும் பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷவை விலகுமாறு தான் ஒருபோதும் கோரவில்லையென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்றத்தில் 113 ஆசனங்களுடன் பெரும்பான்மையை நிரூபிக்கும் தரப்பு யாராக இருந்தாலும் அவர்களுடன் இணைந்து அரசாங்கத்தைக் கொண்டு செல்ல முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இவ்வாறான பின்னணியில் பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால அரசாங்கத்தை அமைத்து அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதே தற்போது அரசியல் கட்சிகளின் முதற்பணி

பி.ஹர்ஷன்...

# சீனாவின் 2.5 பில்லியன் டொலர் கடனுதவி பேச்சுகளில் தாமதம்

**இலங்கை தற்போது பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றது. வருடக் கணக்கில் நிலவிய கொவிட் தொற்று காரணமாக நாடு பல மாதங்களாக முடக்கப்பட்டுக் கிடந்ததால் சுற்றுலாத்துறை உட்பட அனைத்துத் தொழில் துறைகளும் வீழ்ச்சியடைந்தன. அந்நிய செலாவணி வருமானம் பாதிக்கப்பட்டது. நாட்டில் டொலருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது.**

இதனால் இலங்கையில் பொருளாதார நெருக்கடி தலைதூக்கியது. எரிபொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இந் நிலையில் அயல்நாடான இந்தியா இலங்கைக்கு வழங்கிய உதவிகள் ஏராளம். நிதியுதவிகள், எரிபொருள் உதவிகள் என்றெல்லாம் இந்தியா பல விதமான உதவிகளை இலங்கைக்கு வாரி வழங்கியுள்ளது. இலங்கையின் நெருக்கடியை நன்கு புரிந்து கொண்டபடி இந்தியா உடனடியாகவே இந்த உதவிகளை வழங்கியுள்ளது. குறைந்த வட்டி வீதத்தில் இந்தியா வழங்கிய இலகுமுறை கடன் காரணமாக இலங்கை மக்களின் சிரமங்களை நன்கு குறைக்க முடிந்தது.

இலங்கையின் எரிபொருள் பற்றாக்குறையைக் குறைப்பதில் இந்தியா தற்போதும் வழங்கிக் கொண்டிருக்கின்ற உதவிகள் அநேகம் ஆகும்.

அதேநேரம் சீனா இலங்கைக்கு வழங்கிய நிதியுதவியின் வட்டி வீதம் அதிகமாகும். சீனாவின் கடன் உதவியானது அதனை மீளச்செலுத்துவதில் இலங்கைக்கு பெரும் சுமைகளை ஏற்படுத்துமென்று இலங்கையின் பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். சீனாவிடம் கடனுதவி பெறுவதில் இலங்கையர்கள் பலருக்கு உடன்பாடு கிடையாதென்பதுவும் குறிப்பிடத்தக்கது.

உலகில் பல நாடுகளுக்கு சீனா கடன் வழங்கியுள்ளது. பாகிஸ்தான் மற்றும் ஆபிரிக்காவிலுள்ள சில நாடுகளுக்கும் சீனா கடனுதவி வழங்கியுள்ளது. ஆனால் அந்த கடன்களை மீளச்செலுத்துவதில் அந்நாடுகள் சிரமத்தை எதிர்கொள்கின்றன. 'சீனாவின் கடன்பொறி' என்றுதான் இந்த கடனுதவியை சர்வதேச பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். கடனை மீளச்செலுத்த முடியாத பட்சத்தில் சீனாவின் நிபந்தனைகளுக்கு அந்நாடுகள் இணங்க வேண்டி வரலாம் என்பதுதான் அங்குள்ள பிரச்சினையாகும்.

இந்த நிலையில், இலங்கையானது தற்போதைய பொருளாதார நெருக்கடி வேளையில் தனது கடன்களை மறுசீரமைப்பு செய்ய வேண்டிய நிலைமையில் உள்ளது. கடன் மறுசீரமைப்பு விடயம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கு இலங்கை முடிவு செய்துள்ளது. இந்த முயற்சியில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுக்குமென்ற நம்பிக்கை தோன்றியுள்ளது.

ஆனால் மறுபுறத்தில் கடன்களை மறுசீரமைப்பு செய்வதில் இலங்கை மேற்கொள்ளும் முயற்சியானது சீனாவுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லையென ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. இலங்கைக்கு நேரடியாக உதவி வழங்குவதில் இந்தியா பிரதிபலன் எதையுமே எதிர்பார்க்காமல் செயற்படுகின்றதென்பது வெளிப்படையானது. ஆனால் சீனாவின் குறிக்கோள் வேறானது. சீனா எவ்வேளையிலும் தனது பொருளாதார நலன்களை கவனத்தில் கொண்டே மற்றைய நாடுகளுக்கு கடனுதவிகளை வழங்குவது வழக்கம்.

தற்போதைய வேளையில், இலங்கை தனது கடன்களை மறுசீரமைப்பு செய்வதில் மேற்கொள்ளும் முயற்சியினால் இலங்கைக்கான 2.5 பில்லியன் டொலர் சீன உதவி தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தாமதம் குறித்து இலங்கைக்கான சீனத் தூதுவரும் தகவல் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு நிதியுதவியைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்தியா முயற்சி மேற்கொண்டு வருகையில், மறுபுறத்தில் சீனா தனது உதவியையே தாமதப்படுத்துகின்றதென்பது பொருளாதார நிபுணர்களால் உற்றுநோக்கப்படுகின்றதென்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். இதுவே இந்திய உதவிக்கும், சீனாவின் உதவிக்கும் இடையேயான வேறுபாடு ஆகுமென அந்நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்தியா எவ்வேளையிலும் இலங்கையை தனது சகோதர தேசமாகவே நோக்குகின்றதென்பது இதன் மூலம் தெளிவாகின்றது. இலங்கையை கடன்பொறியில் சிக்க வைக்க வேண்டுமென்ற உள்நோக்கம் எதுவுமே இல்லாமல், அயல்நாட்டின் நெருக்கடி வேளையில் உதவி புரிய வேண்டுமென்ற நன்னோக்கத்தை மட்டுமே இந்தியா கொண்டிருக்கின்றதென்பது இத்தருணத்தில் புரிகின்றது.

இவ்வாறான வேளையிலேயே இந்தியாவின் மற்றொரு உதவியும் சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக்குக் கிடைக்கவிருக்கின்ற செய்தி வெளியாகியுள்ளது. நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு, எரிபொருள் இறக்குமதி செய்வதற்காக மேலும் 50 கோடி டொலர் கடன் வழங்க இந்தியா ஒப்புக் கொண்டுள்ளதென்பதே அச்செய்தியாகும்.

இலங்கைக்கு உடனடியாக 400 கோடி டொலர் தேவைப்படுகிறது. இதையடுத்து, நிதியமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட குழுவினர் உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் உதவியை நாடினர். அமெரிக்கா சென்றிருந்த அமைச்சர் அலி சப்ரி, சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். இதுதவிர, சில நாடுகளிடமும் நிதியுதவி கோரியுள்ளார்.

இலங்கையின் கோரிக்கையை ஏற்று, இந்திய அரசு ஏற்கெனவே 190 கோடி டொலர் கடன் வழங்கியது. இதை எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருளாக அனுப்பி வைத்தது. குறிப்பாக 40 ஆயிரம் தொன் அரிசியை வழங்கியது.

இந்நிலையில், எரிபொருள் இறக்குமதி செய்வதற்காக மேலும் 50 கோடி டொலர் கடன் வழங்க இந்தியா ஒப்புக் கொண்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. அதேசமயம் மேலும் 100 கோடி டொலர் கடன் வேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கையை இந்தியா பரிசீலிக்கும் என்று இலங்கை அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இலங்கை தனது கடன் மறுசீரமைப்பு விடயம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கு முயற்சிப்பது சீனாவுக்கு மகிழ்ச்சி தரும் விடயமல்ல



## பிரதிபலன் கருதாது இலங்கைக்கு தொடர்ந்தும் உதவிகள் வழங்குவதில் இந்தியா உறுதிப்பாடு

சாரங்கன்...

**முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவினால் 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றுவது தொடர்பில் கருத்தாடல்கள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன.**



# இதுவரை இருபது தடவைகளில் திருத்தங்கள் கண்டுள்ள 78 ஆம் ஆண்டு அரசியலமைப்பு






1972 ஆம் ஆண்டு இலங்கை குடியரசான பின்னர் கொண்டுவரப்பட்ட 78 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்பு இதுவரை 20 தடவைகள் திருத்தப்பட்டுள்ள போதும், நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் ஒழிப்பதற்கான முயற்சிகள் இன்னமும் பேச்சு மட்டத்திலேயே காணப்படுகின்றன. ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த பெரும்பாலான ஜனாதிபதிகள் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாகக் கூறி தேர்தல்களில் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த போதிலும், அதிகாரத்துக்கு வந்த பின்னர் அதனை ஒழிப்பதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மறைந்த ஆர்.பிரேமதாச, அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க, முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஜனாதிபதித் தேர்தல் காலத்தின் போது இந்த முறையை ஒழிப்பதாகக் கூறியிருந்தார்கள். இருந்தபோதும் அதனை ஒழிப்பதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

இந்த நிலையில், இந்தியாவின் அழுத்தம் காரணமாக ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் அரசியலமைப்புக்கு 13 ஆவது திருத்தம் கொண்டு வர வேண்டியதாயிற்று. அதாவது இந்தியாவில் இருப்பதைப் போன்று மாகாணசபை முறை இதன் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டது. மாகாண சபைகள் அமைக்கப்பட்டு அவற்றுக்கு அதிகாரங்களைப் பகிர்வதற்கான ஏற்பாடுகள் 13 ஆவது திருத்தத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டன. இருந்த போதும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இதுவரை மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை. மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஜனாதிபதிகள் இந்த அதிகாரத்தை வழங்காது தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டிருந்தனர்.

மாகாண சபைகள் அமைக்கப்பட்டு அதிகாரங்களைப் பகிர்வதற்கான ஏற்பாடுகள் இருந்த போதும் அவ்வப்போது நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது பற்றிய பேச்சுக்கள் அடிபட்டுக் கொண்டே இருந்தன. அத்துடன், நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது என்பதற்கு அப்பால் அரசியலமைப்பின் ஊடாகப் பல்வேறு திருத்தங்களுக்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன.

இவற்றில் விசேடமாக சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட 17 ஆவது திருத்தம் குறிப்பிடத்தக்கதாகும். சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு அதிகாரத்தை அளிக்கும் வகையிலும், பாராளுமன்றத்தின் அதிகாரத்தை வலுப்படுத்தும் வகையிலும் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இருந்த போதும், அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான அதிகாரங்களைக் குறைத்து மீண்டும் ஜனாதிபதிக்கு அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் 18வது திருத்தத்தைக் கொண்டு வந்தார்.

இதன் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டன. பாராளுமன்றத்தின் அதிகாரமும் கணிசமானளவு மட்டுப்படுத்தப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தேர்தலில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய தனக்கு வழங்கப்பட்டிருந்த நிறைவேற்று அதிகாரத்தில் கணிசமான விடயங்களைக் குறைப்பதற்கு இணங்கினார். இதற்கு அமைய அரசியலமைப்பு 19 ஆவது தடவையாகத் திருத்தப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கம் எனக் கூறப்பட்ட அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட 19 ஆவது திருத்தத்தில் நிறைவேற்று ஜனாதிபதிக்குக் காணப்படும் அதிகாரங்கள் சில பாராளுமன்றத்துக்கு வழங்கப்பட்டன. பல விடயங்களைக் குறைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணங்கிய போதும், அவற்றுக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியமையால் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாது குறைக்கக் கூடிய அளவிலான அதிகாரங்களைக் குறைப்பதற்கு அப்போதைய அரசு தீர்மானித்தது.

அது மாத்திரமன்றி, மீண்டும் சுயாதீன ஆணைக்குழுக்களை வலுப்படுத்தவும், உயர் நியமனங்கள் உள்ளிட்டவற்றை அரசியலமைப்புச் சபையின் ஊடாக அங்கீகரிப்பதற்கும் இதன் ஊடாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதேநேரம், ஜனாதிபதி ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேலாக பதவி வகிக்க முடியாது, இரட்டைப் பிரஜாவுரிமை உள்ள ஒருவர் தேர்தலில் போட்டியிட முடியாது போன்ற விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் ஒரு சில நபர்களை இலக்கு வைத்து அவசர அவசரமாக உள்ளடக்கப்பட்ட விடயங்கள் என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு கொண்டு வரப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டத்தில் தெளிவற்ற தன்மைகள் பல காணப்பட்டமையால் நிறைவேற்று அதிகாரத்துக்கும், சட்டவாக்கமான பாராளுமன்றத்துக்கும் இடையில் போட்டிநிலை உருவானது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் ஆட்சியை மாற்றுவதற்கு எடுத்த முயற்சிகள் சட்டரீதியாக சவாலுக்கு உட்படுத்தப்பட்டு பாரியதொரு குழப்பநிலை ஏற்பட்டது.

இதனால் ஏற்பட்ட அனுபவத்தால் ஸ்திரமான ஆட்சிநிலையைக் கொண்டுவர 19 ஆவது திருத்தம் ஒழிக்கப்படும் என்ற உறுதிமொழியை வழங்கி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார்.

## 20 ஆவது திருத்தத்தில் இருந்து 21 ஐ நோக்கிய நகர்வு; மற்றொரு திருத்தத்துக்கு தயாராகின்றது அரசியல்யாப்பு!

நாட்டை ஸ்திரமான நிலையில் முன்நோக்கிக் கொண்டு செல்வதாயின் நிறைவேற்று அதிகாரம் பலப்படுத்தப்பட வேண்டும் எனக் கோரியே ஜனாதிபதி மக்கள் ஆணையைக் கோரியிருந்தார்.

இதற்கு நாட்டில் உள்ள வாக்காளர்களில் 69 இலட்சம் பேரின் ஆணை வழங்கப்பட்டது. மக்களின் ஆணைப்படி 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளில் கைவைக்கப்படாவிட்டாலும், நியமனங்கள் மற்றும் தீர்மானங்கள் எடுப்பதற்கு ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்கள் வலுப்படுத்தப்பட்டன. இது தவிரவும், பாராளுமன்ற சபையானது ஜனாதிபதிக்குப் பரிந்துரையை மேற்கொள்ளும் கட்டமைப்பாக மாற்றப்பட்டது. உயர் நியமனங்கள் குறித்து ஜனாதிபதி எடுக்கும் தீர்மானத்தை ஆராய்ந்து பரிந்துரைப்பதே பாராளுமன்ற சபையின் அதிகாரமாகும். இது தவிரவும் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் பாராளுமன்றத்துக்கு வருவதில் காணப்பட்ட தடையும் நீக்கப்பட்டது.

இதற்கிடையில் புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் நோக்கில் குழுவொன்றையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்திருந்தார். இந்தக் குழுவின் அறிக்கை தற்பொழுது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் மக்கள் மத்தியில் அதிகரித்துள்ள எதிர்ப்புக்களால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது, சுயாதீன ஆணைக்குழுக்களைப் பலப்படுத்தும் வகையில் 19 ஆவது திருத்தத்தில் உள்ள விடயங்களை மேலும் திருத்தங்களுடன் மீள நடைமுறைக்குக் கொண்டு வருவது பற்றிப் பேசப்படுகிறது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஆளும் கட்சியிலிருந்து எதிர்த்தரப்புக்குச் சென்றுள்ள சுயாதீனக் குழுவினர் அரசியலமைப்புத் திருத்த யோசனைகளை சபாநாயகரிடம் முன்வைத்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தனிநபர் பிரேரணையாக 20 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை முன்வைத்துள்ளார். சுயாதீனக் குழுவின் சார்பில் விஜயதாச ராஜபக்ஷ 21 ஆவது திருத்தச்சட்டமூலத்தை முன்வைத்துள்ளார்.

இந்த இரண்டு யோசனைகளிலும் பெரும்பாலும் பாராளுமன்றத்தைப் பலப்படுத்தும் யோசனைகளே உள்ளடங்கியுள்ளன. அதேவேளை, முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் நிதி அதிகாரத்தைப் பலப்படுத்தல், பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறக் கூடிய அமைச்சரவையை உருவாக்குது போன்ற யோசனைகள் அடங்கிய வரைபொன்றைச் சமர்ப்பித்துள்ளார். இதற்கிடையில் அரசாங்கம் சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சரவையில் மற்றுமொரு அரசியலமைப்புத் திருத்த யோசனையை முன்வைத்துள்ளார். பாராளுமன்றத்தின் அதிகாரம் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களைப் பலப்படுத்தும் யோசனைகள் இதில் உள்ளடங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால் தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்புத் திருத்த யோசனைகள் யாவும் ஏறத்தாழ ஒரே மாதிரியான விடயங்களைக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது. எனவே, மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் விரைவில் அரசியலமைப்பில் திருத்தங்களைக் கொண்டுவந்து பாராளுமன்றத்தைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகளையே அரசியல்வாதிகள் அனைவரும் மேற்கொள்ள வேண்டும். நாட்டை முற்போக்கான பாதையில் கொண்டு செல்லக் கிடைத்திருக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தை அனைவரும் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

**“1978 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்பு இதுவரை 20 தடவைகள் திருத்தப்பட்டுள்ள போதிலும், நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் ஒழிப்பதற்கான முயற்சிகள் இன்னமும் பேச்சு மட்டத்திலேயே காணப்படுகின்றன”**



**நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதென்ற கருத்தாடல் பல தசாப்த காலமாக முடிவின்றித் தொடர்கிறது**



# மேதினம்

## கண்ணீர் விட்டே வளர்த்தோம்... அர்த்தமற்று போய்விடக்கூடாது தொழிலாளர் உரிமைகள்




இன்று நாட்டில் நிலவும் பொருளாதார தளம்பல் அரசியல் ஸ்திரமின்மையின் பின்னணியில் சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகின்றது. பல்வேறு நெருக்குவாரங்களுக்கு மத்தியில் இன்றைய மேதினம் அனுட்டிக்கப்படுவதால் மேதின மேடைகள் சூடுபிடிக்கவே செய்யும். ஆயினும் அத்தனையும் கடந்துபோன கசப்பான அனுபவங்களாக மட்டுமே அமைவது திண்ணம். மலையகத்திலும் இதே நிலைதான். உண்மையில் மேதினத்தின் மேன்மையைப் புரிந்து கொண்டால் மட்டுமே உரியபலன் கிட்டுமே தவிர எதிரணியைத் திட்டும் செயற்பாடுகளால் ஆகப்போவது எதுவுமே இல்லை.

மேதினியெங்கும் மேன்மையான தினமாக கொண்டாடப்படும் மேதினம். வர்க்க உணர்வுக்கான அடையாளம். தொழிலாளர் தோழர்களுக்கும் உழைக்கும் வர்க்கத்தினருக்கும் இது உன்னதமான நாள். அன்று சிக்காக்கோவில் சீறி வெடித்து சிதறிய




உரிமை எழுச்சி முழு உலகையுமே மிரட்சிகொள்ள வைத்தது என்னவோ உண்மை. 8 மணி நேர வேலை என்ற தொனிப்பொருளை இலக்காக கொண்டு ஆரம்பமான தொழிலாளர் போராட்டம் பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ரஷ்யா, அமெரிக்கா என்று விரிவு பெற்றது.

18 ஆம் நூற்றாண்டு இறுதியிலும் 19 ஆம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் தொழிலாளர் விடுதலைக்கான உணர்வலைகள் பரவலாக சுழன்றடித்தன. ஏனெனில் துரித வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்பட்டது. அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. அடக்குமுறை, ஒடுக்குமுறை என்று கசக்கிப் பிழியப்பட்டனர்.

தொழிலாளர்களது சக்தி. உழைப்பின் களைப்பைப் போக்க ஓய்விற்கான நேரம் இல்லாமல் உழைக்கும் வர்க்கம் உருக்குலைந்து போனது. நாளொன்றுக்கு 8 18 மணி நேர கட்டாய வேலை நேர நடைமுறை தொழிலாளர்களைச் சினமடையச் செய்தது. எதிர்ப்புணர்வு மேலோங்கியது. இது பல்வேறு நாடுகளிலும் பரவியது. தொழிலாளர் சாசன இயக்கம் இதில் முக்கிய இடம் பிடித்ததுக் கொண்டது. 6 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தொடர் இயக்கமாக இது பரிணாமம் பெற்றது. இவ்வியக்கத்தின் முக்கிய அம்சம் 10 மணி நேர வேலை வேண்டும் என்பதே.

1830களில் பிரான்சில் 15 மணிநேர வேலையை எதிர்த்து போராட்டம் ஆரம்பமானது. 1834 இல் ஆரம்பமான "ஜனநாயகம் அல்லது மரணம்" எனும் தொனிப்பொருளிலான போராட்டம் உலகின் கவனத்தை ஈர்த்தது. எனினும் இப் போராட்டம் தோல்வியைத் தழுவியது. இப்போராட்டங்களுக்கு எல்லாம் உச்சமாக திகழ்ந்தது தான் அமெரிக்காவின் சிக்காகோவில் ஆரம்பமான பேரெழுச்சி. 3000 க்கும் அதிகமான தொழிலாளர்கள் இதில் பங்கேற்றார்கள்.

"மெக்கர் மிக் ஹார் வாஸ்டிங்" என்ற மெசின் நிறுவனம் இயங்கிக் கொண்டிருந்தது. இது மிகவும் பிரசித்திபெற்ற நிறுவனமாகும். இதன் நுழைவாயிலில் கண்டனக் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. போராட்டக்காரர்களை கலைந்து செல்ல பொலிஸார் கட்டளை பிறப்பித்தார்கள். எனினும் தொழிலாளர்கள் மசிந்தபாடில்லை. இதனால் பொலிஸார் கோபமுற்றார்கள். கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். 4 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். இதே போலவே "ஹேமார்க்கெட்" சதுக்கத்திலும் மே மாதம் 4 ஆம் திகதி கண்டனக் கூட்டம் நடந்தது. இங்கும் கலவரம் வெடித்தது. யாராலோயோ வெடிகுண்டு வீச்சு இடம் பெற்றது. இதில் ஒரு பொலிஸ்காரா் பலியானார். இதனால் பதற்றம் சூழ்ந்து கொண்டது. பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்குமிடையே கைகலப்பு ஆரம்பமானது.

இதன் விளைவாக தொழிலாளர்களின் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டார்கள். இவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது. 21ஆம் திகதி ஜுன் மாதம் 1986 இல் இவ்வழக்கு விசாரணைக்கு வந்தது. 7 பேருக்கு தூக்குத் தண்டனை விதித்து தீரப்பளித்தது நீதிமன்றம். இதைனையே "ஹேர்மார்கெட் படுகொலை" என்று வரலாறு பதிவு செய்துள்ளது. இதைக்குறிக்கும் வண்ணம் இங்கு நினைவு சின்னம் எழுப்பப்பட்டுள்ளது.

இது பல்வேறு நாடுகளிலும் வேலை குறைப்புக்காக போராட்டங்களை நடத்தி வந்த தொழிலாளர்களுக்கிடையே ஆத்திரத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியது. தொழிலாளர் தலைவர்கள் 7 பேரும் தூக்கிலிடப்பட்டார்கள். இவ்வாறு தூக்கிலிடப்பட்டவர்களில் ஒகஸ்ட் ஸ்பைஸ், ஆல்பேர்ட் பார்சன்ஸ், அடெல்ஃப்பிர், ஜோர்ஜ் ஏங்கல் போன்ற பிரபல்யங்களும் இருந்தார்கள். தூக்கிலிடப்பட்ட இவர்களின் இறுதி ஊர்வலத்தில் 5 இலட்சம் பேர் வரை பங்கேற்றது முதலாளி வரக்கத்தினரிடையே சலசலப்பை ஏற்படுத்தவே செய்தது.

அமெரிக்கா முழுவதும் இத்தினம் கறுப்பு தினமாக அனுட்டிக்கப்பட்டது. அமெரிக்க நாட்டுத் தொழிலாளர்களின் 8 மணிநேர வேலைக்கான போராட்டமும் சிக்காக்கோ தியாகிகளின் தியாகமும் மே தினம் உருவாக காரணமாக அமைந்நது.

இதற்கு அனுசரணையாக 1889 ஆம் ஆண்டு ஜுலை 14 ஆம் திகதி பாரீசில் சோ'லிஸ தொழிலாளர்களின் சர்வதேச தொழிலாளர் பாரளுமன்றம் கூட்டப்பட்டது. 1890 மே மாதம் முதல் சர்வதேச ரீதியாக தொழிலாளர் இயக்கங்களை முன்னெடுப்பது என்ற முடிவு எட்டப்பட்டது. இதில் பிரெட்றிக் ஏங்கல்ஸ் கலந்துகொண்டு கருத்துக்களை முன் மொழிந்தது சிறப்பம்சமாக இருந்தது.

பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ரஷ்யா என்று ஆரம்பமாகி சிக்காக்கோவில் பேரெழுச்சியாக பரிணாமம் பெற்று பாரிசில் பாராளுமன்ற அமர்வாக நடந்து அறைகூவலாக அகிலம் எங்கும் ஓங்கியொலித்த கோரிக்கையின் வெளிப்பாட்டாக மேதினம் நிர்ணயமானது.

இதன் பின்னணியில் வேதனை, ஏமாற்றம், இழப்பு, சித்திரவதை என்று பல்வேறு துன்பியல் நிகழ்வுகள் இடம்பெறவே செய்தன. எனினும் இது உலகத்துக்கு புதிய செய்தியொன்றைச் சொல்லவே செய்ந்தது. அது ஒன்றுபட்டால் உண்டு பலன் என்ற செய்தியே. அதன் பின்னர் சர்வதேச ரீதியில் தொழிலாளர் நலன் கருதிய பல்வேறு சட்டத்திட்டங்கள் அங்கீகாரம் பெற்றன. இன்று ஐ.நா. முதற்கொண்டு பல்வேறு அமைப்புகளும் கூட தொழிலாளர் நல உரிமை பற்றி கரிசனைகாட்ட இப்போரட்ட விளைவுகளே அடிப்படையாக அமைந்துள்ளது.

ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் இன்று மேதின நிகழ்வுகள் என்பது முதலாளித்துவம், அரசியல் சம்பந்தப்பட்டவையாக மாறிப் போயிருப்பதை காண முடிகிறது. இந்த வரலாற்று நிகழ்வுகள், அது தரணிக்கு தந்த படிப்பினைகள், அதன் மூலம் சரவதேச ரீதியில் உழைக்கும் வர்க்கம் பெற்று வரும் உரிமைகள், சலுகைகள் என்பனவெல்லாம் குறிப்பிடத்தக்க விடயங்களே தான். ஆனால் பெருந்தோட்ட மக்களின் தொழில்சார் உரிமைகளோடு ஒப்பிடும்போது மேதின பெறுபேறுகள் நியாயமான வகையில் கிடைக்கப் பெறுவதாய் இல்லை. சர்வதேச தொழிற் சட்டங்கள், தொழிற்சார் நல உரிமைகள், வரப்பிரசாதங்கள் மறுதலிக்கப் படும் ஓர் உழைப்பாளர் சமூகமாகவே பெருந்தோட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

மலையக தொழிலாளர் தங்கள் உரிமைகளுக்காக பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளார்கள.் உயிர்த்தியாகங்களும் இடம் பெற்றுள்ளன. முதலாளி வர்க்கத்திற்கு எதிரான அனைத்துப் பிரயோகங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் மாற்றத்துக்குத்தான் வழியில்லை.

இலங்கையில் முதன் முதலாக 1955 ஆம் ஆண்டு தான் மேதினம் ஒரு பொது விடுமுறை நாளாக பிகடனப்படுத்தப்பட்டது. மலையக மக்களை பொறுத்தவரை 1965 ஆம் ஆண்டுதான் இந்த வாய்ப்பு கிடைத்தது. இதைத் தொடர்ந்து மலையகத்தின் பல பகுதிகளிலும் மேதின ஊர்வலங்கள் கூட்டங்கள் நடத்தப் படுவது வழமையானது.

பெரும்பாலும் தொழிற்சங்க ரீதியாகவே மேதின கொண்டாட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதே நேரம் பல தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளை சார்திருப்பது மேதினத்தின் புனித நோக்கம் மாசடைய காரணமாக இருக்கின்றது. அந்த வகையில் இந்த மேதினத்தின் நோக்கம் உரிய முறையில் உள்வாங்கப்படாமலே போகின்றன.

இலங்கையின் பெருந்தோட்ட மக்களுக்கான தொழிற்சங்க நடவடிக்கைகள் 1931 ஆம் ஆண்டு நடேசஅய்யரினால் தொழிலாளர் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டது. ஹட்டனை தலைமையகமாக கொண்ட இச்சங்கம் 1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டதாக அறியமுடிகிறது. இதே ஆண்டு ஜுன் மாதம் 22ஆம் திகதி அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் பதியப்பட்டுள்ளது. அதேபோல ஜுன் மாதம் 25 ஆம் திகதி இலங்கை இந்திய தொழிலாளர் காங்கிரஸ் பதிவாகியுள்ளது.

இதுவே 1953 இல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக மாற்றம் அடைந்தது. பின்னர் இதிலிருந்து பிரிந்து சென்ற ஏ. அஸீஸ் 1955 இல் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்தை ஆரம்பித்தார்.

இ.தொ.காவை பொறுத்தவரை தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. பிந்திய செய்தியாக அது அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணைகளுக்கு ஆதரவாக செயற்பட தயாராகியுள்ளமை புதிய திருப்பமாக மாறியுள்ளது.

குறிப்பாக அதிகரிக்கப்பட்ட 1000 ரூபா சம்பளத்தை உரிய முறையில் வழங்காது பெருந்தோட்டக்கம்பனிகள்செய்யும்அடாவடித்தனம் அக்கட்சிக்கு பாரிய அச்சுறுத்தல். அதுபற்றி பலமுறை கவனப்படுத்தியும் கண்டு கொள்ளாமலே இருக்கும் தொழில் திணைக்களத்தின் மீது கடுப்பு காட்டியுள்ளார் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான். இதற்காக தொழில் திணைக்களத்தின் பேரில் வழக்குத் தொடரஆவணசெய்துவருவதாகஅவர்தெரிவித்துள்ளார். அந்த வகையில் இ.தொ.காவிற்கு இது முக்கியமான மே தினமாகவே இருக்கப்போகின்றது.

பன். பாலா ...

பெருந்தோட்டங்களில் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு இன்றைய வாழ்க்கைச் செலவை சமாளிக்கக்கூடிய நாட்சம்பளமாக 2500 ரூபா வழங்கப்படுவதே நியாயம். உடல் உழைப்பை உறிஞ்சி விட்டு பிச்சைக்காரனுக்கு தட்டில் காசு

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதற்கு ஆசிரிய சமூகமே சான்று

# மலையக சங்கங்கள் இணைந்து பணியாற்றுவது எப்போது?



போடுவதைப் போல சம்பளம் தருவது எந்த வகையில் பொருத்தம்? இன்று கோதுமை மா ஒரு கிலோ 240 ரூபா, அரிசி ஒரு கிலோ 200 ரூபா, சீனி ஒரு கிலோ 240 ரூபா, பருப்பு ஒரு கிலோ 470 ரூபா, பால்மா 400 கிராம் ஒரு பக்கட் 1025 ரூபா. இந்த பால்மாவிற்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பால்மா பிரச்சினையால் பெருந்தோட்டங்களில் அநேக குழந்தைகளுக்கு தாய்மார் பிளேன் டீயும் கொத்தமல்லி நீரும் வழங்கி வருகின்றனர்.

நகரங்களில் வாழும் மக்கள் எரிவாயு மண்ணெண்ணெய் போன்ற பொருட்களை பல மணி நேரம் வரிசையில் காத்திருந்து பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இன்று நகரத்தில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஒருவர் முக்கிய பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஆனால் இந்த வாய்ப்பும் பெருந்தோட்ட மக்களுக்கு கிடைப்பதில்லை. குறிப்பாக மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ளக்கூட ஒரு நாள் வேலையை இழந்து எரிபொருள் நிரப்பும் நிலையத்தில வரிசையில் பல மணிநேரம் காத்திருந்து பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலுள்ளனர்.

நாளுக்கு நாள் டொலரின் பெறுமதி அதிகரித்து செல்லச் செல்ல உணவு பொருட்களின விலையும் உயர்ந்து செல்கின்றது. பெருந்தோட்டங்களிலுள்ள மக்கள் நகரங்களுக்குச் சென்று உணவு பொருட்கள் வாங்குவது குறைவு. தோட்டங்களில் அருகிலுள்ள கடைகளில் பொருட்களின் விலையைக் கூறவேண்டிய அவசியமில்லை. அவர்கள் விற்கும் யானை விலைகளில்தான் இவர்கள் பொருட்களை வாங்கியாக வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளத்தை முழுமையாக பெற்றுக்கொள்வதே பெரும்பாடு. இந்த நிலையில் இவர்களுக்கு இன்றைய வாழ்க்கைச் செலவை சமாளிக்க குறைந்தது 2500 ரூபா சம்பளத்தை பெற்றுக்கொடுப்பதற்கு மலையக தொழிற்சங்கவாதிகளும் அரசியல்வாதிகளும் முன்வருவார்களா? வெற்று அறிக்கை விடுவதில் எந்த அர்த்தமும் இல்லை.

முன்னாள் தொழிற்சங்க தலைவர்களான தொண்டமான், அஸீஸ், செல்லசாமி போன்றவர்கள் இருக்கும் காலத்தில் தொழிற்சங்கங்கள் பலமாகவிருந்தன. இதற்கு காரணம் அவர்கள் மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு பொதுக்கூட்டங்களை மலையகப் பகுதிகளுக்கு மட்டுமல்ல, காலி, மாத்தறை, தெனியாய, மத்துகம, களுத்துறை போன்ற பகுதிகளிலுள்ள தோட்டங்களிலும் நடத்தி தொழிலாளர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர்.

இன்று தொழிற்சங்கவாதிகள் தேர்தல் காலங்களில் வாக்குகளை பெறுவதற்கு மாத்திரமே தோட்டங்களுக்கு செல்கின்றார்கள். அந்த காலத்தில் ஒரு தோட்டத்தை எடுத்துக்கொண்டால் ஒன்று அல்லது இரண்டு தொழிற்சங்கங்களே தோட்டங்களில் காணப்பட்டன.

அந்தக் காலத்தில் தொழிற்சங்கங்கள் என்றால் தோட்ட நிருவாகம் யோசிக்கும். தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் தொழிலாளர் மத்தியில் நல்ல மரியாதை இருந்தது. அதைப் பயன்படுத்தி தொழிற்சங்கத் தலைவர்களும் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தினர். தொழிலாளர்களின் பிரச்சினை என்றால் தோட்டக் காரியாலயத்திற்கு சென்று தோட்ட அதிகாரியை சந்தித்து பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மாவட்ட தொழிற்சங்கவாதிகளும் கண்ணும் கருத்துமாக இருந்தனர். இன்று அந்த நிலை மாறி ஒரு தோட்டத்தில் நான்கு ஐந்து தொழிற்சங்கங்கள் முளைத்துள்ளன. தொழிலாளர்களுக்கு பிரச்சினை என்றால் அதனை பேசித்தீர்க்க முடியாத நிலையில் போராட்டம் செய்ய முற்படும்போது மற்ற தொழிற்சங்கங்களை சேர்ந்தவர்கள் வேலைக்கு செல்வார்கள். போராட்டத்துக்கு ஒத்துழைப்பு தரமாட்டார்கள்.

எனவே பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது கடினமாகவிருக்கிறது. சில தோட்டங்களில் தொழிலாளர்கள் காவல் வேலை மற்றும் கங்காணி வேலைகளை பெற்றுக்கொள்வதற்காக தமக்கென ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்கிக்கொள்வர். இதுதான் இன்று மலையகத்தில் சங்கங்கள் வலுவிழக்கக் காரணம்.

தொழிலாளர்களுக்கு பொய் வாக்குறுதிகளை கொடுத்து வாக்குகளை பெற்றுக்கொண்டு வெற்றிபெற்ற பின் தொழிலாளர்களின் கோரிக்கை சம்பந்தமாக பேரம் பேசாமல் தமக்கு அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர் பதவிகளை பெற்றுக்கொள்வதற்காக பேரம் பேசுவதைத்தான் காணமுடிகிறது. அது மட்டுமல்லாமல் அரசியல் கட்சித் தலைவர்கள் தேர்தல்காலத்தில் பேசியதையும். மறந்துவிடுகின்றனர். இதுதான் 1000 ரூபாவிற்கும் நடந்தது.

மலையக அரசியல்வாதிகள் மக்களின் வாக்குறுதிகளை பெறுவதற்கு புதிதாக தொழிற்சங்கங்களை ஆரம்பித்து அதில் அவர்களை அங்கத்தினராக்கிக் கொள்கின்றனர். இதுவே மலையகத்தில் தொழிற்சங்கங்கள் அதிகரிப்புக்கு காரணமாகும்.

கடந்த 20 நாட்களுக்கு மேலாக கொழும்பு காலிமுகத்திடலில் இளைஞர், யுவதிகள் போராட்டம் செய்கின்றனர். 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேவையில்லை என்கிறார்கள். ஒரு வகையில் பார்க்கும்போது இது மலையகத்திற்கும் பொருத்தமாக இருக்குமென எண்ணத் தோன்றுகிறது.

ஆகவே, எதிர்காலத்தில் தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்து இன்றைய வாழ்க்கைச் செலவை சமாளிக்கக்கூடிய நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்மையாகவே மலையக தொழிற்சங்கவாதிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் தோட்டத் தொழிலாளர்கள் மீது அக்கறை இருந்தால் எல்லா அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து ஒரேமேடையில் அமர்ந்து கூடி பேச்சுவார்த்தை நடத்தி மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். அதைவிட்டு விட்டு ஒருவர் மீது ஒருவர் அறிக்கை விட்டு சேறு பூசுவதை கைவிடவேண்டும்.

ஆசிரிய சமூகத்தின் மத்தியில் பல்வேறு தொழிற்சங்கங்கள் இருந்தபோதிலும் அவர்களின் உரிமை போராட்டம் என்று வரும்போது கட்சி அரசியல் இன மதம் எல்லாவற்றையும் மறந்து போராட்டத்தில் ஈடுபட்டதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒன்றிணைந்ததனால் அவர்கள் வெற்றி பெற்றனர்.

இதனை மலையக அரசியல் தொழிற்சங்கவாதிகள் மறந்துவிடக்கூடாது. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதற்கு ஆசிரிய சமூகமே சான்று.

நாவலப்பிட்டி டி. வசந்தகுமார் ...

# பேதுரு பேராலயத்தில் நியாயம் கோரி முறையிட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிப்புற்றோர்



வத்திக்கான் சதுக்கம்

இனிமேல் இந்நாட்டில் குண்டு வெடிக்கும் ஓசையே கிடையாது என்று மக்கள் நம்பிக் கொண்டிருந்த வேளையில்தான் கோரமான உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் நிகழ்ந்து அதன் ரணங்களும், வலிகளும் இன்னும் தொடரும் நிலையில் அதற்கு நீதி கேட்கும் போராட்டங்களும் தொடர்கின்றன.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டு தாக்குதல் சம்பவம் இடம் பெற்று மூன்று வருடங்கள் நிறைவு பெற்றிருந்தாலும் பாதிக்கப்பட்டவர்களின் சந்தேகங்கள் களையப்பட்டதாக இல்லை.

உண்மைகளை அறியும், நீதியை நிலைநாட்டும் போராட்டங்கள் ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்க, அந்த சம்பவங்களில் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூர்ந்து வத்திக்கானில் விசேட சிறப்புத் திருப்பலி மற்றும் வழிபாடுகள் பரிசுத்த பாப்பரசரின் தலைமையில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றன.

உலகின் மிகப் பெரிய ஆலயமான வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வுகளில் இலங்கையிலிருந்து பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் 60 பேர் கொண்ட குழுவினர் கலந்து கொண்டனர். அவர்களில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் அடங்குவர்.

இலங்கையில் கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பயங்கரவாத குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

அன்றைய தினம் காலை உயிர்த்த ஞாயிறு விசேட திருப்பலி பூசை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் எவரும் சற்றும் எதிர்பார்க்காத வகையில் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்களை பலி கொண்ட அந்த பயங்கர குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அந்த தாக்குதலில் 200க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதுடன் பெருமளவானோர் காயமடைந்தனர். கம்பீரமாக காட்சியளித்த புனித அந்தோணியார் திருத்தலம் இரத்தக் களறியானது.

சில நிமிட நேரத்தில் இடைவேளையில் கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலயத்திலும் அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு புனித சீயோன் தேவாலயத்திலும் அடுத்தடுத்து குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்த மூன்று குண்டுத் தாக்குதல் சம்பவங்களிலும் சுமார் 300க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இதே சமயத்தில் இரண்டு நட்சத்திர ஹோட்டல்களில் தாக்குதல்கள் நிகழ்ந்தன.

உயிர்த்த ஞாயிறு சிறப்பு திருப்பலி மற்றும் வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அந்த வழிபாடுகளில் கலந்து கொண்டிருந்த விசுவாசிகளை இலக்கு வைத்தே இந்த குண்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையின் வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத சம்பவமாக இந்த பயங்கரவாத குண்டுத் தாக்குதல் சம்பவங்களை குறிப்பிடமுடியும். எத்தகைய காரணங்களும் இல்லாமலே அப்பாவி மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டபோது நாட்டை மட்டுமன்றி முழு உலகையும் அது அதிர்ச்சிக்குள்ள்ளாக்கியது.

உயிர்த்த ஞாயிறு உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவ மக்களின் மிக முக்கியமான தினமாகும். கிறிஸ்தவ மக்கள் நாற்பது நாட்கள் தவக்காலத்தை அனுஷ்டித்து அவரது உயிர்த்தெழுதலை நினைவு கூறும் வகையில் ஈஸ்டர் பண்டிகையை கொண்டாடுகின்றனர்.

அத்தகைய ஒரு பண்டிகை தின



சிறப்புத் திருப்பலி பூசையின் போதே குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதானது

இது கிறிஸ்தவ சமூகத்தை மட்டுமின்றி முழு நாட்டு மக்களையும் கதிகலங்கச் செய்து துயரத்தில் ஆழ்த்தியது.

இந்தக் கோர சம்பவத்தின் துயரங்கள் எளிதில் மறந்து போகக்கூடியவை அல்ல. ஒரு குடும்பத்தில் பெற்றோர் இறந்து பிள்ளைகள் தப்பித்தும் இன்னும் சில குடும்பங்களில் பிள்ளைகள் இறந்து பெற்றோர்கள் தப்பித்தும் மேலும் சில குடும்பங்களில் தமது நெருங்கிய உறவுகளை இழந்தும் உறவுகள் பரிதவித்த காட்சி இன்னும் எமது நினைவுகளில் இருந்து மறையவில்லை அவை மறக்க முடியாதவை. (இதில் எனது உறவினர்களும் நண்பர்களும் பலியானதும் குறிப்பிடத்தக்கது.

அந்த அப்பாவி மக்களின் படுகொலைகள் என்ன காரணத்திற்காக யாரால் திட்டமிடப்பட்டன. அதன் பின்புலம் என்ன என்பது தொடர்பில் இன்னும் கூட சரியான தகவல்கள் கிடைக்காத நிலையே காணப்படுவதால் பெரும் கேள்விகளுக்கு விடை காண வேண்டியிருப்பதாகவே கத்தோலிக்க சமூகம் உறுதியாக நம்புகிறது.

அந்த சம்பவம் தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டும் மேலும் பலர் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டும் வருகின்ற நிலையில் இந்த சம்பவத்திற்கான உண்மையான சூத்திரதாரி யார் என்பது இன்னும் தெரியவராத நிலையே உள்ளது.

குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என கத்தோலிக்கத் திருச்சபை தொடர்ந்தும் குரலெழுப்பி வரும் நிலையில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அது தொடர்பில் தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி வருகின்றார்.

இம்முறை ஈஸ்டர் பண்டிகைக் காலத்தில் அது தொடர்பில் திருச்சபையின் தலைவரான பரிசுத்த பாப்பரசருக்கு அறிவிக்கப்பட்ததையடுத்தே குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என இறைவனிடம் வேண்டுதல்கள் முன்வைக்கப்பட்டு வத்திக்கானில் பரிசுத்த பாப்பரசரின் தலைமையில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற ஏற்பாடாகியது.



இந்த வழிபாடுகளில் கலந்து கொள்வதற்காக குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டு காயமடைந்த மற்றும் அங்கவீனர்கள் பலரும் வத்திக்கானுக்கு சென்றிருந்தனர். பரிசுத்த பாப்பரசரை மிக நெருக்கமாக சந்திப்பதற்கான வாய்ப்பு அவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது. பரிசுத்த பாப்பரசர் அவர்களுக்கு அருகில் சென்று தொட்டு அவர்களை ஆசீர்வதித்து தமது கவலையையும் தெரிவித்துக் கொண்டார். அவர்களுக்காக விசேட பிரார்த்தனைகளை மேற்கொண்ட பரிசுத்த பாப்பரசர் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

சாதாரண மக்கள் பரிசுத்த பாப்பரசரை ரோம் பேராலயத்தில் மிக நெருக்கமாக சந்திப்பது சாத்தியமானது அல்ல. வத்திக்கான் புனித பேதுருவானவர் பேராலயத்திற்குள் பிரவேசித்து நேரடியாக வழிபாடுகளில் கலந்து கொள்வதும் பாப்பரசரை அருகில் தரிசிப்பதும் அபூர்வம்.

கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் அர்ப்பணிப்புள்ள முயற்சியினாலும் இறைவனின் அருள் வரப்பிரசாதம் அந்த மக்களுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த காரணத்தினாலும் இந்த வாய்ப்பு இலங்கையைச் சேர்ந்த சாதாரண மக்களுக்கு கிடைத்துள்ளது என்பது பெருமைப்படக் கூடியது.

இந்த ஆராதனையின் மூலம் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலும் அதன் விளைவுகளும் நீதியைப் பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பேரவையில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அது தொடர்பில் பிரஸ்தாபித்துள்ளார்.

இந் நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை அதிகரித்துள்ளதை காணமுடிகின்றது.

உண்மைகள் தாமதமாகலாம் என்றாலும் ஒரு நாள் வெளிப்படும் என நம்புவோம்.

பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில் லூக்கா நற்செய்தி 8 ஆம் அதிகாரத்தில்,

"வெளிப்படாது மறைந்திருப்பது ஒன்றுமில்லை; அறியப்படாமலும் வெளியாகாமலும் ஒளிந்திருப்பதும் ஒன்றுமில்லை" என்று சொல்லப்பட்டிருப்பதையும் எபிரேயர் 4: 13இல் அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாகவும் வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**லோரன்ஸ் செல்வநாயகம்**

---

# உழைப்புச் சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைக்க தொழிலாளர்கள் ஓரணி திரள வேண்டும்

**ஆ. முத்துலிங்கம்**
பொதுச் செயலாளர்
ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம்

1886ல் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் எட்டு மணிநேர வேலை கோரிக்கையை முன்வைத்து நடத்திய போராட்டத்தினால் உலகிலுமுள்ள சகல உழைக்கும் மக்களும் எட்டு மணி நேர வேலை உரிமையை அனுபவிக்கின்றனர்.

இதை நினைவுகூர்ந்து சகல நாடுகளிலும் மேதின விழாக்கள் நடைபெறுகின்றன. ஆனால், நமது நாட்டில் அதிகளவு வருமானத்தைத் தேடித்தரும் தேயிலை, இறப்பர், தெங்கு தொழில் துறையில் தொழில் புரியும் தொழிலாளர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். 1920ம் ஆண்டு முதல் முழு உலகத்தையும் கொரோனா உயிர்க்கொல்லி நோய் (COVID 19) வாட்டிய காலத்தில் அதிகமான தொழிற்துறைகள் மூடப்பட்டிருந்தபோதும் நமது நாட்டில் தோட்டத் தொழிற்துறை மட்டும் செயற்பட்டது, ஆனால் கம்பனிகளோ நட்டம் என்ற பல்லவியையே பாடிக்கொண்டிருக்கின்றன.

ஆயிரம் ரூபா சம்பள உயர்வானது தேயிலை இறப்பர் சம்பள நிர்ணய சபைகளால் 05.03.2021 இல் அங்கீகரிக்கப்பட்டது. குறைந்தபட்ச நாளாந்த சம்பள அளவு ரூபா. 900.00 எனவும் வரவு செலவுத்திட்ட சலுகை கொடுப்பனவு ரூபா. 100.00 எனவும் ஆகமொத்தம் ரூபா. 1000.00 மார்ச் மாதம் முதல் வழங்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டதனால் தொழிலாளர்களை பழிவாங்கும் நோக்கத்தோடு தோட்டக் கம்பனிகளால் தொழிலாளர் உழைப்பு மிகமிகக் கொடூரமாக சுரண்டப்படுகின்றது.

சம்பள நிர்ணய சபைகள் தீர்மானத்தை ஆட்சேபித்து 20 தோட்டக் கம்பனிகளால் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்னும் முடிவு பெறாமல் உள்ளதால் தொழிற் சங்கங்கள் தொழில் ஆணையாளர் நாயகத்திடம் செய்த முறைப்பாடுகளுக்கும் தீர்வு காண முடியாமல் உள்ளது.

இதனால் ஆயிரம் ரூபா சம்பளம் சில தொழிலாளர்களுக்கு மட்டும் கிடைப்பதோடு அதிகமானவர்களுக்கு கிடைப்பதோ 700ரூபா மட்டுமே. தேயிலைக் கொழுந்து பறிப்பவர்களுக்கு கிலோவிற்கு 40 ரூபா என்ற வீதப்படியே வழங்கப்படுகின்றது. ஞாயிற்றுக் கிழமைகளில் வேலை வழங்கினால் ஒன்றரை நாள் சம்பளம் வழங்க வேண்டுமென்பது சட்டமாகும். ஆனால், இந்த சட்டத்தை மீறி ஞாயிற்றுக்கிழமை 30 கிலோ தேயிலை கொழுந்து பறிக்க வேண்டும் இல்லையேல் 20 கிலோவிற்கு 500 ரூபாவும் அதற்கு மேல் உள்ள கொழுந்திற்கு 40 ரூபா வீதமும் வழங்கப்படுகின்றது. ஆனால் தோட்ட நிர்வாகங்களோ ஆயிரம் ரூபாவைக் காரணம் காட்டி பல ஆயிரங்களை சம்பாதித்துக் கொள்கின்றன.

1992ம் ஆண்டு ஜனவசம மற்றும் அரச தோட்டக் கூட்டுத்தாபன தோட்டங்களை மக்கள் மயப்படுத்துவதாக பிரசாரப்படுத்தி 22 தனியார் கம்பனிகளுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டன. இதற்கு தொழிலாளர்கள் வன்மையாக எதிர்ப்பு



தெரிவித்தமையால் பல கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் வழங்கப்பட்டு அன்றைய அரசின் பங்காளித் தொழிற் சங்கங்களான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் இரண்டும் மக்கள் மயமாக்கலுக்கு முழு ஆதரவையும் நல்கின.

பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களையும் ஆயிரக்கணக்கான உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய தோட்டங்களை தனியார் கம்பனிகள் கடந்த 30 வருடங்களில சீரழித்துவிட்டன. தொழிலாளர்களும் உத்தியோகத்தர்களும் போராட்டங்களினால் வெற்றிகண்ட உரிமைகளும் சலுகைகளும் கொஞ்சம் கொஞ்சமாக குறைக்கப்பட்டு தற்போது அவர்கள் கூலிகளாக நடத்தப்படுகின்ற அவல நிலைக்கு வந்துவிட்டனர்.

கம்பனிகள் தொழிலாளர் தொகையை மட்டுப்படுத்த சேவைக்காலப் பணம் (14 நாள் சம்பளம்) வழங்குவதாக கூறி வேலை நிறுத்தப்பட்டுசேவை காலப் பணம் வழங்க காலதாமதத்தை ஏற்படுத்துதல், சுகவீனம் அல்லது மரண நிகழ்வுகள் போன்றவைகளுக்குச் சென்று வேலைக்கு ஒரு சில நாட்களுக்குசெல்லாவிட்டால் அரசாங்க வைத்திய அத்தாட்சிப் பத்திரம் வேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அப்படி சமர்ப்பிக்காவிட்டால் வேலை மறுக்கப்படுகின்றது.

அவசர காரணங்களுக்காக வெளியே செல்ல வேண்டியிருந்தால் கடிதமூலம் நிருவாகத்திடம் அறிவித்துவிட்டு திரும்பிவந்து வேலைக்குச் சென்றால் கம்பனிக்கு எழுதியிருக்கின்றோம் பதில் வந்தவுடன் வேலை தருவதாகத் தோட்ட நிர்வாகம் தெரிவித்து ஒரு மாதம் கடந்த பின் கணனியில் பெயர் நீக்கப்பட்டுள்ளதென கூறி கடைசியில் வேலை மறுக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட காரணங்களால் பாதிக்கப்பட்டவர்களின் உழைப்பை கீழ்கண்ட முறையில் நிர்வாகங்கள் சுரண்டுகின்றன. எவ்வித உரிமைகளும் சலுகைகளும் இல்லாமல் நாளொன்றுக்கு கைக்காசுக் கொடுப்பனவாக 700 ரூபா மட்டும் வழங்குதல்.

எவ்வித உரிமைகளும் சலுகைகளும் இன்றி மாதத்திற்கு 30 நாள் வேலை 20,000.00 ரூபாகொடுப்பனவு, ஆனால் வேலைக்கு செல்லாவிட்டால் நாளொன்றுக்கு 700 ரூபா வீதம் கழிக்கப்படுதல்.

தேயிலைக் கொழுந்து40 ரூபாவுக்கு பறித்துக்கொடுத்தல். பறிக்கப்படும் கொழுந்தை நிருவாகத்திற்கு பாரம் கொடுக்கும் ஒவ்வொரு முறைக்கும் 2 முதல் 3 கிலோ வீதம் கழித்துக்கொள்ளல் என்பன சம்பந்தமாக எவ்வித ஆவணங்களும் கொடுக்கப்படுவதில்லை.

கம்பனிகள் குத்தகைக்கு எடுத்த பின் பல்லாயிரக் கணக்கான தேயிலை மலைகளை காடுகளாகிக் கைவிடப்பட்ட மலைகளிலிருந்த புல், பூண்டு, செடி கொடிகள் போன்றனவற்றை களைந்து தேயிலை செடிகளை கவ்வாத்து வெட்டி அதன் பின் மட்டம் வெட்டி கொழுந்து பறித்து நிருவாகத்திற்கு கொடுப்பது. இப்படி கொடுக்கும் தேயிலை கொழுந்துக்கு ஆகக் குறைந்த தொகையே கொடுக்கப்படுகின்றது. இந்தக் குறைந்த தொகையில் காணி வரி, உரம், மருந்து போன்றவைகளுக்கும் கழித்து மிகுதி தான் கொடுக்கப்படுகின்றன. குறிப்பிட்ட நாளில் கொழுந்து பறிக்காவிட்டால் வேறு ஆட்களைக் கொண்டு பறித்து நிர்வாகம் எடுத்துக் கொள்ளுவதால், தோட்ட நிர்வாகம் ஐந்து சதமேனும் செலவில்லாமல் இலட்சக் கணக்கில் சம்பாதித்துக் கொள்கின்றது. இது வெளியார் உற்பத்தி முறை என சொல்லப்படுகின்றது. இதன் விதி முறைகள் சம்பந்தமான ஆவணத்தில் நிர்வாகங்கள் கையொப்பம் பெற்றுக்கொள்கின்றன. ஆனால் அதன் நகல்கள் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுவதும் இல்லை. இங்கு இன்னொரு விடயம் என்னவென்றால் சிறு தோட்டங்களிலிருந்து தேயிலைக் கொழுந்து கொடுப்பவர்களுக்கு கொடுக்கப்படும் தொகையும் கொடுக்கப்படுவதில்லை.

மேற்குறிப்பிட்டவர்கள் தொழிலாளர் அந்தஸ்து இல்லாத உற்பத்தியாளர்கள் என்பதால் எவ்வித எழுத்து மூலமான அத்தாட்சிகளும் நிர்வாகத்தால் கொடுக்கப்படுவதில்லை. ஆகக்குறைந்தது இவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலை தூள்தானும் நிர்வாகத்தால் கொடுக்கப்படுவல்லை. அது மாத்திரமல்ல, சம்பள நிர்ணய சபை தீர்மாணித்த சம்பளம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், சேவை காலப் பணம், வருடாந்த விடுமுறை, சம்பளம் போன்றனவற்றை வழங்காமலும் எவ்வித விபத்துகள் ஏற்பட்டாலும் பொறுப்பெடுக்காமல் தப்பித்துக் கொள்வதற்கும் தோட்டக் கம்பனிகள் போடும் தந்திரமாகும்.

அதே நேரத்தில் படித்தவர்களில் கணிசமானவர்கள் இருந்தபோதும் இதைப் பற்றி எவ்வித அக்கறையும் அற்றிருப்பது கவலைக்குரிய விடயமாகும். கடந்த காலங்களில் தொழிற்சங்க போராட்டங்களினால் வென்றெடுத்த உரிமைகள் தற்போது ஒவ்வொன்றாக கம்பனிகளால் பறிக்கப்பட்டு வருகின்றன.

மே தினமான இன்றும் வெளியார் உற்பத்தி முறையில் தேயிலைக்கொழுந்து பறித்துக்கொண்டிருக்கும் அவல நிலையில் உள்ளனர். ஆகையினால், இவ்விடயம் சம்பந்தமாக மக்கள் நன்கு புரிந்து தங்களது உழைப்பை சுரண்டும் முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க இன்றை மே தினத்தில் ஐக்கியப் பட வேண்டும். இல்லையேல் கம்பனிகளின் சுரண்டலுக்கு முகம் கொடுத்துக் கொண்டே காலத்தை கடத்த வேண்டியிருக்கும்.




# பௌத்த மறுமலர்ச்சியின் தோற்றிடம் கொட்டாஞ்சேனை தீபதுத்தாராம

கொட்டாஞ்சேனை ஒரு காலத்தில் கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழ்ந்த பகுதி. இன்றும் கூட கொட்டாஞ்சேனை கொச்சிக்கடை ஆகிய இரு பகுதிகளையும் உள்ளடக்கிய கொழும்பு 13 பகுதியில் பௌத்தர்களும், கிறிஸ்தவர்களும், இந்துக்களும் ஏறத்தாள சமமாக வாழும் பகுதி. அதற்கேற்றாற் போல சமய ஸ்தலங்களும் சமமாக உள்ளன.

கொழும்பில் உள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த விகாரைகளில் முக்கியமான விகாரையாக கொட்டாஞ்சேனை தீபதுத்தாரம விகாரையைக் குறிப்பிடலாம். இரு நூற்றாண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்டது அது. கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தின் மதில் சுவர் தான் இந்த விகாரையின் எல்லைச் சுவர்.

காலனித்துவ ஆட்சி காலத்தில் ஒல்லாந்தர்கள் கத்தோலிக்க சமயத்தை தடை செய்திருந்தார்கள். அத்துடன் சுதேசிய மதங்களையும் கடுமையாக ஒடுக்கினார்கள். இந்தக் காலப்பகுதியில் கொழும்பில் களனி தொடக்கம் பெல்லன்வில பன்சலை வரை எந்த பன்சலைகளும் இருக்கவில்லை. வெறும் புத்த சிலைகளை வைத்து மட்டும் தான் வணங்கி வந்தார்கள். அப்படிப்பட்ட நிலையில் கொழும்பில் முதலாவதாக தொடக்கப்பட்ட பன்சலை தீபதுத்தாராம பன்சலை.



தாய்லாந்து இளவரசர் பிரிஸ்டங் இளவரசராகவும் துறவியாகவும்

உபயகுலதுங்க விஜேசிறிவர்தன மகா முதலி அன்றைய ஒல்லாந்து ஆளுநரிடம் தனிப்பட்ட அனுமதி பெற்று தனது காணியில் இந்த விகாரையைக் கட்டிக்கொண்டார். ஆரம்பத்தில் அவர் சீனிகம தம்மக்கந்த தேரரைக் கொண்டு சமய நடவடிக்கைகளை தொடர்ந்து வந்தார். ஆனால் அது வசதி படைத்த மேட்டுக்குடி சிங்கள பௌத்தர்கள் மட்டுமே அனுபவிக்கின்ற ஸ்தலமாக இருந்தது. 1806 ஆம் ஆண்டு சீனிகம தீரக்கந்த தேரர் நடத்திய பிரித் நிகழ்வைத் தொடர்ந்து சாதாரணர்களும் இந்த பன்சலைக்கு வந்து வணங்கத் தொடங்கினார்கள். இதனைத் தொடர்ந்து பிரித்தானியரின் கடும் மதத் தலையீடுகளால் ஸ்தம்பித்து போயிருந்த இந்த விகாரைக்கு 1935 இல் மூன்றாவது தலைமை பிக்குவாக குணானந்த தேரர் வந்தடைந்தார்.

### தாய்லாந்து இளவரசர்

குணானந்த தேரருக்குப் பின்னர் அவரது சிஷ்யர் ஜினானந்த தேரர் தலைமை பிக்குவானார். அவருக்குப் பின் தாய்லாந்து இளவர சர்பிரிஸ்டங் (Prisdang) 1896இல் இலங்கை வந்து பௌத்தமதபிக்குவாக தீட்சை பெற்று "ஜின வரவன்ச"என்கிற பெயரில் தீபதுத்தாராமய விகாரையில் தலைமை பிக்குவாக ஆனார். 1911 இல் தனது தந்தை மன்னர் சூலலோங்கோர்ன் (King Chulalongkorn) மறைந்த போது இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக அவர் தாய்லாந்து சென்றிருந்தவேளை அவரது சகோதரரால் வலுகட்டாயமாக மீண்டும் அரச குடும்பத்திற்குள் இருத்தப்பட்டார். அவர் 1935 இல் தனது 85 வது வயதில் இறக்கும் வரை அவரை அவர்கள் பௌத்த துறவியாக வாழ விடவில்லை.

பின்னர் பல ஆண்டுகளாக இந்த விகாரை கவனிப்பாரற்று கிடந்தது. அதனை மீண்டும் உயிர்ப்பிப்பதற்காக தாய்லாந்து அரசரின் புதல்விகள் இருவர் 1999, 2013 ஆகிய ஆண்டுகளில் வந்து உதவிகள் செய்து இதனை சீர்திருத்தி மீண்டும் இயக்கினர். அதுபோல தாய்லாந்தின் இரு பிரதமர்கள் இங்கே வந்து வணங்கிச் சென்றார்கள். இலங்கைக்கு தூதுவர்களாக வரும் சகல தாய்லாந்து தூதுவர்களும் பதவியேற்றதும் இங்கே வந்து வணங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

கிறிஸ்தவ மிஷனரிகளை எதிர்த்து குணானந்த தேரரால் தொடங்கப்பட்ட "சுதர்ஷன" என்கிற சஞ்சிகை பௌத்த கண்டன இலக்கியங்களில் முன்னோடியானது. அதை பிரசுரிப்பதற்கான அச்சு இயந்திரம் 1862 இல் தான் தான் கொண்டு வரப்பட்டு "லங்கோபகார" அச்சகம் ஆரம்பமானது. அந்த அச்சகத்தை நிறுவுவதற்கு நிதிப் பங்களித்தவர்களில் முக்கியமானவர் அன்றைய சியாம் அரசர் நான்காவது ராமா (King Mongkut).

1835 ஆம் ஆண்டுகளில் குனானந்த தேரரால் இந்த விகாரையின் அமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆனாலும் ஒல்லாந்து, ஆங்கிலேய வாஸ்து கட்டட அமைப்பின் செல்வாக்கு இந்த விகாரையின் அமைப்பில் இருப்பதை உணரலாம்.

இலங்கையின் முதலாவது மதக் கலவரம் என்று நாம் அறிகிற கொட்டாஞ்சேனை கலவரம் இந்த விகாரையில் தான் தொடங்கியது. பௌத்த மறுமலர்ச்சியின் தோற்றம் இங்கிருந்து தான் தொடங்கியது. இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பிரதானமானவர்களாக குனானந்த தேரரையும் கேர்னல் ஒல்கொட்டையும் குறிப்பிடுவது வழக்கம். அவர்கள் இருவரதும் முதல் சந்திப்பு இந்த விகாரையில் தான் நிகழ்ந்தது. அதுபோல அநகாரிக தர்மபாலவின் வசிப்பிடமும் இந்த விகாரையின் அருகில் தான் இருந்தது. அவர் தீவிர பௌத்தனாக ஆனதும் இங்கே தான். அவரின் பௌத்த ஞானத் தந்தை இதே ஒல்கொட் தான்.

அநகாரிக தர்மபாலவை கவர்ந்த பல நிகழ்வுகள் இங்கு தான் நிகழ்ந்தன. இலங்கையின் பௌத்த கொடி உருவானதும் இங்குதான். அந்த கொடி முதலில் ஏற்றப்பட்டதும் இங்கு தான். வெசாக் தினம் விடுமுறை தினமாக ஆக்குவதற்காக போராடியதும் இங்கிருந்து தான். அதனை முதலில் அறிவித்ததும் இங்கிருந்து தான்.

இலங்கையின் பௌத்த மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பஞ்சமகா விவாதங்களில் பௌத்த தரப்பை பிரதிநிதித்துவம் செய்த பிரதான விவாதியாக இருந்தவர் குணானந்த தேரர். குறிப்பாக இறுதி விவதமான பாணந்துறை விவாதத்தின் கதாநாயகன் அவர். எனவே அவர் நாடறிந்த செல்வாக்குள்ள பிக்குவாக அறியப்பட்டிருந்தார். பாணந்துறை விவாதத்தை ஆங்கிலப் பத்திரிகையில் தொடர்ந்து வாசித்த ஒல்கொட் பௌத்தத்தால் ஈர்க்கப்பட்டு அமெரிக்காவில் இருந்து இலங்கை வந்து பௌத்த மறுமலர்ச்சிக்கு தலைமை தாங்கினார் என்பதை அறிவீர்கள். இந்த விவாதங்களுக்கான கருத்துருவாக்கத் தளமாக இந்த விகாரை திகழ்ந்தது.

1875 ஆம் ஆண்டளவில் கொழும்பு தலைநகரில் சாதாரண மக்களுக்கான சுதேச பாடசாலைகள் இருக்கவில்லை. அப்படி பாடசாலை செல்பவர்கள் கொழும்புக்கு வெளியில் களனி பாடசாலைக்கோ அல்லது இரத்மலான பாடசாலைக்கோ தான் செல்லவேண்டும். அப்படி கொழும்பில் முதலாவது சுதேச பாடசாலையை இந்த தீபதுத்தாராமாவில் தொடக்கினார் குனானந்த தேரர். கிறிஸ்தவ பாடசாலைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த கொழும்பு நகரில் இப்படியொரு பாடசாலையின் உருவாக்கத்தால் குனானந்த தேரரும், விகாரையும் மேலும் பிரசித்தி பெற்றனர். இன்றும் "குமார வித்தியாலய" என்கிற பெயரில் அப்பாடசாலை இயங்கிவருகிறது.

மேலும் இந்த விகாரையில் கணபதி, கந்தன், சரஸ்வது, காளி, லட்சுமி போன்ற இந்துக் கடவுள்களின் சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை தேங்காய் உடைத்து, பூக்கள் வைத்து வழிபடும் வழக்கம் பல ஆண்டுகளாகத் தொடர்கிறது. விகாரையின் உள்ளே ஏனைய பல விகாரைகளில் உள்ளதைப் போல விஷ்ணுவின் சிலை சுவரில் பெரிதாக உள்ளது. குணானந்த தேரர் பயன்படுத்திய அறை இன்றும் அப்படியே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

### கொட்டாஞ்சேனைக்கலவரம்

1883 ஆம் ஆண்டு கொட்டாஞ்சேனையில் கிறிஸ்தவர்களுக்கும், பௌத்தர்களுக்கும் இடையில் பெரும் கலவரம் உருவானது. அது நாடு பூராவும் பரவியது. மார்ச் 25ஆம் திகதி கிறிஸ்தவர்களுக்கு உயிர்த்தஞாயிறு நாள். அதே நாள் தான் கொட்டாஞ்சேனை தீபதுத்தாராமயவில் உள்ள பௌத்த சிலைக்கு கண்கள் வைப்பதற்கான சடங்கைச் செய்யும் பெரஹறவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் பௌத்தர்களின் பெரஹர ஊர்வலத்தில் இயேசுவின் உருவமும், அன்னை மரியாளின் உருவமும் கேலி செய்யப்படும் விதத்தில் கொண்டுவரப்படுவதாக கிளப்பப்பட்ட புரளியால் கலவரம் வெடித்தது. கொட்டாஞ்சேனையில் இரு தரப்பும் கைகளில் கிடைத்தவற்றைக் கொண்டு தாக்கிக் கொண்டதில் பெரும் கலவரம் நடந்து முடிந்தது. ஒருவர் கொல்லப்பட்டார். பலர் படுகாயமுற்றனர். இதனை விசாரிக்க ஒரு ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டு The Kotahena Riots – Commission report என்கிற ஒரு அறிக்கையும் வெளியிடப்பட்டது.

1883 கொட்டாஞ்சேனைக் கலவரம் பௌத்த மறுமலர்ச்சியில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. கொட்டாஞ்சேனைக் கலவரம் பற்றிய ஆணைக்குழு அறிக்கை பௌத்தர்களுக்கு சாதகமாக அமையவில்லை. இரண்டு தரப்பிலும் எவருக்கும் தண்டனை விதிக்கப்படவுமில்லை. தீபதுத்தாரம விகாரைக்கு ஏற்பட்ட சேதத்துக்கு நஷ்டஈடு கோரி கத்தோலிக்க தரப்பினருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கும் தோல்வியடைந்தது. இந்த பின்னணியில் ஒல்கொட் இலங்கைக்கு மீண்டும் 27.01.1884 இல் வந்து சேர்ந்தார். பௌத்தத் தலைவர்களுடன் ஒன்று சேர்ந்து கலந்துரையாடியதன் விளைவாக ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல தேரரின் தலைமையில் "பௌத்த பாதுகாப்பு சபை" உருவாக்கப்பட்டது. கேணல் ஒல்கொட், குணானந்த தேரர், அநகாரிக தர்மபால உள்ளடங்கிய 10 பேர் கொண்ட நிறைவேற்றுக் குழு அமைக்கப்பட்டது.


குணானந்த தேரர்

பௌத்த பாதுகாப்பு சபையின் முக்கிய 6 அம்ச கோரிக்கை உள்ளிட்ட முறைப்பாடுகள் குறித்து காலனித்துவ செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஒல்கொட் அவர்களை இங்கிலாந்துக்கு அனுப்பும் தீர்மானத்தை நிறைவேற்றியது. ஒல்கொட் 10.02.1884 இல் இங்கிலாந்தை நோக்கி புறப்பட்டார். அந்த 6 முக்கியம்ச கோரிக்கைகள் இவை தான்.

1. கொட்டாஞ்சேனை கலவரத்திற்கு காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்தி தண்டிக்க வேண்டும்.

2. சிங்கள பௌத்தர்களின் மத உரிமைகள், சலுகைகளை உறுதிசெய்ய வேண்டும்.

3. அரசாட்சி காலத்திலிருந்து புத்தர் பிறந்த வெசாக் பௌர்ணமி நாளை விடுமுறை நாளாக அனுஷ்டித்து வந்தார்கள். மீண்டும் அந்த நாளை அரச விடுமுறை நாளாக்க வேண்டும்.

4. மத ஊர்வலத்தின்போது இசைக்குழு வாத்தியமிசைப்பது குறித்த தடையை நீக்கி, பௌத்தர்களின் பெரஹர ஊர்வலங்களுக்கு இடமளிக்கவேண்டும்

5. பௌத்தர்களின் விவாகப் பதிவுக்காக பௌத்த விவாகப் பதிவாளர்களை நியமிக்க வேண்டும்.

6. 1856ஆம் ஆண்டின் 10 வது இலக்க விகாரைகளை பதிவுசெய்யும் சட்டத்தில் உள்ள இடைஞ்சல்களை நீக்குவதற்கான வழிவகைகள் செய்யப்படவேண்டும்.

இந்த கோரிக்கைகளுக்கு நியாயமான பதிலை அளிக்க வேண்டிய இக்கட்டுக்குள் தள்ளப்பட்டார் காலனித்துவ செயலாளர் டேர்பி துரை.

### வெசாக் தினத்தின் தோற்றம்

இந்த வெசாக் தினத்தை பொது விடுமுறையாக்குவதற்கான யோசனையை அரசசபையில் ஆளுநர் கோர்டன் முன்வைத்தார். ஆனால் கரையோர சிங்களவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஏ.எல்.அல்விஸ் அதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. வெசாக் விடுமுறைக்கு ஆதரவாக உரையாடிவர்களில் பொன்னம்பலம் இராமநாதனும் குறிப்பிடத்தக்கவர். பௌத்தர்களுக்காக மட்டும் இப்படி விடுமுறை அளித்தது நியாயமல்ல என்றும் இந்துக்களுக்கும் விடுமுறை நாளொன்றை வழங்காதது ஒரு குறை என்றும அன்றைய Times of ceylon (11.08.1885) பத்திரிகையில் கட்டுரை வெளியாகியிருந்தது. இந்த விவகாரம் 15.01.1886 அன்று சட்டசபையிலும் ஒலித்தது. அந்த காரசாரமான விவாதத்தின் விளைவாக தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டு தினமும் உருவானது. இந்துக்களுக்கு விடுமுறை வேண்டும் என்று உறுதியாக குரல் கொடுத்தவர்கள் பலர் அன்றைய ஆங்கில பிரதிநிதிகளே.


தீபதுத்தாராம

28.04.1885 அன்றிலிருந்து வெசாக் பௌர்ணமி தினம் அரச பொது விடுமுறையாக ஆனது. அது உத்தியோகபூர்வமான சட்டமாக 1886 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க சட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டது. வெசாக் தினத்தன்று பௌத்த கொடி ஏற்றப்பட்டு கொண்டாடப்படவேண்டும் என்றும் அதற்கான ஒரு கொடியை உருவாக்குவது என்றும் பௌத்த பாதுகாப்பு சபை தீர்மானித்தது. பௌத்த கொடியை உருவாக்கும் குழுவில் சுமங்கல தேரர், குணானந்த தேரர், கரோலிஸ் ஹேவவிதாரன (அநகாரிக்க தர்மபால) போன்றோரும் உள்ளடக்கம். ஒல்கொட்டின் வழிகாட்டுதலில் கரோலிஸ் குணவர்தன என்பவரால் பௌத்த கொடி தயாரிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தின் பின்னர் பௌத்த மறுமலர்ச்சியின் பேரால் பௌத்த தரப்பு பலமடைந்தது. அவர்கள் நடத்திய அணிதிரள்வின் விளைவாக வெசாக் தினத்தை விடுமுறை நாட்களாக 27.03.1887 அன்று அறிவித்தது அரசு. 1770 இல் இருந்து இந்த வெசாக் விடுமுறை ஆங்கிலேயர்களால் தடை செய்யப்பட்டது. முதலாவது தடவையாக தீபதுத்தாமாறாம விகாரையில் குணானந்த தேரர் தலைமையில் பௌத்த கொடி உருவாக்கப்பட்டு 1885 ஏப்ரல் 28 அன்று கொட்டாஞ்சேனை தீபதுத்தமாறாமவில் முதல் தடவை ஏற்றப்பட்டது. இந்தக் கொடியே 1956ஆண்டிலிருந்து சர்வதேச பௌத்த கொடியானது.

1956இல் இலங்கையில் நடந்த உலக பௌத்த மாநாட்டின் போது உலக பௌத்த கொடியாக ஏகமானதாக அங்கீகரிக்கப்பட்டது.

இப்படி இரு நூற்றாண்டுகளுக்கும் மேலாக பல பௌத்த வரலாற்று சம்பவங்களுக்கு சொந்தமாகவும், சாட்சியமாகவும் கொட்டாஞ்சேனை தீபதுத்தாராமய விளங்குகிறது.

(தொடரும்)

# சூழலை பாதுகாப்பதில் பங்களித்த சிலாபம் மக்கள்




மனிதன் உட்பட முழு உயிரினத் தொகுதிக்கும் சூழலுக்கும் இடையே பிரிக்க முடியாத தொடர்பு உள்ளது. பழங்காலத்திலிருந்தே சூழலுடன் மனிதன் பேணி வந்த ஆழமான தொடர்பு இன்று அழிந்து வருகிறது.

மனிதன் சூழலின் ஒரு கூறு மாத்திரமேயாகும் என்பதுடன் சூழலின் உயிர்வாழ்விற்கு மனிதன் இன்றியமையாத காரணி அல்ல. ஆனால் மனிதர்களின் நிலையான இருப்புக்கு சூழல் சமநிலை அவசியமாகும். இது சூழல் நிலைப்பு வாதம் என்று அழைக்கப்படுகிறது. இதை உணர்ந்த பண்டைய மக்கள், மனிதன் இயற்கையால் ஆளப்படுகிறான் என்பதை எண்ணி வாழ்ந்தனர். ஆனால் சமூக பரிணாம வளர்ச்சியுடன், சூழல் மனித விருப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்தக்கூடிய ஒரு சொத்தாக மாறியது. இதன் விளைவாக, உலகளாவிய ரீதியில் சூழல் மாசடைவு அதிகரித்து வருகிறது.

உயிர்க்கோளத்தை செயற்கையாக மாற்றுவதன் மூலம் அல்லது அதன் மீது ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் சூழல் தொடர்பின் வீழ்ச்சி, சூழல் மாசடைவு என வரையறுக்கப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் பல்வேறு மனித நடவடிக்கைகள் காரணமாக, எதிர்கால சந்ததியினர் பாதுகாப்பான சூழல் தொகுதியில் வாழ்வதற்கான வாய்ப்புகள் குறைவடைந்துள்ளன. எனவே, ஒட்டு மொத்த சூழல் தொகுதியைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும், பேணுவதற்குமான பொறுப்பு முழு மனித இனத்திற்கும் உள்ளது.

அந்த வகையில், இலங்கையில் சூழல் மாற்றம் தொடர்பில் அதனை தணிப்பவர்களாக, சூழல் ஆர்வலர்களாக இளைஞர்களை ஈடுபடுத்துவதில் தனது கவனத்தை செலுத்தியுள்ள British Council, இதற்காக Caritas Sri Lanka National Institute உடன் கைகோர்த்துள்ளது. இந்த உன்னதப் பணியின் பலனை அடையும் வாய்ப்பை Caritas Sri Lanka National Institute நிறுவனமானது Caritas Chilaw Janasaviya SEDEC இற்கு வழங்கியுள்ளது. இலங்கையின் வடமேற்குப் பகுதியில் செழுமையான வரலாற்றைக் கொண்ட புத்தளம் மாவட்டம், ஒருபுறம் அழகிய கடற்கரையையும், மாவட்டம் முழுவதும் நிறைந்த நீர்ப்பாசன தொகுதியையும், அதன் மூலம் போசணை அடையும் பலதரப்பட்ட விவசாய தொகுதியையும் கொண்டுள்ளது. மாவட்டத்தின் காலநிலைச் சமநிலையை பேணுவதற்கு ஆனைவிழுந்தான் இயற்கை பறவைகள் சரணாலயம் மற்றும் வில்பத்து பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசம் ஆகியன முக்கியமானவையாகும். அது மாத்திரமன்றி, மாவட்டம் முழுவதும் பரந்து காணப்படும் பல சிறிய வனப் பகுதிகளையும் அது கொண்டுள்ளது.

மூன்று இனங்களின் நான்கு மதங்களைச் சேர்ந்த வெவ்வேறு சமூகங்களினால் கலந்துள்ள சமூக அமைப்பை இங்கு காணமுடியும். இதன் காரணமாக இலங்கையில் மிகவும் பிரபலமான பல சமய மற்றும் கலாசார மையங்களை புத்தளம் மாவட்டத்தில் காணலாம். மாவட்டத்தின் கேந்திர நிலையமாக கருதக்கூடிய சிலாபம் நகரமானது, முன்னாளில் 'முதுபுரய' என அழைக்கப்பட்டது. இவ்வாறான விழுமியங்கள் நிறைந்த புத்தளம் மாவட்டம் மனித செயற்பாடுகள் காரணமாக வீழ்ச்சியடைந்து வருவதைக் காண முடிந்துள்ளது. அதற்குத் தீர்வு காணும் வகையில் இளைஞர்களை வலுவூட்டுவதற்காக, British Council மற்றும் Caritas Sri Lanka SEDEC நிறுவனமும் இணைந்துள்ளது.

Caritas Sri Lanka நிறுவனம் மற்றும் British Council ஆகியவற்றின் வழிகாட்டலின் கீழ், இளைஞர் நிகழ்ச்சித் திட்டமானது சிலாபத்தை அண்டிய பிரதேசங்களை தேர்ந்தெடுத்து அங்கு காணப்படும் சூழலுக்கு எதிர்ப்பான நிலைமைகளை அடையாளம் கண்டு, பொருத்தமான தீர்வுகளை கண்டறிந்து, உரிய விடயங்கள் மற்றும் அறிவின் மூலம் இளைஞர்களை வலுவூட்டும் வகையில் இந்நிறுவனங்களால் 'British Council Active Citizens' பயிற்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது. ஆறு நாட்களில், ஐந்து வளவாளர்களின் வழிகாட்டலின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அறுபது இளைஞர், யுவதிகள் குழுவினருக்கு, இரண்டு கட்டங்களாக இப்பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டது. இங்கு, தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தில் சூழல் பிரச்சினைகள் மக்களின் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது என கண்காணிக்கப்பட்டு, அப்பிரதேசத்திற்கு ஏற்ற நிலைபேறான வளர்ச்சித் திட்டத்திற்கான முன்மொழிவுகளை உருவாக்குவது மற்றும் சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் உள்ள மக்கள் மற்றும் அதிகாரிகளின் ஆதரவை எவ்வாறு பெறுவது என்பது பற்றியும், திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான நிதி நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பிலும் இளைஞர்கள் ஆராய்ந்தனர்.




அ. கனகசூரியர் ...


# ஈதுல் பித்ர் பெருநாள் மலர்

ஈத் என்றால் விழா அல்லது மீண்டும் மீண்டும் வரும் மகிழ்ச்சி என்று பொருளாகும். அந்த வகையில் பெருநாள் தொழுகை முஸ்லிம்கள் அனைவருக்கும் மிக முக்கியமானதாக உள்ளது. இது அன்றாடத் தொழுகையின் சிறப்புக்களையும் ஜும்ஆத் தொழுகையின் பலன்களையும் கொண்டுள்ளதோடு முஸ்லிம்கள் மத்தியில் பிணைப்புகளை வலுப்படுத்தும் தன்மையையும் ஏற்படுத்தக்கூடியதாகும்.

இஸ்லாத்தில் இரண்டு பெருநாட்கள் உள்ளன. அவற்றில் ஒன்று ஈதுல் பித்ர் என்றழைக்கப்படும் நோன்புப் பெருநாளாகும். இது ரமழான் மாதத்தின் நோன்பு கடமையை நிறைவேற்றியதைத் தொடர்ந்து ஆரம்பமாகும் இஸ்லாமிய வருடக் கணிப்பின் பத்தாவது மாதமான ஷவ்வால் மாதத்தின் முதல் நாள் கொண்டாடப்படக்கூடியதாகும்.

ரமழான் மாதத்தில் தான் அல் குர்ஆன் அருளப்பட்டது. அதே மாதத்தில் தான் நோன்பு கடமையும் நிறைவேற்றப் படுகிறது.

இரண்டாவது பெருநாள் 'ஈதுல் அழ்ஹா' (தியாகத் திருநாள்) எனப்படும் ஹஜ்ஜுப் பெருநாளாகும். இப்பெருநாள் இஸ்லாமிய வருடக் கணிப்பின் இறுதி மாதமான 'துல்ஹஜ்' பத்தாம் நாளில் கொண்டாடப்படக்கூடியதாகும். அதாவது வருடாவருடம் ஹஜ் கடமை (மக்கா யாத்திரை) நிறைவேற்றப்படுவதைத் தொடர்ந்து இப்பெருநாள் உலகெங்கிலும் முஸ்லிம்களால் கொண்டாடப்படும்.



## நோன்பு பெருநாளின் மகிமை

இஸ்லாமியப் பெருநாட்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தவை. அவை எதற்கும் ஈடான பெருநாட்கள் அல்ல. மிக உயரிய ஆன்மீக ஒழுக்க நெறிகளோடு, குடும்ப, சமூக ஒற்றுமையை வெளிப்படுத்தி நிற்கும் தனிப்பண்புகள் பலவற்றை கொண்டுள்ள பெருநாட்களாகும். ஒவ்வொரு முஸ்லிமும் இறைவனின் கட்டளைப்படி தம் கடமையை நிறைவேற்றியதைத் தொடர்ந்து கொண்டாடுவது தான் ஈத் பெருநாட்கள். அந்த வகையில் ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட்டு அதனை வெற்றிகரமாக நிறைவேற்றியமைக்காக நோன்பு பெருநாள் கொண்டாடப்படுகின்றது.

தமது ஆன்மீகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இறைவன் உதவியதற்காக அவனுக்கு நன்றிகூறும் வகையில், முஸ்லிம்கள் அனைவரும், சகோதரத்துவ உணர்வோடும், மன மகிழ்ச்சியோடும் கொண்டாடும் நாளாகவே பெருநாள் விளங்குகிறது. இவ்வாறு நன்றி செலுத்துவது வெறும் பேச்சோடு முடிந்து விடுவதில்லை. அதற்கப்பாலும் அது சமூக மற்றும் மனிதாபிமான உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்கிறது. ரமழான் மாதத்தின் நோன்பினை வெற்றிகரமாக நிறைவு செய்ததைத் தொடர்ந்து ஏழை எளியவர்களுக்கு நோன்புப் பெருநாளில் தானதர்மங்கள் செய்வதன் மூலமாக (இறைவனுக்குத்) தங்களது நன்றியை இறைவிசுவாசிகளான முஸ்லிம்கள் வெளிப்படுத்துகின்றனர்.

அதேபோன்று (ஹஜ் பெருநாள்) 'ஈதுல் அழ்ஹா' அன்று ஹஜ் கடமையை நிறைவேற்றிய முஸ்லிம்களும் ஏனைய முஸ்லிம்களும் புசிப்பதற்குத் தகுந்த பிராணிகளை அறுத்து எளியவர்களுக்கு பங்கீடு செய்து (குர்பான்) தங்களுடைய நன்றியை வெளிப்படுத்துகின்றார்கள். தானதர்மங்களையும், குர்பானி பொருட்களையும் வழங்குவது பெருநாட்களின் மிக முக்கியமான அம்சங்களாகும். இவ்வாறு நன்றி செலுத்துவது ஆன்மீக உணர்வையும், மனிதாபிமான உணர்வையும் ஒருங்கிணைக்கும் ஒரு உன்னத செயலாக அமைந்திருக்கின்றன. இவ்வாறான உயரிய தனித்துவ மாண்பினை இஸ்லாமிய பெருநாட்கள் கொண்டுள்ளன.

அதேநேரம் ஒவ்வொரு பெருநாளும் இறைவனை நினைவு கூறும் புனிதத் திருநாட்களாக உள்ளன. இஸ்லாத்தில் பெருநாட்கள் மிகுந்த மகிழ்ச்சிக்குரிய நாட்கள் என்றாலும் இறைவனைத் தொழுதபடியே அந்த நாட்களை முஸ்லிம்கள் ஆரம்பிக்கின்றனர். இறைவன் தங்களுக்கு அருளிய நலன்களையும் பலன்களையும் நினைவு கூறும் வகையில் அவனைத் தொழுது அவன் திருநாமத்தைப் போற்றிப் புகழ்கிறார்கள். அதோடு இறந்து போனவர்களின் ஆத்ம நலனுக்காகவும் இறைவனிடம் இறைஞ்சுகிறார்கள். வறியவர்களுக்கு உதவி செய்கிறார்கள். துன்பங்களில் உழல்பவர்களுக்கு கருணை காட்டுகிறார்கள். நோயுற்றவர்களை சென்று பார்த்து அவர்களுக்கு ஆறுதல் கூறுகின்றார்கள். தங்களைப் பிரிந்து வெளியூர்களுக்குச் சென்றுள்ள நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் வாழ்த்துக்கள் கூறி அவர்களையும் எண்ணிப் பார்க்கின்றார்கள். இப்படி எல்லோரையும் எண்ணிப் பார்க்கின்ற ஒரு நாளாகவும் ஈத் பெருநாள் விளங்குகின்றது.

மேலும் ஒவ்வொரு ஈத் பெருநாளும் ஒரு வெற்றித் திருநாளாகும். நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் தம் கடமைகளை நிறைவேற்றி வந்த ஒவ்வொருவரும் வெற்றியாளராவார். அவர்கள் தமது ஆசைகளின் மீது பலமான கட்டுப்பாடு கொண்டவர்களாகவும், சுயகட்டுப்பாடு உடையவர்களாகவும், அதனை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையை விரும்புபவர்களாகவும் இருக்கின்றனர் என்பதை மெய்ப்பித்துக் காட்டுகின்றனர். ஒருவர் இத்தகைய பண்புகளை பெற்றுவிட்டால், அவர் ஒரு மாபெரும் வெற்றியை அடைந்துவிட்டார் என்பது தான் அர்த்தமாகும். ஏனெனில் தன்னைத்தானே கட்டுப்பத்திக் கொள்ளவும் தன்னுடைய ஆசைகளை நெறிப்படுத்திக் கொள்ளவும் அறிந்து கொண்ட ஒருவர் பாவம், தவறு, அச்சம், பலவீனம், கேவலம், பொறாமை, பேராசை, ஏளனம் இன்னும் இவை போன்றவற்றிலிருந்து விடுபட்டவராகவே விளங்குவார். இந்த விடுதலையின் அடையாளமே 'ஈத்' பெருநாளாகும். இப்பெருநாளை வரவேற்கும்போது அவர் உண்மையிலேயே தனது வெற்றிக்கு விழா எடுக்கின்றார் என்றே பொருளாகும். ஆகவே ஈத் எனும் பெருநாள் ஒரு வெற்றித் திருநாளே அன்றி வேறில்லை.

ஒவ்வொரு ஈத் பெருநாளும் நன்மைகளின் அறுவடை நாளாகவும் உள்ளன. இறைபணியில் ஈடுபட்டிருந்த நல்லடியார்கள், நம்பிக்கையாளர் அனைவரும் தங்களது நற்செயல்களுக்கான பலன்களை அந்தப் பெருநாளன்று அறுவடை செய்து கொள்கின்றனர். இறைவன் தனது கருணையையும் பாக்கியங்களையும் அவர்களுக்கு வாரி வழங்குகின்றான்.

சகோதரத்துவம், அன்பு, பரிவு, பாசம் இவற்றை முஸ்லிம்கள் ஏனையோருடன் பரிமாறிக் கொள்கிறார்கள். ஒவ்வொரு பெருநாளிலும் எல்லா முஸ்லிம்களுமே நன்மையை அடைகிறார்கள். தன்னைப் போன்ற நம்பிக்கையாளர்களின் நலனில் அக்கறை கொள்ளும் நம்பிக்கையாளர்களுக்கு அன்று இறைவன் தன் அருட்கொடைகளை அள்ளித் தருகின்றான். வறியவர்களுக்கு அன்றைய தினம் சக நம்பிக்கையாளர்களின் அன்பளிப்புகளும், அன்பும் கிடைக்கின்றன. ஆகவே ஒவ்வொரு பொருநாளும் இறைவனின் கருணை, அன்பு ஏனைய முஸ்லிம்களின் அன்பளிப்பு, பாசம், பரிவு இவற்றின் அறுவடை நாளாக விளங்குகின்றன.

மேலும் ஒவ்வொரு ஈத் பெருநாளும் பாவமன்னிப்புப் பெறும் நாளாகவும் திகழுகின்றன. முஸ்லிம்கள் அனைவரும் பெருநாள் தொழுகைக்கு ஒன்றாக கூடும்போது, இறைவனிடம் மன்னிப்புக் கோருகின்றார்கள். தங்களது நம்பிக்கை மேலும் உறுதிபெற இறைஞ்சுகின்றார்கள். தூய்மையான உள்ளத்தோடு தன்னிடம் கோருகின்றவர்களுக்கு மன்னிப்பு அருளுவதாக இறைவன் உறுதி கூறுகின்றான். பெருநாள் தொழுகைகாக ஒன்று கூடுகின்ற அந்த புனிதக் கூட்டத்தில், இன்னொரு நம்பிக்கையாளருக்கு எதிரான எண்ணங்களை கொள்வதற்கு ஒரு முஸ்லிம் வெட்கப்படவே செய்வான். சகோதரத்துவமும் ஆன்மீகமும் ஒருங்கிணைந்து விளங்கும் இந்தக் கூட்டத்தில் மகிழ்ச்சியும் நல்லெண்ணமுமே எல்லோர் உள்ளத்திலும் இருக்கும். தீய எண்ணங்கள் எதுவும் அவர்களின் உள்ளங்களில் இருக்காது. அப்படி ஏதேனும் தீய எண்ணங்கள் ஒருவரிடம் தலைதூக்குமேயானால், அதனை அவர் அகற்றிடுவார். தன்னுடைய இதயத்தையும் ஆன்மாவையும் தூய்மைப்படுத்துவதற்காக பெருநாளின் புனிதமான சூழ்நிலையில் அவர் மற்றவர்களுடன் கலந்து பழகுவார். இந்த நல்ல நாளில் தனக்கு தீங்கிழைத்தவர்களை அவர் மன்னித்துவீடுவார்.

ஏனெனில் அவர் இழைத்த தவறுகளுக்காக அவரும் இறைவனிடம் மன்னிப்புக் கோரும் நாளாக அது உள்ளது. இறைவனின் மன்னிப்பைப் பெறுவதற்காக தன்னால் முடிந்ததையெல்லாம் அவர் செய்கிறார். இறையச்சம் மிகுந்திருக்கும் இந்தக் கூட்டத்தின் புனிதமான நிலை, அவர் மற்றவர்களை மன்னித்தால் அவரை இறைவன் மன்னிப்பான் என்ற தத்துவத்தை அவருக்கு புகட்டுகின்றது. அவர் மன்னிக்கும்போது இறையருள் அவருக்கு கிடைக்கின்றது. இப்படி ஒவ்வோரு பெருநாளும் பாவமன்னிப்பு பெறும் நாளாகிறது.

அத்தோடு ஒவ்வோரு பெருநாளும் ஓர் அமைதி நாளாகவும் உள்ளன. இறைவனின் வழிகாட்டுதல்கள் படி வாழ்வதன் மூலம் ஒரு முஸ்லிம் தன் இதயத்திலே அமைதியை நிலைநாட்டுகின்றார். இதன் ஊடாக இறைவனுடன் ஓர் அழிக்க முடியாத அமைதி உடன்படிக்கையை அவர் செய்து கொள்கிறார். இதன் விளைவாக அவர் தன்னை சுற்றியுள்ள உலகத்தோடும் அமைதியோடு வாழ்கிறார். ஒருவர் ஈத் எனப்படும் பெருநாளை மன மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறார் என்றால் அவர் இறைவனுடன் செய்து கொள்ளும் அமைதி உடன்படிக்கையை நிறைவேற்றுகின்றார் என்றுதான் பொருளாகும். ஆகவே ஈத் எனப்படும் பெருநாள் ஓர் அமைதித் திருநாளகும்.

இதுவே பெருநாட்களின் பொருளாகும். அந்த வகையில் நோன்பு பெருநாள் ஒரு அமைதி நாள். நன்றி செலுத்தும் நாள். மன்னிப்பு நாள். வெற்றியின் விழா நாள். நன்மையை அறுவடை செய்யும் நாள். சாதனைகள் நிறைவடைந்த நிறைவு நாள். நல்லோர்களையும், நண்பர்களையும் நினைவுகூறும் நாள். இவற்றிற்கெல்லாம் மேலாக அது இஸ்லாத்தின் நாள். இறைவனின் நாள் என்றால் அது மிகையாகாது.

**ஈத் முபாரக்**

மௌலவி
**எம்.யூ.எம். வாலிஹ்**
(அல் அஸ்ஹரி, பாரி)
வெலிகம

---

இறை அருளையும் பாவ விமோசனத்தையும் அடைய ரமழான் எனும் விஷேட மகத்துவமான மாதத்தை வழியனுப்பி வைத்து கவலையில் ஆழ்ந்த இறை விசுவாசிகளுக்கு ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இறைவன் வழங்கிய மாண்பு மிக்க தினமே புனித நோன்புப் பெருநாள் தினமாகும்.

புனித ரமழான் மாதத்தில் பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவெல்லாம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்கள் ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டவுடன் ஈதுல் பித்ர் எனும் ஈகைத் திருநாளை குதூகலமாக கொண்டாடுகின்றனர். ரமழானில் நன்மைகளைக் கொள்ளையிட்ட உள்ளங்கள் ஷவ்வால் மாத தலைப் பிறையுடன் ரமழானுக்கு விடை கொடுத்து விட்டு நோன்புப் பெருநாள் குதூகலத்தில் திளைக்கின்றன.

பெருநாள் தினம் என்பது சிறியோர், பெரியோர், ஏழை, பணக்காரன், முதியவர் என்ற எவ்வித பாகுபாடும் இன்றி மகிழ்ச்சியுடன் கழிக்கக் கூடிய தினமாகும். இப்பெருநாள் தினத்தில் நோன்பு நோற்பதை ஹராமாக்கியுள்ள இஸ்லாம் அல்லாஹ்வின் உவப்புக்குரிய வழிகளில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது.

பெருநாள் தினம் அல்லாஹ்வை ஞாபகமூட்டக் கூடிய, அவனைப் புகழக் கூடிய தினமாக இருக்க வேண்டுமே தவிர நற்செயல்களுக்கு மூட்டை கட்டும் தினமாக அமையலாகாது. ஈதுல் பித்ர் பெருநாளில் அதிகமானளவு நன்மைகளை செய்ய நாம் முன்வர வேண்டும். நாம் மட்டும் பெருநாளைக் கொண்டாட அயல் வீட்டார் பெருநாளைக் கொண்டாட வசதியற்றவனாக இருப்பாரேயானால் நாம் கொண்டாடும் பெருநாளில் என்ன தாற்பரியம் உண்டு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

நோன்புப் பெருநாளுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் தயாராகும் போது பித்ரா (தர்மம்) கொடுப்பதைக் கொண்டே தயாராக வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நோன்புப் பெருநாள் தர்மம் நோன்பின் போது ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும் ஏழை, எளியவர்கள் பெருநாள் தினத்தில் பசி, பட்டினியோடு இருக்கக் கூடாது என்ற நோக்கங்களின் அடிப்படையிலும் கடமையாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவமானதாகவும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர். நாம் பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக் கலந்தே வாழ்கிறோம். எனவே அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்கள் ஆவேசப்படுகின்ற, ஆத்திரப்படுகின்ற சூழ்நிலைகளை நாம் உருவாக்கக் கூடாது.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்துகொள்ளக் கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது.

வறிய மக்களின் துயர் துடைக்கும் பித்ரா என்ற கடமையுடன் பெருநாள் தொடங்குவதன் காரணமாகவே பித்ர் என்ற வார்த்தையுடன் சேர்ந்து ஈதுல் பித்ர் என்று இப்பெருநாள் அழைக்கப்படுகின்றது. பெருநாள் தினத்தில் இரவு, பகல் இரண்டு வேளைகளுக்கு தனக்கும் தனது பராமரிப்பிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் போதுமான அத்தியாவசிய வாழ்க்கை வசதிகளையுடைய



## புனித நோன்பு பெருநாளை கொண்டாடுவோம்

ஒவ்வொரு முஸ்லிமும் இத்தகைய வசதிகள் அற்ற அல்லது வசதிகள் குறைந்த ஏழைகளுக்கு கட்டாயமாகக் கொடுப்பதற்குரிய நன்கொடையே ஸகாதுல் பித்ர் எனப்படும்.

பெருநாள் தினத்தன்று சகல முஸ்லிம்களும் சந்தோஷமாக உண்டு மகிழ வேண்டும், எவரும் பசியுடன் இருக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கு முதலாவதாகவும், பித்ராவை வழங்கும் ஒவ்வொருவரும் ரமழான் மாதத்தில் விட்ட பிழைகளுக்குப் பரிகாரமாகவும் ஸகாதுல் பித்ர் இருப்பதனால் நோன்பாளிகள் பரிசுத்தவான்களாக மாறுவதனால் தனியார்கள் நன்மை பெறுவது இரண்டாவது நோக்கமாகவும் திகழ்கின்றது.ஒவ்வொரு முஸ்லிமின் செயல்கள் மற்ற சகோதர முஸ்லிம்களின் சுகதுக்கங்களில் பங்குபற்றக் கூடிய விதத்தில் அமைந்திருக்க வேண்டும். இந்த உண்மையை ஸகாதுல் பித்ர் அமைப்பு முறையிலும் காணக் கூடியதாக உள்ளது. பெருநாள் தினத்தில் நாங்கள் எல்லோரும் அதிகாலையில் குளித்து, புத்தாடைகள் அணிந்து, நறுமணம் பூசி, அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இதே போன்று அன்றைய தினத்தில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு.

இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களாகிய நாம் எமது பெருநாளின் சிறப்புக்களை மாற்று மத இனங்களுடன் பகிர்ந்துகொள்வதில் எந்தத் தவறுமில்லை. அவ்வாறு நாம் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் போதுதான் இந்த நாட்டில் இன நல்லுறவைக் கட்டியெழுப்ப முடியும். ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் தொழில் நடவடிக்கைகளும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும். அண்மைக்காலமாக நாம் கட்டிக்காத்து வந்த இன நல்லுறவுச் செயற்பாடுகள் பல்வேறு சிக்கல்களை. இன விரோதங்களை அரசியல் மட்டத்தில் ஏற்படுத்தி வருவதால் இப்பெருநாள் தினங்களில் மிக அவதானத்தோடும் பொறுப்புணர்வோடும் குரோதம், விரோதம் ஏற்படாத வகையில் புரிந்துணர்வையும் சக வாழ்வையும் இப்பெருநாள் ஏற்படுத்த அல்லாஹ் அருள் புரிவானாக. மேலும் இலங்கையில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களாகிய நாம் பெரும்பான்மையினருடனும் ஏனைய சிறுபான்மை சமூகங்களுடனும் பிரச்சினைகளிலிருந்து நீங்கி சமாதானமும் சகவாழ்வும் இனங்களுக்கிடையே சகிப்புத் தன்மையும் புரிந்துணர்வும் ஏற்படவும் அல்லாஹ் அருள் புரிவானாக.மேலும் எமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார பிரச்சினை நீங்கவும் அல்லாஹ் கிருபை செய்வானாக. ஆமீன்.

கலாபூஷணம்
**எம்.எப்.எம். இக்பால்**
(ஜே.பி) யாழ்ப்பாணம்

பொருளாதார அரசியல்

# இது இடைப்பட்டியை இறுக்க வேண்டிய காலம்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

'இன்றைய நிலையில் நாட்டில் உணவுப்பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது முக்கியமானது. விவசாயிகளுக்கு அத்தியாவசியமான இரசாயன உரங்களையும் கிருமி மற்றும் களை நாசினிகளையும் குறைந்த பட்சம் ஒரு சில மாதங்களுக்காவது மானிய விலையில் பெற்றுத் தருவதன் மூலம் அடுத்துவரும் ஆறு மாதங்களுக்குள் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும். அதன் மூலம் உணவு இறக்கமதிக்காக தற்போது கடன் பெற்று செலவிடப்படும் தொகையினைக் குறைக்கலாம்'

இலங்கையின் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண முடியாது என்ற யதார்த்தத்தை சம்பந்தப்பட்ட தரப்பினர் சரிவரப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. அரசியல் உறுதிப்பாடு ஏற்படாமல் பொருளாதார நெருக்கடியைக் கையாள்வது கடினமானது.

பொருளாதார நெருக்கடி நிலையே அரசியல் நெருக்கடியினைத் தோற்றுவித்த காரணத்தால் இப்போதைக்கு பொருளாதார நெருக்கடிக்கு தற்காலிகமாகவேனும் ஒரு தீர்வைக் கொடுத்துவிட்டால் அரசியல் நெருக்கடி தானாகவே தணிந்துவிடும் எனகணக்குப்போட்டுக் காய்நகர்த்தப்படுவதாகத் தெரிகிறது.

ஆனால் கள யதார்த்தங்கள் முற்றிலும் மாறாக இருக்கின்றன. அரச எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டு வருபவர்களுக்கான ஆதரவு நாளாந்தம் பெருகிவருகிறது. தனியார்துறை தொழிற்சங்கங்கள் மட்டுமன்றி அரசதுறை தொழிற்சங்கங்களும் இதில் இணைந்து கொண்டுள்ளன.

சமூகத்தின் வீ.ஐ.பிகள் தொடக்கம் சாதாரண பொதுமக்கள் வரையிலான பல்வேறு தரப்பினரிடமிருந்தும் போராட்டத்திற்கு ஆதரவு பெருகிவருகிறது. அரசாங்கத்திற்கு எதிரான ஒரு சிறிய குழுவினர் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தட்டிக்கழித்துவிட முடியாத ஒரு கட்டத்தைக் கடந்து விட்டதாகவே தெரிகிறது.

சர்வகட்சி அரசாங்கமா அல்லது கூட்டரசாங்கமா என்ற அக்கப்போர் ஒரு புறம். 113 பேரோடு வாருங்கள் என்று ஜனாதிபதி சொல்கிறார். எந்த அரசாங்கம் அமைக்கப்பட்டாலும் தனக்குக் கீழேயே அமைக்கப்படவேண்டும் என்கிறார் பிரதமர். எந்த அரசாங்கத்திலும் பங்களிக்கப் போவதில்லை என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர். ராஜபக்ச முழுக்குடும்பமே பதவிவிலக வேண்டும். இப்போதிருக்கும் 225 பேருமே பிரயோசனமில்லை என்கிறது போராடுந்தரப்பு. இதிலே எதிலும் ஒரு முன்னேற்றமுமின்றி நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

நாட்டின் நாணய மாற்று வீதம் ஜோராக மேலே சென்று ஒரு டொலருக்கு 359 ரூபா என்ற உத்தியோகபூர்வ மட்டத்தை எட்டியுள்ளது. வெளிச்சந்தையிலே 400 ரூபா மட்டத்தை எட்டுவதாகத் தெரிகிறது. காணுந்தூரத்திற்கு டொலரைக் காவிக்கொண்டு இலங்கைக்கு எவரும் வருவதைக் காணோம்.

IMF இடம் சென்றால் பிரச்சினை தீரும் என்றார்களே இங்குள்ளவர்கள். அங்கு போய் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவிட்டு வந்த பின்னரும் பிரச்சினை தீர்வதற்கான எந்தவித அறிகுறியையும் காணோமே என்று பலர் முணுமுணுக்கின்றனர்.

பெற்றோலியப் பொருள் விலைகள் பல தடவைகள் அதிகரிக்கப்பட்டன. கோதுமை, சீனி, பருப்பு உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலைகள் சடுதியாக அதிகரித்தன. எரிவாயு விலைகள் அண்மையில் சுமார் இருமடங்காக அதிகரித்தன.

சில தினங்களுக்கு முன்னர் மின்சாரத்தின் விலையும் அதிகரிக்கப்படவுள்ளதாக செய்தி வெளியானது. முக்கிய மருந்து வகைகளின் விலைகளும் 40 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இனி எஞ்சியிருக்கும் நீர்க்கட்டணமும் நிச்சயமாக அதிகரிக்கப்படும். சுருக்கமாகச் சொன்னால் ஒரு தனிமனிதனுடைய நாளாந்த வாழ்வுக்கு எவையெல்லாம் தேவைப்படுமோ அவை அத்தனையும் விலை அதிகரிப்பைக் கண்டுள்ளன. அதிகரிக்காத ஒன்றே ஒன்று என்றால் அது மக்களின் வருமானம் மாத்திரமே.

விளிம்பு நிலையில் உள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களின் உயிர்வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. 1970ஆம் தசாப்தத்தின் முற்பகுதியில் நாடு மோசமான ஒரு பொருளாதார நெருக்கடி நிலையைச் சந்தித்தபோது நாட்டில் அப்போது அமுலில் இருந்த உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள் பங்கீட்டுத் திட்டத்தின் காரணமாகவே மக்கள் பாதுகாக்கப்பட்டனர்.

இன்றைய சூழ்நிலையில் அவ்வாறான காத்திரமான ஒரு சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னல் நாட்டில் இல்லை. தற்போது உலக வங்கியின் அவசர உதவியின் கீழ் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்று பாதிக்கப்பட்டுள்ள வறிய குடும்பங்களின் தேவைகளுக்கு உதவும் திட்டம் முன்னெடுக்கப்படுமென மத்திய வங்கி அறிவித்துள்ளது. ஆனால் அது வந்து சேரும் வரையில் மக்கள் எவ்வாறு தாக்குப்பிடிக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை.



டொலர் பற்றாக்குறையால் இறக்குமதிப் பண்ட விலைகள் அதிகரித்து சங்கிலித்தொடராக உள்ளீடுகளின் விலைகளும் வெளியீடுகளின் விலைகளும் சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது. இதனால் பலர் தமது வேலை வாய்ப்புகளை இழக்கும் நிலை தோன்றியுள்ளது.

குறிப்பாக கட்டட நிர்மாணப் பொருள்களின் விலைகள் பலமடங்கு அதிகரித்துள்ளமையால் கட்டட நிர்மாணத்துறை பலத்த சரிவினைச் சந்தித்துள்ளது. அதில் ஈடுபட்டுள்ள பலர் தமது வேலைகளை இழந்துள்ளனர்.

இது போலவே சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்களும் மூலப்பொருள் விலையதிகரிப்பு எரிபொருள் விலையதிகரிப்பு போன்ற காரணங்களால் தமது தொழில்களைத் தொடர முடியாத நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறு பல்வேறு தொழில்களும் தேக்க நிலையடைகின்றபோது மக்கள் தமது தொழில்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படுவதுடன் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவதனால் அரசாங்கத்தின் மானியங்களில் தங்கி வாழ்வோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும்.

இன்றைய நிலையில் நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது முக்கியமானது.

விவசாயிகளுக்கு அத்தியாவசியமான இரசாயன உரங்களையும் கிருமி மற்றும் களை நாசினிகளையும் குறைந்த பட்சம் ஒரு சில மாதங்களுக்காவது மானிய விலையில் பெற்றுத் தருவதன் மூலம் அடுத்துவரும் ஆறு மாதங்களுக்குள் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும். அதன் மூலம் உணவு இறக்குமதிக்காக தற்போது கடன் பெற்று செலவிடப்படும் தொகையினைக் குறைக்கலாம்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உணவுப்பொருள்களின் விலைகள் மேலும் அதிகரித்துச் செல்லும் அபாய நிலை காணப்படுவதால் மக்கள் குறைந்தபட்ச உணவையேனும் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அல்லாதுவிடின் இலங்கை உணவு நெருக்கடி நிலையினை எதிர்கொண்டு சோமாலியாவைப்போன்று உலக உணவுத்திட்டத்தின் உதவியை எதிர்நோக்கி வாழும் நிலை ஏற்படலாம்.

இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள ஒவ்வொரு குடும்பமும் தீவிர சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். நகர்ப்புறங்களில் வாழ்பவர்களின் நிலை மிகவும் கவலைக்கிடமானதாக மாறும்.

நகர்ப்புறவாசிகள் அத்தியாவசியத் தேவைகள் எல்லாவற்றையுமே பணத்திற்கு கொள்வனவு செய்ய வேண்டிய நிலையில் தவிர்க்க முடியாதவாறு அவர்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடையும். கிராமப்பகுதிகளில் எரிவாயு, மின்சாரம் போன்றவற்றை பயன்படுத்துவதைக் குறைக்கலாம். அத்துடன் தற்காலிகமாகவேனும் பாரம்பரிய வாழ்க்கை முறைக்கு மாறுவதன் மூலம் தமது வாழ்க்கைச் செலவை ஓரளவுக்கு சமாளிக்க முயலலாம்.

பண்ணைப் பறவைகள், வளர்ப்பு கால்நடை வளர்ப்பு போன்றவற்றை ஆரம்பிப்பதன் மூலம் பால், முட்டை, இறைச்சி போன்ற புரதப்பொருள் உணவு உட்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தலாம். மரக்கறிவகைகள், பழவகைகள் என்பனவற்றின் கிடைப்பனவும் வெகுவாகக் குறைந்து போயுள்ள நிலையில் காணி வசதி உடையவர்கள் சுயதேவைக்காவது அவற்றைப் பயிரிடுவதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யலாம். இவை இலங்கையர்களால் செய்ய முடியாதவைகளல்ல. 1970கள் 1980களில் இவ்வாறான பொருளாதார முறைமைக்கு பழக்கப்பட்டவர்கள் தாம். இலங்கை முழுவதும் மின்சாரம் இருந்ததில்லை. வீடுகளிலே மின்சாரப் பொருள்கள் இருந்ததில்லை மிக்ஸியும் கிரைண்டரும் சட்டர்லைட் தொலைக்காட்சியும் நேற்று வந்தவைதாம். தாம் வாழ்க்கை முழுவதும் எரிவாயுவில் சமைத்தவர்களுமல்ல. ஆகவே நிலைமையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நம்மை இயைபாக்கிக் கொள்ள வேண்டிய காலப்பகுதி இது.

# அதிபர் புட்டினின் தந்திரோபாய நகர்வு!




பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்

2022இன் ஆரம்பத்தில் உலகப் போருக்கான அதிக எச்சரிக்கைகளுடன் உலகை உலுக்கிய போராக ரஷ்ய உக்ரைன் போர் ஆரம்பித்தது. இதனடிப்படையில், ஆரம்பத்தில் ரஷ்ய உக்ரைன் போர் சர்வதேச அரசியல்; பரப்பில் அதிக கொதிநிலையை ஏற்படுத்தியிருந்தது. எனிலும் இரண்டு மாதத்துக்கு மேலாக யுத்தம் நீடித்து வரும் நிலையில் அதன் செய்திவீச்சு நாளடைவில் சர்வதேச பரப்பில் பரவலாக குறைவடைந்துள்ளது. மேற்கு ஊடகங்களும் சாதாரண செய்தியாக ரஷ்ய உக்ரைன் போரை அறிக்கையிட ஆரம்பித்துள்ளது. இதன் பின்னனணியில் ரஷ்யாவின் ஆதிக்கம் மேலோங்குவதும், ஐரோப்பிய நாடுகளின் ஆதரவுத்தளம் அமெரிக்காவிற்கு குறைவடைந்து செல்வதுமே காரணமென சர்வதேச அரசியல் ஆய்வு பரப்பில் உரையாடப்படுகிறது. இக்கட்டுரையும் ரஷ்ய உக்ரைன் போரின் பிந்திய நிலைமைகளை தேடுவதாகவே அமைகின்றது.

ஒன்று, ரஷ்யா ஜனாதிபதி புடின் சர்வதேச தலைவர்களுடனான சந்திப்புக்களை விரைவுபடுத்துவதுடன், ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போர்களை நியாயப்படுத்தும் கருத்தாடல்களை முன்னிலைப்படுத்தி வருகின்றார். இதனடிப்படையிலேயே ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் ஏப்ரல்24அன்று புடினை மொஸ்கோவில் சந்தித்தமை அதிகம் முக்கியத்துவம் பெறுகின்றது. அச்சந்திப்பு பற்றி ஐ.நா. பொதுச்செயலாளர் குறிப்பிடுகையில், மிகப்பயனுள்ள சந்திப்பாக அமைந்தது என்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு என்று அவர் தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றி உக்ரைன் போரை நிறுத்துமாறும் உக்ரைனின் பிரதேச ஒருமைப்பாட்டை பாதுகாக்குமாறும் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். உக்ரைன் மீதான தாக்குதலில் முக்கிய துறைமுக நகரமாக இரு தரப்பாலும் கருதப்படும் மரியப்போல் நகரத்தில் தங்கியிருக்கும் பொதுமக்களை அமைதியான முறையில் வெளியேற்றுவதற்கு ரஷ்யா உதவும் எனவும் ஐ.நா.பொதுச் செயலாளருக்கு ரஷ்ய ஜனாதிபதி உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகத் தெரிகிறது. தனது இராணுவத்தை விலக்கிக் கொள்வதுடன் குறித்த காலப்பகுதியில் பொதுமக்களை வெளியேறுவதற்கு அனுமதிப்பதாக புடின் தெரிவித்துள்ளார். மேலும் ஜனாதிபதி புடின் கொள்கையடிப்படையில் ஐ.நா சபையின் சர்வதேச செஞ்சிலுவை அமையத்தின் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்வதென்றும் பொதுமக்களை அப்பிரதேசத்திலிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்வதற்கு உதவுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், உக்ரைன் நாட்டுக்கு எதிராக ரஷ்ய ஆதரவு போராளிகள் போராடி வருகின்ற நிலையில் டொன்பாஸ் பிராந்தியத்தின் பிரச்சினைக்கு முடிவு எட்டப்படாமல் எந்தவொரு பாதுகாப்பு உடன்படிக்கையிலும் கையெழுத்திட முடியாதென புடின் தெளிவாக அறிவித்துள்ளார். அதேநேரம் உக்ரைனுடனான பேச்சுவார்த்தை சாதகமான பலனை தருமென்றும் தாம் நம்புவதாகவும் ரஷ்ய ஜனாதிபதி ஐ.நா பொதுச்செயலாளருக்கு தெரிவித்துள்ளார். இந்நிலையில் ரஷ்யாவின் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பாக வெளியேறுவதற்கும் ரஷ்யா உதவுமென்றும் தெரிவித்துள்ளார்.

இரண்டு, ரஷ்ய உக்ரைன் போர்க்களத்தில் ஆரம்பத்தில் உக்ரைனுக்கான ஆதரவு தளத்தில் ஒன்றுபட்டு நின்ற ஐரோப்பிய நாடுகளிடையே தற்போது அதிக விரிசல்களும் உக்ரைனுக்கான ஆதரவு தளத்திலிருந்து பின்ஒதுங்கும் நிலையும் காணப்படுகின்றது. அதாவது ஐரோப்பிய நாடுகள் தமக்கான எரிபொருள் இறக்குமதியில் அதிகம் ரஷ்யாவை சார்ந்திருப்பதனால் அதுசார்ந்து தொடர்ச்சியாக ரஷ்யாவை பகைத்துக்கொள்ள இயலாத சூழல் காணப்படுகிறது. குறிப்பாக ரஷ்யாவின் எரிபொருளில் அதிகம் தங்கியிருக்கும் ஜேர்மனி ரூபிளில் ரஷ்யாவிற்கு பெற்றோலிய இறக்குமதிக்கான நிதியை வழங்குவதற்கு தயாராகுவதாக தெரிய வருகிறது.



தீவிர போர் நகர்வுகள் உக்ரைன் மீது நிகழ்த்தப்படுகிறது. மரியப்போ துறைமுகநகரம் மட்டுமன்றி உக்ரைனின் கிழக்கு பிராந்தியம் முழுவதும் பாரிய போர் நிகழ்வதாகவும் ரஷ்யாவின் தீவிர தாக்குதலில் உக்ரைனின் சொத்துக்கள் அழிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

அதே நேரம் ரஷ்ய உக்ரைன் போர்க்காலத்தில் ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை அதிகம் இறக்குமதி செய்யும் நாடாக ஜேர்மனியே காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறே ஹங்ஹேரி, ஆஸ்திரியா, ஸ்லோவாக்கியா போன்ற நாடுகளில் எரிசக்தி விநியோகத்தர்கள் ரஷ்யாவிடமிருந்து பெறுகின்ற பெற்றோலியத்துக்கான நிதியினை ரூபிளில் வழங்க சுவிஸ் நாட்டில் உள்ள ஹஸ்ப்ரோன் வங்கியினூடாக பரிமாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிய வருகிறது. இதன்மூலம், ஐரோப்பிய ரஷ்ய உறவு புதிய திசையில் நகர்வதோடு அமெரிக்காவிற்கு எதிரான நடவடிக்கை ஐரோப்பிய பிராந்தியத்தில் முதன்மைப்படுத்தப்படுகின்றது என்பதை கோடிட்டு காட்டுவதாக தெரிகின்றது. இதேநேரம் அமெரிக்கா ரஷ்யாவிற்கு பதிலாக பெற்றோலியத்தை ஐரோப்பிய நாடுகளுக்கு வழங்குவதாக தெரிவித்த போதும் நடைமுறையில் அதற்கான சாத்தியப்பாடுகள் பலவீனமாக காணப்படுவதுடன் மேற்காசியாவில் அமெரிக்காவிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியில் பெற்றோலிய வளத்தை தனது சுயதேவைக்காக பாதுகாக்க வேண்டிய நிலைக்கு அமெரிக்காவைத் தள்ளியிருப்பதாகவும் மேற்கு ஊடகங்கள் குறிப்பிடுகிறன. எனவே மேற்கு ஐரோப்பாவுடன் அமெரிக்கா கொண்டுள்ள உறவானது, அரசியல் ரீதியிலும் பொருளாதார மேற்கட்டுமான அடிப்படைகளிலும் தங்கியிருக்கின்றது எனவும் தரைவழி தொடர்புகளால் அல்லது பொருட்கள் பரிமாற்றுவதற்கான திட்டமிடல்களால் அல்ல என்பதும் இத்தகைய புவிசார் அரசியல் முக்கியத்துவத்தை ரஷ்யாவின் பக்கம் வலுப்படுத்துகின்றது என்பதையும் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

மூன்று, சமகாலத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடினின் உரையாடல்களும் அதற்கான அணுகுமுறைகளும் ஒரு பக்கம் அமைய மறுபக்கத்தில் தீவிர போர் நகர்வுகள் உக்ரைன் மீது நிகழ்த்தப்படுகிறது. மரியப்போ துறைமுகநகரம் மட்டுமன்றி உக்ரைனின் கிழக்கு பிராந்தியம் முழுவதும் பாரிய போர் நிகழ்வதாகவும் ரஷ்யாவின் தீவிர தாக்குதலில் உக்ரைனின் சொத்துக்கள் அழிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

இதிலிருந்து மீள்வதற்கு உக்ரைனுக்கு பல ஆண்டுகள் பிடிக்குமென்றும் பாரிய நிதி உதவி அவசியம் என்பதையும் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றது. இப்போரின் ரஷ்சியாவின் பிரதான நோக்கமே உக்ரைனை பலவீனப்படுத்துடன் அதன் வளங்களை முற்றாக அழிப்பதாகவே காணப்படுகிறது. மரியப்போ நகரத்தை ரஷ்யா கைப்பற்றியமையால் உக்ரைனின் ஏற்றுமதி முற்றாக தகர்க்கப்பட்டுள்ளதுடன் உக்ரைனில் காணப்படும் பெற்றோலிய உற்பத்தியின் கட்டுப்பாடு ரஷ்ய படைகளிடமே காணப்படுவதாக தெரியவருகிறது. ஏறக்குறைய உக்ரைனின் ஏற்றுமதிகளும் அதற்கான பொருளாதார வாய்ப்புக்களும் முற்றாகவே அடைபட்டுள்ளதைக் காணமுடிகிறது.

நான்கு, ரஷ்ய உக்ரைன் போர் பிரான்சில் நிகழ்ந்த ஜனாதிபதி தேர்தலில் அதிக தாக்கத்தை செலுத்தியுள்ளது. குறிப்பாக ஐரோப்பாவை ஒன்றிணைப்பதும் பிரான்சின் சுதந்திரத்தை முதன்மைப்படுத்துவதும் ஐரோப்பாவினை மீளமைப்பதும் என்ற கருப்பொருளோடு எதிர்க்கட்சி வேட்பாளர் லி பென் மாத்திரமின்றி ஜனாதிபதி மக்ரோனும் அத்தகைய கருத்து நிலையை கொண்டிருந்தார்.

அதனால் ஜனாதிபதி தேர்தலின் இறுதி காலப்பகுதியில் உக்ரைன் ரஷ்ய போரை தூண்டுவதில் அமெரிக்கா முன்னின்று செயற்படுவதாகவும் குற்றம் சாட்டியதோடு ஐரோப்பாவின் கட்டமைப்பை அமெரிக்காவுக்கு புறம்பாக மேற்கொள்ளும் உத்திகளை பிரான்சும் பிரான்ஸ் தலைமை தாங்கும் ஐரோப்பிய யூனியனும் கொண்டிருப்பது என்பது தேர்தல் காலத்தில் வெளிப்படையாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஜனாதிபதி தேர்தலில் மக்ரோன் வெற்றி பெற்றாலும் இரண்டாவது அதிக வாக்குகளை பெற்ற லி பென் பாராளுமன்ற தேர்தலை இலக்கு வைத்து நகர்வதாக தன்னுடைய தேர்தல் பிரச்சாரத்திலும் முடிவுகள் வெளிவந்த பிற்பாடு தன்னுடைய வாக்காளர்களோடு உரையாடும் போதும் வெளிப்படுத்தியுள்ளார். இவர் பாராளுமன்ற தேர்தலை வெற்றிக்கான களமாக தேர்ந்தெடுத்துள்ளாதாக வாக்காளர் ஒருவர் பி.பி.சிக்கு தெரிவித்துள்ளார். எனவே இவர் ரஷ்யா மீதும் புடின் மீதும் கொண்டுள்ள நெருக்கமும் ஐரோப்பிய மீளுருவாக்கம் பற்றிய சிந்தனையும் பிரான்சினூடாக மாற்றத்தை நோக்கி நகரக்கூடிய வாய்ப்பும் நிலவுவதாக தெரிகிறது. அவ்வகை சூழல் ஒன்று ஏற்படுமாயின் அமெரிக்கா மற்றும் பிரிட்டன்' உறவு நிலையும் அதனூடாக கட்டியெழுப்பப்பட்ட முயற்சிக்கும் ஐரோப்பிய அமெரிக்க உறவு எதிர்நிலைக்கு தள்ளப்படும் அல்லது போட்டித்தன்மை உருவாகும்.


எனவே, விளாடிமிர் புடினது இராஜதந்திர செய்முறைகளும் போரும் பொருளாதார ரீதியிலான அணுகுமுறைகளும் தவிர்க்க முடியாது ஐரோப்பிய ரஷ்ய உறவை சாதகமாக்கும் வாய்ப்பை ஏற்படுத்தக்கூடியதாக காணப்படுகிறது. அதேநேரம் அமெரிக்காவின் ரஷ்யா மீதான பொருளாதார தடையும் ரஷ்யாவை பலப்படுத்தம் செய்முறையாக புடினால் மாற்றப்படுகிறது.

ரஷ்ய பெற்றோலியத்தில் தங்கியிருக்கும் ஐரோப்பாவை உக்ரேனிய போருக்கூடாக புடின் கையாளுவதில் வெற்றிகண்டு வருகிறார். ஆனால் அவரது போர் அணுகுமுறையானது அதிக ஆபத்துமிக்கதொன்றாகவும் தீவிரத்தன்மை மிக்கதாகவும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் மீதான எச்சரிக்கைகளையும் அதிகம் கொண்டுள்ளது. இது ரஷ்ய ஜனாதிபதி ஆக்கிரமிப்புவாதியாக குறிப்பிட்டதையும் விட, அதீதமானவராக காணப்படுகின்றார் என்பதையே வெளிப்படுத்துகிறது.



தினகரன் வாரமஞ்சரி

# மஞ்சரி களஞ்சியம்



## வாழ்வாதாரமா சேதாரமா 221



தமிழ்க் கவி பேசுகின்றார்

என்னதான் தடை வந்தாலும் விழாக்களும் சடங்குகளும் நிற்பதில்லை. மக்கள் அதை தியாகம் செய்வதுமில்லை. நாங்கள் சின்ன வயதில் இருந்த போது என் தந்தை சொல்வார்.

' பண்டிகைகள் ஒருநாளில் வரும்போது அன்றாடம் உணவின்றி இருப்பவனும் கூட கடன

# ருசிக்கு சாப்பிட்டது போய் பசிக்கு சாப்பிடும் காலம் இது

உடனப்பட்டு பிள்ளைகளுக்கு புதுத்துணி எடுத்து நல்ல பட்சணங்கள் செய்து முதல்தரமென தாம் கருதும் உணவைத் தயாரித்து உறவுகளை அழைத்து பங்கிட்டு உண்டு மகிழ்வான். அது முடிந்த பின்னும் மனம் நோகாமல் இது பண்டிகைக்காக தான் பட்ட கடன் என்று மகிழ்ச்சியாக உழைத்துக் கட்டுவான். அதற்கு அந்த பண்டிகையன்று அவன் உறவுகளுடனும் தன் குடும்பத்தினருடனும் அனுபவித்த மகிழ்ச்சிப் பரவசம் அவனுக்குள் ஒரு தெம்பைத் தரும்.'

என் தந்தையும் அப்படித்தான் ஒவ்வொரு பண்டிகை வருமுன்னும் நான்கு நாட்களுக்கு முன்னாக வாழைத் தோட்டத்தில் பருவமான வாழைக்குலைகளை வெட்டி புகை போட்டு பழுக்க வைப்பார். மரக்கறிகளை ஒழுங்கு படுத்துவது போல கோழிச் சேவலோ விடலைப்பருவத்து சேவலோ அது பண்டிகை நாளுக்காக விடப்படும். அப்படியே பச்சைநெல் குத்தி பச்சையரிசி சோற்றுக்கு முத்துச்சம்பா என தனித்தனி குத்த வேண்டும். இந்த ஏற்பாடுகளை ஒவ்வொரு பண்டிகைக்கும் பார்த்துப் பழகிய நாம் அதேபோல எனது குடும்பத்திலும் செய்தேன். இப்போது எனது பிள்ளைகள் பேரர்களும் அதைத் தொடர்ந்து செய்கிறார்கள்.

காலம் மாறிவிட்டது. அப்போதிருந்தது போல இப்போது விவசாய விளை பொருட்கள் இல்லை. நெல்லரிசியை விலைக்கு வாங்க வேண்டியுள்ளது. வாழைப்பழமும் அப்படியே கோழிச்சேவலும் அப்படித்தான் ஆக, எல்லாவற்றுக்கும் பணம் தேவைப்படுகிறது. அதேபோல தேக ஆரோக்கியமும் மாத்திரைகளில்' தங்கியுள்ளது. மூட்டு வலி வீட்டுக்கு வீடு இருக்கிறது. ரத்த அழுத்தம் அதே போலத்தான். சிறு நீரகப் பிரச்சினை ஒவ்வொரு தெருவிலும் தெரிகிறது. யாரையாவது பார்த்து உபசரிக்க வேண்டியிருந்தால். முதலில் நாம் அவரிடம் உங்களுக்கு சுகர் இருக்கோ? கொலஸ்ரோல் இருக்கோ என்று கேட்டுத் தான் விருந்தை தயாரிக்கிறோம். இரண்டு வருடங்களுக்குமுன் என் வீட்டில் ஒருவேளை உணவை ஏற்ற நண்பர் இன்றைய நிலையில் தனக்கு உணவளிக்க வேண்டாம் என மறுத்துவிட்டார். காரணம் பொருட்களில் விலைகள் அவரை விருந்துக்குப் போவதை அனுமதிக்கவில்லை என்கிறார். அப்படியாயின் நான் வருந்தியிருக்க வேண்டுமே ஊகும் நான் லேசாக ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தேன். சில நூறுரூபாக்கள் மீதமாகிறது. எனக்குள் ஏற்பட்டது வருத்தமா அல்லது திருப்தியா என்பது புரியவில்லை. இப்போது இலங்கைவாழ் மக்களின் பொதுத்தேர்வு இதுவாகத்தான் இருக்கும். என்னவோ விவேக சிந்தாமணியில் வருமே ஒரு பாடல்.

' தாங்கொணா வறுமை வந்தால் சபைதனில் செல்ல நாணும்.
வேங்கைபோல் வீரங்குன்றும் விருந்தினைக் காண நாணும்
பூங்கொடி மனையாட் கஞ்சும். புல்லருக்கு இணங்கச் செய்யும்.
ஓங்கிய அறிவு குன்றி உலகெலாம் பழிக்குந் தானே.'

இருக்காதா பின்னே மனிதர்களை இப்போது நிமிர்ந்து நிற்க வைப்பது பணந்தான். அந்தப்பணம் தன் மதிப்பை இழந்து பொருள்களை உயர்த்திக் கொண்டாடும் இந்த நேரம் சாதாரண மக்களின் மகிழ்ச்சி என்பது இந்த பண்டிகை நாட்களில் மட்டுந்தான் நிலைக்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திலும் ருசிக்கு சாப்பிட்டது



போய் பசிக்கு சாப்பிடும் காலம் இது. பெண்களின் நிலை மிக மோசம். இருக்கிறதை வைத்துக் கொண்டு சமைக்க முடியாமல் உணவு விடுதிகளில் கட்டுச்சோறு கட்டிய குடும்பங்கள் இப்போது கட்டுப்படியாகாமல் சமைத்தேயாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. பண்டிகை வருகிறதே என்ன பலகாரம் செய்யப்போகிறீர்கள்?' என்றால், 'பலகாரமா இந்த முறை ஒண்டுமில்லை' என்றவர் கடையிலேயே கேக் பிஸ்கட் தொதல் சிப்ஸ் என்று வாங்கி அசத்தி விட்டார். என்ன லாப நட்டக்கணக்கு பார்க்கிறீர்களா?

விலைவாசி அதிகம்தான் அதற்காக பண்டிகை கொண்டாடாமல் விட முடியுமா? ஆனால் இம்முறை மதுபானக்கடைகள் பூட்டியிருப்பதால் அது ஒரு நீண்ட விடுமுறையாகவும் இருப்பதால் கிராமத்தில் சரக்கு விற்பனை சக்கைப்போடு போடுகிறது. இதற்காகவெல்லாம் நொந்து கொள்ளக்கூடாது. இலங்கையின் ஆரம்ப பணக்காரர்களின் முதலீடும் வியாபார உத்திகளும் இலங்கையின் ஏழைத் தொழிலாளர்களையும் நாட்டையும் எந்த நிலையில் வைத்திருந்தது அதாவது வெள்ளையர் ஆட்சிக்காலத்தில். இன்றைய அரசியற் பிரமுகர்களின் முப்பாட்டன்மார் எந்தளவுக்கு நாட்டை வங்குரோத்து ((bankrupt என்ற சொல்லின் திரிபே வங்குரோத்து எனப்படும்) நிலைக்கு தள்ளினார்கள் என்பது தனி வரலாறு. அதனால்தான் இன்றைய குடிமக்கள் மதுபானங்களை சட்டரீதியாக அல்லாமல் சட்ட விரோதமாகவும் தயாரிக்கும் திறமையை பெற்றுய்ந்தார்கள்.

இம்முறை வானமும் பொத்துக் கொண்டு அடைமழையை நிகர்த்த வெள்ளப் பெருக்கை ஏற்படுத்திவிட்டது துணிக்கடைகள் மிகவும் சோர்வாக காணப்பட்டன. காரணம் ஒவ்வொரு கடைகளும் ஒவ்வொரு பொருளுக்காக கியூ வரிசைகளை வைத்திருந்தது. காலையில் வங்கியில் லைன் அங்கிருந்த சதொசவில் லைன் அப்படியே எரிபொருள் நிரப்பு நிலையத்தில் லைன். பொழுது சரியாகிவிட களைத்து வந்து வீட்டில் படுக்க, நாளைய பொழுதுக்கான பட்டியல். இதில் வேலைக்கும் போக வேண்டும். என்ன சமையல் எரிவாயுவை விட்டுவிட்டேனா நல்ல உமி எடுத்து வைத்திருக்கிறேன். உமி அடுப்பில் செலவில்லாத சமையல் வசதியாகவும் வேகமாகவும் செய்ய முடிகிறது.

நல்ல விறகுகளை கறையான் தின்ன, காஸ்வாங்கி சமைப்பதற்கு நான் என்ன கையாலாகாதவளா. இயற்கையை நாம் போற்றி வாழ்பவர்களாக இருந்தால் எவருக்கும் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. இப்போதெல்லாம் வீட்டில் ஆடைகளை தைத்து அணிபவர்கள் மிக அரிது ஒருவிழாவிற்கு போட்ட ஆடையை மற்ற விழாவுக்கும் போடக்கூடாது என்று பழக்கமாகி வருகிறது. இதற்கு அந்த ஒருநாள் உடையின் பெறுமதி கையைக் கடிக்குமளவுக்கு உள்ளது. இந்த ஒருநாள் விடயம் இப்போது அதிகமாகி வருகிறது 'பாஸ்ட் புட' என்று இந்தியாவில் ஒன்று பார்த்தேன். அது ஒன்றும் பாஸ்ட் இல்லை. ஆற அமர தயாரித்ததுதான். சாப்பிடுபவர்கள்தான் வேகமாக சாப்பிட்டார்கள். உட்காரவில்லை. நின்ற நிலையில் கையில் தட்டை ஏந்தி சாப்பிட்டபின் தட்டை எறிந்து விட்டு செல்வர். இந்தக் கடைகளும் தெருவில் ஓடிக்கொண்டிருக்கும், மக்கள் அநேகமாக இதை கையேந்திபவன் என்றும் குறிப்பிடுவார்கள். முற்காலத்தில் நாங்கள் கள்ளுக்கொட்டில்களை கையேந்தி மாதா கோவில் என்று கூறுவது நினைவிருக்கிறதா? எறிகிறார்கள் என்றால் 'வண்டேகப்'; 'வண்டேபிளேட்' வண்டே (one day ) பொட்டில்' என எல்லாம் 'வண் டே' ஆகி நாடும் குப்பையாகிக் கொண்டிருக்கிறது. ஆச்சா இப்போது அதற்கும் தட்டுப்பாடாகி விட்டது.

'எண்ணித்துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு 'வாழ்க்கையை வாழவேண்டியது கடமை. ஆனால் அதில் சேமிப்பு, கொள்வனவு, வசதி வாய்ப்புகள் என்பதெல்லாம் ஒரு அங்கமாக வைத்திருந்திருக்க வேண்டும். ஆனால் நாங்கள் அதாவது நாட்டு மக்களும் அரசும் கடனைப்பெருக்கி வசதிகளை ஏற்படுத்தி மாதாந்தம் வட்டிகட்டும் வாழ்க்கையைத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; சும்மா என்னத்துக்கு கவலை. 'அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி' அதை மாற்றிப்போடுவோம் 'குடிகள் எவ்வழி அரசனும் அவ்வழி'

# சரிந்தது அறிவு நிழல் பரப்பிய ஓர் ஆலமரம்

## பேராசிரியர் சோ. சந்திரசேகரத்தின் மறைவுக்கு மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் அஞ்சலி

1944. 13. 23 - 2022.04.04

கல்வியியல் துறையில் பேராசியராகவும் கொழும்பு பல்கலைக்கழக பீடாதிபதியாகவும் பதவிவகித்து ஓய்வு பெற்ற சோமசுந்தரம் சந்திரசேகரம் கல்வியியல் சார்ந்த சிந்தனைகளையும், உலகளாவிய கல்வி முறைகளின் அண்மைக்கால செல்நெறிகள் பற்றிய அறிவையும் வகுப்பறை மாணவர்களுடன் மட்டும் பகிர்ந்து கொள்ளாமல் சக ஆசிரியர்கள், கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் பெற்றோர்கள் மற்றும் கல்வியில் ஈடுபாடு கொண்ட பொது மக்களையும் வாசகர்களையும் இச்சிந்தனைகள் சென்றடைய வேண்டும் எனும் உயர்ந்த நோக்குடன் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களூடாகத் தனது கட்டுரைகள் அறிக்கைகள் உரைகள் மூலம் பரவலாக சமூகத்தின் பல்வேறு மட்டங்களையும் கல்வியின் பயன்கள் சென்றடைய உழைத்தமை அவருடைய பணிகளின் சிகரமாக அமைபவை.

கல்வியலை கற்பித்தல் கல்வியியல் அறிவை பரப்புதல் போன்ற வைகளுக்கு மப்பால் கல்வி மேம்பாடு தொடர்பாக நிறுவப்பட்ட பல்வேறு அரசாங்க ஆணைக்குழுக்கள், நிறுவனங்கள், ஆகியவற்றில் பணியாற்றி இலங்கையின் கல்விவளர்ச்சி தொடர்பான அறிவையும் அனுபவங்களையும் பெற்றுக் கொண்டவர்.

மலையகத்தின் ஊவாமாகாணத் தலைநகர் பதுளையில் 23/12/1944ல் பிறந்தவர் இவர்.

பதுளை ஊவா கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்று உயர் கல்வியை பேராதனை பல்கழகத்தில் பெற்றுக் கொண்டவர்.பல்கலைக்கழக பட்டதாரியான புதிதில் பேராதனை பல்கலைக்கழக கல்வியியல் போதனா ஆசிரியராகப் பதவி ஏற்றுக் கொண்டனர்.



மத்திய வங்கியின் மொழி பெயர்ப்பாளர், கல்லூரி ஆசிரியர், விரிவுரையாளர் எனப் பணியாற்றி ஜப்பானிய அரசின் பலமைப் பரிசில் பெற்று ஒசாக்கா அயல்மொழிப் பல்கலைக்கழகம், ஹிரோஷிமா பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பட்டம் பெற்று கொழும்பு பல்கலைக்கழக இணைப்பேராசிரியராகவும் பீடாதிபதியாகவும் உயர்பதவி வகித்தவர்.

கல்வியியல் சிந்தனைகளில் நிகரற்ற வளர்ச்சி பெற்ற சமூக ஊழியனாகத் தன்னை புடம் போட்டுக் கொண்ட முழுவள மனிதனான பேராசிரியர் சோ. சந்திரசேகரனின் திடீர் மறைவு கல்வித்துறைக்கு மட்டுமல்லாது முழு மனித சமூகத்துக்குமான ஒரு பேரிழப்பே ஆகும்.

தெளிவத்தை ஜோசப் ...

அவர் விட்டுச் சென்றுள்ள வெற்றிடம் இட்டு நிரம்புவதற்கரியது. காற்றைப் போல, ஒரு கவிதையைப் போல எழுத்தைப் போல், இலக்கியம் போல மானுடமெங்கனும் அவர் இல்லாத இடம் நுழையாத இடம் இல்லை என்று கூறுமளவுக்கு மனிதர் மத்தியில் வாழ்ந்தவர் அவர்.

எழுத்தும் கல்வியியல் சிந்தனைகளும் அவருடைய உயிர் மூச்சாக இயங்கியவை.

மலையக சமூகம் சார்ந்த கல்வியியலாளர்களில் மிகவும் தனித்துவமானவர். முக்கியத்துவம் கொண்டவர். பேராசிரியர் சோ. சந்திரசேகரம்.

மலையகத் தமிழரின் கல்வி நிலைமை பற்றி ஏராளமமான கட்டுரைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ள பேராசிரியர் இவ்விடயம் பற்றி வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றிலும் நிறையவே உரைகளாற்றியுள்ளார்.

மலையக மக்கள் பற்றியதும் கல்வியியல் பற்றியதுமான முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை தமிழிலும் ஆங்கிலத்துலுமாக வெளியிட்டுள்ள பேராசிரியரின் முதல் நூல் இலங்கை இந்தியர் வரலாறு (1989). ஒரு 30 ஆண்டு காலத்தின் பின் 2020ல் அவர் வெளியிட்ட (கடைசியாக வெளிவந்த) நூல் 'இலங்கை மலையகத் தமிழர்கள் நூல் விபரப் பட்டியல்' என்பது. மலையகம் தொடர்பான சமூக, பொருளாதார அரசியல் கண்ணோட்டங்களுடன் வெளியிடப்பட்ட நூல்களின் விபரங்கள் அடங்கிய நூல் இது. இலங்கையின் கல்வி வரலாற்றில் காற்று நுழையா இடங்களில் எல்லாம், தான் நுழைந்து மேற்கொண்ட தேடல்கள் மூலம் தன்னை ஒரு முழுவளர்ச்சி பெற்ற மனித நேயம் கொண்டவராக நிலை நிறுத்திக் கொண்டார்.

தன் சுயவரலாற்றை தானே எழுதிக்கொண்டிருந்த சூழலில் ஒரு கள்வனைப் போல் இருட்டுக்குள் வந்த மரணம் அவரை இழுத்துக் கொண்டு போய் விட்டது. பெரும் காற்றடித்து ஓய்ந்த இடம் போல் அமைதியாய்க் கிடக்கும் அவரைப் பார்க்கையில் நெஞ்சை அடைக்கிறது. அன்னாரின் அன்பு மனைவி சாந்தா, மகன் தயாளன் மகளான கவிதா, யசோ மற்றும் உறவினர்களுக்கு ஆறுதலையும் ஆற்றுப்படுத்தலையும் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

# சாதாரண தேமல் கூட ஆபத்தில் முடியலாம்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரிக்கும் தொழு நோயாளர்களின் எண்ணிக்கை



மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் 50 பேர் இந்நோய் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளனர். தொழு நோயினால் பாதுகாப்புக்குள்ளான சுகாதார வைத்திய பிரிவுகளாக ஆரையம்பதி, ஏறாவூர், செங்கலடி போன்ற பகுதிகளில் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தேசிய ரீதியாக கணிக்கும் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இத்தொற்றுநோயானது முதலாவது இடத்தில் காணப்படுகிறது. தொழுநோயானது சுவாச தொற்றின் மூலம் பரவும் ஒரு தொற்று நோயாகும். இத்தொற்றினால் பாதிக்கப்பட்டவரை இனங்காண்பதற்கு பல வருடங்கள் தேவைப்படுகிறது. பொதுவாக தொழுநோய் அடையாளங்களாக தோலில் உணர்வு அற்ற வெந்நிற படலங்கள், சிறு கட்டிகள் காணப்படுகிறது.



இந்நோயின் ஆரம்ப அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் உடனடியாக தோல் வைத்திய நிபுணரை அணுகி உடனடியாக சிகிச்சையை 6 மாதம் முதல்




ஒரு வருடத்தினுள் பெறுவதன் மூலம் 100 சதவீத பூரணசுகமடையலாம் என இந்நிகழ்வில் சுகாதார அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.



1983 இற்கு முற்பட்ட காலகட்டத்தில் இந்நோய்க்கான மருத்துவ வசதிகள் காணப்படவில்லை தற்போதைய காலகட்டத்தில் சர்வதேச தரத்திலான மருந்துகள் உலக சுகாதார ஸ்தாபனம் மூலம் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்நோய் தொடர்பான விழிப்புணர்வு இன்மையால் சிறுவர் முதல் பெரியவர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் முறையான சிகிச்சை பெறுவதான் மூலம் தம்மையும் தமது சமூகத்தையும் பாதுகாக்க வேண்டியது அவர்கள் கடமையாகும்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் தொழுநோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் தலைமையில் தொழுநோய் தடுப்பு இயக்கம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந், உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், வைத்தி அதிகாரிகளான, வே.குணராஜசேகரம், டான், பொது சுகாதார பரிசோதகர் வேணிதரன் அலைன்ஸ் டெவலோப்மன்ட் ட்ரஸ்ட் அரச மற்றும் சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் பங்கு கொண்ட செயலமர்வு ஒன்றும் புதன்கிழமை(27) இடம்பெற்றது.

**இலங்கையில் அதிகூடிய தொழுநோய் தாக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில்**

எந்தவொரு நீண்டகால தோல் வியாதி காணப்பட்டாலும் உடனடியாகவே அருகிலுள்ள வைத்திய சாலையிலோ அல்லது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலோ சென்று ஆலோசனை பெறுங்கள்.

சாதாரண தேமல் என்று நாம் நினைப்பது ஆபத்தில் முடியலாம். நாம் மட்டக்களப்பு மாவட்டம் பூராக தொழுநோய் தடுப்பு நடவடிக்கைகள் மிகத்தீவிரமாக முன்னெடுக்கவுள்ளோம். அது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று அண்மையில் எமது அலுவலகத்தில் நடைபெற்றது. கடந்த வருடம் (2021) இலங்கையில் 731 பேர் யானைக்கால் நோய்த் தொற்றுக்கு உள்ளாகினர், அதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 110 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வருடம் (2022) ஜனவரி மாதம் இலங்கை பூராகவும் 30 அடையாளம் காணப்பட்டனர்.

அதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 18 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். இது ஒரு பயங்கரமான நி லைமையாகவுள்ளது. இதனை மிகவும் அவதா னமாக கட்டுப்படுத்த வேண்டி இருக்கின் றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள், ஊடகவியலாளர்களுடனும் இணைந்து, தொழு நோய் தடுப்பு வாரம் பிரகடனப்படுத்தப்படவுள்ளது. 25 தொடக்கம் 50 ஆயிரம் பேர் வரையில் பரிசோதிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.சுகுணன் தெரிவிக்கின்றார்.

**தொழுநோய் என்றால் என்ன?**

மைக்ரோ பக்டீரியம் லெப்ரே என்ற பாக்டீரியாவால் உண்டாகும் ஒரு தொற்று நோயே தொழுநோய். மிகமெதுவாகப் பெருகுவதால் தொற்று ஏற்பட்டு 3 தொடக்கம் 5 வருடங்கள் கழித்தே இந்நோய் அறிகுறிகள் தோன்றுகின்றன. இந்த நோய் பொதுவாகத் தோல், நரம்பு விளிம்புகள், மேல் மூச்சு மண்டலம் உள்ளிட்ட பலவற்றேயே பாதிக்கின்றது.

**நோய் எவ்வாறு பரவுகிறது?**

தொழுநோயாளியின் உடலில் இருந்து நோய்க் கிருமிகள் பரவும் முக்கிய வழி சுவாச மண்டலமே. குறிப்பாக மூக்கு. சிகிச்சை பெறாதவர்களோடு தொடர்ந்து கொள்ளும் போது நோய்க்கிருமிகள் வாய் அல்லது மூக்கு வாழியாக சுவாச மண்டலத்துக்குள் நுழைகிறது. உடலுக்குள் நுழைந்த நுண்ணுயிரிகள் நரம்புகள் மற்றும் தோலை அடைகின்றன. ஆரம்பக் கட்டத்தில் கண்டறிந்து சிகிச்சை பெறாவிட்டால் நரம்புகளுக்கு மேலும் சிதைவு ஏற்பட்டு நிரந்தர ஊனம் உண்டாகலாம்.

தொழுநோய் சிகிச்சையால் குணப்படுத்தக் கூடியது. தொடர்ந்து சிகிச்சையை மேற்கொள்ளும் போது நோய் முற்றிலுமாகக் குணப்படுத்தப்பட்டு, ஊனங்கள் தவிர்க்கப்பட்டு, பரவலும் தடுக்கப்படுகிறது. ஆரம்பக்கட்ட நோயறிதல், தகுந்த சிகிச்சை மற்றும் முழுவேளை மருந்து தொழு நோயால் ஏற்படும் ஊனத்தைத் தடுக்கும். தொழுநோய் மரபுவழி நோயல்ல. இது பெற்றோரிடம் இருந்து பிள்ளைகளுக்குக் கடத்தப்படுவதில்லை. கைகுலுக்குதல், சேர்ந்து விளையாடுதல் அல்லது சேர்ந்து பணிபுரிதல் ஆகிய வழக்கமான நடவடிக்கைகள் மூலம் தொழுநோய் பரவுவதில்லை. சிகிச்சை பெறாத நபர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதால் பரவக் கூடும். தொழுநோய், பழைய பாவத்தாலோ கெட்ட நடத்தையாலோ ஏற்படுவதில்லை. மைக்கோபாக்டீரியம் என்ற ஒரு நுண்ணுயிரியால் ஏற்படுகிறது. என சுகாதாரத்துறை தெரிவிக்கின்றது.

எனவே மாட்டத்தில் எப்போதுமில்லாத வகையில் அதிகரித்துவரும் தொழுநோயைக் கட்டுப்படுத்த வேண்டியது துறைசார்ந்த வைத்திய மற்றும் நிருவாகத்துறையினரின் பாரிய பொறுப்பு மிக்க கடமையாக இருந்தாலும், அவர்கள் கூறும் அறிவுரைகளையும், நெறிமுறைகளையும், பின்பற்றிக் கைக்கொள்ள வேண்டியது பொதுமக்களின் தலையாய கடமையாகும். தன்னையும். தான் சார்ந்த சூழலையும், தற்கால நெருக்கடியாக காலத்திலும், பாரிய கொவிட் 19 இலிருந்து பாதுகாப்பது போன்று கொள்ளை நோயாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மெல்ல மெல்ல உருவெடுத்து தற்போது வியாபித்துள்ள இந்த தொழுநோயை முற்றாக நீக்குவதற்கு அனைவரும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்பதுவே பலரதும் எதிர்பார்ப்பாகும்.

வ.சக்திவேல் ...




# மேதினிக்கு ஓர் மேதினம்....!

ஷெல்லிதாசன்
திருகோணமலை

வருடந்தோறும்
வந்து போகிறது மே தினம்
எங்கும் வியாபித்து
ஊர்வலங்கள் பல
வளைந்து நெளிந்து போகின்றன
பலத்த கோஷங்களுடன்!

சம்பிரதாயங்களுக்கு
எல்லாமாகிப் போன
காலம் இதுவாக!

தினந்தினம் வரும்
தினங்களில் ஒன்றாக
மேதினமும் அதன்
உன்னதங்களை இழந்து ?

கொடி பிடித்து
கோஷங்கள் போட்டு
ஊர்வலங்கள்போய் தமது
உள்ளிருப்பை வெளிக்காட்டி
அலங்கார மேடைகளில்
உழைக்கும் வர்க்கத்துக்காய்
ஓங்கிக் குரல் கொடுப்பதுமான ஒரு

வேடிக்கை வினோத தினமாக
மே தினமானது வேதனையாய்!

உச்சி மலையில் உழைப்பவனும்
நித்தம் வியர்வை சிந்தி
பாடுபடும் பாட்டாளியும்
விவசாயியும்
முடிவுகாணா ஏழ்மையின் விளிம்பில்!

மாற்றம் ஒன்றே மாறாதது

இவர்களை ஏமாற்றும் வர்க்கத்தின்
நிலைப்பாடுகளோ
நூற்றாண்டுகள் பல கடந்தும்
மாறாத வழித்தடத்தில்
மிக்க இறுமாப்புகளுடன்....!


இதற்கோர் முற்றுப் புள்ளியாய்.....

சிக்காக்கோவில் சிவந்தெழுந்த
மே தினமே.......
மீண்டும் நீ முகங்காட்டு
மேதினியில் ஓர் விடியல்வர....!



# இதயத்திடம் கேள் உனக்கும் தானா ஈத்...

நுஸ்ரத் மஹ்ரூப்
மாதம்பை



இறைவிருந்தாளியாய்
இல்லம் வந்த
நோன்பு எனும் நான்
விடை பெறுகின்றேன்...
வெறுங் கையோடு
விடைபெறாமல்
ஈத் ஐ பரிசளிக்கின்றேன்...

ஆனால்...

அழியாத
அசிங்கங்கள்
இதயத்தின் இடுக்குகளில்
இன்னும் இருக்கின்றதா...
உனக்கு இல்லை ஈத்..

மறையோடு
மனம் லயித்து
மனம் மாறிடவில்லையா..
உனக்கு இல்லை ஈத்..

கால் கடுக்க
கத்ர் இரவுகளை
கண்ணியப்படுத்தவில்லையா..
உனக்கு இல்லை ஈத்..

அருள் மறையின்
அச்சமூட்டும் வசனங்களால்
அந்தக் கண்கள்
அழுதிடவில்லையா...
உனக்கு இல்லை ஈத்..

இறை வழியில்
இனியும் வாழ
இதயத்தில் இடமில்லையா..
உனக்கு இல்லை ஈத்...

மறை வழியில்
மனிதனாய் வாழ
மனமில்லையா..
உனக்கு இல்லை ஈத்..

உயிர் தந்த தாயை
உடனிருந்து கவனிக்க
உள்ளம் இடமளிக்கவில்லையா..
உனக்கு இல்லை ஈத்...

அரவணைத்து ஆளாக்கிய
அன்புத் தந்தையை
ஆரத்தழுவிட முடியல்லையா..
உனக்கு இல்லை ஈத்..

இரத்த உறவோடு
இணங்கி வாழ
இன்னும் தயாரில்லையா..
உனக்கு இல்லை ஈத்..

பல்லாயிரம்
பாவங்களுக்கு நீ
பிராயச்சித்தம் தேடிடவில்லையா..
உனக்கு இல்லை ஈத்...

பக்கத்தில்
பசித்த வயிறிருக்க
பகிர்ந்துண்ண
பாசம் வரவில்லையா..
உனக்கு இல்லை ஈத்...

இரவிரவாய்
இருகரமேந்தி
இருகண்களும் குளமாகி
இறை இன்பம் காணவில்லையா...
உனக்கு இல்லை ஈத்..

உன் புத்தாடை
உன் கையிலா...
உள் மனதிடம் கேட்டுப்பார்
இந்த ஈத் உனக்குரியதா...


உள் மனம் இல்லை என்றால்...

உன் போல் நஷ்டவாளி
யாருமில்லையே...

உள் மனம் ஆம் என்றால்...

உனக்குத்தான் இந்த ஈத்...
★ஈத் முபாரக்....★

# ஈத் முபாரக்!!




கவியரசி
எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா
பஸ்யால

மாதமொன்று நோன்பிருந்து மகிழ்ந்தே
ஏழைஎளியவர் பணக்காரர் பேதமின்றியே
கொண்டாடி மகிழ வந்தது வாழ்வில் வசந்தம் தந்தது
இறைவன் தந்த இப்பெருநாள்!
புத்தாடை அணிந்து மகிழ்ந்திட
தித்திக்கும் உணவுகள் பரிமாற
உள்ளமெல்லாம் பூவாய் மணக்க
தித்திக்கும் இன்பத் திருநாளாய்
இதயம் மணக்கும் இப்பெருநாள்!
வானில் புதுக் கீற்றாய்
புது மாதமாய் வளர்பிறையாய்
ஷவ்வாலின் தலைப் பிறையாய்
கீழ்வானில் புதுப் பொலிவாய்
வந்துதித்தது இப் பெருநாள்!
கொண்டாடுவோம் கொண்டாடுவோம் இனிதாக
இல்லமெங்கும் இன்பம் பொங்கிட
உறவுகள் யாவும் கூடிமகிழ
அகமெங்கும் சந்தோஷம் நிறைக்க
அருளாகக் கிடைத்தது இப்பெருநாள்!
ஈத் முபாரக்! ஈத் முபாரக்!!

# எனக்கு வேண்டும்

"ஏரூர்க்கவி" எச்.எம்.எம்.றசீம்
கிழக்குப்பல்கலைக்கழகம்

பொறாமை இல்லா உள்ளம் வேண்டும்
பொய்மை மொழியாத நாவும் வேண்டும்,
ஏழ்மை இல்லாத நிலையும் வேண்டும்
எளிமை விலகாத வாழ்வும் வேண்டும்

இன்னல் குறைவில் இன்பமும் வேண்டும்
இன்னும் எழிலில் எண்ணமும் வேண்டும்,
உண்ணும் உணவில் உழைப்பும் வேண்டும்
உன்னத வளர்ச்சியில் முயற்சியும் வேண்டும்

பார்க்கும் பார்வையில் பணிவும் வேண்டும்
பார்ப்பவர் மெச்சும் பண்பும் வேண்டும்,
பட்சிகள், விலங்கில் கருணையும் வேண்டும்
பலன் தரும் அறமும் வேண்டும்

உறவுகளை மதிக்கும் தன்மையும் வேண்டும்
உயிர் காக்கும் நன்மையும் வேண்டும்,
கோபம் குறைக்கும் குணமும் வேண்டும்
குறைவிலாது களிக்கும் மனிதமும் வேண்டும்

பாவம் தடுக்கும் பக்குவமும் வேண்டும்
பரம் பொருளும் துணையென வேண்டும்,
சுற்றம் சூழும் உறவும் வேண்டும்
சுகதேகம் பெறவும் இறையும் வேண்டும்

மனிதம் கொள்ளும் மனமும் வேண்டும்
மதியைத் துலக்கும் ஆற்றலும் வேண்டும்,
புனிதம் செய்யும் பணியும் வேண்டும்
புதியவை கடக்கும் பொறுமையும் வேண்டும்

# பெருநாளின் பெரு மகிழ்வுடன்..

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

ஆண்டுக்கொரு முறை
உன் வரவு
அதற்காய் தொடருது
எம் காத்திருப்பு

தராவீஹ் தொழுகையும்
இஃப்தார் நேரமும்
நோன்புக் கஞ்சியும்
நொடிக்கு நொடியான
பிரார்த்தனைகளும்
எமை நனைத்த
சுக அனுபவங்கள்
ஏராளம் ஏராளம்

தலை தாழ்த்திய
தஹஜ்ஜத் நேரங்களும்
விழி கலங்கிய
ஒவ்வோர் பொழுதுகளும்
தூக்கம் கலைந்த
ஒற்றை இரவுகளும்
விடியலைத் தாண்டி ஒலித்த
இறை வசனங்களும்
இறையோனை நோக்கிய
இரு கரங்களும்

எல்லாமே
முப்பது நாளுடன்
முற்றுப் பெற்றன

முன்னூறு நாட்களாகினும்
அதில் நனைய
நாம் தயார்

அத்தனையும் சுமந்த
ஒரு நன்நாள் இன்று
அதுவே எம்
நோன்புப் பெருநாள்

புத்தாடை புதுக்கோலமிட
சந்தோஷங்கள் சங்கமிக்க
புன்னகை பூத்துக் குலுங்க
வகையான உணவுகள்
வட்ட மேசையை வட்டமிட
அணியாய் இணைவோம்
பெருநாள் தொழுகையதில்
பெரும் குதூகலமாய்..

வருடம் ஒரு முறை வந்தாலும்
வசந்தம் பொழியும்



இந் நன்நாளில்
பெரும் பொன்நாளில்
அனைவர் வாழ்வும்
உன்னத மாற்றத்துடன்
உருவெடுக்க
இரு கரம் ஏந்துகிறேன்
இறையோன் அவனிடம்...

பெருநாளின் பெரு மகிழ்வுடன்..

# வலிகளின் வடிவான மடல்

பொத்துவில் அஜ்மல்கான்

வலிகளால் வரையப்பட்ட
வாழ்க்கையில் விழிகளை
தொலைத்தபடி தவிக்கும்
கருப்பன் நான்

வஞ்சகமான மானிடர்களுடன்
கொஞ்சமாவது வாழ்ந்திட
வேண்டும் என
துடித்து திரிகிறது
இந்த இதயம்

அரக்கன் ஓங்கியதால்
இரக்கம் மாய்ந்து
போனதாம் என்று
கடந்து போகின்றனர்
உறவுகள் என
கூறிக் கொண்டு

இன்பமான வாழ்க்கையில்
சொற்பமான வலிகள்
என நினைத்து
கற்பனையான உறவுகளைத்
தேடி அழைந்து
என்ன பயன்

இங்கு வழிகளை
விட வலிகளுக்கே
அதிக வரவேற்பு
உண்டு என்பதை
பலர் அ(பு)றிந்தும்
உள்ளனர் இன்று

இருந்தும்!
வாழ்ந்திட வேண்டும்
என்று துடித்தபடி
இருக்கிறது இந்த
இதயம்

# மதம் கொண்ட யானை



ரதிதேவி, மானிப்பாய்

உள்ளம் மோதி உடையும் உன்னில்
வெள்ளம் ஆகிப் பாயும் கண்ணீர்
கள்ளம் கபடம் அற்று
மனம் வெற்று வெளியாகும்
உண்மை உணர்ந்து
கள்ளுக் களி கொள்ளும்

மதம் கொண்ட யானையாய்
நெஞ்சை மிதித்தனன் பார்வையில்
உண்மை உரைத்தனன் இடியென
வெண்மை தரித்தனன் முகிலென

குளிர்மலை மீதினில்
எளிமை உடைதனில்
இளம் மயில் பார்வதி
பாதம் பிடித்திட
படைகள் வணங்கிட
முருகனும் கணபதியும்
தோள் மேல் ஏறி விளையாட
அலைமகள் சீறிட
கூர்பிறை ஒளி வீசிட
கண்ணைக் கூசிட
என் கண்முன்னே தோன்றிய
எம்பிரான் போற்றி

# நானாக வாழ்கின்றேன்



இணுவில் வாகீசன்

நீங்கள் என்னைப்பற்றி
ஏதாவது நினைக்கலாம்
என்பதற்காகவும்
நீங்கள் கேட்கும் போதெல்லாம்
உங்களுக்கு
உதவவேண்டும் என்ற
உங்கள் நினைப்பிற்காகவும்
உங்கள் மனநிலை
மாற்றங்களின் போதெல்லாம்
நானும் மாறவேண்டும்
என்ற உங்கள்
விருப்பிற்காகவும்
உங்கள் தேவைகளின் போது
நானாக உதவவேண்டும்
என்ற உங்கள்
எண்ணத்திற்காகவும்
உங்கள் விரோதிகள்
எனக்கும் விரோதியாக வேண்டும்
என்ற உங்கள் விருப்பிற்காகவும்
என்னை மாற்றிக்கொள்ள
முடியாது
நான் நானாகவே
வாழ விரும்புகின்றேன்

# சிறந்த மனது

மஜினா உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி



உள்ளத்தில் அன்பைக் கொண்டவர்கள்
பிறர் கண்களுக்கு என்றும் அழகானவர்கள்
பிறருக்கேதேனுமென்றால் துடித்துப் போவார்கள்
பிறருக்கு தேவை ஏற்படின் கொடுத்துச் செல்வார்கள்
பிறருக்காகவே தன்னை அர்ப்பணிப்பார்கள்
பிறருக்காகவே தன் வாழ்வின்
பாதியை தியாகம் செய்வார்கள்

தனக்குத் துயரமென்றாலும்
அதைக் கவனிக்காமல் தூரப்படுத்திவிட்டு
பிறர் துயர் துடைக்க துடிப்பார்கள்
தன் வலிகளை மறைத்து பிறர் வாழ்க்கைமேம்பட
அன்பால் அரவணைப்பார்கள்
பிறர் குறைகளை செவிமடுத்து
நிவர்த்தி செய்ய நித்தமும் போராடுவார்கள்

உள்ளத்தில் அன்பு கொண்டோர்
பிறருக்கும் அதையே அள்ளித் தருவார்கள்
உள்ளத்தில் அன்பைக் கொண்டோர்
பிறர் கண்களுக்கு என்றும் அழகானவர்கள் தான்
ஆனால்
அன்பை ஏனையோருக்கு கொடுத்து விட்டு மகிழ்ந்து
சிறு அன்புக்காக ஏங்குபவர்களும் அவர்கள்தான்
நமக்காக அன்பை வழங்கும் உள்ளங்களுக்கு
அன்பையே பரிசாய் கொடுப்பதல்லவா சிறந்த மனது....

# இளைஞர் படையணி விரைவு எதைச் சொல்ல விழைகிறது?

**சுஐப் எம். காசிம்**

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டம் அமர்வதாகவும் இல்லை, அரசாங்கம் அடங்குவதாகவும் இல்லை. பொதுமக்கள் எதிர்ப்புக்களை பொருட்படுத்தாமல் இருப்பது, பொறுப்புள்ள அரசாங்கத்தின் பண்பாடும் இல்லை. இந்த லட்சணத்தில் இன்னும் சில நாட்கள் நீண்டால் நிலைமைகள் கை மீறிப்போகலாம். இரண்டு வகையில், இந்த கை மீறல்கள் இருக்கும். ஒன்று அரசாங்கம் பொறுமையிழப்பது, மற்றது நிர்வாகம் சீரலைவது. சரியாகக் கணக்கிட்டால் இந்த இரண்டும் மக்களுக்குத்தான் அதிக பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, மக்களாகிய நம்



மிடம் பொறுமையும் பொறுப்பும் பிரதானமாக இருக்க வேண்டும்.

இயலுமான வரை, அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்திருக்கிறது காலிமுகக் கோஷங்கள். இதனால்தான், அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கும் அழைத்திருக்கிறது. எனவே, பேச்சுக்களில் கலந்து கொண்டவாறு நமது நாட்டுப் பொருளாதாரத்தை உயர்த்த வழிமுறைகளை விதிப்பதுதான் இப்போதைக்குள்ள வழி.

ஏனெனில், இந்த நிலைமைகள் ஏற்பட்ட நாட்களிலிருந்து வேறு எந்த அரசியல் நகர்வுகளும் வெற்றியளிப்பதாகவும் இல்லை. இளைஞர்கள் இந்த அரசாங்கத்தை வீட்டுக்குப் போகுமாறு சொல்கின்றனர். இந்நிலையிலுங் கூட, உள்ள ஆட்சிக் காலத்தை துணிந்து பொறுப்பெடுக்க எவரும் வருவதாக இல்லை. ஒரு வகையில், இதுவும் மக்களின் அபிலாஷைகளை அலட்சியம் செய்வது மாதிரித்தான்.

ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி,ஜே.வி.பி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்று பலதும் எதிரணியில் உள்ளன. இருந்துமென்ன, ஒன்றாக இருந்தாலும் இவர்கள் ஒன்றுபடவில்லை. அரசியலுக்கான தனித்தனி அஜந்தாக்களே இவர்களை ஒரே அணியில் பிரித்து வைத்திருக்கிறது. இந்த இளைஞர் சக்தி இதைப் புரிவது அவசியம். நன்கு விடயம் தெரிந்தவர்களாக இருப்பதால்தான், நாளாந்தம் இவர்களின் செல்வாக்குகள் உயர்ந்து செல்கிறன. ஆகவே, இந்தச் செல்வாக்கைப் பிரயோகிக்கும் பொறுப்பிலிருந்து நமது இளைஞர்கள் பின்வாங்கக் கூடாது.

எவரும் முன்வராத நிலையில் அரசாங்கத்தை விட்டெறிந்துவிட்டுப் போவது எப்படி? இதுதான் இன்றெழும் கேள்வி. சில வேளைகளில், 225 எம்.பிக்களையும் பதவி துறக்கும்படி இப்படையணி கோருகிறது. இவ்வாறு கோருவதும் பொருத்தமின்றியே போகிறது. நாட்டின் மொத்த வருமானத்தில், சுற்றுலாத்துறை, ஏற்றுமதித் துறை, சேவைத்துறை வெளிநாட்டு நன்கொடைகள், வெளிநாடுகளில் தொழிலாற்றும் நம்மவர் அனுப்புகின்றவை, கடன்பெறுகைகள் மற்றும் வெளிநாட்டு இருப்புக்கள்தான் பிரதானமானவை. இந்தத் துறைகளுக்குள் அரசியல் அதிகாரங்கள் கையாடியதால் வந்தவைதான் இந்த வீழ்ச்சிகள். இதிலிருந்து மீண்டு, எதிர்கால சந்ததிகளைப் பாதுகாக்குமாறே எமது இளைஞர்கள் வேண்டுகின்றனர்.

ஆட்சியை யார் பொறுப்பெடுத்தாலும், இந்நெருக்கடிகள் இன்னும் சில காலங்களுக்கு நீடிக்கும் என்கிறார் ரணில் விக்கிரமசிங்க. இதற்காகத்தான், பொறுப்பெடுக்க சிலர் பின்னடிக்கின்றனரோ தெரியாது. எனவே, இந்த இழுபறிகள் நம்மையே சீரழிக்கப்போகின்றன. இதனால்தான் சொல்கிறோம், நாட்டின் மிகப்பெரிய சக்தியாக அடையாளப்பட்டுள்ள இளைஞர்கள், அரசுடன் பேசப்பொருத்தமான தருணமே இது. இருப்பவர்களால் வந்த வினையை, இன்னொருவர் வந்து தீர்க்க இயலாது. எனவே, இருக்கும் காலத்தை அவகாசமாக வழங்கி, நெருக்கடிகளை நீக்குவது பற்றியே இளைஞர் படையணி பேசுவது சிறந்தது.



இருபது நாட்கள் கடந்தும் இருப்பவர்கள் போகவுமில்லை, இன்னொருவர் வருவதற்கான 113 பலம் காட்டப்படவுமில்லையே!

வயிற்றுப்பசிக்கான போராட்டத்தை வாழ்நாள் முழுவதுமா இழுத்துச் செல்வது? இப்போது எழும் கேள்விகளே இவை. உருப்படியான ஒரு பொருளாதாரத் திட்டத்தை எவரும் முன்வைக்காததால், அரசியல் சாயம் பூசப்படும் ஆபத்துக்கள் ஏற்படுவதற்கு முன்னர், நமது இளைஞர்கள் பேச்சுவார்த்தை மேசையை நோக்கி நகர வேண்டும்.

விமான, கப்பல் சேவைகளால் கிடைக்கும் அந்நியச்செலாவணிகள் வீழ்சியடைந்ததேன்? பாரம்பரிய ஏற்றுமதித்துறை வருமானத்துக்கு நடந்ததென்ன? சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க இன்னும் சிறந்த திட்டங்கள் இருக்கிறதா? வெளிநாடுகளின் நன்கொடைகளை மேலும் பெறுவதற்கு உள்ள வழிகளென்ன? படுகடன்களிலிருந்து இப்போது மீள முடியாது. ஆனாலும், இக்கடனை இனியும் பெறாமலிருப்பது எப்படி?இவற்றுக்கு தீர்வுடன், வருவோருடன்தான் இந்த இளைஞர்கள் படையணி பேச வேண்டும்.




# சிரமதசையை எதிர்கொண்டிருக்கும் நுவரெலியா மரக்கறி விவசாயிகள்

**நூரளையூரான்**

கடந்த காலத்தில் நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு வியாபாரி நாளொன்றுக்கு 3000 கிலோ முதல் 5000 கிலோ மரக்கறி மற்றும் உருளைக்கிழங்கு வகைகளை விற்பனை செய்துவந்தனர். இன்று 200 கிலோ மரக்கறிகளை கூட விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலைய வியாபாரிகள் தான் இப்படிச் சொல்கிறார்கள்.

டீசல் தட்டுப்பாட்டால் வெளிமாவட்டத்திலுள்ள வியாபாரிகள் மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு வருவது மிகவும் குறைந்து விட்டது. இதனால் மரக்கறி விலைகள் வீழ்ச்சி அடைந்துள்ளன. இதேவேளை மரக்கறி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளும் உற்பத்தி செய்த மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாமல் திண்டாடுகின்றனர்.





அத்தோடு மரக்கறி தோட்டங்களிலும் மரக்கறி வியாபாரிகளிடம் தொழிபுரியும் தொழிலாளர்களும் தொழில் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். மேலும் கடந்த காலத்தில் 1500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு மூட்டை இரசாயன உரம் தற்பொழுது 25000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது உரத்துக்கு இவ்வளவு பெரிய தொகை செலவிட்டு பயிர்களைப் பராமரித்து அவற்றை விற்பனை செய்ய முடியாது தவிக்கின்றனர்.

யூரியா ஒரு மூட்டை 35000 ரூபாவிற்கு விற்கப்படுகின்றது. ஆனாலும் அந்த விலைக்கும் யூரியா வெளிச் சந்தையில் கிடைப்பதில்லை. மேலும் உருளைக் கிழங்கு மற்றும் மரக்கறி உற்பத்திக்கு கடந்த காலத்தை விட தற்பொழுது செலவு அதிகம். செலவிற்கேற்ப வருமானம் கிடைப்பதில்லை. இது இவ்வாறிருக்க தற்பொழுது இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள எரிப்பொருள் தட்டுபாடு மற்றும் சமையல் எரிவாயு நெருக்கடி காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்களும் மரக்கறி வியாபாரிகளும் 60 வீத வருமான வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த வருடம் இரசாயன உரமும் கிருமிநாசினிகளும் தடை செய்யப்பட்டதால் மரக்கறி உற்பத்தியில் பாரிய பாதிப்பு ஏற்பட்டது. அதனை தொடர்ந்து டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் பாதிக்கப்பட்டார்கள். தற்பொழுது சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாகவும் மரக்கறி உற்பத்தியாளர்களும் மரக்கறி வர்த்தகர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக பல இடங்களில் உணவகங்களிலும் சுற்றுலா விடுதிகளிலும் உணவு மற்றும் தேனீர் வழங்க முடியாமல் உணவங்களும் ஹோட்டல்களும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இதனால் சந்தைக்கு காய்கறிகளை கொள்வனவு செய்வதற்கு ஹோட்டல்காரர்கள் வருவதில்லை. மரக்கறி உற்பத்தி செலவு அதிகரிப்புக்கும் அதன் விற்கும் விலைக்கும் இடையே பெரிய வித்தியாசம் காணப்படுகிறது. மரக்கறியை நல்ல விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் மரக்கறி உற்பத்தியாளர்கள் நட்டமடைகின்றார்கள்.

மரக்கறி உற்பத்தி என்றால் என்றைக்குமே அது நுவரெலியாதான், பிற மாவட்டங்களில் மரக்கறிச் செய்கை அறுபதுகளின் பின்னரேயே ஏற்பட்டது. நுவரெலியாவுக்கு உரிய மரக்கறிகள் வேறு மாகாணங்களிலும் பயிரிடப்பட்டு வந்தாலும் இன்றைக்கும் நுவரெலியா மரக்கறி என்றால் ஒரு விஷேசம்தான். மரக்கறி செய்கையையும் சுற்றுலாவையும் விட்டால் நுவரெலிய மக்களுக்கு வேறு வாழ்க்கை இல்லை. நுவரெலியாவின் வாழ்க்கை வட்டம், பெருந்தோட்டம், சுற்றுலா, மரக்கறி என்ற மூன்றை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளது.

எழுபதுகளின் ஆரம்பத்தில் நுவரெலியாவில் Vegetabale boom எனச் சொல்லப்படும் விவசாய புரட்சி ஏற்பட்டது. வெளியாட்கள் நுவரெலியாவில் காணி வாங்கி உருளைக்கிழங்கு விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கினர். காணி விலையும் பல்மடங்காக அதிகரித்தது.

ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கும் நிலை இம்மாவட்ட விவசாயிகள் முன் எனப்பொழுதும் எதிர்கொள்ளாதது. கிழங்கோ, மரக்கறிகளோ அவற்றை பெரிய அளவில் உற்பத்தி செய்பவர்கள் ஒரு புறமிருக்க, தோட்டங்களிலும், வீடுகளும் சிறிய அளவில் மேலதிக வருமானமாக மரக்கறிகளை பயிரிடுவோர் மறுபுறம் என இருதரப்பினரும் கூடவே அதை சார்ந்து இருப்பவர்களையும் இன்றைய சூழல் மிகக் கடுமையாக பாதித்துள்ளது. அடுத்ததாக என்ன செய்வது என்ற நிலையில் அங்கலாய்த்து நிற்கின்றனர்.

மரக்கறிகளுக்கு போதிய விலை இல்லை என்பதால் தோட்டங்களிலேயே விட்டு வைக்க முடியாது. போஞ்சி, அவரை, கோஸ் என்பன முற்றி அழுகி விடும். கிழங்குகள் வெடித்து அழுக தொடங்கும். எனவே அவை பறிக்கப்பட்டாக வேண்டும். பொருளாதார மத்திய நிலையத்துக்கு கொண்டுவந்தால் வாங்குவதற்கு ஆள் இல்லை. அப்படியே வாங்க வரும் மொத்த வியாபாரிகளும் அடிமட்டவிலைக்கே வாங்குகின்றனர். டீசல் பற்றாக்குறை என்பதால் போக்குவரத்திலும் தாமதநிலை உள்ளது. பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறி மூட்டைகள் தேங்குமானால் அவை அழுகத் தொடங்கும். வாங்க வருபவர்கள் அடிமட்ட விலைக்குத்தான் அவற்றை கேட்பார்கள்.

இந்த விஷ வட்டம் எவ்வளவு பாதிப்பை விவசாயிகள் முதல் கொள்வனவு செய்யும் பாவனையாளர்கள் வரை பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை வாசகர்கள் இப்போது புரிந்துகொண்டிருப்பார்கள் என்று கருதுகிறோம்.

## சர்வகட்சி அரசை அமைப்பதே... *(06ஆம் பக்கத் தொடர்)*

பிரதமர் த லைமையில் நடைபெற்ற சந்தி ப்பில் அவர் மீதான நம்பிக்கையை 107 உறுப்பினர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற சந்திப்பில் அரசாங்கத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் நிதி அமைச்சர் அலி சப்ரி நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்து விளக்கமளித்ததுடன், எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர நாட்டின் மின் உற்பத்தி மற்றும் எரிபொருள் தேவைகள் குறித்த பிந்திய நிலைமைகளை அரசாங்கத்தின் உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறியிருந்தார். அத்துடன், எரிவாயுத்துறை அமைச்சர் ஷெஹான் சேமசிங்ஹ எரிவாயு நிலைமைகள் குறித்து விளக்கமளித்துள்ளார்.

அதேநேரம், கடந்த வியாழக்கிழமை சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலும் எரிசக்தி மற்றும் மின்சாரத்துறை, எரிவாயுத்துறை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் கட்சித் தலைவர்களுக்கு நிலைமைகளை விளக்கிக் கூறியிருந்தனர்.

பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியுள்ள சூழ்நிலையில், எதிர்வரும் இரண்டு மாதங்களில் சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டியது கட்டாயமாகும்.

அரசியல் மாற்றமொன்றைக் கோரி காலிமுகத்திடலிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வரும் நிலையில், மக்களின் நிலைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியமானது என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அரசியல்வாதிகள் பலரும் வலியுறுத்தியுள்ளனர்.

இருந்தபோதும் எதிர்க்கட்சி தரப்பிலிருந்து ஒத்துழைப்பதற்கான சாதக சமிக்ஞைகள் எதுவும் தென்படவில்லை. அரசியலமைப்பு ரீதியான திருத்தம் பற்றியும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது பற்றியும் அவர்கள் பேசிக் கொண்டிருக்கின்ற போதும், நடைமுறைச் சாத்தியமான யோசனைகள் எதனையும் முன்வைக்கவில்லை.

அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டியது காலத்தின் தேவை என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இருந்தபோதும் நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள அன்றாடப் பிரச்சினைக்குத் தீர்வு காண விரைந்து செயற்பட வேண்டிய கடப்பாடு ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குக் காணப்படுகிறது.

நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் வீதியில் இறங்கிப் போராடினாலும் பாராளுமன்றத்தின் ஊடாகவே தற்போதைய பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வொன்றை வழங்க முடியும். எனவே, மக்கள் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரும் வினைத்திறன் மிக்க தீர்வொன்றைத் தேட வேண்டும். அரசியல் ரீதியாகத் தமக்கிடையில் காணப்படும் விருப்புவெறுப்புகள் மற்றும் குறுகிய அரசியல் இலாபங்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு மக்களை அன்றாடப் பிரச்சினையிலிருந்து மீட்பதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். அரசாங்கமும் தனிப்பட்ட நபர்கள் பற்றிய சிந்தனைகளைக் கைவிட்டு ஒட்டுமொத்த நாட்டு மக்களின் நலன் குறித்து அக்கறையுடன் முடிவுகளை எடுக்க வேண்டும்.

இதுவே மக்களின் எண்ணமாக இருக்கின்றது.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

## குத்தகை அடிப்படையில் கட்டிடங்களை பெற்றுக் கொள்ளுதல்

**கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் வங்கியின் கிளை அலுவலகங்களை நடாத்திச் செல்வதற்கு பின்வரும் வசதிகளுடனான கட்டிடங்கள் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ள தேவைப்படுகின்றது.**

- குத்தகை காலம் 5- 10 வருடங்கள் வரை.
- பிரதான வீதிக்கு முகப்பினை கொண்டதாகவும் நகர எல்லைக்குள் அமைந்திருக்க வேண்டும் என்பதுடன் கிளைகளுக்கு தரைத் தளமாக இருக்க வேண்டும்.
- மாகாண அலுவலகங்களுக்கு 3000 -4000 சதுர அடிகள், மாவட்ட அலுவலகத்திற்கு 2500 -3000 சதுர அடிகள் மற்றும் கிளைகளுக்கு 2000 -2750 சதுர அடி இடவசதி இருக்கவேண்டும்.
- ஆகக்குறைந்தது முன்புறம் 4 வாகனங்கள் நிறுத்தக் கூடிய தரிப்பிட வசதி முன்புற தரை Interlock கற்கள் பதித்து அல்லது வேறு வகையில் மனம் கவரும் வகையில் இருக்க வேண்டும்.
- அடிப்படை தேவையான நீர் வசதி மற்றும் 2000 லீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட கொள்ளளவு உள்ள தண்ணீர் தாங்கி இருக்க வேண்டும். மூன்று கட்ட மின்சாரம் (Three Phase) வசதி (60 AMP) LED மின்குமிழ் பொருத்தப்பட்டுள்ளமை, ஆண், பெண் இருபாலரும் தனித்தனியாக பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி, மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கான 10 x10 அளவிலான காற்றோட்ட வசதியுடனான அறை (கட்டிடத்திற்கு வெளியில்), பின்புறத்தில் அவசர வெளியேற்ற கதவு (Emergency Exit) மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள்.
- கட்டிட உரிமையாளர் வசம் 20-25 KVA மின்பிறப்பாக்கி இயந்திரம் மூலம் மின்சாரம் பெற்றுக் கொள்ளும் வசதி இருப்பின் அக்கட்டிடங்களுக்கு தீவிர முன்னுரிமை வழங்கப்படும்.
- கட்டிடத்தின் உட்புறம் மற்றும் வெளிப்புறம் வெள்ளை வர்ணம் பூசப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் நிலம் தரையோடு பதிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- கட்டிடத்தின் முகப்பின் அகலம் 25 அடிகள் அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும் என்பதுடன் முன்புறம் பதப்படுத்திய கண்ணாடி (Tempered Glass) பொருத்தப்பட்டு (Center Lock சகிதம்) மனம் கவரும் வகையில் நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- விஷேட தேவைப்பாடுகள் உள்ள நபர்கள் சக்கர நாற்காலியில் இலகுவாக பிரவேசிக்கக் கூடிய பாதை (RAMP) கட்டாயம் இருக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| **தென் மாகாணம்**<br>ப(ட்)டபொல<br>கராப்பிட்டிய<br>ஹிக்கடுவ<br>தெய்யந்தர<br>வெலிகம<br>தெனியாய<br>இமதுவ<br>வீரகெட்டிய<br>ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம்<br><br>**வடமேல் மாகாணம்**<br>வென்னப்புவ<br>மெல்சிரிபுர<br>நவகத்தேகம<br>பெரகும்புர<br>புத்தளம் மாவட்ட அலுவலகம்<br>குளியாப்பிட்டிய<br><br>**வடக்கு மற்றும் வடமத்திய மாகாணம்**<br>மன்னார்<br>போகஸ்வெவ<br>அரலகங்வில<br>யாழ்ப்பாணம்.<br>சுன்னாகம்.<br>கிளிநொச்சி<br>செவனப்பிட்டிய | **ஊவா மாகாணம்**<br>தியதலாவ<br>பிபிலை<br>சியம்பலாண்டுவ<br>பண்டாரவளை<br>வெலிமட<br>ஊவா மாளிகாதென்ன<br>புத்தள<br>வெல்லவாய<br>மடுல்ல<br><br>**மேல் மாகாணம்**<br>பாணந்துறை<br>ஹொரண<br>மொரகஹாஹேன<br>மீரிகம<br>நீர்கொழும்பு<br>வலகெதர<br>மில்லனிய<br>களுத்துறை மாவட்ட அலுவலகம்<br>நிட்டம்புவ<br>களனி | **கிழக்கு மாகாணம்**<br>கந்தளாய்<br>களுவாஞ்சிக்குடி<br>மூதூர்<br>மஹா ஓயா<br>நிந்தவூர்<br>காத்தான்குடி<br>கொக்கட்டிச்சோலை<br><br>**மத்திய மாகாணம்**<br>கண்டி மாகாண அலுவலகம்<br>கண்டி மாவட்ட அலுவலகம்<br>கண்டி இரண்டாம் நகர கிளை - முல்கம்பொல<br>செங்கடகல<br>உடவெல<br>வத்தேகம<br>உடுதும்பர<br>தவுலகள<br>நாவலப்பிட்டி<br><br>**சப்ரகமுவ மாகாணம்**<br>பெல்மடுல்ல<br>இரத்தினபுரி கிளை<br>இரத்தினபுரி மாவட்ட அலுவலகம்<br>கஹவத்த<br>யட்டியந்தொட்ட |

நீங்களும் மேற்படி வசதிகளைக் கொண்ட கட்டிட உரிமையாளர் எனின் கட்டிட அமைவிடம், கட்டிட திட்டம், காணி வரைபடம், அண்மையில் காணி பதிவு அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொண்ட காணி பதிவு சான்றிதழ் மற்றும் உரிமை மாற்று அறிக்கை ஆகியவற்றின் பிரதிகளுடன், எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையை குறிப்பிட்டு **பிரதி பொது முகாமையாளர், செயற்பாடுகள் மற்றும் வங்கி துணைச் சேவைகள், பிரதேச அபிவிருத்தி வங்கி, தலைமை அலுவலகம் இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி** எனும் முகவரிக்கு 14 நாட்களுக்குள் உங்களது விண்ணப்பப்படிவங்களை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தாங்கி வரும் உறையின் இடது பக்க மேல்மூலையில் **"கட்டிடங்களை குத்தகை அடிப்படையில் பெறுதல் 2022"** என குறிப்பிட வேண்டும்.

**பிரதி பொது முகாமையாளர் - செயற்பாடுகள் மற்றும் வங்கி துணைச் சேவைகள்,**
**பிரதேச அபிவிருத்தி வங்கி,**
**தலைமை அலுவலகம்,**
**இல. 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி**
**2022.05.01**



# வாரபலன்

01.05.2022 - 07.05.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

ரிஷப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் தன ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் தேவைக்கேற்ற தன வரவு வந்து கொண்டே இருக்கும். உத்தியோக ஸ்தானத்தை குரு பார்ப்பதால் உத்தியோகத்தில் வெற்றி கிடைக்கும். உங்கள் திறமைக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும். இழந்த சலுகைகளை மீண்டும் பெறுவீர்கள். புதிய வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு மீண்டும் அழைப்புக்கள் வரலாம். இல்லத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

## ரிஷபம்

ரிஷப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். தன ஸ்தானம் மற்றும் பூர்வபுண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியான அவர் உங்கள் ராசியிலே சஞ்சரிப்பது மிகுந்த யோகம்தான். தன வரவு தாராளமாக வந்து சேரும். குடும்பத்தில் சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். தொழில் வளர்சி திருப்தி தரும். பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் அகலும். பூர்வபுண்ணிய ஸ்தானத்தில் குருவின் பார்வை பதிவதால் பிள்ளைகளின் மேற்படிப்பு, வேலை வாய்ப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர்.

## மிதுனம்

ரிஷப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிநாதன் விரய ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது விரயங்கள் கூடும். ஏதேனும் ஒரு மாற்றம் வரக்கூடிய வாய்ப்பு உண்டு. உத்தியேகத்தில் பொறுப்பு கூடும். வேலைப்பளு அதிகரிக்கும். சுயதொழில் தொடங்கும் முயற்சியிலும் சிலர் ஆர்வம் காட்டுவர். 4ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால் தங்களுக்கோ தங்கள் குடும்பத்தை சார்ந்தவர்களுக்கோ மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். புதிய வாகனம் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

## கடகம்

ரிஷப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். சகாய ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான புதன் லாப ஸ்தானத்திற்கு வருவதால் விரயத்திற்கேற்ற வருமானம் வந்துகொண்டே இருக்கும். இந்த கால கட்டத்தில் எந்த புதிய முயற்சியையும் மேற்கொள்ளலாம். எனவே பொருளாதாரத்தை பொறுத்தவரை கவலைப்பட வேண்டியதில்லை. குடும்பத்தில் ஒருவர் மட்டுமின்றி மற்றும் ஒருவருக்கும் வேலை கிடைத்து உதிரி வருமானம் வந்து சேரும். பணி புரியும் இடத்தில் மறுக்கப்பட்ட சலுகைகள் கிடைக்கும்.

## சிம்மம்

உங்கள் ராசிக்கு 10ஆம் இடமான ரிஷப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். தன லாபாதிபதியான புதன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் ஒரு அற்புதமான நேரமாகும்.தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். தடைக்கற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும். வெளிநாட்டில் பணிபுரியும் நண்பர்கள் உங்களுக்கு உதவிக்கரமாக இருப்பர்.கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் உயர் பதவிகள் கிடைக்கும்.

## கன்னி

ரிஷப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 9ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் உங்கள் ராசிநாதன் புதன் சஞ்சரிப்பது யோகம்தான். தொழிலில் எதிர்பார்த்ததை காட்டிலும் கூடுதல் லாபம் கிடைக்கும்.நண்பர்களின் ஒத்துழைப்போடு சில நல்ல காரியங்களை முடித்துக்கொள்வீர்கள். மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். பணி நிரந்தரம் பற்றிய நல்ல தகவல் வந்து சேரும். புதிய வேலையில் சேரும் வாய்ப்பு கைகூடும்.

## துலாம்

ரிஷப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 9, 12 ஆகிய இடத்திற்கு அதிபதியானவர் புதன். 12 க்கு அதிபதியான அவர் அட்டமத்திற்கு வரும்போது “ கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜ யோகம்” என்பதற்கேற்ப சில எதிர்பாராத நல்ல சம்பவங்கள் நடைபெறும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். மறைந்த புதன் நிறைந்த தன லாபம் தரும் என்பதால் கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் சம்பள உயர்வு கிடைக்கும். குடும்ப உறுப்பினர்களில் மற்றவர்களுக்கும் வேலை கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள்.

## விருச்சிகம்

ரிஷப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு அட்டம ஸ்தானாதிபதியான புதன் களத்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்பொழுது சுப காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். வாழ்க்கைத் துணைக்கு நல்ல வேலை கிடைக்கும். புதிய வாகனம் வாங்குவது பற்றி சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த படியே கூடுதல் பொறுப்புக்களும் உத்தியோக உயர்வும் உண்டு.

## தனுசு

ரிஷப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 6இல் சஞ்சரிக்கும்பொழுது நல்ல பலன்களே நடைபெறும். அத்தோடு புதன் கேந்ராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் என்பதால் வாய்ப்புக்கள் வாசல் தேடி வரும். வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.மறைமுக பகை மாறும். இல்லத்தில் சுப காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடியே மாற்றங்கள் நிகழலாம்.

## மகரம்

ரிஷப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 5இல் சஞ்சரிக்கும்பொழுது நல்ல பலன்கள் கிடைக்கும்.பெற்றோர்வழி அனுகூலங்கள் உண்டு.பிரச்சினைகள் படிப்படியாக தீரும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் ஆதரவு காரணமாக இதுவரை மறுக்கப்பட்ட சலுகைகள் இப்பொழுது கிடைக்கும். குடும்பத்தில் மேலும் சிலருக்கு வேலை கிடைத்து வருமானம் உயரும்.திருமண பேச்சுக்கள் முடிவாகும். பொதுவாக இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறும் நேரம் இது.

## கும்பம்

ரிஷப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 4 ஆம் இடத்தில்; சஞ்சரிக்கும் பொழுது கெடுக்கல் வாங்கல்களில் ஏமாற்றங்களை சந்திப்பீர்கள்.வாகன பயணத்தில் கவனம் தேவை.நன்மை என்று நீங்கள் செய்த காரியம் மற்றவர்களுக்கு தீமையாக தெரியும். உத்தியோகத்தில் மேலதிகாhரிகளை பகைத்துக் கொள்ள வேண்டாம். திடீர் இடமாற்றம் மன உளைச்சலை கொடுக்கும்.வந்த பணம் அடுத்த நிமிடமே செலவாகிவிடும்.

## மீனம்

ரிஷப ராசியில் புதன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 4,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்பொழுது இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. தாய்வழி ஆதரவு கிடைக்கும். வாழ்க்கைத் துணைக்கு வேலை அமையும். வெளிநாட்டு அழைப்பு வந்தாலும் சனி பார்வை இருப்பதால் அதை ஏற்க வேண்டாம். உத்தியோகத்தில் வேலைப்பளு கூடும். உங்கள் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைத்தால் பிரச்சினை உருவாகலாம். தன்னம்பிக்கை குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.




# பாராட்டுக்குரிய நீர்கொழும்பு பஸ்நிலைய சேவைகள்

நீர்கொழும்பு மாநகரம் கம்பஹா மாவட்டத்தின் உத்தியோகபூர்வமற்ற தலை நகரம். வடமேல் மாகாணத்திலுள்ள சிலாபத்துக்கும் கொழும்புக்கும் இடையேயுள்ள ஓர் தலைசிறந்த நகரமாக நீர்கொழும்பு திகழ்கின்றது. பல்வேறு வர்த்தக நிறுவனங்கள் நீர்கொழும்பு மாநகரத்திலும் அமைந்துள்ளன . அரச மற்றும் தனியார் வர்த்தக வங்கிகள் கூட குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் நீர்கொழும்பு மாநகரில் எட்டியுள்ளன. அரச கல்விக் கூடங்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு நீர்கொழும்பு நகரம் பெயர் போன இடமாகவும் மாறியுள்ளது. அரச நிறுவனங்கள், நீர்கொழும்பு பெரியாஸ்பத்திரி, களியாட்ட விடுதிகள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் என்பன நீர்கொழும்பில் மக்கள் ஒன்று சேருகின்ற இடங்கள் எனவும் குறிப்பிட்டுக் கூறலாம். இவ்வாறாக மக்களுக்கு அன்றாட நடவடிக்கைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கு வாகனப் போக்குவரத்து மிக மிக அவசியமாகும். அது மாத்திரமின்றி மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கும் போக்குவரத்துச் சேவைகள் இன்றியமையாதவையாகும். பொதுமக்களின் நாளாந்த போக்குவரத்து சேவைகளை ஓர் ஒழுங்கமைப்புடன் நிறைவேற்றுவதற்கு நீர்கொழும்பு பொது பஸ் நிலையம் மிகுந்த பங்களிப்பினை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். நீர்கொழும்பு மாநகர சபையின் பூரணமான கண்காணிப்பிலும் மேல் மாகாண சபையின் அனுசரணையிலும் நீர்கொழும்பு பொது பஸ் நிலையத்தின் சகல நடவடிக்கைகளும் நாளாந்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர்கொழும்பு பொது பஸ் நிலையத்தில் பயணிகளின் பாதுகாப்புக்காக பாதுகாப்பு அலுவலகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகம் நீர்கொழும்பு மாநகர சபையின் பூரணமான கட்டுப்பாட்டின் கீழேயே இயங்கி வருகின்றது .



பஸ் நிலையத்திலிருந்து தமது பயணங்களை மேற்கொள்ளும் பயணிகள் எவ்விதமான சங்கடங்களையும் இதனால் எதிர்நோக்க வேண்டிய அவசியமில்லை எனவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பிச்சைக்காரர்களின் யாசகம் கேட்கும் நடவடிக்கைகளை குறித்த பாதுகாப்பு அதிகாரிகள் நாளாந்தம் தடுத்து வருகின்றனர். முடிச்சு மாறிகளின் திருட்டுச் செயல்களை முற்றாகக் கட்டுப்படுத்த பொது பஸ் நிலையத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்துடன் நேரடியாக தொடர்புகளை வைத்துக் கொண்டு வருகின்றனர். இதனால் பாதுகாப்பு தொடர்பில் பொது பஸ் நிலையத்தில் எதுவித அச்சமும் இல்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர். நீர்கொழும்பு பஸ் நிலையத்திலிருந்து தனியார் பஸ்கள் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் என்பன நாளாந்த சேவைகளில் ஈடுபட்டு வருகின்றன. நீண்ட தூர பயணங்களுக்கான சேவைகளும் இந்த பொது பஸ் நிலையத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிகாலை 4 மணி தொடக்கம் நீர்கொழும்பு பொது நிலையத்திலிருந்து பஸ் போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு வருவதாக தனியார் பஸ் போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் நீர்கொழும்பு பொது பஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி டபிள்யு. டீ .தினேஷ் தெரிவித்தார் . அவர் மேலும் தெரிவிக்கையில் " இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் போக்குவரத்து சேவைகளுடன் கூட்டிணைந்தே நாம் எமது தனியார் பஸ் போக்குவரத்து சேவைகளையும் இங்கு மேற்கொண்டு வருகின்றோம். கண்டி, குருநாகல், குளியாப்பிட்டிய ஆகிய தூர

பிரதேசங்களுக்கான சேவைகளை நாம் கூட்டிணைந்தே மேற்கொண்டு வருகின்றோம். எனினும் இரவு நேர சேவைகளை இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்களேமேற்கொண்டு வருகின்றன. நீர்கொழும்பிலிருந்து இரவு நேர சேவைகளை இங்கு குறிப்பிட்டுக் கூறலாம். கொழும்பு இரவு 9.30 மணி அல்லது 10.00 மணி, குருநாகல் இரவு 9 .00 மணி, குளியாப்பிட்டிய இரவு 10.00 மணி ஆகிய

சேவைகளை நீர்கொழும்பிலிருந்து வழமையாக பெற்றுக் கொள்ளலாம். தேசிய போக்குவரத்து சேவையின் ஆலோசனைக்கு இணங்க அதிகாலை 4 மணி முதல் பஸ் போக்குவரத்து சேவைகள் நீர்கொழும்பில் இடம்பெற்று வருகின்றன. அதிகாலை 4.00 மணிக்கு இலங்கையில் மத்திய பிரதேசத்துக்கான சேவையை இ.போ.ச. பஸ்ஆரம்பித்து வைக்கின்றது. அதாவது நுவரெலியா நகரத்துக்கு அருகிலுள்ள வெலிமட நகரத்துக்கு அதிகாலை 4.00 மணிக்கு தனது சேவையை இ.போ.ச. ஆரம்பிக்கின்றது. இதே போன்று நாட்டின் தென் பகுதிக்கான பஸ் போக்குவரத்து சேவையையும் நீர்கொழும்பிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தங்கல்ல நகரத்துக்கான சேவையையும் அதிகாலை வேளையில் பெற்றுக் கொள்ளலாம். உடுகம பிரதேசத்துக்கான சேவை அதிகாலை 4.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுகின்றது. இதே போன்று பலாங்கொட காலை 10 .45 , ஹட்டன் காலை 10 . 45 ஆகிய தூர பிரதேச சேவைகளின் சேவைகள் இங்கிருந்து ஆரம்பிக்கப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் அக்கரைப்பற்று நகரத்துக்கான போக்குவரத்து சேவை பின்னேரம் 6.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது . இவை அனைத்தும் நாளாந்தம் இடம்பெற்று வருகின்றன " என்று குறிப்பிட்டார். நீர்கொழும்பு மாநகர சபையின் சுத்திகரிப்பு பிரிவின் சிற்றூழியர்கள் தினமும் இரண்டு வேளை நீர்கொழும்பு பொது பஸ் நிலையத்தை சுத்தம் செய்கின்றனர். நீர்கொழும்பு பொது பஸ் நிலையம் இரண்டு மாடிகளைக் கொண்டுள்ளது.



(படங்கள் ; நீர்கொழும்பு தினகரன் நிருபர் )

இக் கட்டிடத்தின்முதலாவது மாடியில் வர்த்தக நிலையங்கள் உள்ளன. பஸ் நிலையத்திலிருந்து நேரடியாக வர்த்தக நிலையங்களுக்கும் சிற்றுண்டிச்சாலைகளுக்கும் நேரடியாக செல்லும் வசதிகளும் உண்டு. கடந்த 2011ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ம் திகதி நீர்கொழும்பு மத்திய பஸ் நிலையம் தற்போதைய உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலேயே நீர்கொழும்பு பொது பஸ் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது

நீர்கொழும்பு மாநகர சபையின் முன்னாள் மேயரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நிமல் லான்சா நீர்கொழும்பு பொது பஸ் நிலையத்தை நவீன மயப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். அவர் நீர்கொழும்பு மாநகர சபையின் மேயராக கடமையாற்றும் போதே குறித்த பஸ்

நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை அப்போதைய அரசாங்கத்துடன் மேற்கொண்டார். 220 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நீர்கொழும்பு பொது பஸ் நிலையத்தின் நவீன கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த கட்டடத்தில் நிறைவுசெய்யப்படாத நிர்மாணப் பணிகளும் உள்ளன. மினி தியேட்டர் ஒன்றை குறித்த கட்டடத்தில் அமைப்பதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. இது வரையில் அது நிறைவு செய்யப்படவில்லை என்றே கூறலாம். வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் ஓய்வு அறைகளும் இந்த கட்டடத்தில் அமைக்கப்பட வேண்டும் எனவும் பல்வேறு தரப்பினர் கூறி வருகின்றனர். நீர்கொழும்பு நவீன பொது பஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டது முதல் கடந்த 10 வருடங்களாக கடமை புரியும்.

பிரதி நிலையப் பொறுப்பதிகாரி ரொஹான் பர்ணாண்டோ பேசுகையில் " கொரனா வைரஸ் தொற்றிய காலத்தில் நீர்கொழும்பு பொதுச் சுகாதாரப் பிரிவினரின் நாளாந்த போக்குவரத்து சேவைக்கு நாம் பாரிய ஒத்துழைப்புக்களை வழங்கினோம்.

இதற்கு எமது பஸ் நிலையத்தின் சாரதிகள் பூரணமான ஒத்துழைப்புக்களை வழங்கினர். பொதுச் சுகாதார அதிகாரிகளின் வீடுகளுக்கு நாம் நேரடியான சேவைகளை வழங்கினோம் " என்று கூறினார். நீர்கொழும்பு பொது பஸ் நிலையத்தின் சேவைகள் பாராட்டுக்குரியது.



நீர்கொழும்பு நூஸ்மான்...

# நியாயமான விலையில் ZTE ஸ்மார்ட் போன்கள்

ZTE இன் உயர்நடுத்தர வகுப்பு வரிசையில் முன்னணியில் திகழும், ZTE Blade V30 ஆனது கறுப்பு மற்றும் நீலம் ஆகிய இரண்டு நிறங்களிலும் கிடைப்பதுடன், இந்த நேர்த்தியான பாணியிலான சாதனம் நாம் செலுத்தும் விலையை விட அதிக விலைப் பெறுமதி கொண்டது. இருப்பினும், ரூபா 69,999/ என்ற விலையை மட்டுமே கொண்டுள்ள இந்த கண்ணைக்கவரும் அழகான சாதனம் பயனர்களுக்கு நடுத்தர வகுப்பு தொலைபேசி சாதனங்கள் வழங்கும் அனைத்து சிறப்பு தொழில்நுட்ப அம்சங்களையும் மிகவும் கட்டுபடியான விலையில் வழங்குகிறது. தொலைபேசி சாதனத்தின் பின்புறத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள பல்துறை ஆற்றல் மற்றும் திறன் கொண்ட 4 கேமரா அமைப்பு, தலைசிறந்த புகைப்படம் மற்றும் வீடியோ திறன்களுக்கு வழிகோலியுள்ளதுடன், இதில் 64 MP பிரதான கேமராவும், 8 MP அதிவிசால லென்ஸ் வில்லை மற்றும் 5 MP மெக்ரோ லென்ஸ் வில்லை, 2 MP ஆழமான உணர்திறன் கொண்ட கேமரா ஆகியவற்றின் பக்கபலத்தைக் கொண்டுள்ளது. சாதனத்தின் முன்புறம் 16 MP கேமராவைக் கொண்டுள்ளதுடன், இது எத்தருணத்தையும் நேர்த்தியாக வசப்படுத்த உதவுகிறது.




இத்தொலைபேசி சாதனம் மிகவும் தாராளமான 128 GB சேமிப்பகத்தையும், 4 GB RAM மற்றும் சக்திவாய்ந்த octacore செயலியையும் கொண்டுள்ளதுடன், இது மிகவும் திறமையான மற்றும் சக்திவாய்ந்த தொலைபேசி சாதனத்திற்கு இடமளிக்கின்றது. ZTE Blade V30 இன் 5,000 mAh பேட்டரி, நீங்கள் நாள் முழுவதும் நீடித்து நிலைக்கும் பேட்டரியை அனுபவிக்க முடியும். அதே நேரத்தில் சாதனங்களின் சக்திவாய்ந்த GPU மற்றும் 6.67அங்குல 1080p IPS முகத்திரை மூலம் எங்கிருந்தும் சில மொபைல் கேமிங்கிற்காக அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்னும் கூடுதலான அளவில் கட்டுபடியாகும் விலையில் ஆற்றல் மற்றும் திறன் கொண்ட கேமராக்களைத் தேடும் நுகர்வோருக்கு, ZTE Blade V30 Vita ஏவையை ஆனது 128GB சேமிப்பகம் மற்றும் 4GB RAM உடன் மிகச் சரியான தெரிவாகும். வெறும் ரூபா 53,999/ என்ற விலையில், வாடிக்கையாளர்கள் 48MP பிரதான கேமரா, 5MP மெக்ரோ கேமரா மற்றும் 2MP ஆழமான உணர்திறன் கேமரா ஆகியவற்றைக் கொண்ட மிகவும் திறமையான மூன்று பின்புற கேமரா கட்டமைப்பை அனுபவிக்க முடியும். நீலம், சாம்பல் மற்றும் பச்சை நிறங்களில் கிடைக்கும், ZTE Blade V30 Vita ஒரு சிறந்த, நேர்த்தியான மற்றும் நவீன பாணியிலான தெரிவாகும். மேலும், மிகப்பெரிய 5,000 mAh பேட்டரி நாள் முழுவதும் அதனை முழுமையாகப் பயன்படுத்த இடமளிக்கின்றது.

# பங்குதாரர் ஈடுபாட்டை புரட்சிகரமாக மாற்றியமைத்துள்ள DFCC வங்கி



அனைவருக்கும் ஏற்ற வங்கியான DFCC வங்கி, 5 ஆண்டுகளுக்கு முன்பு நடைமுறைப்படுத்தப்பட்ட அதன் தற்போதைய நிலையான, பங்குதாரர்களை மையமாகக் கொண்ட, பன்முக வடிவ, பன்முக ஊடக அணுகுமுறைக்கு ஏற்ப, 2021 ஆம் ஆண்டிற்கான அதன் ஆண்டறிக்கையை அண்மையில் வெளியிட்டுள்ளது. அறிக்கையிடலுக்கான இந்த தனித்துவமான அணுகுமுறையானது, டிஜிட்டல் முறையில் இணைக்கப்பட்டதாக உலகம் மாறி வருகின்றமைக்கு மத்தியில், இன்னும் கூடுதலான அளவில் பங்குதாரர்களை மையப்படுத்திய வங்கியாக மாற உதவியுள்ளது. அதன் பரந்த மற்றும் மாறுபட்ட பங்குதாரர் சமூகத்தின் பல்வேறு தேவைகள் மற்றும் விருப்பங்களையும் இதன் மூலமாகப் பூர்த்தி செய்கிறது.

DFCC வங்கியின் ஆண்டறிக்கையானது தொழில்துறையில் பின்வரும் தனித்துவமான அம்சங்கள் மற்றும் வடிவங்களைக் கொண்டுள்ளது: பங்குதாரர் குழுக்களின் பல்வேறு நலன்களை இலக்காகக் கொண்டு HTML வடிவத்தில் ஒரு விரிவான ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை மற்றும் தகவல்களை எளிதாகக் கண்டறிந்து, பதிவுசெய்து, பகிர்ந்து கொள்வதற்கான மேம்பட்ட பயனர் அனுபவத்தை வழங்குகிறது. அதிக தேடுபொறி திறன் கொண்டதாக (search engine) இருப்பதால், இந்த வடிவம் பரந்த அளவிலான பார்வையாளர்களையும் இலக்கு வைக்கிறது. மேலும், ஏனைய போட்டியாளர்களிடமிருந்து ஆண்டறிக்கையின் தோற்றம் மற்றும் உணர்வை வேறுபடுத்தும் வகையில் இடதுகைப்பக்க புத்தகவுரு சார்ந்த, கோப்பி மேசை புத்தக பாணியிலான வடிவமைப்பானது PDF, அச்சு மற்றும் குறுவட்டு (CD) வடிவங்களில் ஒரு சுருக்கமான ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை முதன்மையாக ஆவண காப்பகம் மற்றும் சட்டப்பூர்வ தேவைப்பாட்டு சமர்ப்பித்தல் நோக்கங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் அறிதல் குறிப்புக்காக ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் ஆண்டறிக்கை முக்கிய சுருக்கங்கள் மற்றும் வெளியீட்டிற்குப் பிந்தைய முக்கியமான தகவல்களை உடனடியாக பெற்றுக்கொள்வதற்கான ஆண்டறிக்கை புதுப்பிப்பு நுழைமுகம் மற்றும் இணைந்த ஆண்டறிக்கை புதுப்பித்தல் செயலி ஆகியனவும் உள்ளன.

இந்த ஆண்டு, வங்கியின் ஆண்டறிக்கையானது, "Designed to Excel" கருப்பொருள் வடிவில் வடிவமைக்கப்பட்டது.

# VEGETARIAN SOCIETY இன் அங்கீகாரத்தினைப் பெற்றுள்ள சுவதேஷி வர்த்தகநாம தயாரிப்புகள்




80ஆண்டுகளுக்கும் மேலாக மூலிகைகளைக் கொண்ட தனிப்பட்ட பராமரிப்புப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையில் இலங்கையின் மிகப்பெரிய நிறுவனமாகத் திகழ்ந்து வரும் சுவதேஷி (Swadeshi Industrial Works PLC) நிறுவனத்தின் வர்த்தகநாம உற்பத்திகளான குழந்தைகள் முதல் வளர்ந்தவர்களுக்கான சவர்க்கார உற்பத்தி வகைகள், பொடிவோஷ் மற்றும் ஷவர்ஜெல் உற்பத்தி வகைகள் Vegetarian Societyஇன் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. ஐக்கிய இராச்சியத்தின் மதிப்புமிக்க Vegetarian Society ஆல் 100%கம்பனியின் தயாரிப்புக்கள் Vegetarian என்ற அதிகார பூர்வ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக முத்திரையைக் காண்பிப்பதற்கான உரிமையைப் பெற்றுள்ளன.

பின்வரும் தயாரிப்புகள் இப்போது Vegetarian Society ஆல் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக முத்திரையை பொதிகளில் கொண்டிருக்கும்: சுவதேஷி கோம்பா ஹேர்பல், சுவதேஷி கோம்பா கிளியர் சவர்க்காரம், சுவதேஷி கோம்பா பொடிவோஷ் தயாரிப்புவகை, ராணி சந்தனம், ராணிஜெல்பார், ராணி ஷவர்கிரீம் தயாரிப்பு வரிசை மற்றும் சுவதேஷி கோம்பா பேபிசவர்க்காரம்.என்பன அவற்றில் அடங்கும்.

# 23% வருமான வளர்ச்சியைக் காண்பித்த அமானா தகாஃபுல் காப்புறுதி



இலங்கையில் இயங்கும் ஒரு முழுமையான காப்புறுதி நிறுவனமான அமானா தகாஃபுல் பிஎல்சி (ATI), 2021 ஆம் ஆண்டில் கொவிட் தொற்று உள்ளிட்ட ஏனைய பொருளாதார அழுத்தங்களை துணிச்சலாக எதிர்கொண்டிருந்தது. அந்த வகையில், நிறுவனம் அதன் குழும விற்பனை வருமானத்தில் 23% வளர்ச்சி மற்றும் ஏனைய வருமானத்திற்கு முன்பாக குழும நிகர இலாபத்தில் 13% உயர்ச்சியுடன் 2021 ஆம் ஆண்டை நிறைவு செய்துள்ளது.

குழுமத்தின் கடந்த வருட செயற்பாடுகள் தொடர்பில், அமானா தகாஃபுல் காப்புறுதி முகாமைத்துவ பணிப்பாளர் ஹஸன் காசிம் கருத்துத் தெரிவிக்கையில், "எந்தவொரு காப்புறுதி வர்த்தகநாமத்திற்கும் கடின நிலையிலிருந்தான மீளெழுச்சி அவசியமாகும். அந்த வகையில், அமானா தகாஃபுல் காப்புறுதியும் (Amana Takaful Insurance ATI) இதற்கு விதிவிலக்கல்ல. ATI யின் 2021 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த வருடாந்த செயற்றிறன் ஆனது, நான்காவது காலாண்டில் சாதனை இலக்கத்தின் மூலம் பலப்படுத்தப்பட்டுள்ளது. எமது சமீபத்திய எதிர்பார்ப்பு அறிக்கைகளின் அடிப்படையில், ஏனைய வருமானத்திற்கு முன்பாக ரூ. 250.34 மில்லியனாக வருடாந்த குழும நிகர இலாபமானது 13% அதிகரிப்புடன் ATI உறுதிசெய்துள்ளது.

கடந்த வருடத்தின் 4ஆவது காலாண்டில் மாத்திரம், நிறுவனம் அதன் (காலாண்டு) ஏனைய வருமானத்திற்கு முன்பாக குழும நிகர இலாபத்தில் 132% வளர்ச்சியின் மூலம் அதனை இரட்டிப்பாக்கியுள்ளது. சமீபத்திய 4ஆவது காலாண்டு முடிவுகளின் அடிப்படையில், முதலாவது காலாண்டு தொடக்கம் 3ஆவது காலாண்டு வரை, அது சாதகமான போக்குடன் தொடர்ச்சியாக அதனை பேணி வந்துள்ளமையை General Insurance பிரிவிலும் காண முடிகின்றது.

# SSL க்கு இரட்டை விருதுகள் வழங்கிக் கௌரவிப்பு




முதலீட்டு சபையில் பதிவு செய்யப்பட்ட லங்கா ஸ்பெஷல் ஸ்டீல் லிமிடெட் (லங்கா SSL), அதன் உயர் தரம் வாய்ந்த கம்பிகள் விநியோகத்துக்காக ஒப்பற்ற கீர்த்தி நாமத்தைக் கொண்டுள்ளதுடன், E B Creasy& Company PLC நிறுவனத்தின் துணை நிறுவனமாக திகழ்கின்றது. அண்மையில் இடம்பெற்ற தேசிய வியாபார சிறப்பு விருதுகள் 2021 நிகழ்வில் பாரியளவு பிரிவில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. இந்நிகழ்வை இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் (NCCSL) ஏற்பாடு செய்திருந்தது.

ஏனைய உற்பத்தி பிரிவில் லங்கா SSL வெற்றியாளராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதற்கு முன்னதாக, 2018 ஆம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்விலும் இந்நிறுவனம் ஒட்டுமொத்த பாரிய பிரிவில் மூன்றாமிடத்தையும், ஏனைய உற்பத்திப் பிரிவில் தங்க விருதையும் சுவீகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில், உறுதி செய்யப்பட்ட விஞ்ஞானபூர்வ ஆய்வுகள் மற்றும் நிபுணத்துவ வழிகாட்டல்களினூடாக பரந்தளவு கல்வனைஸ் செய்யப்பட்ட இரும்புக் கம்பிகள் உற்பத்தியில் லங்கா SSL தன்னை ஈடுபடுத்தியுள்ளதுடன், எல்லை முட்கம்பிகள் பிரிவில் மாபெரும் உற்பத்தியாளராகவும், சந்தை முன்னோடியாகவும் திகழ்கின்றது. சந்தையின் 70 சதவீதமான பங்கை தன்வசம் கொண்டுள்ளது. நாட்டில் காணப்படும் ஒரே கல்வனைஸ் உருக்கிரும்பு கம்பிகள் உற்பத்தியாளர் எனும் பெருமையையும் லங்கா SSL தன்னகத்தே கொண்டுள்ளது.

லங்கா SSL பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான பிரவீன் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "எமது ஊழியர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் மற்றும் எம்மீது தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வாடிக்கையாளர்கள் மற்றும் விநியோகத்தர்களின் பங்களிப்பின்றி எம்மால் இந்த சாதனையை எய்தியிருக்க முடியாது." என்றார்.

# நிலைபேற்றியல் முயற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள அலியான்ஸ் லங்கா



உலகளாவிய காப்புறுதி வர்த்தகநாமமான அலியான்ஸ் லங்கா, நிலைபேற்றியல் கொண்ட பொருளாதாரங்கள் மற்றும் சமூகங்களைத் தோற்றுவித்து, வளர்ப்பதற்கு உதவும் நிறுவனத்தின் உலகளாவிய மற்றும் உள்ளூர் குறிக்கோளை நிலைநாட்டும் வகையில் தனது 2ஆவது பாரிய நிலைபேற்றியல் முயற்சியை மஹியங்கனை பிரதேசத்தில் வெற்றிகரமாக பூர்த்திசெய்துள்ளது.

இத்திட்டமானது, மஹியங்கனையிலுள்ள பிபிலை / மஹியங்கனை / சேனானிகம ஆரம்பப் பாடசாலையில் ஒளி மின்னழுத்த சூரியமின் உற்பத்தித் தொகுதியை பொருத்துதல் மற்றும் தொழிற்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. இப்போது பாடசாலை தனது தினசரி எரிசக்தித் தேவைகளை புதுப்பிக்கத்தக்க எரிசக்திமூலத்திலிருந்து பெறமுடியும் என்பதை உறுதிப்படுத்தும் அதேநேரத்தில், உற்பத்தி செய்யப்படும் தேவைக்கதிகமான மின்சாரத்தை தேசிய மின் விநியோகத்திற்கும் பங்களிக்கிறது.

அலியான்ஸ் லங்கா நிறுவனத்தின் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி மங்களபண்டார, "உள்ளேயும், வெளியேயும் எமது அனைத்து முயற்சிகளிலும் நிலைபேற்றியலை உள்வாங்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ளதாக கூறினார். மஹியங்கனை நகரிலிருந்து சுமார் 15 கிலோமீற்றர் தொலைவிலுள்ள சேனானிகம ஆரம்பப்பாடசாலைக்கு இந்த புதிய சூரியசக்தி மின்னுற்பத்தி தொகுதியை ஆரம்பித்து வைப்பதன் மூலம், அப்பாடசாலை தற்போது புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலத்தை அனுபவிப்பது மட்டுமன்றி, புதிய சூரிய மின்னுற்பத்தித் தொகுதி மூலமாக தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை தேசிய மின்விநியோக கட்டமைப்புக்கு வழங்கி அதற்கு உதவவும் முடியும். நிலைபேற்றியல் கொண்ட எரிசக்தி என்பது காலத்தின் முக்கிய தேவையாக இருப்பதால், படிம எரிபொருட்களிலிருந்து விலகி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நோக்கிய உலகளாவிய மாற்றத்திற்கு உதவ நாம் முயல்வதால், எதிர்காலத்தில் இதுபோன்ற பல திட்டங்களுக்கு உதவுவதன் மூலம் நிறுவனப் பொறுப்பைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று, நிறைவேற்ற விரும்புகிறோம்," என மேலும் குறிப்பிட்டார்.

# சிறந்த கைத்தொழிலுக்கான தங்கவிருது வென்ற ஆர். எம். பெரேரா நிறுவனம்



தளபாட உற்பத்தி மற்றும் உட்புற வடிவமைப்புத் துறையின் முன்னோடி நிறுவனமான ஆர்.எம் பெரேரா தனியார் நிறுவனம், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஏற்பாடு செய்த சிறந்த கைதொழிலுக்கான விருது விழாவில் மத்திய மற்றும் பாரியளவிலான பிரிவுகளில் தங்கவிருதை வென்றுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் நடைபெற்ற விருது விழாவில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆர். எம். பெரேரா தமக்கான விருதை பெற்றுக்கொண்டார்.

தொடர்ச்சியான முறையில் வர்த்தகத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்லுதல், பொருட்கள் உற்பத்திக்கு புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிப்பு செய்தமை ஆகிய காரணிகள் இந்த விருதை வெல்வதில் பெரும் பங்காற்றியுள்ளன.

40 ஆண்டுகளுக்கு மேலாக உயர் தரத்திலான மரத் தளபாடங்களையும் உட்புற வடிவமைப்புகளையும் வழங்கியதன் மூலம் ஆர். எம்.பெரேரா நிறுவனம் பெரும் புகழை ஈட்டியுள்ளது. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், மருத்துவமனைகள், ஹோட்டல்கள் மற்றும் குடிமனைகளுக்கு மரத் தளபாடங்களை வழங்கியமை மற்றும் உட்புற வடிவமைப்பு பணிகளை மேற்கொண்டதன் மூலம் நீண்ட காலத்திற்கு உழைக்கக்கூடிய கலைநயத்துடன் கூடிய பெறுமதியை வழங்குவதற்கு ஆர்.எம். நிறுவனத்தினால் முடிந்துள்ளது.

உயர் தரத்திலான மூலப்பொருள் பாவனை, அனுவபமிக்க பணியாளர்களின் பங்களிப்பின் மூலம் பொருள் உற்பத்தி மற்றும் சேவை வழங்குதல் மூலம் இந்த நிறுவனம் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையினை பெரிதும் வென்றுள்ளது. இந்த விருதை வழங்கி எம்மை ஊக்கப்படுத்திய கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 3

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# ஈழத்து இலக்கியம் என்ற உணர்வுக்கு உரமூட்டிய முன்னோடி சிற்பி!

# சிவசரவணபவன்




தமிழக மக்களால் ஈழத்து நவீன இலக்கியங்களும் அறியப்பட வேண்டும், போற்றப்படவேண்டும் என்ற தேசியப்பற்றுக் காரணமாக சிற்பி 'ஈழத்துச் சிறுகதைகள்| என்ற ஈழத்தின் முதலாவது சிறுகதைத் தொகுதியை 1958இல் வெளிக்கொணர்ந்தார். 'இந்தத் தொகுப்பு வெளிவந்தபோது ஈழத்து இலக்கிய உலகம் பெருமை கொண்டது, தன்னை ஒருக் கால் சிலிர்த்துக்கொண்டது. இலக்கிய உலகில் ஓர் அற்புதம் நிகழ்ந்து விட்டதைப்போல வியப்படைந்தது' எனக் குறிப்பிட்டுள்ளார் செங்கை ஆழியான்.

இந்தச் சிறுகதைத் தொகுதியை வெளிக் கொணர்ந்ததற்கான காரணத்தை சிற்பியவர்கள் ஞானத்திற்கு அளித்த நேர்காணலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: '1956 அளவில் டெல்கியிலுள்ள சாகித்திய அக்கடமி சிறுகதை மஞ்சரி| என்ற தமிழ்ச் சிறுகதைகளின் தொகுப்பு ஒன்றை வெளியிட்டது. தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களின் சிறுகதைகளை கல்கி ஆசிரியராக இருந்த மீ.ப. சோமு தொகுத்திருந்தார். ஆனந்த விகடன், கலைமகள், கிராமஊழியன் போன்ற தமிழக இதழ்களில் எழுதிப் பிரபலமான இலங்கையர்கோன், சி. வைத்திலிங்கம், சம்பந்தன் போன்றவர்கள் இலங்கையில் இருந்தனர். சிறுகதை மஞ்சரியில் இலங்கையைச் சேர்ந்த எந்த ஒருவரின் கதையுமே இடம்பெறவில்லை. இது ஒரு பெரிய குறையாக – புறக்கணிப்பாக எனக்குப்பட்டது. இங்கிருந்தே தரமான ஒரு சிறுகதைத் தொகுதியை வெளியிடுவதே சரியான நடவடிக்கையாக இருக்கும் என எனக்குத் தோன்றியது. சென்னையில் நண்பர்கள் அழ. சிதம்பரம், அன்புப் பழம் நீ ஆகியோருக்கு எழுதினேன். சென்னை பாரி நிலையத்தின் உதவியைப் பெற்றுத்தருவதாகச் சொன்னார்கள். இலங்கையர்கோன், சம்பந்தன், வைத்திலிங்கம், வ.அ.இராசரத்தினம், கனக செந்திநாதன், வரதர், இராஜ அரியரத்தினம், சகிதேவி தியாகராஜா, சு.இராஜநாயகன், தாழையடி சபாரத்தினம், கே.டானியல், செ.கணேசலிங்கன் ஆகியோரது சிறுகதைகள் இந்த ஈழத்தின் முதலாவது சிறுகதைத் தொகுப்பில் அடங்கியுள்ளன.

எழுத்தாளர்கள் பற்றிய குறிப்புகளுடனும், பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளையின் அணிந்துரையுடனும் ஈழத்துச் சிறுகதைகள் தொகுதி வெளிவந்தது. ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்களின் ஆக்கத் திறனை முதன் முதலில் தமிழ்கூறும் நல்லுலகிற்கு எடுத்துக்காட்டிய தொகுதி இதுதான்'

சிற்பி எழுதிய முதற்சிறுகதை மலர்ந்தகாதல்| 1952இல் சுதந்திரனில் வெளிவந்தது. 1955இல் உதயம் சஞ்சிகை நடத்திய சிறுகதைப்போட்டியில் இவரது மறுமணம்| என்ற சிறுகதை முதற்பரிசினைப் பெற்றது. இருந்தபோதிலும் தான் வெளிக்கொணர்ந்த ஈழத்தின் முதலாவது சிறுகதைத் தொகுப்பில் அவர் தனது சிறுகதை எதனையும் சேர்த்துக் கொள்ளவில்லை என்பது சிற்பியின் இலக்கியப் பண்புக்குச் சிகரமிடுவதாய் அமைந்தது.











சிற்பியை ஆசிரியராகக் கொண்டு 1958 ஆடி முதல் 1966 ஆவணி வரை எட்டு வருடகாலம் இலக்கிய உலகில் கலைச்செல்வி சஞ்சிகை பவனி வந்தது. கலைச்செல்வியின் முதலாவது இதழில் அதன்நோக்கம் பற்றி ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்துத் தமிழ் அன்பர்களிடம் நல்ல கதைகள் கட்டுரைகள் எழுத வேண்டும் என்ற ஆர்வமும் துடிப்பும் இருக்கின்றது. ஆனால் நமது தனித்தன்மையை நிலைநாட்டி நம் கலைத்திறனையும் கற்பனை வளத்தையும் உலகோர்க்கு எடுத்துக்காட்டி எல்லோர்க்கும் மகிழ்வூட்டக்கூடியதாக கலைத்தூதன் இங்கு இல்லை... மற்றவர்கள் செய்ய மறுத்ததை மனத்துணிவுடன் செய்யத் தொடங்குகிறோம் நாம். நம் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவவேண்டும். தமிழனின் மொழி, கல்வி, கலை கலாசாரம் ஆகியவற்றிற்கு அவற்றின் தொன்மை மணம் குன்றாது புதுமை மேருகேற்ற வேண்டும் இவைதான் கலைச்செல்வியின் நோக்கங்கள்|

ஈழத்தின் தனித்துவம் மிளிரும் இலக்கியமலராக கலைச் செல்வியை வெளிவரச் செய்வதில் நான் கண்ணும் கருத்துமாக இருந்தேன், எனக்குறிப்பிட்டுள்ளார் சிற்பி.

கலைச்செல்வி வெளிவந்த காலகட்டம் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மிக முக்கியமானதோர் காலகட்டமாகும்.

மரபு, பண்டிதப்போக்கு, இழிசினர் இலக்கியம், யதார்த்தம், மண்வாசனை முதலியவை பற்றிப் பகிரங்கமாக விவாதிக்கப்பட்ட காலம். இவை சம்பந்தமான தம் சிந்தனையின் அடிப்படையில் எழுத்தாளர்களில் பலர் இருவேறு அணிகளாகப் பிரிந்து செயற்பட்ட காலம். அணிசேரா எழுத்தாளர்களாகவும் சிலர் இயங்கிய காலம்.

'தமிழ் இலக்கிய மரபு என ஒன்று இருப்பதை ஏற்றுக்கொண்டு தேவையான சந்தர்ப்பங்களில் அந்த மரபை மீறும் உரிமை எழுத்தாளர்களுக்கு உண்டு' என்பது கலைச்செல்வியின் நிலைப்பாடாக இருந்தது.

'தரம் வாய்ந்த பிரபல்யம் மிக்க ஆக்கங்களால் ஈழத்து தமிழ் இலக்கியத் துறையைச் செழுமைப் படுத்திவரும் செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், செ. யோகநாதன், யாழ் நங்கை, சா.வே. பஞ்சாட்சரம், பெனடிக்ற் பாலன், சாந்தன், வே.குமாரசாமி, மயிலன், பொ.சண்முகநாதன், மு. பொன்னம்பலம், தி. ஞானசேகரன், மு. கனகராஜன், பா. சத்தியசீலன், மட்டுவிலான், கவிதா, பாமா ராஜகோபால், கானமயில்நாதன், து. வைத்தியலிங்கம், வி.க. ரட்ணசபாபதி, இளையவன், செ. கதிர்காமநாதன், முனியப்பதாசன், க. பரராசசிங்கம், மணியம், முகிலன், பொ. சண்முகநாதன் என்பவர்கள் கலைச்செல்வியின் பண்ணையில் வளர்ந்தவர்களே' என்ற சிற்பியின் கூற்றினை எண்ணிப் பார்க்கும்போது ஈழத்தில் இத்தகைய பிரபல்யம் வாய்ந்த ஓர் எழுத்தாளர் பட்டாளத்தை வளர்த்தெடுத்த பெருமையை வேறு எந்த இதழாசிரியர்களும் பெறவில்லை என்ற நிதர்சனம் வெளிப்படுகிறது.

ஈழத்துச் சிறு சஞ்சிகையாளர்களில் அதிகூடிய துறைகளில் தமது படைப்புக்களைத் தந்தவர் சிற்பி அவர்களே. சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, விமர்சனம், நாடகம், வானொலி நாடகம் ஆகிய துறைகளில் எழுதியவர். இத்தனை துறைகளில் இதுவரை ஈழத்தில் எந்தவொரு இதழாசிரியரும் தமது படைப்புக்களைத் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1933இல் காரைநகரில் சிவஸ்ரீ சு.சி வசுப்பிரமணிய ஐயர், ஸ்ரீமதி சௌந்தரம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்த சிற்பியின் இயற்பெயர் சிவசரவணபவன். இவர் தனது ஆரம்பக் கல்வியை கந்தரோடை தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் பெற்றவர். இலண்டன் இன்ரர் பரீட்சையில் சித்திபெற்றவர். சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் கலைமாணி பட்டம்பெற்றவர். பின்னர் யாழ். பல்கலைக்கழகத்தின் முதுமாணி பட்டம் பெற்றவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளில் புலமையுள்ளவர். ஈழத்துச் சஞ்சிகையாளர் வரிசையில் இவரே அதிகூடிய கல்வித்தகைமை கொண்டவர்.

சிறுவயது முதலே சிற்பி அவர்களிடம் இலக்கியப்பற்று வேரூன்றியிருந்தது. தனது பத்தாவது வயதிலேயே ஆயிரம் பக்கம் வரையான இராமயண வசனத்தை வாசித்து முடித்தவர். அத்துடன் தம் இலக்கியப் பசிக்கு கலைமகள், கல்கி, ஈழகேசரி முதலியவற்றை தொடர்ந்து வாசித்தார். இவரிடத்து பரம்பரைத் தாக்கமும் இருந்தது. இவரது தந்தை, தாய்மாமன் ஆகியோர் பண்டித ஆசிரியர்களாவர். சிற்பி, மாணவராக இருக்கும்போதே ஆக்கங்கள் எழுதும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். 1948ஆம் ஆண்டு ஷபழம்பண்பைப் பற்றி பகர்வதிற் பயனில்லை| என்ற தலைப்பில் சுதந்திரனில் எழுதிய கட்டுரையே இவரது கன்னி முயற்சியாகும்.

இவர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் உயர்கல்வி கற்றபோது ராஜா சேதுபதி தங்கப்பதக்கம்|, ஔவை தமிழ்ச்சங்கக் கட்டுரைப் போட்டி|யில் பரிசு ஆகியவற்றைப் பெற்றவர். அக் கல்லூரியில் வெளியிடப்பட்ட இளந்தமிழன்| என்ற பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

ஈழத்தில் உள்ள எழுத்தாளர்கள் கலைஞர்களைப்பற்றி தமிழகத்தில் உள்ளவர்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் நா. பார்த்தசாரதியை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த தீபம் சஞ்சிகையில் ஷஇலங்கைக் கடிதம்| என்ற தொடரை யாழ்வாசி என்ற புனை பெயரில் எழுதியதன் மூலம் இலங்கை எழுத்தாளர்கள் பற்றியும் இங்கு இடம் பெற்ற கலை இலக்கிய சமய கலாசார நிகழ்ச்சிகள் பற்றியும் அறிந்து கொள்வதற்கு வழிசமைத்தவர்.

திருநெல்வேலி செங்குந்தா கல்லூரியில் ஆசிரியராகவும் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், யாழ்.வைத்தீஸ்வர வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராகக் கடமையாற்றியவர் சிற்பி.

இவரது சிறுகதைத் தொகுதிகளாக ஷநிலவும் நினைவும்|, ஷசத்திய தரிசனம்|, ஷநினைவுகள் மடிவதில்லை| ஆகியவை வெளிவந்துள்ளன. ஷஉனக்காகக் கண்ணே| இவர் எழுதிய நாவலாகும்.

2015இல் தனது 82ஆவது வயதில் 09112015 அன்று சிற்பி அமரரானார். ஞானம் சஞ்சிகையில் அவர் தொடராக எழுதிய கலைச்செல்விக் காலம்| பின்னர் நூலாக வெளிவந்து அரச தேசிய சாகித்திய விருதினை 2017இல் பெற்றுக்கொண்டது. அவர் அமரராகிய நிலையில் அவ்விருதை அவரது மனைவி சரஸ்வதி அம்மா பெற்றுக்கொண்டார்.





# பாசம் என்பது பகடைக்காய் அல்ல உருட்டி விளையாடச் செல்ல!

25

மதுமிதா பேசுவதை நிறுத்தி விட்டு, தான் சொல்லும் கதையை அவன் கேட்கிறானா என்று பார்த்ததும், பிரசன்னா மெல்லச் சிரித்தான்.

"ம்... சொல்லுங்கள் மது உங்கள் கதையை நான் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறேன்!" என்று அவளை மேலும் உட்காசப்படுத்தினான்.

"அப்படி அந்த வியாபாரம் அமைதியாக நடந்து கொண்டிருந்தபோது தான் யாரோ ஒருவன் அப்பாவின் வாழ்க்கைப் பாதையையே மாற்றி விட்டன்!"

"அப்படீன்னா...?"

இடையில் குறுக்கிட்டான் பிரசன்னா.

"அதாவது சட்டத்திற்கு புறம்பான முறையில் பலகை வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அப்பாவையும் மாற்றி விட்டான்!" என்று சொல்லி விட்டு நிறுத்திவிட்டாள் மதுமிதா.'

"அப்படீன்னா...?" புரியாமல் புருவங்களை உயர்த்தினான் பிரசன்னா.

"அப்படீன்னா...அப்பாவிடம் அந்த சில நாட்களிலேயே பணப்புழக்கம் அதிகமாகியது. பெரிய பெரிய செல்வந்தர்களின் உறவு ஏற்பட்டது. இதனால் அப்பாவுக்கும் பணத்தின் மீது ஆசை வந்து விட்டது! இதனால் திருட்டுத்தனமாக பலகை வாங்கி விற்கும் வியாபாரத்தில் அவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார் என்று தான் செல்ல வேண்டும்! பெரிய பெரிய விலை உயர்ந்த வாகனங்களை எல்லாம் வாங்கிப் போட்டார். அதேபோல் காணி பூமிகளையும் அளவின்றி வாங்கிப் போட்டார். இந்த ஏற்பாடுகளுக்கு அம்மாவும் மிகவும் உதவியாகவே இருந்தார். இறுதியில் அப்பா ஒரு கோடீஸ்வர வியாபாரியாக மாறினார்.!"

"அப்படியா... அது சரி, பலகை வியாபாரம் செய்த உங்க அப்பா எப்படி ஜவுளி வியாபாரியானார்?" பிரசன்னா தான் கேள்விக்களை தொடுத்தார்.

"அதுதான் பிரசன்னா பிரச்சினையே... அதைப்பற்றித் தான் நான் சொல்லப் போகிறேன்... பலகை வியாபாரத்தில் உச்சம் தொட்ட அப்பாவுக்கு மேலும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்து விட்டது. அப்போது நாங்கள் இருந்த வீடு போதாதென்று முடிவு செய்த அப்பா இப்போது நாங்கள் இருக்கும் மூன்று மாடி வீட்டை அதிகவிலை கொடுத்து வாங்கினார்!" "இந்த சமயத்தில் அப்பாவுக்கு நிறையவே கோடீஸ்வர நண்பர்கள் இருந்தார்கள். எல்லோருமே சட்டவிரோதமாக வியாபாரம் செய்யும் நண்பர்கள் தான். புதிதாக வீடுவாங்கப் போன ஊருக்கு, நாங்க புதுசு. அங்குள்ளவர்களுக்கு தான் ஒரு பெரிய ஜவுளி வியாபாரி என்பதைக் காட்டுவதற்காக சும்மா ஒரு பேருக்கு புடவை வியாபாரத்தை ஆரம்பித்தார். ஆனாலும் அந்த வியாபாரத்தைப் பற்றி எதுவுமே உண்மையில் அப்பாவுக்குத் தெரியாது. இப்படித்தான் அவர் ஜவுளி வியாபாரியாக மாறினார்!"

"உண்மையிலேயே இப்போது உங்கள் அப்பா செய்யும் பிஸ்னஸ் என்னது மது?"

"அகில உலக ரீதியிலான கள்ளக் கடத்தல். அதற்கு திறமையான சில கூட்டாளிகள் அப்பாவுடன் இருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்துதான் இந்த மாதிரியான சட்டவிரோத வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்!"

"என்ன மாதிரியான சட்டவிரோத வியாபாரத்தில் அவர் ஈடுபடுகிறார் என்று நீங்கள் நினைக்கிறீங்க மது?"

"வெளிநாட்டு சாராய வகைகள் சிகரட்டு வகைகள், அதே போல் போதைவஸ்து வியாபாரத்திலும் அவர் ஈடுபட்டிருப்பார் என்று நான் நினைக்கிறேன் பிரசன்னா?"

"ம்.... தீக்குள் வாழ்வதாக நீங்கள் சொன்னது சரியாகத்தான் இருக்கிறது மது. சட்டவிரோதமான வியாபாரங்களுக்கு ஆயுள் குறைவு. மிகவிரைவிலேயே உங்கள் அப்பா சட்டத்தின் பிடியில் சிக்கிக் கொள்வார். உங்கள் அம்மாவும் அவரோடு தொடர்பு பட்டிருந்தால் அவரும் உங்கள் அப்பாவோடு சேர்ந்து ஜெயிலுக்குப் போக வேண்டிவரும். அப்படி ஒரு சம்பவம் நடந்தால் உங்கள் நிலை என்னவாகும் மது. பெற்றோர் என்றால் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

அநேகமாக எல்லா பெற்றோரும் அப்படித்தான் இருக்கிறார்கள். ஆனால் உங்களுக்குக் கிடைத்த பெற்றோர்கள் வித்தியாசமானவர்களாக அல்லவா இருக்கிறார்கள்!'

"எனது வாழ்வில் இன்னும் இரண்டு வித்தியாசமான பக்கங்கள் இருக்கிறது பிரசன்னா. அதை நீங்கள் கேள்விப்பட்டால் உண்மையிலேயே வியப்படைவீர்கள்! மனதில் இருக்கும் பாரங்களை யாரிடமாவது இறக்கி வைத்தால் தான் நிம்மதி கிடைக்கும் என்று சொல்லுவார்கள். இதை எல்லாம் உங்களிடம் சொல்லுவது சரியா என்று கூட எனக்குத் தெரியாது பிரசன்னா!"







"நான் தான் ஆரம்பத்திலேயே உங்களிடம் சொன்னேனே உங்கள் மனதில் உள்ள குறைகளை என்னிடம் சொல்லுங்கள் என்று...!"

"நான் இப்போதுதான் எங்கள் குடும்பத்துக்கு உள்ள ஒரு பெண்ணாக இருக்கிறேன். ஆனால் மூன்று வருடங்களுக்கு முன்பு எனக்கும் ஒரு தங்கை இருந்தாள்!"

"எ... என்னது... உங்களுக்கும் ஒரு தங்கையா?"

"ம்...!"

"இப்போது அவ எங்கே...?"

"மிகவும் துரதிஷ்டமான விதத்தில் எங்களிடமிருந்தும் இந்த உலகத்திலிருந்தும் அவள் விடைபெற்றுச் சென்றுவிட்டாள்!"

இப்படிச் சொல்லி விட்டு, முகத்தைப் பொத்திக் கொண்டு அழுதே விட்டாள் மதுமிதா.

இதனால்,

பிரசன்னா பதறிப் போனான்.

சிறிது நேரம் வரையில் வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் பேசாமல் அழுது கொண்டிருந்தாள்.

பிரசன்னா தான் மீண்டும் பேச ஆரம்பித்தான்.

"உங்கள் சோகம் எனக்கு புரிகிறது மது, சரி உங்கள் தங்கைக்கு என்ன நடந்தென்று சொல்லுங்கள் பார்ப்போம்... அந்த சோகத்தை கேட்க வேண்டும் போலிருக்கிறது!"

(இளமை வளரும்)

## கொலைகாரனைக் கண்டுபிடித்தால் பரிசு!

கொல்லுவதோ இளமை தொடர்கதையை வாசித்துக் கொண்டு வரும் வாசகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி.

ஆமாம்,

இந்த துப்பறியும் கதையில் கொலைகாரன் யார் என்று கண்டு பிடித்து எழுதும் வாசகர்களில் மூன்று பேருக்கு நம் நாட்டு எழுத்தாளர்களின் விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

நீங்கள் செய்ய வேண்டியது கொலைகாரன் யார் என்று கண்டுபிடித்து எழுதி அனுப்புவது மட்டும்தான். ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதமுடியும்.

**கொலைகாரனை கண்டுபிடியுங்கள் நூல்களை பரிசாக வெல்லுங்கள்**

அனுப்பவேண்டிய முகவரி:

**கொல்லுவதோ இளமை**
தினகரன் வாரமஞ்சரி லேக்ஹவுஸ்
கொழும்பு10.




# படித்ததும் பகர்வதும் 93



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### உழைப்பாளர்கள் தினம்!

இன்று மே தினம். உலக உழைப்பாளர்கள் தினம். தொழிலாளர்களின் நலன்களை அபிவிருத்தி செய்வதற்கும், அவர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கும், மறுக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்கும், தொழிலாளர்களின் குடும்பத்தினதும், குடும்ப உறுப்பினர்களதும் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கும் அவசியமான செய்ற்பாடுகளைச் செய்யவும், பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ளவும் உரிய தினமாக இத்தொழிலாளர் தினம் அமைய வேண்டும்.

ஆயினும் நடைமுறையில் இவ்வாறு நடைபெறுகின்றதா? மே தினங்களில் எடுக்கும் தீர்மானங்களில் எத்தனை அமுல் செய்யப்படுகிறன? இத்தினத்தின் செயற்பாடுகளினால் தொழிலாளர்கள் நன்மை அடைகிறார்களா? என்பன இன்றும் கேள்விக்குறிகளாகவே இருக்கின்றன.sse

கடந்த கால நிகழ்வுகளை எடுத்து நோக்கும் போது,



அரசியல் கட்சிகள் தமது பலத்தை காட்டவும், தமக்குரிய ஆதரவை பெருக்கிக் கொள்ளவும், தமது உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளவுமே இத்தினத்தை பெருமளவில் பயன்படுத்திக் கொள்வதைக் காண முடிகிறது.

தொழிற்சங்கங்களும் இவற்றுக்கு விதிவிலக்காக இருப்பதாகத் தெரியவில்லை. தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு, சம்பள முரண்பாடுகளுக்கான தீர்வு, மேலதிக கொடுப்பனவு, தொழிலாளர்களின் ஓய்வூதிய கொடுப்பனவு போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் நிரந்தரமான தீர்வுகள் காணப்பட்டுள்ளதாகவும் தெரியவில்லை.

அவ்வப்போதைய அரசாங்கங்களும் காலத்துக்கேற்ற வகையில் மே தின கூட்டங்களின் போது வாக்குறுதிகள் வழங்குகின்றனவேயன்றி அவற்றில் பெரும்பாலானவை நிறைவேற்றப்படுவது அரிதாகவே உள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பின் இழுபறியான விடயத்தை இதற்கொரு சிறந்த உதாரணமாக குறிப்பிடலாம்.

இத்தகைய நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு, தொழிலாளர்களின் நன்மையான தீர்வுகள் நடைமுறைப்படுத்தப்படும் நாளாக இத்தொழிலாளர் தினமாகிய மே தினம் அமையுமாயின் அதுவே இத்தினத்தின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றியதாக இருக்கும்.

உலகமெங்கும் வாழும் உண்மையான, நேர்மையான உழைப்பாளர்கள் அனைவருக்கும் எமது தொழிலாளர்கள் தின நல் வாழ்த்துக்கள்!

## நெஞ்சுக்கு நீதி

உழைக்கும் கரங்கள்தாம் என்றும் உயர்ந்த கரங்கள்
உணர்ந்து உழைத்தாலே வளரும் நாட்டின் வளங்கள்
உழைப்போரின் உரிமைகளை சரியாக வழங்குங்கள்
உலகமே உயர்வடையும் வழங்குனரே விளங்குங்கள்

## நெஞ்சோடு நெஞ்சம்

### 'ஈதுல் பித்ர்' நோன்புப் பெருநாள்!

மனிதர்களின் பண்புகளை பட்டைத் தீட்டி, மாண்புறு மானிடர்களாக அவர்கள் வாழ்வதற்கான பயிற்சியை வழங்கிய முஸ்லிம்களின் புனித ரமழான் நோன்பு மாதம் முடிவடைந்து, 'ஈதுல் பித்ர்' நோன்புப் பெருநாளை கொண்டாடுவதற்கு முஸ்லிம்கள் தயாராகிக்கொண்டு இருக்கிறார்கள்.



முதலாவது நோன்புக்கு முந்திய தினம் இருந்த தமது நடத்தை, பண்புகள், எண்ணங்கள் என்பவற்றில் சீரான, சிறப்பான, நல்ல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தால் மட்டுமே இந்த ரமழான் நோன்பு மாதத்தின் நோக்கம் நிறைவேறியதாக இருக்கும் என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் புரிந்து கொள்ள வேண்டும்.

அத்தகைய நல்ல மாற்றங்களோடு, நல்லவர்களாக, தம் குடும்பத்தாருக்கும், சமுதாயத்துக்கும், முழு நாட்டுக்கும் நல்லோர்களாக வாழ இந்த ரமழானில் பெற்ற பயிற்சியை பயன்படுத்த வேண்டியது ஒவ்வொரு இஸ்லாமியர்மீதுமுள்ள பொறுப்பாகும். இதனை தம் மனதில் ஆழப்பதித்து மனிதப் புனிதர்களாக வாழ ஒவ்வொரு முஸ்லிமும் உறுதி கொள்ள வேண்டும்.

முஸ்லிம்கள் அனைவருக்கும் முன்கூட்டியே 'ஈதுல் பித்ர்' ஈகைத் திருநாள், நோன்புப் பெருநாள் நல் வாழ்த்துக்கள்.

## புது வரவு

### 'நீங்களும் எழுதலாம்'

திருகோணமலையிலிருந்து எஸ். ஆர். தனபாலசிங்கம் வெளியிடும் 'நீங்களும் எழுதலாம்' எனும் இருமாத கவிதை இதழின் 31 வது (ஜனவரி, பிப்ரவரி 2022) இதழ் வெளிவந்துள்ளது. வித்தியாசமான வடிவத்தில் வித்தியாசமான அளவில் (10 செ.மீ X 24 செ.மீ)கவிதைகளுக்காகவே இச்சிற்றிதழ் வெளிவருவது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.




'ஞானம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி. ஞானசேகரனின் என்பதாவது அகவையை முன்னிட்டு கடந்த இருபது வருடங்களில் (2000 முதல் 2020 வரை) வெளிவந்த நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை, பழந்தமிழ் ஆய்வு, சிற்றிதழ் என ஆறு பிரிவுகளாக நடாத்தப்பட்ட மாபெரும் இலக்கியப் போட்டியில் 'சிற்றிதழ்' பிரிவில் 'நீங்களும் எழுதலாம்' ஆறுதல் பரிசைப் பெற்றுக்கொண்டுள்ளது.

'நீங்களும் எழுதலாம்' 31வது இதழில் சுமார் இருபத்தைந்து கவிதைகளும், நூல் அறிமுகம் உட்பட சில கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இளம் எழுத்தாளர்களுடன் மூத்த இலக்கியவாதிகளும் இச்சிற்றிதழில் பங்களிப்புச் செய்வது பாராட்டுக்குரியது.

இதழ்: **நீங்களும் எழுதலாம்,** ஆசிரியர்: **எஸ். ஆர். தனபாலசிங்கம்,** விலை: **ரூபா. 100/00,** தொடர்புகளுக்கு: **0778812912**

## சிந்தனை செய் மனமே

### மனிதம் சாகவில்லை

அந்தக் கிராமத்தில் உள்ள சிறிய ஹோட்டல் அது.

ஒரு சின்னஞ் சிறுமி கையில் சிறிய தூக்குவாளியுடன் வந்து, "அண்ணா...! அம்மா பத்து இட்லி வாங்கி வரச் சொன்னாங்க! காசு நாளைக்கு தருவாங்களாம்" என்றாள்.

உடனே ஹோட்டல் நடத்துபவர் சிறுமியிடம், "ஏற்கனவே கணக்கு நிறைய பாக்கி இருக்கும்மா. அம்மாக்கிட்டே சொல்லி கூடிய சீக்கிரம் தரச்சொல்லும்மா." என்று கூறியவாறு தூக்குவாளியை வாங்கி சாம்பார் ஊத்தினார்.,

பின்னர் பத்து இட்லியையும் பார்சல் செய்து, அந்த பார்சலையும், சாம்பார் நிறைத்த தூக்குவாளியையும் அந்த சிறுமியிடம் கொடுத்தார்.

அதனைபெற்றுக்கொண்ட சிறுமி, "சரி அண்ணா! நா அம்மாட்ட சொல்றேன்.போயிட்டு வரேன் அண்ணே" என்று சொன்னவாறே மகிழ்ச்சியோடு கிளம்பிச் சென்றாள்.



'நிறைய கடன் வைத்திருப்பதாகச் சொன்னாலும் மீண்டும் கேட்ட இட்லியை அப்படியே கொடுக்கிறாரே! ஏன்?' எனக்குப் புரியவில்லை.

அந்த கடையில் நான் வாடிக்கையாய் சாப்பிடுவது வழக்கம். அதனால் ஹோட்டல் நடத்துபவரிடம் நான் நேரடியாகவே கேட்டேன்.

"நிறைய பாக்கி வச்சிருக்கிறதா சொன்னீங்க. அப்படி இருக்க ஏன் மறுபடியும் அவ கேட்டத அப்படியே கொடுக்குறீங்க. காசு கிடைக்குமா?".

ஹோட்டல் நடத்துபவர் அமைதியாகச் சொன்னார்,

"அட சாப்பாடுதானே சார்.நான் முதல் போட்டுத்தான் கடைய நடத்துறேன். இருந்தாலும் இது மாதிரி குழந்தைகள் வந்து கேட்கும்போது கொடுக்காம இருக்க மனசு வரல சார்.அதெல்லாம் அவங்க குடுத்துடுவாங்க. என்ன கொஞ்சம் லேட் ஆகும்.எல்லாருக்கும் பணம் லேசாவா சம்பாதிக்க முடியுது? குழந்தை பசியால் கேட்டிருக்கும். அதான் சார் அனுப்பி இருக்காங்க. நான் எப்படியும் கொடுத்துடுவேன் அப்டிங்கற நம்பிக்கைதான் சார். அவங்க நமபிக்கைய நா பொய்யாக்க விரும்பல சார்".

அவர் மேலும் சொன்னார், "இது நா உழைச்சி சம்பாதிக்கிற காசு.கட்டாயம் வந்துடும் சார்.ஆனா இப்போதைக்கு அந்த குடும்பம் சாப்பிட்டு அவங்கட பசி போகுதெல்ல, அதுதான் சார் முக்கியம்".

அவரது பதில் என்னை திகைக்க வைத்தது. இந்தக் காலத்திலும் இப்படி ஒரு மனிதரா?'இந்த உலகில் இன்னும் மனிதம் சாகவில்லை. இவரைப் போன்றவர்களால்தான் இன்றும் உலகில் காலத்துக்கு மழை பெய்கிறது போலும்!'

நான் எனக்குள் நினைத்துக் கொண்டேன்.

## செந்தமிழ் அது தேன் தமிழ்

### கணவனுக்கு இத்தனை பெயர்களா?

கணவன் என்னும் சொல்லுக்கு தமிழில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும் பல்வேறு பெயர்கள் இவை:

| | |
|---|---|
| 1) பதி | 31) மணவாளன் |
| 2) இல்லவன் | 32) கண்ணாளன் |
| 3) ஆள் | 33) ஆளான் |
| 4) கொழுனன் | 34) உற்றான் |
| 5) கிழவன் | 35) அன்பன் |
| 6) ஆளன் | 36) இல்லாளான் |
| 7) இல்லாளன் | 37) கொண்டவன் |
| 8) உரியவன் | 38) கேளவன் |
| 9) வரன் | 39) இற்கிழவன் |
| 10) அகமுடையான் | 40) கொண்டகன் |
| 11) உடனிகழ்வான் | 41) கோமகன்தவண் |
| 12) கண்டன் | 42) இறை |
| 13) ஆம்படையான் | 43) தலைவன் |
| 14) தலைமகன் | 44) மன் |
| 15) வல்லவன் | 45) ஐ |
| 16) வீட்டுக்காரர் | 46) நாயகன் |
| 17) தம்போன் | 47) நாச்சியன் |
| 18) வல்லவர் | 48) பாதி |
| 19) ஆத்துக்காரர் | 49) அல்நுகன் |
| 20) குடும்பி | 50) மைந்தன் |
| 21) கண்வாளர் | 51) கூந்தற்கிழவன் |
| 22) என்னவன் | 52) ஆம்பான் |
| 23) தாட்டான் | 53) விழைந்தோன் |
| 24) தற்கொண்டான் | 54) வேட்கைதுணைவன் |
| 25) மனையான் | 55) இயமான் |
| 26) மகிணன் | 56) வேட்டான் |
| 27) ஆர்வலன் | 57) உயிர்க்கிழவன் |
| 28) மணாளன் | 58) இல்லான் |
| 29) பத்தன் | 59) கூந்தற்கிழவர் |
| 30) அகவாளன் | 60) கேள்வன் |

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# காலம் கடந்தும் தேசம் கடந்தும் யாவருக்கும் பொருந்துவது



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மானந்தன் 05

திருக்குறளிற்கு எழுதப்பட்ட பழைய உரைகளைப் பார்க்கின்றபோது மணக்குடவர் உரை இயல்பாகவும் எளிமையாகவும் அமைந்துள்ளதையும் பரிப்பெருமாள் உரை பெரிதும் மணக்குடவரைச் சொல்லிலும் பொருளிலும் தழுவிச் செல்வதையும் பரிதியார் உரை பல இடங்களில் மூலத்தோடு தொடர்பில்லாமல் தனித்து நிற்பதையும் காலிங்கர் உரை நல்ல நடையழகோடு அமைந்திருப்பதையும் பரிமேலழகர் உரை செறிவும் நுண்மையும் இலக்கணத் திட்பமும் உடையதாய் இருப்பதையும் காணலாம் என்பது பெரியோர்களின் கருத்து.

திருக்குறளிற்கு உரை எழுதுகின்றபோது சமண, பௌத்த, வைதிக சைவ, வைணவ, அத்வைத, துவைத, கிருத்தவ, சாங்கிய, பகுத்தறிவு, இயற்கை நெறி, காந்திய, பொதுவுடைமை நோக்கில் என்று பலரும் பலவிதமாக உரை எழுதி இருக்கிறார்கள். சமயம் சார்ந்து உரை எழுதியவர்கள் தாம் சார்ந்த சமயங்களின் கோட்பாடுகளின் சித்தாந்தங்களின் பார்வையில், குறளை மறு விளக்கம் அளித்துக்கொண்டார்கள். சார்புகளே அற்ற குறளை, விரும்பியோ விரும்பாமலோ, சார்பு நூல் ஆக்க முயற்சித்திருக்கிறார்கள் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. உதாரணமாக சேக்கிழார் வைணவர், பரிதியார் சைவர் மணக்குடவர், காளிங்கர் ஆகியோர் சமணர் என்பதனால் அவர்களின் உரைகளில் அவர்கள் சார்ந்த சமயக் கருத்துக்கள் மேலோங்கி இருப்பதைக் காணலாம் .

முதலாம் அதிகாரத்தில் போற்றப்பட்டிருப்பவன் ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான், இறைவன் என்று விபரிக்கப்பட்டுள்ளான். வெவ்வேறு சமயப் பிரிவினைச் சேர்ந்தவர்களும் இங்கு கூறப்பட்டுள்ள விபரிப்புக்கள் இன்ன இன்ன கடவுள்களுடன் அல்லது இன்ன சமய நம்பிக்கைகளுடன் அல்லது இன்ன இன்ன சமய போதனையாளனுடன் ஒத்துப் போவதால் திருக்குறளானது இன்ன இன்ன சமயம் சார்ந்தது என்ற கருத்தினை முன்வைத்து, ஜைனம், சைவம், வைணவம், வைதீகம், பௌத்தம் எனச் சகல சமயங்களுடனும் இணைத்துக் கூறுவதைக் காணலாம் .

ஆயினும் இன, மத ,மொழி, சாதி, சமூக, பாலின, கால, தேச பேதங்களின்றி காலம் கடந்தும் தேசம் கடந்தும் யாவருக்கும் பொருந்துவது போல் கூறி உள்ளதால் பொதுமறை எனப்படும் திருக்குறள் குர்ரானுக்கும் பைபிளுக்கும் அடுத்ததாக நூற்றேழு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்ற பெருமைக் குரிய சமயச்சார்பற்ற இலக்கிய நூலாகும்.திருக்குறள் ஒரு வகுப்பாரிற்கோ, ஒரு மதத்தாரிற்கோ, ஒரு நிறத்தாரிற்கோ,ஒரு மொழியாரிற்கோ, ஒருநாட்டாரிற்கோ உரியதன்று அது மனித உலகுக்குப் பொது என்கிறார் திரு வி.க அவர்கள்.



எம்மதமும் எவ்வினமும் எந்நாளும் சம்மதம் என்று ஏற்கும் தமிழ்வேதம் திருக்குறள் என்று சுத்தானந்த பாரதியார் கூறுகின்றார். திருவள்ளுவரின் சிந்தனைகள் எக்காலத்துக்கும் உலக மக்கள் அனை வருக்குமே எந்தவித வேறுபாடும் இல்லாமல் உதவும் வகையில் இருக்கின்றன என்பதனால்த்தான் திருக்குறள் உலகப் பொதுமறை எனப்படுகிறது.

திருக்குறளின் முன்னோடியாக புறநானூறும் அதன் விளக்கமாக நாலடியாரும் அதன் பெருமையை கூறுவதாக திருவள்ளுவ மாலையும் அதன் சாரமாக நீதிநெறி விளக்கமும் அதன் ஒழிபு ஆக திருவருட்பயனும் இருப்பதாக தமிழ் அறிஞர்கள் கூறுகின்றார்கள். மேலும் சிவசிவ வெண்பா, தினகர வெண்பா, வட மலை வெண்பா போன்ற பல நூல்களும் திருக்குறளின் பெருமையைக் கூறுவதைக் காணலாம்.

### முகாமைத்துவம் எனப்படுவது

முகாமைத்துவம் என்பது தனி வாழ்வில், குடும்பவாழ்வில், பொதுவாழ்வில், தொழில்சார்வாழ்வில் தேவைப்படுகின்ற ஒன்றாகும். சுருக்கமாக செய்வன திருந்தச்செய் என்று முகாமைத்துவத்தைக் கூறலாம். அதாவது எத்தகைய ஒரு காரியத்தையும் வெற்றிகரமாக திருத்தமாகச் செய்து முடிக்கவேண்டும். அப்போதுதான் ஒருவரது தனிப்பட்ட வாழ்க்கையோ, குடும்ப வாழ்க்கையோ, பொதுவாழ்க்கையோ, தொழிசார் வாழ்க்கையோ வெற்றிகரமாக அமையும். எனவே வெற்றி பெறுவதற்கு சிறப்பான முகாமைத்துவம் தேவைப்படும். சிறப்பான முகாமைத்துவம் இருந்தால்த்தான் வீடோ நாடோ அல்லது ஒரு நிறுவனமோ சிறப்பாக இருக்கும். பொதுவாக முகாமைத்துவம் எனும் போது தொழிசார் முகாமைத்துவத்தையே அதாவது நிறுவனம்சார் முகாமைத்துவத்தையே கருதுவது வழக்கம்.

இந்தவகையில் முகாமைத்துவம் எனும் சொல் ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களைக் கொண்டு அந்நிறுவனத்தின் சகல வளங்களையும் பயனுறுதிமிக்கதாக முறையாகப் பயன்படுத்தி அந்நிறுவனத்தை வெற்றிகரமாக வழி நடத்திச்செல்ல எடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளையும் விபரிக்கும். ஒரு நிறுவனத்தில் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுபவரே முகாமையாளர் எனப்படுவார். ஒரு நிறுவனத்தின் வளங்கள் எனச் சொல்லப்படுவது அந்த நிறுவனத்தில் காணப்படும் மனிதவளம்,நிதி வளம், பொருள் வளம், புலமைசார் வளம், கட்புலனாகா வளம் ஆகிய எல்லா வளங்களையும் குறிக்கும்.

முகாமைத்துவம் பற்றி பல்வேறு அறிஞர்களால் காலத்திற்கு காலம் பல்வேறு வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேரி பார்க்கர் ஃபாலட் (Mary Parker Follet 18681933) என்பவரே முகாமைத்துவத்திற்கான முதலாவது வரைவிலக்கணத்தை முன்வைத்தவராவார். இவரின் கருத்தின்படி முகாமைத்துவம் என்பது "ஊழியர்களைக் கொண்டு கருமங்கள் ஆற்றுவிப்பது தொடர்பான செயற்பாடாகும்".

பொதுவாகவே முகாமையாளர் ஒரு வேலையை அல்லது பணியை தாமே செய்வதில்லை மாறாக அவர் அந்த பணி யாரால் சிறப்பாக செய்யப்பட முடியும் என்பதை இனம் கண்டு முடிவு செய்து அவரிடம் அப்பணியை ஒப்படைக்கிறார். அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட நபரே அந்தப் பணியைச் செய்து முடிக்கிறார். முகாமையாளரைப் பொறுத்த வரையில் ஒப்படைக்கப்பட்ட அந்தப் பணி உரிய முறையில் செய்து முடிக்கப்படுகிறது.இதனையே மேரி பார்க்கர் ஃபாலட் தனது வரைவிலக்கணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேரி பார்க்கர் ஃபாலட்டைத் தொடர்ந்து காலத்திற்கு காலம் பலரும் முகாமைத்துவத்திற்கு பலவித வரைவிலக்கணங்களை அளித்துள்ளனர். இறுதியாக ஒரு நிறுவனத்தில் அந்நிறுவனத்தை வெற்றிகரமாக இயக்குவதற்காக "முகாமையாளர் என்னவெல்லாம் செய்கின்றாரோ அதுவே முகாமைத்துவம்" எனப் பொருள்படுத்தியுள்ளனர். இதற்கு காரணம் நிகழுலகில் முகாமைத்துவம் தொடர்ந்தும் வளர்ந்துவரும் ஒரு துறையாக இருப்பதுடன் பல்வேறு முகாமைத்துவ மட்டங்களுக்கிடையே ஆற்றப்படும் கருமங்களில் அல்லது செயற்பாடுகளில் வேறுபாடுகள் காணப்படுவதும் ஆகும்.

சில முகாமைத்துவ வரைவிலக்கணங்கள் பின்வருமாறு,

"மற்றையவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைச்சரியாகத் தெரிந்து கொண்டு அவர்களைக் கொண்டு அந்தவேலைகளை சிறந்த மற்றும் மலிவான வழிகளில் செய்விக்கும் கலை முகாமைத்துவம் ஆகும் " (Frederick Winslow Taylor 1856 – 1915).

"குறைந்தபட்ச முயற்சியின்மூலம் அதிகபட்ச முடிவுகளைப் (விளைவுகளை) பெற்று முதலாளி தொழிலாளிக்கு வளம் சேர்ப்பதுடன் பொதுமக்களுக்கும் சிறந்த சேவையை வழங்கும் கலை முகாமைத்துவம் ஆகும்" (John F. Mee 19372014).

"ஆட்கள் ,பொருள்கள் மற்றும் பணம் என்பவற்றை ஒருங்கிணைத்து ஒரு பயனுள்ள இயக்க அலகாக மாற்றுவதற்காக நிறுவனத்தின் நிர்வாகம் முகாமைத்துவம் மீது மையப்படுத்தப்பட்டுள்ளது". ( Donald J. Wheeler 1944)

"முகாமையாளர் உரிய முறையில் ஒரு செயலிலோ அல்லது செயல்களிலோ ஈடுபடுவது நிறுவனத்தின் குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கேயாகும்".(Peter Ferdinand Drucker 1909 –2005 ) .அதாவது நிறுவனத்தின் பணியாளர்களையும், வளங்களையும் கொண்டு தகுந்த திட்டங்கள் மூலமாகவும் ஒழுங்கமைப்பு மூலமாகவும் உரிய ஊக்குவிப்பு மூலமாகவும் கட்டுப்பாடுகள் மூலமாகவும் அந்நிறுவனத்தின் நோக்கங்களை நிர்ணயித்து அவற்றை அடையும் முகமாக செயற்படும் செயற்பாடு முகாமைத்துவம் எனலாம் .

எனவே மேற்கூறப்பட்ட வரைவிலக்கணங்களிலிருந்து முகாமைத்துவம் என்பது ஒரு செயல்முறை என்று விளங்குகின்றது அதாவது ஒரு நிறுவனத்தின் முகாமையாளரின் நடவடிக்கைகள் அல்லது செயல்பாடுகளின் தொகுப்பே முகாமைத்துவம் ஆகும் .இன்னும் கூறுவதானால் முகாமைத்துவம் என்பது ஒரு நிறுவனத்தில் வேலைகளைச் செய்விக்கும் ஒரு முறை அல்லது, அந்நிறுவனத்தின் நோக்கங்களை, இலக்குகளை, குறிக்கோள்களை அடைவதற்கான ஒரு பொறி முறையாகும்.

**(தொடரும் )**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 01 திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

236

### விதைகள், செடிகள் விற்பனைக்கு

கெவன்டிஷ் வகை வாழைக் கன்றுகள் விற்பனை செய்வதற்கு இழைய ஒட்டு செய்யப்பட்ட கெவன்டிஷ் வகை வாழைக் கன்றுகள் ரூ. 80.00 வீதம் விற்பனைக்கு உண்டு. குறைந்தபட்ச ஓடர் 500 கன்றுகள். 011 2809337, 077 4090988. 028153

## வேலைவாய்ப்பு

308

### வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

அம்பலங்கொடைக்கு அருகில் வியாபாரஸ்தலத்திற்கு ஊழியர்கள் தேவை. சிங்களம் பேசக்கூடிய மற்றும் சிங்களம் வாசிக்கக் கூடியவர்கள் அழையுங்கள் 0912257083. 028307

விற்பனை முகவர்கள் தேவை! நெஸ்கோ என்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு வயது 18 50 அனுபவமுள்ள அல்லது பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். அடிப்படைச் சம்பளத்துடன் ரூபா 50,000/ இற்கு மேல் கவர்ச்சிக ரமான சம்பளம். உடன் அழைக்கவும். 0777263954, 076 7639155. முகவரி 29/5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலான. 026227

318

### வெற்றிடங்கள் டிரைவர்கள்

நெஸ்கோ என்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு கனரக வாகன சாரதியர் தேவை. சம்பளம் ரூபா 45,000/ இற்கு மேல் இரத்மலான , களுத்துறை, நீர்கொழும்பு பிரதேச சாரதியர்களிற்கு முன்னுரிமை முகவரி. இல. 29/ 5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலான. அழைக்கவும். 0777263954, 0767639155 026229

319

### வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

காணியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு 50 வயதிற்கு குறைவான பெண் தேவை. அன்புடன் பார்த்துக் கொள்ளப்படும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும். 0773663978/ 0712181811. 027978

கொழும்பினை வசிப்பிடமாகக் கொண்ட இயக்குநர் ஒருவரின் வீடு ஒன்றுக்கு சமையல் மற்றும் வீட்டு வேலைகளை செய்வதற்கு ஆண் ஊழியர் ஒருவர் தேவைப்படுகிறார். சம்பளமானது பேசித்தீர்மாணிக்கப்படலாம். please Contact 0777 703050. 028788

பிலியந்தலை எமது வீட்டில் சுத்திகரிப்பு விடயங்களுக்கு தங்கி வேலை செய்யக்கூடிய பெண் தேவை. சம்பளம் 45000/ தயவு செய்து அழையுங்கள் 0718699 903. 028419

320

### வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

ரெஸ்டூரன்ட் ஒன்றிற்கு பயிற்சி பெற்ற/ பெறாத ஊழியர்கள் தேவை. கோக்கி, கிச்சன் ஹெல்பர், வெயிட்டர். கம்பஹா, சீதுவ வீதி. 077514 3 538. 027835

Mr.Barger உணவகத்தில் kitchen மற்றும் Restaurant இல் பணிபுறிய வேலையாட்கள் உடனடியாகத் தேவை. தங்குமிட வசதி உண்டு. உடனே தொடர்பு கொள்ளவும். 077 1232227. 027359

321

### வெற்றிடங்கள் தோட்டத்துறை

குருநாகல் மாவட்டத்தில் தென்னந் தோட்டத்திற்கு டிரக்டர் டைவர் மற்றும் தொழிலாளர் தேவை. வீட்டு மின்சாரம் வழங்கப்படும். சம்பளம் பேசித்தீர்க்கலாம். தொடர்பு 077 7715501. 028098

தேவை. பன்றிப் பண்ணைக்கு ஊழியர்கள் தங்கி வேலை செய்யக் கூடியவர்கள் தங்குமிடம் இலவசம். சம்பளம் 50, 000/ S.N. பிரதர்ஸ் உல்லலபொல, திவுலப்பிட்டிய . 0777 780587. 028332

322

### வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

கட்டிடம் மட்டும் தளத்திற்கு கார்பென்டர்களுக்கான காலியிடம். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு கொள்ள குவேந்திரன் 0773960218. 028128

325

### தொழில்துறை பொது

சுத்தம் செய்தல் சேவைக்காக பணிப்பெண் தேவை. அதியுயர்ந்த சம்பளம் தொடர்பெண் 0760989129. 0714358475, 077 9975105. லோட்டஸ் கிளினீங். 028480

## பொது

406

### தளபாடங்கள் விற்பனைக்கு

ஒரு வங்கிக்கு சொந்தமான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் இருப்பு 20KVA ஜெனரேட்டர் உட்பட (மிகவும் நல்ல நிலையில் உள்ளது) காத்தான்குடி டவுனில் விற்பனைக்கு உள்ளது. ஆய்வுக்கு 076 6622833 என்ற எண்ணிற்கு அழைக்கவும். 028646

பயன்படுத்திய தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொழும்பில் (மருதானை) வங்கிக்கு சொந்தமானது விற்பனைக்கு உள்ளது. மேலதிக ஆய்வுக்கு 076 6622833 என்ற எண்ணிற்கு அழைக்கவும். 028645

## காணி/தோட்டம்

617

### வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கம்பஹா, அஸ்கிரிவல்பொல முழுமையாக 26 பேர்ச் வீடு விற்பனைக்கு. (முழுமையான டைல், 3 அறைகள், 2 இணைந்த குளியலறை, Living Room 1, Dining Room 1, களஞ்சிய அறை, Car Park, கிணறு , கேட், சகல வசதிகளுடன், 1/90 கோடி (190/ லட்சம்). 0775 143 5 3 8. 027834

641

### வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

தெஹிவளை மூன்று படுக்கையறைகளுடன் வீடு, மண்டபம், பென்றி, , டெராசோ, வாகன நிறுத்துமிடம் காலி வீதிக்கு அருகில். தொடர்பு 077 9502080. 028198

## திருமண சேவைகள்

### மணமகள்

கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த மிகவும் கௌரவமான முஸ்லிம் குடும்பத்தை சேர்ந்த நன்கு படித்த ஆங்கில புலமையும், அழகான இளமை தோற்றமுமுள்ள 29 வயது மணமகளுக்கு உயர் கல்வி தகைமை உடைய மணமகன் ஒருவரை எதிர்பார்க்கிறோம். தொடர்புகளுக்கு officeal42@gamil.com WhatsApp No - 0714944392 011-5067096 (இரவு 9.30 மணிக்கு பின்பு) B179280

### மணமகன்

வெளிநாடு சென்றுள்ள கணனிப் பொறியியலாளரான சகோதரருக்கு பிள்ளைகளற்ற விதவை அல்லது விவாகரத்தான சிங்களம் அல்லது ஆங்கிலம் நன்றாக கதைக்கக் கூடிய பௌத்த, இந்து அல்லது முஸ்லிம் துணைவியை சகோதரி தேடுகிறார். தொடர்புகள் ஜாதகத்தின் பிரதிகளுடன் newdad30@hotmail.com G179543

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845







Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342

நோன்புப் பெருநாள் சிறுகதை

# வெளிச்ச விடியல்...

வலது கை ஆட்காட்டி விரலில் மீத மிருந்த சுண்ணாம்பை மின் கம்பத்தில் தேய்த்து விட்டுப் பெயர் தெரியாத அந்தப் பெரிய மரத்தின் வேராசனத்தில் அமர்ந்தார் வெத்தல குதம்பிச் சித்தர்.

சேற்றுக்கானில் வெற்றிலைச் சாற்றைத் துப்பினார். தோளில் கிடந்த துணிப்பைக்குள்ளிருந்த அப்துற்றஹீமின் 'எண்ணமே வாழ்வு' என்ற புத்தகத்தை வெளியே எடுத்தார்.

சந்தோஷ் தேநீரும் பணிஸும், வாழைப்பழமும் கொண்டு வந்து வைத்தான். முன்னால் இருந்த தெருவோரக் குழாயில் வாயைக் கொப்பளித்தார். தேநீரைக் குடிக்கத் தொடங்கினார். மின் கம்பக் 'கண்ணீர் அஞ்சலி' யில் தங்கராஜா சிரித்துக் கொண்டிருந்தார்.

"அஞ்ஞானம் விட்டே அருள் ஞானத் தெல்லை தொட்டு மெய்ஞ்ஞான வீடு பெற்று வெளிப்படுவ தெக்காலம்...?"

பத்ரகிரியார் பாடலை சத்தமாகப் பாடினார். தங்கமான ராஜாவாக இருந்தாலும் இங்கே யாருமே நிரந்தரமாகத் தங்க முடியாது ராஜா!

போக மாட்டேன் என்று அடம்பிடித்து இந்த பூமியில் தங்கியவர்யாருமே கிடையாது. இது சத்திரம் தங்குமடம். சிறு கொசுவின் இறக்கைக்கு ஒப்பானது. என்ற அநித்தியச் சிந்தனை அலைமோதியது.

"நிறந்தரும் நிலமிது!
நிரந்தர மிலையிது!
உதிர்ந்திடு மிலையிது!" தானெழுதிய பாட்டையும் ஒருமுறை பாடிப்பார்த்தார்.

"ஐயா....!'

குரல் கேட்டு நிமிர்ந்தார் வெத்தல குதப்பிச் சித்தர்.

காரிலிருந்து இறங்கி வந்த கொண்டிருந்தான் நாஸிக்!

'அடடா... நம்ம நவாஸ் தொர...!'

'வணக்கம் ஐயா'

'வணக்கம் வணக்கம்... வாராசா!'

'எப்படி ஐயா... சுகமா இருக்கிறீர்களா?' கேட்டான் நாஸிக்.

'நல்ல சுகம் ராசா... நீ என்ன கத?"

'தெரிந்ததைச் செய்னு சொல்லித் தந்தீங்க இப்ப

நீங்க எனக்குத் தந்த எங்கரேஜ்ல... என் கராஜில..

நாலு பேர் வேல செய்றாங்க ஐயா...'

'ரொம்ப சந்தோஷம்... ரொம்ப சந்தோஷம்...'

'இந்தாங்க ஐயா...!'

பார்சலை நீட்டினான்.

நோன்புக் பெருநாள் விருது. உங்களுக்கும் புது உடுப்பெடுத்தன் ஐயா... என்றவன் பணமும் தந்தான்.

'இதெல்லாம் எதுக்கு ராசா...' கண்கலங்கினார் சித்தர். லைப்ரரில ஒங்கட கதை சொல்லும் நேரத்துல வந்து சேரலைன்னா... நானும் போதை வஸ்துக் கூட்டாளி மாரோட கூடி இந்நேரம்... என் வாழ்க்கையே நாசமாகியிருக்கும் ஐயா... நீங்க குரு ஐயா...'

'இன்னொருவருக்கு ஒப்படைக்கிற விஷயங்களத்தான் இறைவன் ஒவ்வொருத்தருக்கும் ஒப்படைத்திருக்கிறான். பணம், பதவி, கல்வி.... இதையெல்லாம் நம்ம கூடவே வெச்சுக்கப் படாது... நம்ம கூடவே இருக்கிற நாலு மனுஷருக்கு அதால பலன் கிடைக்கணும்...' 'மனித நேயம் மட்டும்தானே ஐயா... ஒங்கட உயிர் மூச்சு' 'ராசா ஒங்க வாப்பா நவாஸ் இருக்கிறானே... அவனும் நானும் சேர்ந்து நெறய சமூக சேவ செஞ்சம்.. ஒங்க வாப்பா சொல்லுவான்... இரத்தமான சமூகத்த உருவாக்கப்படாது... இரக்கமான சமூகத்த உருவாக்கணும்னு. நான் கவிதைப் பைத்தியம்.

ஒரு நாள் ஒங்க ஊர் லைப்ரரிக்குக் கூட்டிட்டுப் போனார். இவர் பிள்ளைகளுக்கு நல்ல அறிவான கதைகள் சொல்லுவார். இவரப் பயன்படுத்துங்க. கதைசொல்லும் நேரம்னு ஒரு நிகழ்ச்சிய ஆரம்பிங்கன்னான். அந்த மெடமும் அத விரும்பினா. அப்ப தொடங்கின பயணம்...

'நான், ரவி, மகேஷ், தீபன், நுஸ்ரத், சலாம் எல்லாரும் அதுல வளர்ந்தவங்க தானே ஐயா..' என்றவன், 'நல்லம் ஐயா... பெருநாளைக்கு வீட்டுக்கு வாங்க ஐயா' என்றான்.

அவன் ஏறியதும் கார்க் கதவை மூடினார் வெத்தல குதப்பிச் சித்தர்.

சொற்ப கால வாழ்க்கை நிறையத் தொலைத்து விட்டோம் நேரத்தை! இன்னும் கடக்கவில்லை தூரத்தை! இந்த மண்ணில் 'மனித நேயம்' மட்டும்தான் வெற்றி பெறும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் வெத்தல குதப்பிச் சித்தர்.



கிழக்கிலொரு சிறிய கிராமம் தான் இவரது பூர்வீகம். பள்ளிப் பிடிப்பு கம்மி. நிறையப் புத்தகங்கள் வாசித்தார். நூலகம் என்றால் அப்படியொரு அதீத ஆர்வம் 'வெறுங்கையோன்' என்ற புனை பெயரில் கவிதைகள் எழுதினார். ஏறக்குறைய துறவி. தலைநகரில் தற்போது அவர் தன் பேத்தியின் வீட்டில் வாழ்ந்தாலும்... இந்த நாமல் உயன களனியாற்றுக் கரையோர மரவேர் மகராசாவாகி நான்கு வருடங்கள் ஆகின்றன. நிறைய இடங்களில் தொழில் செய்தார். எதிலும் நிரந்தரம் கிடையாது. கடந்த காலக் கவலைகளுமில்லை. வருங்காலப் பயமுமில்லை. இன்றுதான். நிகழ்காலம் ஒன்றுதான் மகிழ்காலம் என வாழும் ஒரு ஜீவன்.

மறுநாள் மாலை.

மூன்று மணிக்கே வந்து விட்டார்.

சந்தோஷ், அப்துல் அஸீஸ், தருஸ, சஞ்ஜூ, பெக்கம், ரிஸ்கான், கவிஷ்கர், பிரவீன், எல்லோரும் அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

'உலக நீதி யாருக்குப் பாடம்?' கேட்டார் வெத்தல குதப்பிச் சித்தர்.

'எனக்குப் பாடம் ஐயா...' சந்தோஷமாகினான். 'பாடிக்காட்டு சந்தோஷ்...'

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம். முழுதாகப் பாடி முடித்தான்.

'அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்' என்பதை மிக அழுத்திச் சொன்னார் சித்தர்.

ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், திருக்குறள், நாலடியார் என்று ஒருவர் பின் ஒருவராக சித்தரிடம் தாம் மனனித்த பாடங்களை ஒப்புவித்தார்கள்.

'சரி, நமது இம்மாத 'வெளிச்ச விடியல்' தலைவர் கவிஷ்கர்... வேல ஒழுங்கா நடக்குதா ராசா?' என்று கேட்டார் வெத்தல குதப்பிச் சித்தர்.

"ஓம்... ஐயா.. பாதி முடிஞ்சு பர்ஸானோட ஆச்சியும் வெளிநாட்டுல இருந்து காசு அனப்பினாங்களாம்..." என்றான் கவி.

"ஆமாம்... ஐயா' என்றான் பிரவீன்.

'எந்தக் குடும்பத்துக்கு...? தெரிவு செஞ்சாச்சா?'

"ஓம்... ஐயா... ரிஸ்கான்ட சாச்சிட மக'

'பெருநாளைக்கு மொதக் கொண்டு போய்க் கொடுத்திடனும் சரிதானே...?'

'சரி... ஐயா...'

'அவர் ஒரு யோகியோ... அல்லது அந்த வேஷத்துல அலையுற சிறுவர் துஷ்பிரயோகியோ...?' இப்படியும் அவரது காதுபட வந்த சொல்லடிகளும் ஏராளம். சிலர் குடித்து விட்டு வந்தும் அவரைத் தாக்கினார்கள்.

ஆனாலும்... எந்த ஆனாலும் அவரை அந்த இடத்தை விட்டும் விரட்ட முடியாமல் போயிற்று.

அவர் ஒண்ணும் கஞ்சா குடு ஐஸ் விற்கவரவில்லை. அறநெறிப் போதகராக... ஒரு சற்குருவாக... நம்ம பிள்ளைகளை மனிதநேயம்... மிக்கவர்களாக... நற்பிரஜைகளாக செதுக்க வந்த சிற்பி... என்ற பேருண்மையைப் புரிந்து கொண்ட அக்கிராமப் பெரியவர்கள்... அக்கிராம அநியாயங்கள் அழிக்க வந்த ஞானியாக... அவரை ஏற்றுக்கொண்டனர். எது நடந்ததோ அது நல்லதாகவே நடந்தது. நாமல் உயன நாலின மக்களும்... நல்லிண மக்களாக ஒற்றுமையாக அவர்களை ஒற்றுமையாக்க வெத்தல குதப்பிச்சித்தர் ஓர் அரணாக முன் நின்றார். அன்பால் ஊர் மக்கள் உள்ளத்தை வென்றார்.

'வெளிச்ச விடியல்' சிறுவர் முன்னேற்றச் சங்கம்' என்ற இந்த அமைப்பின் மூலம்.... வெத்தல குதப்பிச் சித்தரின் வழிகாட்டுதலில் நாமல் உயனச் சிறுவர்கள் செய்த சமூகப் பணிகளின் விபரங்கள் பின்வருமாறு

I. உடைந்த சைக்களில் மீன் வியாபாரம் செய்வதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருந்த மாணிக்கத்திற்குப் புதுச் சைக்கிள் ஒன்றை வாங்கிக் கொடுத்தனர்.

II. கொரோனாவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நபீலாவின் வீட்டுக்கு... அவள் குணமாகி வீடு வந்து சேரும் வரை 'மூன்று வேளைச் சாப்பாடு' அனுப்பி வைத்தனர்.

III ஜினதாஸ வீட்டுக் கூரை காற்றில் பறந்த போது... தகரங்கள் வாங்கிக் கொடுத்தனர்.

ஊர் மக்கள் ஆச்சரியத்தில் மூழ்கினர். இப்படியும் நடக்குமா?

நடந்ததே. நடந்தால் நடக்குமே!

ஒத்துழைப்புக்கு வெற்றி கிடைக்கும்.

மூளைச் சலவை மூலம்... எதையும் சாதிக்க முடியும். முதலில் தலைமைத்துவம் நீதமானதாகவும்....

செயலில் தீர்மானமானமாகவும் இருக்க வேண்டும்.

ஒரு காலமிருந்தது.

அஞ்சோ பத்தோ பந்தோ பஸ்தோ சேர்க்காத ஊர்த் தலைவர்கள் வாழ்ந்த காலம்...!

தியாகிகள்!

ஆனால்... இன்று

கடுக்கண் வாங்கின சுருக்கும்... அதக் காதுல மாட்டுன சுருக்கும். அத ஆட்டிப் பார்த்த சுருக்கும்... அது அறுந்து விழுந்து சுருக்கும்.. என்றாகிப் போச்சு! ஆசை. பேராசை. நாமல்ல, தாமாகியதால் தாமாகவே வீணாகினரே பலரும்... ஆங்காங்கே... வெவ்வேறு ஊர்களிலும்!

வெத்தல குதப்பிச் சித்தர்... தூர நோக்கு மிக்கவர். ஆசைகள் துறந்த மனசுகளை ஆழமாக அவதானிப்பவர்.

உலோபத்தனம் இருக்கிற உள்ளத்தில் மனித நேயம்... இரக்கம் இருக்காது என்ற உண்மையையும் பணிவு இல்லாதவர்களும் துணிவு இல்லாதவர்களும் பயன் தரப் போவதில்லை என்பதையும் மிக ஆழமாகக் கண்டறிந்தார்.

அடிப்படையாக முதலில் அடுத்தவர் பசியை உணரும் படிசெய்தார். வறியோர் எனக் குதவுகிற இரக்க குணத்தை, ஈகையின் இன்பத்தை சிறுவர்கள் அனுபவத்தால் உணர வேண்டும் என்று விரும்பினார்.

அடுத்தவர்க்கு எந்நாளும் உதவ வேண்டும்.... நம்மால் பிறரும் பிரச்சினைகள் இல்லாமல் இருக்க வேண்டும். இதற்கு என்ன வேண்டும்? மனித நேயம் வேண்டும். 'தன்னைப் போல பிறரை எண்ணும் தன்மை வேண்டுமே! அந்தத் தன்மை வர உள்ளத்திலே கருணை வேண்டும் என்ற பட்டுக் கோட்டையாரின் சமூக அக்கறை இவருக்கும் சர்க்கரை இனிப்பாய்த் தொடர்ந்தது பொது நலப்பணி.

கீதை, பைபிள், குர்ஆன் எல்லாம் அன்பைத்தானே சொல்கிறது. தீதை நாடிப் பாதை மாறி மனிதம் எங்கே செல்கிறது...? இப்படி... நாளைய சந்ததிக்கு நல்ல தலைமைத்துவங்கள் அமைவதற்குப் பேராசையற்ற கஞ்சத்தனமற்ற... மனிதநேயம் மிக்க... ஒழுக்கமான தலைமுறை இன்றிலிருந்தே உருவாக்கப்பட வேண்டும் என்ற முயற்சியில் மும்முர முனைப்புடன் செயற்பட்டார் வெத்தல குதப்பிச் சித்தர்.

சிறுவர்கள் கண்ணாடிப் பாத்திரங்கள். நாம் எதை வரைகின்றோமோ... அதைத்தான் அந்தக் கண்ணாடி பிரதிபலிக்கும்.

அந்த ஒரு வினாடி வரைதானே இந்த வாழ்க்கை? ஒரு தரம்! ஒரேயொரு தரம்!

கண் மூடினால்..

மண் மூடுமே!

மனிதன், மண்ணுக்குள் அடங்கினாலும், மனிதர் தம் மனதுக்குள் அடங்க வேண்டும்.

இங்கே... இறைவன் தந்த அரியதொரு வாய்ப்பு இந்த வாழ்க்கை.

கோடி... லட்சம்... ஆயிரம்... தேவையில்லை. ஒரு ரூபாய் போதும்...!

சொர்க்கம் போகவும் கூடும்.

அந்த ஒரு ரூபாய்.. உள்ளம் உருகி இறைவனுக்காக என்ற உணர்வுடன் வழங்கப்பட வேண்டும்.

வாழ்ந்த பிறகும், வாழ்வோரை வாழ வைக்கும் பணிகளை, உதவிகளைச் செய்து மறைந்தாரை இவ் வையம் வாழ்நாளில் மறக்காது.

இவ்வாறு... பல எண்ண அலைகளில் மிதந்து கொண்டிருந்தவாறே தூக்கத்திலாழ்ந்தார் சித்தர்.

இன்னும் இரண்டு நாட்களில் நோன்புப் பெருநாள். மகிழ்ச்சியளிக்கும் வெளிச்ச விடியல்... நாமல் உயன ஆற்றோராம்.

மர வேர்.

வெத்தல குதப்பிச் சித்தர் அமர்ந்திருந்தார்.

'வெளிச்ச விடியல் தலைவர் கவிஷ்கர் பேச எழுந்தான். 'எல்லாருக்கும் வணக்கம்... ஐயா... இதுல எழுபதாயிரம் ரூபா இருக்கு நாங்க ஒவ்வொருத்தரும் ஆளுக்கு மூவாயிரம் சேர்த்தம் ஐயா. பர்ஸானாட ஆச்சி இருபதாயிரம்... தருஸட பெரியம்மா பத்தாயிரம்... நசீர் ஹாஜியார் தொர பத்தாயிரம்... சில்வா அங்கிள் ஐயாயிரம்... எல்லாமா எழுவதாயிரம் சேர்த்தம் ஐயா..,. இந்தாங்க...!'

வெத்தல குதப்பிச் சித்தர் அதை வாங்கிக் கொண்டார். அவரது அழைப்பையேற்று சிறப்பதிதியாக வருகை தந்திருந்தார். பொலிஸ் அதிகாரி. கவிஞர், பாலமுனை வாஹிட் .

அவர் உரை நிகழ்த்தினார்!

அவரது மிக நீண்ட உரையின் சாராம்சம் இதுதான்; நல்ல நீதி நூல்கள் வாசிக்கும் பழக்கம் இல்லாமல் போய்விட்ட துர்ப்பாக்கியசாலிகளான சமுதாய வாலிபர்கள் துப்பாக்கியால் பலியாகிற குற்றவாளிகளாகிப் போவதற்கு இந்த வாழ்வியல் ஒழுக்க நெறிகளும்... இறையச்சமும்... சமூக அக்கறையும்... இரக்க குணமும் இல்லாமல் போனதுதான் பிரதான காரணம். சித்தர் மாதிரி... இப்படியான தனி மனிதவள சமூக அமைப்பாளர்கள் ஒவ்வொரு ஊருக்கும் தேவை. அந்த வகையில் இந்தத் தொகையில் இம்முறை இந்த நோன்புப் பெருநாளை கஷ்டமான ஒரு குடும்பம் மகிழ்ச்சியாகக் கொண்டாட வெளிச்சவிடியல்' சிறப்பான பணியைச் செய்கிறது. எனது நல்லாசிகள்.

இப்தார் நோன்பு துறக்கும் நேரம்.

அனைவரும் அந்த ஏழையின் இல்லம்நோக்கி விரைந்தனர்.

நோன்புக் கஞ்சியிருந்து இப்தாருக்குத் தேவையான தின்பண்டங்களும், குளிர்பானங்களும் கொண்டு சென்றனர். இப்தார் இனிதே நிறைவுற்றது.

வெத்தல குதப்பிச் சித்தர் 'வெளிச்ச விடியல்' அமைப்பின் செயற்பாட்டு நோக்கத்தை விளக்கமாக எடுத்துச் சொன்னார்.

எழுபதாயிரம் ரூபாய்ப் பணத்தை அந்தத் தாயாரிடம் வழங்கினார்.

அவளது அழுகையில்...

எத்தனையோ தாய்மார்களின் பாவங்களும் கழுவப்பட்டிருக்கலாம்...


அகத்தழுக்குப் போவதற்கு

சவர்க்காரங்கள் தேவையில்லை!



கிண்ணியா அமீர்அலி ...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 21



திரு/திருமதி.செல்வி ..................................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..................................................
..................................................
..................................................
திகதி .................... கையொப்பம் ....................

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 21
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 21

**இடமிருந்து வலம்**

(01) மருத்துவக் குணமுள்ள செடி.
(04) ஒரு தமிழ் மாதம்.
(06) உலகிலுள்ள பாலைவனங்களில் ஒன்று.
(08) இராமாயண கதாபாத்திரம் சீதைக்கு இப்படியும் ஒரு பெயர். (குழம்பியுள்ளது)
(10) சுகநலம்.
(13) சிறிய மலை.
(14) சூரியன்.
(17) ஒரு வாத்தியக் கருவி.
(18) இளம் பசுக்கன்று.
(19) சிலப்பதிகாரத்தில் வரும் ஒரு நகரம். (குழம்பியுள்ளது)
(21) ஆகாயம். (குழம்பியுள்ளது)
(22) பாடல் வகை. (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

(01) பரிசுத்தம்.
(02) சௌகரியம்.
(03) ஆண் மாடு.
(05) பாதுகாப்பு பணி செய்பவர்.
(07) நவக்கிரகங்களில் ஒன்று.
(09) கடிதம்.
(11) மகாபாரதத்தில் வரும் பாத்திரங்களில் ஒன்று.
(12) தொல்லைதரும் விளையாட்டுச் செயல். (குழம்பியுள்ளது)
(14) சொத்து.
(15) உலகம் குழம்பிவிட்டது.
(16) இதுவும் ஒரு விஷ ஜந்து. (தலைகீழ்)
(18) தமிழ் பழங்குடி மக்களுள் இவர்களும் அடங்குவர். (குழம்பியுள்ளது)
(20) இதுவும் ஒரு நிறம்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 20

### விடைகள்

**இடமிருந்து வலம்**
01. சுகந்தம் 05. வாதி 07. பாமரன்
08. மலிவு 09. வம்சம் 10. தினம்
12. மான் 13. கவின் 15. பாதி
17. ஏடு 18. கரடி 20. கருணை
22. வெள்ளம் 23. எதிரி

**மேலிருந்து கீழ்**
01. சுபாவம் 02. கமம் 03. சந்திரன்
04. தன்மானம் 05. வாலி 06. பதிவு
08. மழு 11. செவி 13. கடுகதி
14. பேன் 15. பாகம் 16. திரள்
17. ஏணை 19. வெடி 21. எரு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 19

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**எம்.ஏ.எம். அதீப்,**
41/15D, வித்தியாலய ஒழுங்கை, பதுளை.

**இரண்டாம் பரிசு**
**பாத்திமா ஜெமினா,**
73/1A, பழைய சந்தை வீதி, ஏறாவூர் 03.

**மூன்றாம் பரிசு**
**திருமதி அனுராதா பாக்கியராஜா,**
இல. 88 1/1 பசல்ஸ் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06.

### பாராட்டு பெறுவோர்

**1. ஏ.ஆர்.எம். அபூபக்கர்,**
இல. 411,
அலுத் வீதிய,
வெலிகம.

**2. எம்.எம். அமீன்,**
263C, மக்காமதி வீதி,
மருதமுனை 03.

**3. எம்.எச்.எம். பாஸி,**
இல. 02, கும்புக்கந்துறை,
ரஜவெல்ல.

**4. ஏ.எச்.ஏ. அலீம்,**
தபாலகம் விடுதி,
ஏறாவூர்.

**5. பி. நடேசன்,**
3ஆம் குறுக்குத்தெரு,
பூம்புகார்,
மட்டக்களப்பு.

**6. வேல்நாயகம் ராஜேந்திரன்,**
88, விபுலானந்த வீதி,
காரைதீவு 01.

**7. தமீம் எஸ். அப்துல்லா,**
132/2, அரபிக் கல்லூரி வீதி,
அக்கரைப்பற்று 18.

**8. காயத்ரி,**
அமுனுதோவ,
மடுல்சீமை.

★ ★ ★

# முன்மொழிவுகளுக்கான அழைப்பு (IFP)

## எரிசக்தி அமைச்சு
## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### நீண்டகால கடன் சலுகையுடன் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளை வழங்குதல்

நீண்டகால கடன் சலுகையுடன் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளை வழங்குவற்காக தங்களது முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு திறமையான வழங்குநர்கள் மற்றும் அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் / முகவர்களிடம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விசேட நிலையான பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

எரிசக்தி அமைச்சு என்பது நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பிரதான நோக்கத்துடன் கூடிய ஒரு அமைச்சரவை அமைச்சாகும். மேலும் சந்தையில் பெற்றோலியப் பொருட்களை தடையின்றி வழங்குவதற்காக எரிசக்தி தொடர்பான கொள்கைகளை வகுப்பதில் அமைச்சு ஈடுபட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பாராளுமன்றத்தினால் 1961ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கச் சட்டம் மற்றும் அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் மூலம் அரச நிறுவனமாக உருவாக்கப்பட்டது. பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், விற்பனையாளர்கள், வழங்குநர்கள் மற்றும் விநியோகஸ்தராக வியாபாரத்தை முன்னெடுத்துச் செல்லுதல், உற்பத்தி செய்தல், சுத்திகரித்தல் போன்றவற்றை மேற்கொள்வது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கமாகும் என்பதுடன் வியாபாரமானது தற்செயலானதாகவோ அல்லது நோக்கங்களை அடைவதற்கு உகந்ததாகவோ இருக்கலாம்.

பின்வரும் விபரங்களைக் கூறி மசகு எண்ணெய்யை வழங்குவதற்கான சகல திறமையான வழங்குநர்கள் மற்றும் அவற்றின் பிரதிநிதிகள் / முகவர்களிடமிருந்து முன்மொழிவுகளை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விசேட நிலையான பெறுகைக் குழுத் (SSCAPC) தலைவர் கோருகின்றார்.

- மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் விபரக்குறிப்புகள்
- இபெகூ சுத்திகரிப்பு நிலையத்திற்கான வழக்கமான மசகு எண்ணெய்
- பூர்வீக நாடு (Country of origin)
- வழங்கல் வளம்
- கொழும்பிலுள்ள வெளியேற்ற முனையங்களின் தொழில்நுட்ப அளவுருகளுக்கு இணங்குதல், குழாய் இணைப்புகள், சேமிப்பக கட்டுப்பாடுகள் மற்றும் தயாரிப்பு சேர்மானங்கள்
- மசகு எண்ணைய்க் கப்பல்கள் மற்றும் நிரப்பப்பட்ட பெற்றோலியக் கப்பல்களின் தொழில்நுட்ப விபரக்குறிப்புகள்
- இபெகூ உடன் ஒப்பந்த வரைவில் கைச்சாத்திடுவதற்கு வழங்குநர்கள் ஒப்புதல் அளித்தல்
- நடுநிலை மற்றும் தகராறு தீர்வுகள்
- இபெகூ பொது விதிகள் மற்றும் நிபந்தனைகள்
- விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் குறைந்தபட்சம் இரண்டு (02) வாரங்கள்

▼ LC மூலம் பணம் செலுத்துவது மீளளிக்கப்படாதது, ஒதுக்கமுடியாதது, மாற்ற முடியாது மற்றும் உறுதிப்படுத்தப்படாதது.

வளமுள்ள தரப்பினர் தமது முன்மொழிவுகளை மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களுடன் வர்த்தக முகாமையாளருக்கு cm@ceypetco.lk/ commercial@ceypetco.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரியின் ஊடாக சமர்ப்பிக்கலாம். மேலதிக தகவல்களை பின்வரும் இணையதள Link ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

https://ceypetco.gov.lk/public-tenders/

வழங்குநர்கள் (Incoterm 2010) கொழும்பு அடிப்படையில் முன்மொழிவுகளை வழங்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விசேட நிலையான பெறுகைக் குழு,**
**மே/பா வர்த்தக முகாமையாளர்,**
**வர்த்தக செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**7ஆம் மாடி, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு -09.**
**தொலைபேசி: 0094 11 5455455**
**தொலைநகல்: 0094 11 5455400**
**மின்னஞ்சல்: commercial@ceypetco.gov.lk**






கொழும்பு டீ. எஸ். சேனாநாயக்க கல்லூரி முஸ்லிம் மஜ்லிஸ் தனது வருடாந்த இஃப்தார் நிகழ்வினை அண்மையில் கல்லூரி விளையாட்டுத் தொகுதியில் நடாத்தியது. கல்லூரியின் பழைய மாணவர்களான பிரபல வர்த்தகர் எம். முஸ்லிம் சலாஹுதீன் பிரதம அதிதியாகவும், நத்வி பஹாவுதீன் சிறப்பதிதியாகவும் கலந்து கொண்டனர். மௌலவி மாஹிர் சிறப்புரையாற்றினார். இஸ்லாமிய மஜ்லிஸ் பொறுப்பாசிரியை பிர்தௌஸியா பாரூக் இந்த நிகழ்வை வெகு விமரிசையாக ஏற்பாடு செய்திருந்தார். இன, மத பேதமின்றி சகல இன மதத் தலைவர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டது சிறப்பம்சமாகும்.

மருந்தாக்கங்களின் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு

## இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**Supply, Installation, Commissioning and Service providing of 02 Nos. of Brand New Vertical Sticker Label Machine**

**Bid Ref.: SPMC/PD/06/2022 - 2022.06.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்படும்**

1. 2022 ஜூன் 2 ஆம் திகதி பி.ப. 2 மணிவரையும் இலங்கை, இரத்மலானை, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரசமருந்து உற்பத்திக் கூட்டுத்தாபன பெறுகைக் குழு தலைவரினால் Supply, Installation and Commissioning and Service Providing of 02 Nos. of Brand New Vertical Sticker Label Machine with Label Printer and proving training என்பதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

| அம்சம் | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் |
|---|---|
| 01. Supply, Installation and Commissioning and Service Providing of 02 Nos. of Brand New Vertical Sticker Label Machine with Label Printer and providing Training. | 7,500.00 |

2. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களில் நகல் பிரதி மற்றும் மூலப் பிரதியென இரு பிரதிகளில் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு பதிவுத்தபாலில் தலைவர்,பெறுகைக் குழு, அரசமருந்தாக்கல் கூட்டுத்தாபனம், இல. 11,சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவளதோட்டம், இரத்மலான, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை,கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரசமருந்தாக்கல் கூட்டுத்தாபன தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
3. பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து 2022.05.04 ஆம் திகதியிலிருந்து 2022.06.01 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள முகவரியிலிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
   - இலங்கை, இரத்மலானை, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரசமருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபன திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொதுமுகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல்.
   - SPMC இன் கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணத்தில் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்துதல்.
4. விலைமனுக்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளினால் நிர்வகிக்கப்படுவதனால் விலைமனுதாரர் அவரது சார்பாக முகவரொருவரை, உபமுகவரொருவரை, பிரதிநிதியொருவரை,பெயர் குறிப்பிடப்படுபரொருவரை அமர்த்துவாராயின், அப்படியான பொது ஒப்பந்தத்தின் போது பொது ஒப்பந்த சட்ட 10 ஆம் பிரிவிற்கமைவாக பதிவு செய்தபின்னர் அவ்வாறான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழை இக்கேள்வி தொடர்பான எந்தவொரு கொடுக்கல் வாங்கல் வேளையிலும் அல்லது விலைமனுக்கோரலின் காலப்பகுதியின் எக்கட்டத்தின் எந்தவொரு நடவடிக்கையின் போதும் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக Vertical Sticker Label Machine with Label Printer என்ற இயந்திரம் தொடர்பானதொரு விழிப்புணர்ச்சியை தோற்றுவிப்பதற்காக அதே நாளில் அமைவிடத்திற்கு விஜயம் செய்து பரீட்சிப்பது அனைத்து விலைமனுதாரர்களுக்குமான கட்டாயமான பங்குபெறுதல் என்பதுடன் 2022 மே 19 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடந்தேறும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடியபின்னர் இரத்மலானை SPMC இல் திறக்கப்படுவதுடன் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
7. விலைமனுக்கோரல் ஆவணங்களை SPMC இல் இலவசமாக பரீட்சிக்கலாம்.
8. மேலதிக தகவலை 0112637574 என்ற தொலைபேசி எண்ணினூடாக SPMC இன் உற்பத்திக்கான பிரதி பொதுமுகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**www.spmclanka.lk** என்ற எமது இணையதளத்தில் விலைமனுக்களின் விபரங்களை பார்வையிடலாம்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**அரசமருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல.: 11,சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை:**
**கந்தவளதோட்டம்,**
**இரத்மலானை, இலங்கை.**

**தொலைபேசி : (00) 94-11-2635353/(00) 94-11- 2637574 / (00) 94-11-2623298**
**மின்னஞ்சல் : spmclanka@sltnet.lk, இணையதளம் : www.spmclanka.lk**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

**இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்**

## அலுவலக கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக் கோரல் - வடமத்திய மாகாண அலுவலகம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வடமத்திய மாகாண அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக அனுராதபுரம் நகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ள 3000 - 3500 சதுர அடி அளவான தகைமைகளுடனான அலுவலகத்திற்கு பொருத்தமான கட்டிடமொன்றை குத்தகை அடிப்படை/வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கட்டிடம் சம்பந்தமாக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்**

- இக் கட்டிடம் மாதாந்த குத்தகை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.
- இக் கட்டிடம் பொது போக்குவரத்து வசதிகளை பாவித்து இலகுவாக அடையக் கூடிய வர்த்தக மயமான பிரதேசத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் வர்த்தக மயமான பாவனைக்கு நிர்மாணிக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.
- குறைந்த பட்சம் சுமார் 05 வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு இடவசதிகள் இருத்தல் வேண்டும்.
- மூன்று சுற்று மின் வழங்கலுடன் வேறாக மின் மீற்றர் இருத்தல் வேண்டும். மின்சாரம் தடைப்படும் வேளையில் பாவிப்பதற்கு மின் பிறப்பாக்கி இயந்திரம் இருப்பது மேலதிக தகைமையாகும்.
- நேரடி நீர்க் குழாய் இணைப்புகளுடன் வேறான நீர் மீற்றர் இருத்தல் வேண்டும். அத்துடன் கட்டிடத்திற்கு மேலாக நீர் கிட்டத்தட்ட 2000 லீற்றர் அளவு சேமித்து வைக்கக் கூடிய நீர்தாங்கி/ தாங்கிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நிலையான தொலைபேசி வசதிகள் இருத்தல் வேண்டும்.
- பிரதான மின் விநியோக பலகையுடன் அடிப்படை மின் கட்டுப்பாட்டு அமைப்பு மின் விசிறிகள் மற்றும் ஏனைய துணைப்பாகங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- இடத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டதாக அறிவித்த பின்னர் கட்டிடம் முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்டு 02 வாரத்திற்குள் வழங்கக்கூடிய தகைமை இருத்தல் வேண்டும்.
- சேவையை பெற்றுக் கொள்வதற்கு வருகைதரும் பயனாளிகள் 10 பேர் மட்டில் ஒரே முறையில் அமர்ந்து தமது கடமை சேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான இடவசதிகள் கட்டிடத்திற்குள் இருத்தல் வேண்டும்.
- கழிவு நீர் மற்றும் மலக்கழிவுகளை அகற்றும் முறைமைகள் முறையாகத் தயார் செய்யப்பட்ட கட்டிடமாக இருத்தல் வேண்டும்.
- ஊழியர் குழாம் மற்றும் வெளியாட்களுக்கு பாவிப்பதற்காக கிட்டத்தட்ட 06 மலசலகூடங்கள் வேறு வேறாக இருத்தல் வேண்டும்.
- அறைகளை வேறாக்குதல் பணியகத்தின் தேவையின் பிரகாரம் இடம் பெறக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- அலுவலகத்தை நடத்திச் செல்வதனால் குறித்த கட்டிடம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு அருகில் வசிப்பவர்களுக்கு எந்த தொந்தரவும் அற்ற இடமாக இருத்தல் வேண்டும்.
- வளிச்சீராக்கி முறைமை பொருத்தப்பட்டிருத்தல் மேலதிக தகைமையாகும்.
- அதிகாரிகள் தங்குமிட வசதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வேறாக்கப்பட்ட இரண்டு அறைகள் அல்லது பல அறைகள் மலசலகூட வசதிகளுடன் கட்டிடத்தினுள் அமைந்திருத்தல் மற்றும் அதன்பொருட்டு வேறான நுழைவாயில் இருத்தல் வேண்டும் மற்றும் இந்த வளவினுள் இதற்கான கட்டிடமொன்று அமைந்திருத்தல் மேலதிக தகைமையாகும்.
- குத்தகை வழங்குநரால் குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த வாடகை தொகை அரச மதிப்பீட்டு அறிக்கைக்கு உட்பட்டு கொடுப்பனவுகள் இடம்பெறும் (குறைந்தபட்ச தொகை)

**கட்டிட உரிமையாளரால் இங்கு குறிப்பிடப்படும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்**

- விலைமனுப் பத்திரத்துடன் பணியகத்திற்கு வழங்கப்படும் கேள்வி ஆவணம்
- மாதாந்த குத்தகைத் தொகை ரூபா
- குத்தகையுடன் சம்பந்தப்பட்ட சொத்தின் நிலையான முகவரி
- கட்டிட உரிமையாளர் உரிமை பெற்றுக் கொண்ட உறுதியின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்று மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
- சம்பந்தப்பட்ட ஆதனத்தின் வரைபடம்
- உறுதி செய்யப்பட்ட அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடம்
- சான்றுபடுத்திய அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடம். (குறித்த கட்டிட வரைபடம் A4 அளவான அல்லது A3 அளவானதாக சிறியதாக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட புகைப்படப் பிரதியாக இருத்தல் வேண்டும்)
- குத்தகை வழங்குநரின் பெயர்/முகவரி/தேசிய அடையாள அட்டை இல மற்றும் அதன் தெளிவான புகைப்படப் பிரதி
- கட்டிட உரிமையாளரின் தொலைபேசி இலக்கம்
- இணக்கச் சான்றிதழ்
- மின்சாரம், தொலைபேசி, வரிக்கட்டணம் போன்ற கட்டணப் பற்றுச்சீட்டின் பிரதிகள்
- குத்தகைக்கு விடுவதற்கு எதிர்பார்க்கும் குறித்த சொத்திற்கான உரித்துரிமை அறிக்கையை சொத்துரிமையுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அதனை பிரதேசத்தின் சட்டத்தரணியொருவரால் தயாரித்து இறுதியில் அவரது பரிந்துரையுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, இலக்கம் 234, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் (செயற்பாட்டு பெறுகை) பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022.05.25ம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்பு உள்ளிடல் வேண்டும். உங்களது விண்ணப்பத்தை தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘கட்டிடத்தை வாடகை அடிப்படையில்/குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்தல் - அநுராதபுரம். PR/02/04-1(49)-01’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஏதேனும் விண்ணப்பமொன்றை நிராகரிக்கும் அல்லது ஏற்றுக்கொள்ளும் உரிமையை பணியகத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். அரச மதிப்பீட்டாளரின் அறிக்கைகளுக்கு உட்பட்டு தெரிவுகள் இடம்பெறும். மீளளிக்கப்படாத 1000.00 ரூபா தொகையை இலங்கை வங்கியில் 0000001650 எனும் பணியகத்தின் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அதன் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தது இல. 29, வான்எல இல்லம், அநுராதபுரம் எனும் முகவரியில் அமைந்துள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் கிளை அலுவலகத்திலிருந்து 2022-05-02ஆம் திகதி முதல் 2022-05-24ஆம் திகதி வரையான அலுவலக நேரத்தினுள் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 2022-05-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பின்வரும் முகவரியில் திறக்கப்படும்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக்குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி/ தொலைநகல் 2880550/ 2887585**
இணையதளம்: **www.slbfe.lk**

**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்**

## புதிய அமைச்சர்களின் செயற்பாடுகளுக்கு கஸெட்

### ஜனாதிபதியின் கையெழுத்துடன் வெளியானது

புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் விடயதானங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக் களின் விடயதானங்கள் மற்றும் செயல்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதற்கான நிறுவன மற்றும் சட்டக் கட்டமைப்பும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு, தொழில்நுட்பம், புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள், நிதி, நீதி, வெளிநாட்டு அலுவல்கள், பொது நிர்வாகம், உள் நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள் ளூராட்சி, கல்வி, சுகாதாரம், தொழிலாளர், சுற்றா டல் ஆகிய அமைச்சுக்களை போன்று அதனுடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சுக்களின் விட யதானங்கள் மற்றும் செயல்பாடுகளும் குறித்த வர்த் தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு, விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கடற்றொழில், பெருந்தோட்டம் , நீர் வழங்கல், மின்சாரம், எரிசக்தி, துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, இளைஞர் மற்றும் விளையாட்டு, சுற்றுலா, வர்த்த கம், தொழில், ஊடகம், பொது பாதுகாப்பு மற்றும் சமூர்த்தி அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களினதும் மற்றும் இராஜாங்க அமைச்சகங்களின் விடயதா னங்கள் மற்றும் செயல்பாடுகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

## சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு கார்கள்

### இலங்கை சுங்க திணைக்களத்தால் பறிமுதல்

இங்கிலாந்திலிருந்து சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான இரு அதிசொகுசு ரக வாகனங்கள் உட்பட பல பொருட்கள் கைப்பற்றப்பட் டுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித் துள்ளது. கொழும்புபுறக்கோட்டை பகுதி வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான 4 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான இரு அதிசொகுசு ரக வாகனங்கள், 5 வாகன உதிரி பாகங்கள் மற்றும் 1,000 கிலோ கிராம் மஞ்சள் தூள் உள்ளடங்கிய பொருட்கள் கைப்பற்றப் பட்டதாக இலங்கை சுங்க பிரிவு தெரிவித்துள்ளது.

வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

## வேலைவாய்ப்பு

- தாதியர் உத்தியோகத்தர் (வருகை அடிப்படையில்)
- தொழில்நுட்ப அதிகாரி (ஆய்வகம்)
- காட்சிப்படுத்துனர் (தற்காலிக)
- பணிப்பாளர் / சிரேஷ்ட நிர்வாக அதிகாரி பட்டன்கல பல்கலைக்கழகம்
- பணிப்பாளர் / சிரேஷ்ட நிர்வாக அதிகாரி குளியாபிட்டிய பல்கலைக்கழகம்
- பணிப்பாளர் / சிரேஷ்ட நிர்வாக அதிகாரி மாத்தறை பல்கலைக்கழகம்

மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான பத்திரிகை விளம்பரமானது **2022 மே மாதம் 01 ஆம் திகதி** (Sunday observer) சன்டே ஒப்சேர்வர் பத்திரிகையில் பிரசுரமாகவுள்ளது.

மேலதிக விபரங்களை பல்கலைக்கழக வலைதளத்தினூடாக பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

www.uovt.ac.lk

முனைவேந்தர்
வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்,
இல.100, கந்தவல,
இரத்மலானை.

தொலைபேசி : 011 2630706
2022 மே 01



குறளமுதம் :

ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

**தெளிவுரை :**
ஆற்றலுடையவரின் ஆற்றலானது பணிவுடன் நடத்தலாகும். அது சான்றோர் தம் பகைவரைப் பகைமையிலிருந்து மாற்றுகின்ற கருவியாகும்.

# மன்னிப்பைப் பற்றி மருத்துவம் சொல்வது

'நீங்கள் ஒரு நபர் மீது எரிச்சலும், கோபமும் கொள்ளும்போது உங்கள் மூளையில் ஒரு வடிவம் உருவாகிறது. உங்கள் எரிச்சலும், கோபமும் அதிகரிக்க அதிகரிக்க அந்த வடிவம் அதிக வலுவாக மாறிவிடுகிறது. அந்த வலுவான நிலைமை பின்னர் உங்கள் இயல்பாகவே மாறிப்போகிறது. அதன்பின் கோபமும், எரிச்சலும் இல்லாமல் வாழ்வது உங்களுக்கு குதிரைக் கொம்பாகி விடும்' என்கின்றன மருத்துவ ஆராய்ச்சிகள். 'மன்னிக்கும் பழக்கமுடைய மனிதர்கள் ஆனந்தமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறார்கள்' என்கின்றன பல்வேறு ஆராய்ச்சி முடிவுகள்.

'கேம்பைன் பார் பர்கிவ்னஸ் ரிசர்ச்' சுமார் 48 ஆராய்ச்சிகளின் முடிவை விலாவரியாக எடுத்துரைக்கிறது. எல்லா ஆராய்ச்சிகளுமே மன்னிக்கும் மனிதர்கள் உடலிலும், உள்ளத்திலும் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் இருப்பதாக அடித்துச் சொல்கின்றன. ஸ்டான்போர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் தனது 'லேர்ன் டு பர்கிவ்' (மன்னிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்) எனும் நூலில் மன்னிப்பின் மகத்துவத்தையும், அது தரும் ஆரோக்கியமான வாழ்க்கையையும் பற்றி பிரமிப்பூட்டும் வகையில் எழுதியிருக்கிறார்.

மன்னிப்பவர்களுக்கு புற்றுநோய் வரும் வாய்ப்பும் குறைவு என்கின்றன ஏல் மெடிக்கல் பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகள். மன்னிக்கும் மனம் நமது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். மன அழுத்தத்தை குறைக்கும். இதுவே காரணமாம். இந்தியா மதங்களின் நாடு. மதங்கள் எல்லாமே மன்னிப்பைப் பேசுகின்றன. 'ஒரு மனிதன் தேவ நிலையை அடையவேண்டுமெனில் மன்னிப்பும் அவனிடம் இருக்க வேண்டும்' என்கிறது பகவத் கீதை. இஸ்லாம் கடவுளை 'அல் கபிர்' என்கிறது, முழுமையாய் மன்னிப்பவர் என்பது அதன் அர்த்தம். 'மன்னிக்க மறுப்பவர்கள் சுவர்க்கம் செல்ல முடியாது' என்கிறது கிறிஸ்தவம்.

ஆனால் மதங்களைப் பின்பற்றும் நமது நாட்டில் மன்னிப்பு எவ்வளவு தூரம் ஆரோக்கியமாக இருக்கிறது? நாட்டில் நடைபெறும் இன்றைய நிகழ்வுகளை மீடியாக்களில் பார்த்தாலே உண்மைத்தன்மையை தெரிந்துகொள்ள முடியும். மன்னிப்பு சட்ட திட்டங்களால் வருவதில்லை. மன்னிக்கும் மனதுடைய மக்களுடன் பழகும்போது நம்மை அறியாமலேயே அந்த நல்ல பழக்கமும் நம்முடன் வந்து ஒட்டிக் கொள்கிறது. மன்னிக்கும் மனநிலை பெற்றோருக்கு இருந்தால் பெற்றோர்களைப் பார்த்து வளரும் குழந்தைகள் மன்னிக்கும் மனநிலையை எளிதாகவே பெற்று விடுவார்கள். குழந்தைகளுக்கு மன்னிக்கும் மனம் இயல்பாகும்போது எதிர்கால சமூகம் வன்முறைகளின் வேர்களை அறுத்துவிடும்.

அடுத்தவர்களுடைய மன நிலையில் இருந்து கொண்டு நமக்கு நேர்ந்த கசப்பான நிகழ்வை யோசித்துப் பார்த்தால், பெரும்பாலான கோபங்கள் விலகிவிடும். குறிப்பாக கணவன் மனைவி, குடும்பத்தினருக்கு இடையேயான பிணக்குகள், எரிச்சல்கள், வெறுப்புகள் போன்றவையெல்லாம் கதிரவன் கண்ட பனிபோல விலகிவிடும்.

பலவேளைகளில் நாம் கோபத்தை விட்டுவிட ரொம்பவே தயங்குகிறோம். கோபம் என்பது வீரத்தின் அடையாளம் என்று போலியாக கற்பனை செய்து கொள்கிறோம். எதிர் நபர் மன்னிப்புக்குத் தகுதியற்றவர் என்று முடிவு கட்டி விடுகிறோம். அப்படி நினைப்பதன் மூலம் நாம் பெரியவர்களாக முயலும் உளவியல் சிக்கலே இது. மன்னிப்பு கடந்த காலத்தின் நிகழ்வுகளை மாற்றாது. ஆனால் அது எதிர்காலத்தின் பாதைகளில் ஆனந்தமான பூக்களைச் சொரியும். வாழ்க்கை பணத்தினாலோ, செல்வத்தினாலோ கட்டப்படுவதல்ல. அது அன்பின் இழைகளால் பின்னப்படுவது.

உண்மையான அன்பு இருக்கும் இடத்தில் மன்னிக்கும் மனம் தானே முளைவிடும்.

மன்னிப்புக் கேட்கும் எவருக்கும், மன்னிப்பை மறுக்காதீர்கள். மன்னிப்புக் கேட்காதவர்களையும் மன்னிக்க மறக்காதீர்கள்.

**சோ. வினோஜ்குமார்,**
யாழ்.பல்கலைக்கழகம்.




விஜேகுமார் - ஞானரூபி
நியூபீகொக் மேற்பிரிவு,
புசல்லாவ.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 09

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | 07 | | 08 | |
| 09 | | 10 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | | |
| | 17 | | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | | | 24 |

பெயர் ..................................................
வகுப்பு ..................................................
தொலைபேசி இல ..................................................
பாடசாலை பெயர் ..................................................
வதிவிட முகவரி ..................................................
..................................................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் / பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) இன்றைய நவீன உலகில், மனிதனின் அத்தனை விஞ்ஞான சாதனங்களையும் இயக்குகின்ற சக்தி இது. கண்ணால் காண முடியாது. உலோகம் ஊடாக கடத்தப்படுவது.
(11) பூக்களின் அமுதத்தை சேகரிக்கும், பறக்கும் வகை பூச்சியினம்.
(13) எமது மூக்குத் துவாரத்தினுள் ஒவ்வாத துணிக்கைகள் ஏதேனும் புகுந்து விட்டால், இயல்பாகவே அதனை வெளியேற்றுவதற்காக வெளிப்படுவது. அடக்க முடியாதது. (தலைகீழான சொல்)
(18) மூத்த சகோதரி இவள். (தலைகீழான சொல்)
(21) பாம்பாட்டியின் கையில் இருப்பது இது. ஒலி எழுப்பும் ஒருவகை இசைக்கருவி.

**மேலிருந்து கீழ்**

(01) ஐம்பூதம் அத்தனையுமே இயற்கை அனர்த்தத்தைத் தரவல்லவை ஆகும். நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய இவற்றில் ஆகாயத்திலிருந்து நிலத்தை வந்தடைகின்ற இயற்கை அனர்த்தம் இதுவாகும். ஓரிரு செக்கன்களில் உயிராபத்தையே தந்துவிடும்.
(03) அமைதி என்ற அர்த்தம் தருகின்ற சொல்.
(05) எமது உடலை மேனி, உடம்பு, சரீரம் ஆகிய பெயர்களால் மட்டுமன்றி இப்பெயராலும் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(14) தண்ணீரை அள்ளிச் செல்லக்கூடிய பாத்திரம். (தலைகீழான சொல்)
(16) ஒலியை உணர்ந்தறியும் புலனங்கம். (தலைகீழான சொல்)
(20) ஏதாவது ஒரு முழுப்பகுதியின் பாதியைக் குறிப்பிடும் சொல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 08

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. விழுது 04. துளி 08. கரு 10. பதவி
15. அம்மி 21. தாழை 23. விறகு

**மேலிருந்து கீழ்**

01. விம்பம் 03. வித்து 04. துருவம் 05. களி
15. அருவி 17. மிளகு 18. கோழை

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 07

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**எஸ். சவிலக்ஷனா,**
(தரம் 10A, பது/தமிழ் மகளிர் ம.வி),
270/2, மூன்றாம் கட்டை,
பசறை வீதி,
பதுளை.

**இரண்டாம் பரிசு**
**ஆர்.எம். அஸ்லிம்,**
தரம் 07, தி/அல்அக்ஷா வித்தியாலயம்,
இல.115 அண்ணல் வீதி,
மாஞ்சோலைச்சேனை,
கிண்ணியா.

**மூன்றாம் பரிசு**
**றுமைஸ் பாத்திமா எரிசா,**
தரம் 05, சது/அமீர் அலி வித்தியாலயம்,
இறக்காமம்.

### பாராட்டு பெறுவோர்

1. **துவிசாலினி,**
தரம் 05, இராமகிருஷ்ண பெண்கள் கல்லூரி,
திருமால்முக வீதி,
காரைதீவு 07.

2. **ஸீமா மனாஸிர்,**
தரம் 05, அ.தக. பாடசாலை,
பெரிய கரிசல், பேசாலை.

3. **எம்.ஐ. ஜனா,**
தரம் 05, ப/ பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி,
பதுளை.

4. **அ.அ. நிஹாருஸ் ஸைனி ஸாரா,**
தரம் 05, மட்/மம/வை அஹமட் வீதி,
கொமைனி வீதி, வாழைச்சேனை.

5. **பிரணுகா பிரசாந்த்,**
தரம் 03,
மட்/வின்சன்ற் மகளிர் உயர்தரப் பாடசாலை,
புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 09
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

## பட்டம்!



*கலர் கலராய்ப் பட்டஞ்செய்து நல்ல*
*காற்றடிக்கும் திசையினிலே*
*பாலர் கட்டம் விடுகின்றார் பலர்*
*பார்த்து அதை மகிழ்கின்றார் !*

*வாலறுந்த பட்டம் ஒன்று மிக*
*வேகமாக இறங்குது*
*நூலறுந்த பட்ம் ஒன்று தன்*
*நினைவிழந்து மேயுது !*

*இரட்டைப் பட்டம் ஒன்று அங்கே*
*ஆட்டம் நன்றாய்ப் போடுது*
*முரட்டுப் பட்டம் ஒன்று இங்கே*
*முன்னும் பின்னும் ஒடுது !*


*மஞ்சற் நிறத்துப் பட்டம் ஒன்று*
*மேகத்தையே தாண்டுது*
*குஞ்சம் வைத்த பட்டம் ஒன்று*
*குட்டிக் கரணம் போடுது !*

*பள்ளிக் கூடம் போகாமலே யாரும்*
*பட்டம் விடுதல் கூடாது*
*விளக்குக் கம்பச் சாலையிலே ஓடிப்*
*பட்டம் விடுதல் ஆகாது !*

*மாலை நேரக் காற்றிலே நல்*
*மைதானத்தின் நடுவிலே*
*ஆற்றங்கரை மேட்டிலே கூடி*
*ஆடிப் பட்டம் விடுகவே !*

**கல்லொளுவை பாரிஸ்**

## இலங்கை



*இலங்கை நான்கு பங்கமும் கடலால் சூழப்பட்ட தீவு ஆகும். இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரமடைந்தது. இலங்கை 1972ஆம் ஆண்டு குடியரசாக மாறியது.*

*இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்க ஆவார்.*

*இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் ஆனந்த சமரக்கோன் ஆவார்.*

*தேசிய கீதத்தை தமிழ் மொழியில் இயற்றியவர் மு. நல்லத்தம்பி புலவர் ஆவார்.*

*இலங்கையின் மிக நீளமான நதி மகாவலி கங்கையாகும்.*

*இலங்கையின் மிக உயரமான மலை பேதுருதாலகால மலையாகும்.*

*இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி பம்பரகந்தை.*
*இலங்கையின் தேசிய மரம் நாகமரம்.*
*இலங்கையின் தேசிய மலர் நீலோற்பலம்.*
*இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தை சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா.*
*இலங்கையின் இயற்கைத் துறைமுகம் திருகோணமலையில் அமைந்துள்ளது.*
*இலங்கையின் மிகப்பெரிய தாவரவியல் பூங்கா பேராதனையில் அமைந்துள்ளது.*

**ஆர்.எப். குலூத்,**
தரம் 05, தி/கிண்/யூசுப் வித்தியாலயம்,
பூவரசந்தீவு, கிண்ணியா.



கொழும்பு சைவமங்கையர் வித்தியாலயத்தின் 2022ஆம் கல்வியாண்டுக்கான இளைய மாணவத் தலைவிகளுக்கு சின்னம் சூட்டும் விழா கடந்த 22ஆம் திகதியன்று வித்தியாலய அதிபர் திருமதி அருந்ததி ராஜவிஜயன் தலைமையில் நடைபெற்றபோது...






**கே. கவீஷா,**
தரம் 03,
றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை,
வத்தளை.



**அனிஸ்கான் இர்பான்,**
தரம் 06, தி/கிண்/யூசுப் வித்தியாலயம்,
கிண்ணியா.



**நி. ஷைனி,**
தரம் 01, கொ/ சைவமங்கையர் வித்தியாலயம்,
வெள்ளவத்தை, கொழும்பு 06.



**முகம்மது நளீம் ஆமிர்,**
தரம் 05, தி/ கிண்ணியா எகுத்தார் வித்தியாலயம்,
கிண்ணியா.

# மஞ்சரி விளையாட்டு

## 2022 உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடர்:

# இதுவரை 29 நாடுகள் தகுதி!



இவ்வருடம் நவம்பர் மாதம் 21ம் திகதி முதல் டிசம்பர் 18ம் திகதி வரை கட்டாரில் நடைபெறவுள்ள 22வது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டிக்கு இதுவரை 29 நாடுகள் தெரிவாகியுள்ளன. இத்தொடரில் பங்குகொள்ளும் மற்றைய மூன்று நாடுகளுக்கான தெரிவுப் போட்டிகள் எட்டு நாடுகளுக்கிடையில் எதிர்வரும் ஜுலை மாதத்தில் நடைபெறவுள்ளன.

கடந்த 2018ம் ஆண்டு உலகக் கிண்ணம் முடிவடைந்தவுடன் 2022ம் ஆண்டுக்கான உலகக்கிண்ணப் போட்டிகளுக்கான தெரிவு போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்று வந்தன. கொரோனா தொற்றின் பரவல் காரணமாக தொடர்கள் சற்று தள்ளிப்போனது. கடந்த 2020ம் ஆண்டு தொடக்கம் 6 வலயங்களில் நடைபெற்ற தெரிவுச் சுற்றுக்களில் இந்த 29 நாடுகளும் வெற்றி பெற்றுத் தெரிவாகியுள்ளன. அவ்வடிப்படையில் ஐரோப்பிய வலயத்திலிருந்து 13 நாடுகளும், ஆசிய மற்றும் தென் அமெரிக்க வலயத்திலிருந்து 10 நாடுகளும், ஆபிரிக்க வலயத்திலிருந்து 5 நாடுகளும், வட, மத்திய அமெரிக்கா மற்றும் கெரிபியன் வலயத்திலிருந்து 4 நாடுகளும் இம்முறை கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் பங்குகொள்ளவுள்ளன.




இம்முறை கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கட்டார் அணி 2010ம் ஆண்டே தொடரை நடாத்தும் அணி என்றவகையில் தெரிவுசெய்யப்பட்டது.

2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐரோப்பா கால்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட சுற்றுத் தொடரில் ஜே. பிரிவின் சம்பியனாத் தெரிவு செய்யபட்டதால் ஜேர்மனி அணி தெரிவு செய்யப்பட்டது. இதுவரை இவ்வணி 19 உலகக் கிண்ணத் தொடர்களில் பங்குபற்றியுள்ளதுடன் 1954, 1974, 1990, 2014ம் ஆண்டுகளில் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐரோப்பா கால்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட சுற்றுத் தொடரில் எப். பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் டென்டார்க் இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவு செய்யப்பட்டது. 5 உலகக் கிண்ணத் தொடர்களில் பங்குகொண்ட அவ்வணி 1998ம் ஆண்டு காலிறுதிக்குத் தெரிவானமை உலகக் கிண்ணத் தொடரில் உச்ச சாதனையாகும்.

பிரேசில் அணி 2021ம் ஆண்டு தென் அமெரிக்க வலய கால்பந்து சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட சுற்றுப்போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதால் இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 21 உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரேசில் அணி 1958, 1962, 1970, 1994, 2002ம் ஆண்டுகளில் கிண்ணத்தைக் கைப்பற்றியது,

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐரோப்பா கால்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட சுற்றுத் தொடரில் டீ பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் பிரான்ஸ் அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்கு தெரிவாகியுள்ளது. இதுவரை 15 முறை தெரிவாகியுள்ளதுடன் 1998, 2018ம் ஆண்டு கிண்ணத்தைக் கைப்பற்றியது.

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐரோப்பா கால்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட சுற்றுத் தொடரில் ஈ பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதால் பெல்ஜியம் இம்முறை தெரிவாகியுள்ளது. 13 முறை உலகக் கிண்ணத் தொடரில் பங்குபற்றியுள்ள அவ்வணி 2018ம் ஆண்டு மூன்றாடமித்தைப் பெற்றதே அவ்வணியில் உச்சபட்ச உலகக்கிண்ண சாதனையாகும்.

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐரோப்பா கால்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட சுற்றுத் தொடரில் ஈ பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதால் குரோஷிய அணி இம்முறை உலகக்கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 5 முறை உலகக்கிண்ணத் தொடரில் விளையாடியுள்ள அவ்வணி 2018ம் ஆண்டு 2ம் இடத்தைப் பெற்றதே அவ்வணியின் உச்சபட்ச உலகக்கிண்ண சாதனையாகும்.

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐரோப்பா கால்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட சுற்றுத் தொடரில் பி பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதால் ஸ்பையின் அணி இம்முறை உலகக்கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 15 முறை உலகக்கி ண்ணத் தொடரில் பங்கேற்றுள்ள அவ்வணி 2010ம் ஆண்டு கிண்ணம் வென்றது.

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐரோப்பா கால்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட சுற்றுத் தொடரில் ஏ பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதால் செர்பிய அணி இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 12 உலகக்கிண்ணத் தொடரில் விளையாடியுள்ள அவ்வணி 1930, 1962 ஆண்டுகளில் 4வது இடத்தைப் பெற்றதே அவ்வணியின் உலகக்கிண்ணத் தொடரில் உச்சபட்ச சாதனையாகும்.

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐரோப்பா கால்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட சுற்றுத் தொடரில் ஐ பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதால் இங்கிலாந்து அணி இம்முறை உலகக் கிண்ணத்தில் விளையாடத் தகுதி பெற்றது. இதுவரை 15 முறை உலகக்கிண்ணத் தொடரில் விளையாடியுள்ள அவ்வணி 1966ம் ஆண்டு கிண்ணத்தைக் கைப்பற்றியது.

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐரோப்பா கால்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட சுற்றுத் தொடரில் சி பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதால் இம்முறை உலகக் கிண்ணத் தொடரில் விளையாடத் தகுதிபெற்றுள்ள சுவிட்சர்லாந்து இதுவரை 15முறை உலகக் கிண்ணத் தொடரில் பங்குபற்றியுள்ளதுடன், 1934, 1938, 1954ம் ஆண்டுகளில் காலிறுதிக்குத் தெரிவானதே அவ்வணியின் உச்சபட்ச சாதனையாகும்.

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐரோப்பா கால்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட சுற்றுத் தொடரில் ஜி பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதால் நெதர்லாந்து அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடரில் விளையாடும் சந்தர்ப்பத்தை உறுதி செய்துகொண்டுள்ளது. இதுவரை 10 முறை உலகக்கிண்ணத் தொடருக்குத் தெரிவாகியுள்ள அவ்வணி 1974, 1978, 2012ம் அண்டுகளில் இரண்டாம் இடம்பெற்றதே உலகக்கிணத்தில் உச்சபட்ச சாதனையாகும்.

ஆர்ஜென்டீனா அணி 2021ம் ஆண்டு தென் அமெரிக்க வலய கால்பந்து சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் 2ம் இடத்தைப் பெற்றதால் இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 17 உலகக் கிண்ணச் சுற்றுக்குத் தெரிவாகியுள்ள அவ்வணி 1978, 1986ம் ஆண்டுகளில் சம்பியனாக மகுடம் சூடியது.

இவ்வருடம் ஜனவரி மாதம் நடைபெற்ற ஆசிய கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட 3வது சுற்றின் ஏ பிரிவில் சம்பியன் பட்டத்தை வென்றதன் மூலம் ஈரான் அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. 5 முறை உலகக்கிணத்துக்குத் தெரிவான அவ்வணி முதல் சுற்றுடனே வெளியேறியது.

இவ்வருடம் ஜனவரி மாதம் நடைபெற்ற ஆசிய கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட 3வது சுற்றின் ஏ பிரிவில் 2வது இடத்தைப் பெற்றதன் மூலம் தென்கொரியா அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. 10 உலகக்கிண்ணத் தொடரில் விளையாடியுள்ள தென்கொரியா 2002ம் ஆண்டு 4வது இடத்தைப் பெற்றதே அவ்வணியின் உச்சபட்ச சாதனையாகும். இவ்வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற ஆசிய கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட 3வது சுற்றின் பி பிரிவில் இரண்டாவது இடததைப் பெற்றதன் மூலம் ஜப்பான் அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்கு தெரிவானது. 6 முறை உலகக் கிண்ணத் தொடரில் விளையாடியுள்ள அவ்வணி 2002,2010, 2018ம் ஆண்டுகளில் இரண்டாவது சுற்றுத் தெரிவானதே அவ்வணியின் உச்சபட்ச சாதனையாகும்.



இவ்வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற ஆசிய கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட 3வது சுற்றின் பி பிரிவில் சம்பியன் பட்டத்தை வென்றதன் மூலம் சவூதி அரேபிய அணி இம்முறை உலகக்கக்கிண்ணச் சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டது. 5 முறை உலகக் கிண்ணத் தொடருக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அவ்வணி 1994ம் ஆண்டு இரண்டாம் சுற்றுக்குத் தெரிவானது அவ்வணியின் உச்சபட்ச சாதனையாகும்.

இக்குவடோர் அணி 2022ம் ஆண்டு மார்ச் மாதம் தென் அமெரிக்க வலய கால்பந்து சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் 4ம் இடத்தைப் பெற்றதால் இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 3 முறை உலகக் கிண்ணத் தொடருக்கு தெரிவாகியுள்ள அவ்வணி 2006ம் ஆண்டு இரண்டாம் சுற்றுக்குத் தெரிவானதே அவ்வணியின் உச்சபட்ச சாதனையாகும்.

உருகுவே அணி கடந்த மார்ச் மாதம் தென் அமெரிக்க வலய கால்பந்து சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் 3ம் இடத்தைப் பெற்றதால் இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 13 முறை உலகக்கிண்ணத் தொடருக்கு தெரிவான அவ்வணி 1930 மற்றும் 1950ம் ஆண்டுகளில் கிண்ணம் வென்ற அணியாகும்.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற மத்திய அமெரிக்க மற்றும் கெரிபியன் சங்கத்தினால் நடாத்தப்பட்ட 3வது சுற்றில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் கனடா அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. 1986ம் ஆண்டு மட்டுமே உலகக் கிண்ணத் தொடருக்கு தெரிவான அவ்வணி முதல் சுற்றிலேயே வெளியேறியது.

கடந்த மார்ச் மாதம் ஆபிரிக்க கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட போட்டித் தொடரில் மூன்றாவது சுற்றில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் கானா அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை மூன்று உலகக்கிண்ணத் தொடரில் பங்குபற்றியுள்ள அவ்வணி 2010ம் ஆண்டு காலிறுதிக்குத் தெரிவானதே உச்சபட்ச சாதனையாகும்.

கடந்த மார்ச் மாதம் ஆபிரிக்க கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட போட்டித் தொடரில் மூன்றாவது சுற்றில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் செனகல் அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 2 முறை உலகக் கிண்ணத் தொடருக்கு தெரிவான அவ்வணி 2002ம் ஆண்டு காலிறுதிக்குத் தெரிவானதே அவ்வணியின் உச்சபட்ச சாதனையாகும்.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஐரோப்பிய கால்பந்தாட்ட சம்மேளனம் நடத்திய தொடரில் 2வது சுற்றின் சம்பியனாகத் தெரிவானதன் மூலம் இம்முறை போர்த்துக்கல் உலகக்கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 7 உலகக் கிண்ணத் தொடருக்கு தெரிவாகியுள்ள அவ்வணி 1966ம் ஆண்டு மூன்றாவது இடத்துக்கு வந்ததே அவ்வணியின் உச்சபட்ச சாதனையாகும்.

கடந்த மார்ச் மாதம் ஆபிரிக்க கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட போட்டித் தொடரில் மூன்றாவது சுற்றில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் டுனீசியா அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 5 முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவான அவ்வணி முதல் சுற்றுடனேயே வெளியேறியது.

கடந்த மார்ச் மாதம் ஆபிரிக்க கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட போட்டித் தொடரில் மூன்றாவது சுற்றில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் மொரோக்கோ அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 5 முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடியுள்ள அவ்வணி 1986ம் ஆண்டு இரணடாவது சுற்றுக்குத் தெரிவானது உச்சபட்ச சாதனையாகும்.

கடந்த மார்ச் மாதம் ஆபிரிக்க கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட போட்டித் தொடரில் மூன்றாவது சுற்றில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் கெமரூன் அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 7 முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவான அவ்வணி 1990ம் ஆண்டு காலிறுதிப் போட்டிக்குத் தெரிவானது சாதனையாகும்.

கடந்த மார்ச் மாதம் வட, மத்திய அமெரிக்க மற்றும் கெரீபியன் வலய மூன்றாவது சுற்றின் மூன்றாவது இடம் பெற்றதன் மூலம் அமெரிக்க அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 10 முறை உலகக் கிண்ணப் போட்டிக்குத் தெரிவான அவ்வணி 1930ம் ஆண்டு மூன்றாவது இடம் பெற்றுள்ளது.

கடந்த மார்ச் மாதம் வட, மத்திய அமெரிக்க மற்றும் கெரீபியன் வலய மூன்றாவது சுற்றின் மூன்றாவது இடம் பெற்றதன் மூலம் மெக்ஸிக்கோ அணி இம்முறை உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 16 முறை உலகக் கிண்ணத்தொடருக்கு தெரிவாகியுள்ளதுடன் 1970, 1986ம் ஆண்டுகளில் காலிறுதிக்குத் தெரிவானதே அவ்வணியின் உச்சபட்ச சாதனையாகும்.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஐரோப்பிய கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட 2வது சுற்றின் சம்பியனானதன் மூலம் இம்முறை போலந்து அணி உலகக் கிண்ணத் தொடருக்குத் தெரிவானது. இதுவரை 8 முறை உலகக் கிண்ணத் தொடருக்கு தெரிவான அவ்வணி 1974, 1982ம் ஆண்டுகளில் முன்றாமிடம் பெற்றதே அதன் உலகக் கிண்ணப் போட்டிகளில் உச்சபட்ச சாதனையாகும்.

எம்.எஸ்.எம்.ஹில்மி...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK




Senthooram
செந்தூரம்
2022 மே 01 ஞாயிற்றுக்கிழமை
கலைமகன்
தாஜ்மஹான்

# உலகின் மிகப்பெரிய நாணயத்தை அச்சிட்ட ஹங்கேரி

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்






உலகில் மோசமான பணவீக்கத்தால் பாதிக்கப்பட்ட நாடு என்றால், உடன் உங்களுக்கு ஜெர்மனி தான் ஞாபகத்துக்கு வரும். முதலாம் உலகப் போருக்குப் பின்னர் ஜெர்மனியில் பணவீக்கம் உலகப் பிரபலமானது. 1920இல் அந்நாட்டு பணம் ஒன்றின் மதிப்பு விறகுத் துண்டை விடவும் சரிந்தது.

ஆனால் 1946 இல் ஹங்கேரி, 1992-1993இல் யுகோஸ்லாவிய மற்றும் 2004 தொடக்கம் 2009 வரை சிம்பாப்வேயின் பணவீக்கம் ஜெர்மனியை விடவும் மோசமானது. குறிப்பாக சிம்பாப்வே டொலர் தெரு நாயை விடக் கேவலப்பட்டது. ஒரு கட்டத்தில் 100,000,000,000,000 நாணயத்தை அச்சடிக்க வேண்டி ஏற்பட்டது.

இது எல்லாவற்றையும் விட ஹங்கேரியின் மிகைப்பணவீக்கம் படுபயங்கரமானது. முதலாம் உலகப் போரில் அஸ்ட்ரோ-ஹங்கேரி பேரரசு தோற்கும் பக்கத்தில் இருந்தது. எனவே போருக்குப் பின் அந்தப் பேரரசு வீழ்ந்தது. புதிதாக பிறந்த ஹங்கேரி தேசத்தில் முறையான அரச கட்டமைப்பு இருக்கவில்லை. பட்ஜட் போடுவதற்கு கண்மண் தெரியாமல் பணத்தை அச்சடித்தது.

ஹங்கேரி நாணயத்தின் பெயர் குரோனன். அது முதலாம் உலகப் போருக்கு முன் ஒரு அமெரிக்க டொலருக்கு 5 அளவில் உறுதியாகவே இருந்தது. ஆனால் 1924 இல் அது 70,000 குரோனன் ஆக ரொக்கெட்டில் பறந்தது. தாங்கமுடியாதபோது குரோனன் என்ற நாணய முறையை மாற்றி பென்கோ என்ற நாணயத்தை அறிமுகம் செய்தது. அதாவது ஒரு குரோனனுக்கு 12,500 பென்கோ என்ற மதிப்பிலேயே புதிய பணம் அச்சடிக்கப்பட்டது.

ஆனால் இரண்டாம் உலகப் போர் நிலைமையை மேலும் மோசமடையச் செய்தது. அந்த நாடு ரஷ்யா மற்றும் ஜெர்மனியின் போர்க்களமாக பெரும் அழிவை சந்தித்தது. பாதி அளவான ஹங்கேரி தொழிற்துறைகள் அழிந்ததோடு 90 வீதமானவை பாதிப்புக்கு உள்ளானது.

போருக்குப் பின் ஹங்கேரியில் உற்பத்திகள் வீழ்ந்ததால் விலை அதிகரிப்பு ஏற்பட வரி வருமானம் இல்லாதபோது அரசும் தன்னிஷ்டத்திற்கு பணத்தை அச்சடித்தது. பணம் மரத்தில் காய்க்கவில்லை என்றால் எனன அச்சு இயந்திரங்களில் காய்க்க ஆரம்பித்தது.

பண வீக்கத்தை சொல்லவும் வேண்டுமா? பண வீக்கம் உச்சம் பெற்றபோது விலைகள் நாளைக்கு 150,000 வீதம் என்ற வகையில் அதிகரிக்க ஆரம்பித்தது. அதாவது காலையில் இருக்கும் பணத்தின் மதிப்பு அன்று மாலையாகும்போது பாதியாக குறையும் அளவுக்கு நிலைமை படுமோசமானது. பணத்தின் மதிப்பு நாளுக்கு நாள் வீழ்வதால் அரசு வரி அறவிடுவதும் அர்த்தமற்றதாகிவிட்டது.

1946 ஜூலை மாதம் ஆகும்போது அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான பென்கோ நாணயத்தின் மதிப்பு 460 டிரில்லியன் டிரில்லியனாக உச்சம் தொட்டது. உண்மையில் இந்த டிரில்லியன் கணக்குக்கு எத்தனை பூஜ்ஜியங்கள் இருக்கும் என்று கணக்குப் பார்க்கப்போனால் தலை சுற்றும். அதனை வைத்து பணம் அச்சிடப்போனால் பூஜ்ஜியம் போடவே இடம் இல்லாமல் போய்விடும்.

என்றாலும் உலகில் மிகப்பெரிய இலக்கத்தில் பணம் அச்சடித்த நாடு என்ற உலக சாதனையை ஹங்கேரியிடம் இருந்து இன்று வரை எந்த நாடும் பறித்துக்கொள்ளவில்லை. 1946 ஆம் ஆண்டு ஹங்கேரி அச்சிட்ட நாணயத்தின் பெறுமதி 100 மில்லியன் பி-பென்கோ. இலக்கமாக குறிப்பிடுவதென்றால் 100,000,000,000,000,000,000. இதனை இலக்கமாக போடுவதற்கு நாணயத் தாளில் இடம் இல்லை என்பதால் எழுத்திலேயே மதிப்பு குறிப்பிடப்பட்டிருந்தது.

நாணயத்தின் மதிப்பு என்பதற்கு உண்மையில் அந்த நாணயம் மதிப்பே இல்லை. அமெரிக்க டொலருடன் ஒப்பிட்டால் 0.20 டொலர்கள் மாத்திரமே.

நிலைமையை கட்டுப்படுத்த பல உத்திகள் கையாளப்பட்டபோதும் எதுவும் வெற்றி தருவதாக இல்லை. கடைசியில் நாணயத்தின் பெயரை மாற்றி மாற்றி வைத்தார்கள். முதலில் பென்கோ, மில்பென்கோவானது, பின்னர் பில்பென்கோவாக மாற்றப்பட்ட, அதுவும் வெற்றி தராதபோது அடோபென்கோவாக அறிமுகம் செய்யப்பட்டது.

இப்படி அடிக்கடி பெயர் மாற்றியபோதும் நாணயத் தாள் ஒரே வடிவில்தான் இருந்தது. ஆனால் நிறம் மாத்திரம் மாற்றப்பட்டது.

நிலைமைய கட்டுப்படுத்த அரசு பின்னர் அதிரடி நடவடிக்கைகளை எடுத்தது. வரி சீர்திருத்தம், வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்ட தங்க சொத்துகளை மீட்பது போன்றவை இதில் அடங்கும்.

இறுதியாக 1946 ஓகஸ்டில் போரின்ட் என்ற புதிய நாணயம் அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கு பின் நிலைமை சற்று ஸ்திரம் அடைய ஆரம்பித்தது. 1960கள் ஆகும்போதும் விலை ஒப்பீட்டளவில் உறுதியானது. பின்னர் வழக்கத்துக்கு திரும்பியது. இன்று வரை ஹங்கேரி போரின்ட் நாணயத்தையே பயன்படுத்துகிறது.



## போலி நாணயக் குற்றிகளை உருவாக்கிய தில்லாடி

போலி நாணயத்தாள்கள் அச்சிடுவது உலகெங்கும் நடக்கும் காரியம். ஆனால், பிரிட்டனைச் சேர்ந்த கிளின்டன் அதிலும் ஒரு தந்திரம் செய்தார். ஒரு பவுண்ட் பெறுமதியான போலி நாயணக் குற்றிகளை தயாரித்தார்.

போலி நாணயத் தாள்கள் என்றால் கண்டுபிடிப்பது இலகுவானது. அதற்கென்று தனி இயந்திரமே இருக்கிறது. போலி நாணயக் குற்றிகள், அதுவும் வெறுமனே 1 பவுண்ட் பெறுமதி கொண்ட நாணயக் குற்றிகளை யாரும் பொருட்படுத்தப்போவதில்லை.

இதனால் கிளின்டன் தன்னிஷ்டத்திற்கு தயாரித்தார். ஏழு ஆண்டுகளில் அவர் இவ்வாறு 14 மில்லியன் போலி நாணயக் குற்றிகளை தயாரித்திருக்கிறார்.

ஒருநாள் அவரது தொழிற்சாலையை சோதனையிட்டபோது கிளின்டன் கையும்மெய்யுமாக பிடிபட்டார்.



# அரச கலாபூஷண விருதுபெற்ற கலைமகன் தாஜ்மஹான்
















வானவில்லிலே
எத்துணை எத்துணை
வர்ண கோலம் !
உங்கள் வாய்ச்
சொல்லிலே
எத்துணை எத்துணை
வார்த்தை ஜாலம் !

கதிராட்டம் போடும்
வயலுக்குள்ளே நெல்லு !
சதிராட்டம் போடும்
உங்கள் வாய்க்குள்ளே
தமிழ்ச் சொல்லு !

நீங்கள் இருந்தால்
ஒரு மொழி தாங்கி !
எழுந்தால் ஒரு
ஒலி வாங்கி !

சாதிப்பதில் திறமை !
சமூகத்தில் பெருமை !
பண்பிலே அருமை !
பார்வையிலே
ஒரு குளிர்மை !

கலை உலகத்துக்கு
நீங்கள் ஒரு கண்ணாடி !
கலை அரங்கத்திலே
நீங்கள் ஒரு முன்னோடி !
பேனா முனையிலிருந்து
கொட்டும் "மை"

மறைந்திடும், மங்கிடும்,
ஓய்ந்திடும் !
ஆனால்
உங்களிடம் நான்
கண்ட "மை"
மறையாது,நிறையாது,
மங்காது _ பொங்கும் !
ஓய்ந்திடாது உயர்ந்திடும் !
ஆம் இது உண்மை !

செய்து வெல்வது
உங்கள் கை ராசி !
சிரித்துப் பேசுவது
உங்கள் முகராசி !

கொஞ்சமும் வஞ்சமில்லா
உங்கள் நெஞ்சம்
ஒரு பூ மஞ்சம் !
அதில் உங்கள்
விசிறிகள் எல்லாம் தஞ்சம் !

உங்கள் மேனி எங்கும் !
பொன் தமிழ் பொங்கும்!

சொல்லுக்கு
சொல் கலகலப்பு !
வார்த்தைக்கு
வார்த்தை விறு விறுப்பு!
பேச்சுக்கு
பேச்சு துடி துடிப்பு !
அசைவுக்கு
அசைவு சுறு சுறுப்பு !
ஆயிரம் நாவை

ஆண்டவன் தந்தாலும்
அடுக்கடுக்காய்
அகராதிகள் வந்தாலும்
உங்கள் ஆளுமையை
அளந்து சொல்ல
ஓர் அளவு கோலும்
இல்லை !
உங்கள் திறமையை
திறந்து பார்க்க _ ஒரு
திறவு கோலும் இல்லை !
உங்கள் பேச்சு பல ரசம்!
எங்கள் மனசு
உஙகள் வசம் !
இதில் மாற்றமில்லை
இது நிசமே நிசம் !

பிள்ளைக் குணம் !
வள்ளல் தனம் !
உள்ளம் வெள்ளை !
கள்ளம் இல்லை !
உங்கள் பெற்றோர்களுக்கு!
நீங்கள்
மகனாக ஜனனம் !
மற்றவர்க்கு நீங்கள்
மகானாக சரணம் !

உங்கள் சிந்தைக்கு ஒரு
கலங்கரை விளக்கு
அதில் உங்கள் சிந்தனை
களங்கமில்லா இலக்கு !

மலர் தோட்டத்திலே
பூக்களின் பரிமளம் !
உங்கள்
கலை கோட்டத்திலே
பாக்களின் மொழி வளம் !

வானொலியில்
பல நிகழ்வு பரிமாறும் !
உங்கள் வாய் மொழியில்
பல உணர்வு அரங்கேறும் !

மழை மேகம் சூழ்
கொண்டால்
வானத்துக்கு கருமை !
உங்கள் கலை மோகம்
கால் கொண்டால்
உங்கள் ஞானத்துக்கு
பெருமை !

புவி மன்னருக்குரியது
சிம்மாசனம் !
இந்த கவி மன்னருக்குரியது
கலா பூஷணம் !

வாழ்த்துக்கள்
இலங்கை
பொன்மனச் செம்மல்
பொன் தமிழ் கவிஞர்
கலா பூஷணம்
தாஜ்மஹான்...

**"கவியமுதன் "**

# சோ.சந்திரசேகரம் எனும் கல்விச் சிகரம்



இலங்கைக் கல்வி வரலாற்றில் நிரப்பமாய் நின்ற நாமம் கல்விப் பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரம்.

அண்மையில் இறைபதமடைந்த பேராசான். இலங்கைக் கல்வித் துறையிலும் குறிப்பாகத் தமிழ்க் கல்வி எழுச்சியிலும் அரை நூற்றாண்டுகளாகத் துடிப்போடு நின்றிலங்கியவர்.

கல்விவரலாற்றையும் அதன் போக்குகளையும் ஆய்ந்த கன்று நோக்கி எளிமையாகப் பன்னீர் தெளிப்பதுபோல மாணாக்கரை ஆற்றுப்படுத்திய கல்வி வள்ளல். ஆயிரக்கணக்கான கல்வியியலாளர்களைத் தன் காலத்திலேயே உருவாக்கிய உன்னத புருஷர். அதற்கென தன் பேனாவைத் தூய்மைப்படுத்திக் கொண்டு இடையறாது எழுதிநின்றஎ மூத்துச் செயற்பாட்டாளர்.

கொழும்பு பல்கலைக்கழகக் கல்விப் பீடத்தின் பீடாதிபதியாய் செயற்பட்ட காலத்தில் உயிரோட்டமான வகுப்பறைகளுக்கூடாகத் தனது கல்விப் பல் ஆளுமையை தன் மாணாக்கருக்களித்த பெருமகனார் ஆவார்.

மும்மொழித் தேர்ச்சியால் சபைகள் பலகண்ட பேச்சாளர் பேராசான் அவர்கள். அவரது பேச்சுக்கள், வானொலி உரைகள், கலந்துரையாடல்கள் பதியப்பட்டுத் தொகுக்கப்பட்டிருக்குமாயின் ஒரு மூதுரையாளனின் அனுபவப் பெட்டகம் நம் வசம் கிடைத்திருக்கும்.

அவர் எழுதிக் குவித்த கல்விப் பனுவல்கள், தன் கைப்பட எழுதி இன்னும் வெளிவராமல் அவரது வீட்டு அலுமாரியடுக்கில் காத்திருக்கும் கோவைகள் அவர் செதுக்கிய சிற்பங்களாகும்.

சமகாலத்தில் கல்விப் புலத்தில் இயங்கிய மானுட நேயர் மாமேதை சோ.சந்திரசேகரம். பேதங்கள் கடந்த சமூக நோக்காளர். எல்லா மனிதர்களுடனும் இனிது பழக வல்ல வள்ளலார். இனிய பேச்சும், மனசுதொடும் அவரது சிரிப்பும், மனதைத் தெம்பூட்டும் அவரது நகைச்சுவையும், அகங்காரமற்ற எளிமையும் எல்லோர் மத்தியிலும் அன்னாரை மையங்கொள்ளச் செய்தது.

பேராசான் சோ.சந்திரசேகரம் பன்முக ஆளுமைகளின் சிகரமாகத் திகழ்ந்தவர்.

கல்வியியலாளர், சமூகவியலாளர், வரலாற்றாய்வாளர், பன்மொழிப் புலமையாளர், ஆய்வறிஞர், போதனாத்தலைவர், பாடவிதான ஆக்குனர், இலக்கிய ஈடுபாட்டாளர் எனப் பல தளங்களில் உயர்ந்து நின்ற உன்னத புருஷர்.

அதனாத் தான் அவர் பெயர் தலைமையிடத்தில் வைக்கப்பட்டது. கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர், கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர், அரச கரும மொழிகள் ஆணையாளர் எனப் பலப்பல.

கீழ்மட்ட மக்கள் பற்றிய சிந்தனை அவரிடம் எப்போதும் உண்டு. மலையகக் கல்வி மேம்பாட்டில் பெரிதும் அக்கறை செலுத்தினார். முஸ்லிம்கள் கல்வியில் எழுச்சி பெறவேண்டுமென விரும்பினார். அவரது நோக்குகளும் இலக்குகளும் எண்ணப்பாடுகளும் அவர் உருவாக்கியபாதை வழி தொடரவேண்டும்.

இலக்கியவாதிகளுடன் என்றுமே நெருக்கமான உறவுவளர்த்தவர் பேராசான். இலக்கிய நிகழ்வுகள் பலவற்றில் தலைமை முகம் பதித்தவர். உற்சாகப்படுத்துவதிலும், பாராட்டுவதிலும், வழிப்படுத்துவதிலும் மகான்.

பேராசான் நமக்காகத்தன் இறுதி மூச்சுவரை எழுதிக் கொண்டிருந்தவர். இனிஅவர் பற்றிநாம் எழுதவேண்டும். பேராசானது வாழ்க்கை வரலாறு தன் வரலாறாக வரவுள்ளது மகிழ்ச்சி.

இன்னும் அவரதுஒளித்தடம் தொடரவேண்டும்.பேராசான் சோமசுந்தரம் சந்திரசேகரம் மன்றம் அமைக்கப்படவேண்டும். அவர்பெயரில் சகாயநிதியம் உருவாக்கப்படவேண்டும். சந்திரசேகரன் கல்விப் புலமைப் பரிசில் வருடந்தோறும் ஏழை மாணவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். அவர் பெயரில் கல்வி, சமூகவியல், கலை இலக்கிய ஆய்வரங்குகள் தொடர்ந்து நிகழ்த்தப்படுதல் வேண்டும். பேராசான் சோ. சந்திரசேகரம் விருது வருடந்தோறும் கல்வி, கலை, இலக்கிய, சமூக சேவையாளர்களுக்கு வழங்கப்படவேண்டும். பல்கலைக்கழகக் கல்விப்பீடத்தில் அவர் நாமம் ஒளிரவேண்டும். இது போன்ற அன்னார் குறித்த செயற்படுமுறைகள் தொடர்வது அவர் விட்டுச்சென்ற புத்திஜீவித்துவங்களதும், சமூகஅமைப்புக்களினதும் கடமைகளாகும்.

கல்விப் பேராசான் சோ. சந்திரசேகரம் இலங்கைக் கல்வி வரலாறு உள்ளவரை உள்ளொளியாய் ஒளிர்வார்.

## ஔவன் கவிதை

### சருகிலையின் இருப்பு

ஒன்பதாவது சருகுதிர்ந்த பழுத்த
செம்மஞ்சலிலை
காய்ந்த பொழுதின் கனத்தை
நெற்றியில் ஒற்றிய
வியர்வையின் பிசுபிசுப்பு..
சொற்களில் வெதும்பிய சிரிப்பொலி
உடைந்த கனவுகளைச் சுமந்த நிசி
உறுமுமோர் ஒற்றையோசை
சாளரத்திலேறிய கறல் பூட்டு
யாரும் வந்திலர்
யாரும் உள் நுழைந்திலர்

அங்கிங்கென அலைந்தது சருகிலை
அதன் பழுப்புச் செம்மஞ்சளில்
நிசியின் மூன்றாமிரவு ஒளிர்ந்தது

மூடிய கதவிடுக்கில் கசிந்த
அதன் துளி
பத்தாவது சருகுதிருமோர் கணம்
நானிழந்தது
வேர்...
இலை....
வீடு....
மீதமிருந்த கனவு....

## மனம் ததும்பும் ஹைக்கூ 5

இயற்கைமீது இறகு கட்டி விடுவது ஹைக்கூ எனும் கற்பனை. கடல், நதி, காற்று, வானம், மேகம், மழை, சூரியன், நிலவு, நட்ஷத்திரம் என ஹைக்கூ மின்மினிகளால் தோரணம் கட்டிவிடும் காட்சி அழகானது. மன லயிப்பைத் தருவது. அதன் உட்பொதிந்த பொருளாழம் அற்புதம் மிக்கது.

நிலவைப் பாடும் ஹைக்கூக்கள் சில வற்றை உதாரணம் காட்டலாம்.

**அறுவடை நிலா**

புகை தவழும்
நதிப்பரப்பு

இது ஹட்கோரிரன்ஸட்ஸூ கவிதை.

ஒரு துணையுமில்லை
தரிசான வயல் வெளியில், ஆ...
குளிர்மையான நிலவு
இது ரொசெகியினுடைய ஹைக்கூ.

ஹைக்கூக் கவிதை மனம் இயற்கையோடு இழையோடி உணர்வு துடிப்பதனை யும், கருத்துச் சுழியில் சுழல்வதனை யும் தரிசிக்கிறோம்.

**குளம்**

முகம் பார்க்கும் நிலா
குளிக்காமல் திரும்பினேன்

என்ற மித்ரா கவிதையில் நிலாப்பற்று, அழகிய தரிசனத்தை உடைத்து விடா மென் மனம், தியாக ஈர்ப்பு என்பவற்றை அனுபவிக்கிறோம்.

ஏழைக் கிராமத்து மக்கள் மீனுமில்லை பூவுமில்லை
நிலவைப் பகிர்ந்து கொள்ளலாம்

ஸாய்காகு ஹைக்கூவில் வறுமையின் வடிவம் வெளிப்படுகிறது.எனினுமென்ன மென்மையான அழகும், எல்லோருக்கும் பொதுவான ரசனையுணர்வும் ஒளிபாயும் நிலவினூடாக நிரப்பமாகிறது.

என் வீடு எரிந்துபோனதால்
நன்றாகப் பார்க்கமுடிகிறது
உதிக்கும் நிலாவை

என்ற மசாஹிடேயின் ஹைக்கூ துன்பியலை மிஞ்சிநிற்கும் அழகியலை அல்லது அதனைச் சகித்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை அல்லது வறுமை மீதான கையாலாகாத் தனத்தை நிரூபணம் செய்கிறது.


இலையுதிர் நாள் முழுநிலா
மழை பிடித்துக் கொண்ட, சாளரம்
அரற்றும் ஈச்சமரம்

உசெனின் இந்தக் ஹைக்கூ அரற்றும் ஈச்ச மரத்தினூடாக இயற்கை நிகழ்வை மட்டும் பேசவில்லை. அதனடியாகத் தோன்றும் சிக்கல் அல்லது துயரம் அல்லது தடுமாறும் மனநிலையைப் பற்றி பேசப்படுகிறது. இப்படித்தான் ஹைக்கூக் கவிதைகள் உணர்வின் சாளரத்தைத் திறந்து விட்டு மனசின் விறாண்டலை அல்லது மெல்லிய வருடலைஅனுபவிக்கத் தருகின்றன.

நிலா இந்தஎல்லாக் ஹைக்கூக்களிலும் உதிப்பதைத் தரிசிக்கிறோம்.




## மின்னிதழ்: சாளரம் புதிய காற்றுக்காக



நேத்ரா அலைவரிசையில் சனிதோறும் காலை 8.30 இற்கு சாளரம் புதிய காற்றுக்காகத் திறக்கப்படுகிறது. பிரவாகம், கோடைமழை ஆகிய மின்னிதழ்களின் இயக்குநர் ஆத்மா ஜாபிரின் இன்னொரு படைப்பு சாளரம். இது புதிய காற்றுக்காகத் திறக்கப்படுகிறது.

கலை, இலக்கியச் செயற்பாடுகள் அபரிமிதமாகத் தோன்றும் சூழலில், ஊடக இலக்கியக்களங்கள் மரபுசார்ந்து இயங்கும் பாங்கிலிருந்து வேறுபட்டு புதிய உத்வேகத்துடன் புதிய பாணியில் நேர்த்தியாக ஊடக ஒலிஒளி இயக்கச் செயற்பாடுகளை முன்னெடுக்க வல்லவர் ஆத்மா. அவரது முன்னிரு இதழ்களும் இதற்குச் சான்று.

கலை, இலக்கியம், சினிமா,ஓவியம், நிழற்படம்,இசை, நடனம், பெண்ணியம், பால்யம் என உள்ளடக்க வீச்சத்தோடு சமகால இயங்கு நிலையில் நின்றியங்கும் ஆளுமைப் படைப்பாக சாளரம் திறக்கிறது.

அச்சூடக இலக்கியம், வானொலி இலக்கியம், சமூகஊடக இலக்கியம் என்பவற்றைக் காட்டிலும் தொலைக்காட்சி வழி விரியும் சாளரம் முப்பரிமாணங் கொண்ட உயிர்ப்புவடிவம் என்ற வகையில் அதன் வருகைஅவசியமானது. எனினும் மின்னிதழில் தோன்றும் தொகுப்பாளர்கள் அல்லது நேர்காணல் நடத்துனர்கள் துறைசார் ஆய்வறிவோடும் மொழிச் செழுமையோடும் திகழவேண்டும் என்பதில் சாளரம் கவனம் செலுத்த வேண்டும். இனி புதிய காற்றையெழுப்பும்; புதிய காற்றைப்பரப்பும்; புதிய காற்றின் பக்கம் ஈர்க்கும். சாளரம் அகல விரியட்டும்.




மகன் : அப்பா எங்க காதலுக்கு தடை போடாதீங்க. எங்க காதல் தெய்வீகக் காதல்!
அப்பா : அது என்னடா தெய்வீகக் காதல்?
மகன் : என் பெயர் பரமசிவம். என் காதலி பெயர் பார்வதி. அதை வெச்சுத்தான்!



கடைக்காரர்: சார், இந்த காற்சட்டை 10 வருஷமானாலும் சாயம் போகாது, கிழியாது.
வாடிக்கையாளர்: அதெப்படி அவ்வளவு உறுதியா சொல்றீங்க?
கடைக்காரர்: 10 வருஷமா நம்ம கடைலதான் இருக்கு.



ஒருவர் : உங்கள் மகனை ஏன் மண்ணெண்ணெய் ஊற்றிக் குளிக்க வைக்கிறீர்கள்?
மற்றவர் : அவன் மிகவும் துரு துரு வென்று இருக்கான் அதான்?
ஒருவர் : ??



# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



பேரன் : ஏன் பாட்டி என் மேல இவ்வளவு பாசமா இருக்க?
பாட்டி : நீதாண்டா பேராண்டி நாளைக்கு எனக்கு கொள்ளி வைக்கணும்!
பேரன் : போ பாட்டி! எனக்கு நாளைக்கு ஸ்கூல் இருக்கு! இன்னைக்கே கொள்ளி வச்சுரேன்.



கடவுள் : உன் தவத்தை மெச்சினேன் ஏதாவது இரண்டு வரம் கேள்?
பக்தன் : நான் தூங்கும்போது சாக வேண்டும்.
கடவுள் : ஆகட்டும். மற்றொரு வரம்?
பக்தன் : எனக்கு தூக்கமே வரக்கூடாது.
கடவுள் : ??




தரகர்: பொண்ணுக்கு என்ன வயசு ஆகுது?
அப்பா: ஆடி வந்த 18 முடியுது.
தரகர்: அப்போ ஆடாம வந்தா?



மகள் : Valentine's Day அப்படினா என்னம்மா?
அம்மா : எதுக்கு நீ கேக்குற?
மகள் : காலையில அப்பா யாருக்கோ போன் பண்ணி Valentine's Day வாழ்த்துகள்னு சொன்னாரே.



வாடிக்கையாளர்: இந்த மிச்சர் பக்கெட் என்ன விலை?
கடைக்காரர்: பத்து ரூபா.
வாடிக்கையாளர்: லூசுன்னா எவ்ளோ?
கடைக்காரர்: எல்லாருக்கும் ஒரே விலை தான்பா.



மாமனார் : மாப்பிள்ளைக்கு காது கேக்காதுங்கற விஷயம் தலை தீபாவளி அன்னிக்குத்தான் தெரிஞ்சது!
அத்தை : எப்படி?
மாமனார் : இந்த வருஷம் தீபாவளிக்கு ஏன் யாருமே பட்டாசு வெடிக்கலைன்னு கேட்டாரு!

# கலைப்பயணத்திற்கு உறுதுணையாக இருந்து வருபவர் கணவர்



**பரதநாட்டியக் கலைஞராக தன் திறமையை காட்டிவரும் திருமதி தர்ஷி சுகன் ஆன்மீகம், கலை, கலாசாரம் என பல் வேறு துறைகளில் அரும் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இவரை அண்மையில் செந்துாரம் இதழுக்கு பேட்டி கண்ட போது அவர் அளித்த விபரங்கள் வருமாறு,**

### உங்களைப் பற்றி கூறுங்களேன்.........

நான் தென்கைலை எனப் பெயர் பெற்ற திருகோணமலை நகரில் பிரபல மருத்துவரான Dr. நடராஜகுரு ரவிச்சந்திரனுக்கும் திருமதி கருணைமணிக்கும் (மலர்) இரண்டு சகோதரர்களுடன் கனிஷ்ட புதல்வியாகப் பிறந்தேன். எனது மூத்த சகோதரர் துஷ்யந்தன். இளைய சகோதரர் ஹ்ரித்திக்ரோஷன்.

### கல்வியில் கரைகண்ட விபரங்கள் பற்றி கூறுங்களேன்....

எனது ஆரம்பக் கல்வியினை திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் (St. Mary's College) ஆரம்பித்து திருமலை புனித பிரான்சிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் (St. Francis Xavier TMV) நிறைவு செய்தேன்.

### நடனத்தில் ஆர்வம் ஏற்படக் காரணம் என்ன?



சிறுவயதில் இருந்தே எனக்கு நடனம் பயில வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. எனது தந்தையாரும் சிறு வயதில் நடனம் கற்றுப் பின் மருத்துவக் கல்வி காரணமாகத் தொடரமுடியாமல் கைவிட்டார். அதனால் அவரது கனவும் என்னை நடனக்கலையில் சிறந்த தேர்ச்சி பெற்றவளாக்க வேண்டும் என்பதே. அவரது கனவுடன் எனது ஆர்வத்தினையும் புரிந்து கொண்ட எனது தந்தையார் நான் பரதநாட்டியக் கலையைப் பயில்வதற்குப் பலவழிகளிலும் ஊக்கமளித்தார்.

அதற்கு வித்திடும் வகையில் எனது ஆரம்ப நடனக்கல்வியை நடன ஆசிரியை திருமதி சசிகலா பிரபாகரனிடம் மிகவும் ஆரவத்துடன் பயில ஆரம்பித்தேன். அத்துடன் எனது பாடசாலை ஆசிரியை திருமதி கலைச்செல்வி ரவிச்சந்திரனிடமும் நடனம் பயின்றேன். பாடசாலையில் பல நடன நிகழ்ச்சிகளில் பங்குபற்றிப் பரிசில்களையும் பாராட்டினையும் பெற்றேன்.

அதன் பிறகு எனது தந்தையாரது தொழில் இடமாற்றம் காரணமாக தலைநகராம் கொழும்பிற்குக் குடிபெயர்ந்தோம். அங்கு கொழும்பு கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள ஹரே கிருஷ்ணா நாட்டியப்பள்ளியில் நடன ஆசிரியை திருமதி சுமதியிடம் நடனக் கல்வியைத் தொடர்ந்தேன்.

அதே போன்று இசைக் கலையையும் முறையாகப் பயில வேண்டும் என்ற நோக்கத்துடன் இலங்கை சங்கீத சபை நிறுவனரும் அதன் அதிபருமான திருமதி கௌரீஸ்வரி ராஜப்பனிடம் சங்கீதம் பயின்றேன். அத்துடன் திருமதி பரமேஸ்வரி மோகனவேலிடம் வயலின் கலையையும், திருமதி ராதிகா மற்றும் திருமதி அனுஷா மொறாயஸிடம் வீணைக் கலையையும் முறையாகப் பயின்றேன்.

அத்துடன் திருமதி துஷ்யந்தி பிரகலாதனிடமும் நடனம் பயிலத் தொடங்கினேன். அவர் எனது திறமையினைப் பட்டைதீட்டி நடனக் கலையில் தேர்ச்சி பெறப் பெரிதும் பாடுபட்டார்.

அருங்கலையைப் போதித்து
அனுபவங்களைப் பகிர்ந்து
ஆயகலைகள் கற்பித்து
வாழ்விற்கு வழிகாட்டும்
வாழ்வியல் புத்தகமே

இவர் எனது தந்தையையும் தாயையும் போன்றும் ஒரு உற்ற நண்பனைப் போன்றும் என்னை வழி நடத்திய ஆசிரியர் என்றே கூறலாம்.

இவரது ஊக்கத்தின் காரணமாகவும் எனது தந்தையாரின் முயற்சியினாலும் என்னுடைய மேற்படிப்பினை இந்தியாவில் சர்வதேசப் புகழ் பெற்ற திருச்சி மாநகரில் அமைந்துள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பரதநாட்டியக் கல்வியைப் பயின்று முதல் வகுப்பில் தேறி பரதநாட்டியத்தில் இளங்கலைப் (BFA) பட்டம் பெற்றேன். இதற்குப் பலவழிகளிலும் எனது தந்தையுடன் இணைந்து எனது கணவர் சுகந்தன் உதவி புரிந்தார்.

எனக்கு அமைந்த கணவர் மிகவும் சிறந்தவர் என்பதுடன் அவர் ஒரு ஆன்மீகவாதியுமாவார். நான் எனது இலட்சியத்தினை அடைய அரும்பாடு

"சிறுவயதில் இருந்தே எனக்கு நடனம் பயில வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. எனது தந்தையாரும் சிறு வயதில் நடனம் கற்றுப் பின் மருத்துவக் கல்வி காரணமாகத் தொடரமுடியாமல் கைவிட்டார். அதனால் அவரது கனவும் என்னை நடனக்கலையில் சிறந்த தேர்ச்சி பெற்றவளாக்க வேண்டும் என்பதே. அவரது கனவுடன் எனது ஆர்வத்தினையும் புரிந்து கொண்ட எனது தந்தையார் நான் பரதநாட்டியக் கலையைப் பயில்வதற்குப் பலவழிகளிலும் ஊக்கமளித்தார்."









பட்டவர்களில் அவரும் ஒருவராவார். இன்றுவரை எனது கலைப்பயணத்திற்கு உறுதுணையாக இருந்து வருகின்றார்.


கோணேஸ்வரா இசை நாட்டியப்பள்ளியை நிறுவிப் பல மாணவர்களுக்கு இசை, நடன வகுப்புகளை நடாத்தி வருகின்றேன்.

அத்துடன் ஹேகித்தை சபரிகிரீஷ ஐயப்பன் தேவஸ்தானத்தில் அறநெறி ஆசிரியையாகவும் வத்தளை ஹுணுப்பிட்டி அருண் மாணிக்கவாசகர் இந்துக் கல்லூரியில் ஆசிரியையாகவும் பணியாற்றி வருகின்றேன்.

இந்து கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றிச் சான்றிதழ்களையும், வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்பட்ட நடனம், இசை மற்றும் வீணைப் பரீட்சைகளில் சித்தியடைந்து சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டுள்ளேன்.

எனது மகள்மார் ரம்யவர்ஷினி , சதுர்ஷா.

**கே. ஈஸ்வரலிங்கம்**





மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பாரதியார் விழா "பாரதிபைந்தமிழ்த் தேரின் சாரதி" என்னும் தலைப்பில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் தமிழருவி த சிவகுமாரன் சிறப்புரை ஆற்றினார். சபையின் தலைவர், சிவஸ்ரீ மகா தர்மகுமாரக் குருக்களின் அனுபவப்பட்ட நேர்த்தியான ஒழுங்கமைப்பில் தமிழ்ச் சங்கத்தினர் இணைந்து இவ் விழாவை சிறப்பாகநடத்தியிருந்தனர்.

Senthooram செந்தூரம்



# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

**ஆர்.ராஜா. தாண்டியடி.**

**கேள்வி:** மூன்று தலைமுறையைச் சேர்ந்த நடிகர்கள் இணைந்து நடித்திருக்கும் படமான சூர்யாவின் 'ஓ மை டோக்' படம் எப்போது வெளிவரும்.?



**பதில்:** நடிகர் சூர்யாவின் சொந்தப் பட நிறுவனமான 2டி என்டர்டெய்ன்மெண்ட நிறுவனமும், அமேசன் டிஜிட்டல் தளமும் இணைந்து தயாரிக்கும் படம்தான் 'ஓ மை டோக்' இப்படம் ஏப்ரல் 21ஆம் திகதி அன்று வெளியாகும் என. அதிகாரப் பூர்வமாக அறிவித்திருக்கிறார்கள். தமிழில் முதன் முறையாக மூன்று தலைமுறையைச் சேர்ந்த நடிகர்கள் இணைந்து நடித்திருக்கும் படம் 'ஓ மை டோக்'. மூத்த நடிகர் விஜயகுமார், அவரது மகன் அருண் விஜய்,அவரது மகன் அர்னவ் விஜய் ஆகியோர் இணைந்து கதையின் நாயகர்களாக நடித்திருக்கிறார்கள்.பார்வையற்ற நாய்க்குட்டி ஒன்றிற்கும் சிறார் ஒருவனுக்கும் இடையேயான பாசத்தை மையப்படுத்தி உருவாகி இருக்கும்'ஓ மை டோக்'படத்திற்கு டிஜிட்டல் தளத்தில் வெளியானாலும் பெரும் ஆதரவு கிடைக்கும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

**எம். அஹ்மத் மாத்தறை**

**கேள்வி:** MGR, சிவாஜி, ஜெமினி போன்ற புகழ்வாய்ந்த நடிகர்கள் நடித்த பழைய படங்களை (கதை வசனம், பாடல்கள் உட்பட) தற்போதுள்ள நடிகர்களைக் கொண்டு மீண்டும் தயாரித்து திரைக்கு அனுப்பினால் ....

**பதில்:**அன்றைய நடிப்பு வேறு இன்றைய நடிப்பு வேறு! இதனால் கதை,வசனம் எல்லா வற்றையும் அப்படியே எழுதி நடித்தால் கண்டிப்பாக அது எடுபடாது. இன்றுள்ள நடிகர் நடிகைகளால் அப்படியெல்லாம் "நடிக்க"முடியாது. அதனால்... கதையில் மாற்றம் செய்து அவரவர் "பாணி"க்கு மாற்றினால் தான் வெற்றி பெறும்.

**மாகிரட். எலபடகம.**

**கேள்வி:** என்ன... இது...நகைச்சுவை நடிகர் யோகி பாபு ஜோடியாக நடிகை லட்சுமி மேனன் நடிக்கிறாராமே...?



**பதில்:** காலமாற்றத்தில் இதெல்லாம்...சகஜம் தானே...16 வயதில் 'கும்கி'படத்தில் அறிமுகமாகி அனைவரையும் கவர்ந்தவர் நடிகை லட்சுமி மேனன். அதன் பிறகு தொடர்ந்து'குட்டிப் புலி','கொம்பன்'நான் சிகப்பு மனிதன்'என பல படங்களில் நடித்து முன்னணி நடிகையாகவும் ராசியான நடிகையாகவும் வலம் வந்தார்.பிறகு திடீரென்று உயர் கல்வி கற்கப் போகிறேன் என்று தனது தாய் மண்ணான கேரளாவுக்கு சென்றார். அதன் பிறகு வாய்ப்புகள் வரவில்லை. தற்போது ஏதேனும் ஒரு வாய்ப்பு கிடைத்துவிடாதா?என் ஏக்கத்துடன் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தார். அவரது நிலையை அவதானித்த திரையுலகினர்,யோகி பாபு நாயகனாக நடிக்கும் 'மலை'எனும் படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க வைத்து விட்டனர்.

'மலை'படத்தின் இயக்குநர் மருகேஷ்

**ஆர்.எஸ்.கோபால். வவுனியா.**



**கேள்வி:** 'தளபதி'யின் படமான 'பீஸ்ட்'படத்தை விழுங்கி ஏப்பம் விட்டு விட்டதாமே "கே.ஜி.எப் 2' உண்மையா மொழி?

**பதில்:** உண்மைதான். 'பீஸ்ட்',கே. ஜி.எப்2'இரண்டு படங்களின் வெளியீட்டுக்கு முன்பு'பீஸ்ட்'படத்துக்கு போட்டியாக'கே. ஜி.எப்.'படமா என்ற ஒரு சர்ச்சை எழுந்தது.



ஆனால், வெளியீட்டுக்குப் பிறகு'கே.எப். ஜி'படத்தை 'பீஸ்ட்'நெருங்கவே முடியாது என்பதுதான் உண்மையாகிப் போனது!

'பீஸ்ட்'படம் முதலில் வந்ததால் அந்தப்படம் பற்றிய பேச்சு ஒருநா ள் இருந்தது. ஆனால்,மறுதினமே'கே.ஜி.எப்2'. படம் வந்தது.இதன்பிறகு 'கே. ஜி.எப்.'படம் பற்றிய பேசசுதான் அதிகமாக இருந்தது.சமூக வலைத்தளங்களில்'கே.எப். ஜி2.படத்தை ரசிகர்கள் கொண்டாடுகிறார்கள்.


இந்திய திரையுலகத்தில் அக்ஷன் படங்களுக்கென்றுஒரு டார்கெட்டை. படத்தின் இயக்குனர் பிரசாந்த் நீல் 'பிக்ஸ்'செய்து விட்டார். இனி அந்த அளவுக்கு அடுத்து வருபவர்கள் ஆக்ஷன் படமெடுக்க வேண்டிய கட்டாயம் வந்து விட்டது.

'கே.ஜி.எப் 2'படத்துக்கு கிடைத்துள்ள வரவேற்பு காரணமாக படம் வெளி வந்த இரண்டு நாட்களுக்குப் பின்னும் பல தியேட்டர்களில் அதிகாலை, காலையில் காட்சிகள் திட்டமிடப் பட்டுள்ளன.'கே. ஜி.எப்2'படத்திற்கு மக்களின் வருகை ஆதிகமாகி உள்ளதால்,அனைத்து வரவேற்பையும் பணமாக்க வேண்டும் என்பதால் பல தியேட்டர்கள் சிறப்புக் காட்சிகளை நடத்து கின்றன.

இதனால் 'பீஸ்ட'பட ரெகுலர் காட்சிகள் மட்டுமே நடை பெறுகின்றன. அடுத்து வரும் நாட்களில் அதன் காட்சி நேரங்கள் குறைக்கப்படும் எனகிறார்கள் அதற்குப் பதிலாக 'கே. ஜி.எப்.2படத்தை திரையிட முடிவு செய்துள்ளார்கள்.

**ஜே.எம்.முபாரிஸ். கல்முனை.**

**கேள்வி:** இரட்டை வேடங்களில் அதிகமாக நடித்த நடிகர் யார்..எம். ஜி.ஆரா... சிவாஜியா...?



**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# நெருக்கமான தோழி பிரியா பவானி சங்கர்

அசோக் செல்வன், சதீஷ், பிரியா பவானி சங்கர் நடித்து, சுமந்த் ராதாகிருஷ்ணன் இயக்கத்தில் உருவாகியிருக்கும் படம் 'ஹாஸ்டல்'. இந்த படக்குழுவினர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது சதீஷ் கூறியதாவது: பிரியா பவானி சங்கர் என் நெருக்கமான தோழியாக மாறிவிட்டார்.

ரொம்ப ஜாலியாக வேலை பார்த்த படம் இது. எல்லோரும் வாழ்க்கையில் அனுபவித்த கதைதான். நான் ஹாஸ்டலில் தங்கி படித்ததில்லை. ஆனால், நண்பன் ஹாஸ்டலில் போய் தங்கியிருக்கிறேன். அந்த நினைவுகளை இந்த படம் தூண்டிவிடும். அசோக் செல்வன் நடித்த ஒரு படம் சமீபத்தில்தான் வெளியானது.

இப்போது அடுத்த படத்தோடு வந்து விட்டார். அவர் 3 கதாநாயகிகளோடு நெருக்கமாக நடிப்பதை பார்த்து பொறாமையாக இருந்தது. பிரியா பவானி சங்கர் என் நெருக்கமான தோழியாக மாறிவிட்டார். இந்த படத்தின் டைரக்டர் சுமந்த் ராதாகிருஷ்ணன் என் நண்பர். படப்பிடிப்பின்போது நன்றாக கவனித்துக்கொண்ட தயாரிப்பாளர் ஆர்.ரவீந்திரனுக்கு நன்றி.

இவ்வாறு நடிகர் சதீஷ் பேசினார்.



# சுதா கொங்கராவின் படத்தில் சூர்யா

ஹோம்பாலே பிலிம்ஸ் தயாரிப்பில் புதிய படத்தை சுதா கொங்கரா இயக்குகிறார் இந்த படத்தில் நடிகர் சூர்யா இணைய உள்ளதாக கூறப்படுகிறது.

மணிரத்திடம் உதவி இயக்குனராக பணிபுரிந்த சுதா கொங்கரா, 2008ம் ஆண்டில் 'துரோகி' என்ற படத்தை இயக்கினார். 2016ம் ஆண்டு 'இறுதிச்சுற்று' படத்தை இயக்கினார். எதிர்பார்ப்பின்றி வெளியான இந்தப்படம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. 2020ம் ஆண்டு சூர்யா நடிப்பில் 'சூரரைப்போற்று' படத்தை இயக்கினார். இந்த படம் ஓ.டி.டி. தளத்தில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. இந்தியில் இதன் 'ரீமேக்' படத்தை தற்போது அவர் இயக்கி வருகிறார். அதைத்தொடர்ந்து தமிழில் ஒரு படத்தை இயக்க இருக்கிறார்.



'கே.ஜி.எப்.' படத்தின் பிரமாண்ட வெற்றியைத் தொடர்ந்து தமிழிலும் படங்களை தயாரித்து வரும் ஹோம்பாலே பிலிம்ஸ் தயாரிப்பில் புதிய படத்தை சுதா கொங்கரா இயக்குகிறார். ''சில கதைகளை நிச்சயம் கூறவேண்டும். இது நாடு முழுவதும் சென்றடையும். ஒரு புதிய அத்தியாயத்துக்கு, அழுத்தமான கதையுடன் சுதா கொங்கரா இயக்கத்தில், உண்மை சம்பவங்களின் அடிப்படையில் ஒரு கதை', என்று அந்த பட நிறுவனம் தனது 'டுவிட்டர்' பக்கத்தில் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இந்த படத்தில் நடிகர் சூர்யா இணைய உள்ளதாக கூறப்படுகிறது. வெற்றிமாறனின் 'வாடிவாசல்' மற்றும் பாலாவின் புதிய படத்துக்கு பிறகு, சுதா

# பல துறைகளில் மக்களின் மனம் கவர்ந்த பார்வதி



பத்திரிகையாளராக கலை பயணத்தை துவங்கி, ஆர்.ஜெ., வி.ஜெ., சின்னத்திரை, மாடலிங் என பல துறைகளில் மக்களின் மனம் கவர்ந்த பார்வதி, தற்போது வெள்ளித்திரையில் ஜொலிக்க துவங்கியுள்ளார். வாள் வீசும் பார்வை... வலை வீசும் வார்த்தையால் ... மனம் திறந்து பேசியதாவது:

உங்களை பற்றி சொந்த ஊர் மதுரை. அப்பா வழக்கறிஞர், அம்மா பேராசிரியை. சகோதரர், சகோதரி இருவரும் வழக்கறிஞர்கள். நான் சென்னையில் பி.ஏ., ஜெர்னலிசம், மதுரையில் எம்.எஸ்.சி., ஜெர்னலிசம் படித்தேன்.

ஆர்.ஜெ., டூ வி.ஜெ., இந்த மாற்றம் எப்படி

மதுரையில் இரு ஆண்டுகள் ஆர்.ஜெ.,வாக பணியாற்றினேன். சென்னையில் படிக்கும் போதே யுடியூபில் சினிமா ரிவியூ பண்ணினேன். விஷூவல் மீடியாவில் தொடர வேண்டும் என்பதே ஆசை. அதனால் சென்னை சென்று வி.ஜெ., ஆனேன். ஆர்.ஜெ.,வாக இருக்கும் போது என் குரல் மக்களுக்கு பரீட்சயமானது. இப்போது எனது முகம் பரீட்சயமாகியுள்ளது. பார்வதியின் தெருக்கூத்து நிகழ்ச்சி நல்ல வரவேற்பை பெற்றது. அதன் மூலம் இளைஞர்களிடம் பிரபலம் ஆனேன். தெருக்கூத்து பேட்டிகள் மீம்ஸ் கிரியேட்டர்களால் அதிகம் பகிரப்பட்டது முதல் படம் பற்றிசிவகுமாரின் சபதம் படத்தில் சிறிய கேரக்டர் தான். ஆனாலும் நான் நிஜ வாழ்க்கையில் எப்படியோ அதுபோலவே அந்த கதாப்பாத்திரம் அமைந்தது. நூறு கோடி வானவில் படத்தில் உங்கள் ரோல் பூ படம் இயக்கிய சசியின் படம். நிறைய பயிற்சிக்கு பின் இதில் தேர்வானேன். இந்த படத்தில் நல்ல கேரக்டர் அமைந்துள்ளது. ஹரீஷ் கல்யாண் உடன் நடித்தது சந்தோஷம்.

கோவை சரளா உடன் நடித்த அனுபவம்

நிறைய அனுபவங்களை என்னோடு பகிர்ந்து கொண்டார். நடிப்பு நுணுக்கங்களை கூறினார். பல ஆண்டுகளாக சினிமாவில் பயணிப்பவர்; அவருடனான அனுபவம் நிறைய கற்றுக்கொடுத்தது.

பார்வதியை வெள்ளித்திரையில் மட்டும் தான் பார்க்க முடியுமா டிவி.,யில் எப்போதும் போல் பார்க்கலாம். அனைத்து தளங்களிலும் இயங்க வேண்டும் என்பது ஆசை. சினிமாவில் தனிக்கவனம் செலுத்தி வருகிறேன். டான்ஸ், இசை கற்று வருகிறேன்ஹீரோயினாக எப்போது பார்க்கலாம்ந ல்ல கதாபாத்திரங்களை தேர்ந்தெடுத்து நடிக்க வேண்டும். மனோரமா, ஊர்வசி, சரண்யா போன்று குணச்சித்திர வேடங்களில் நடிக்க ஆசை. ஹீரோயின் பிம்பத்தை தாண்டி இன்றும் மக்களால் இவர்களது கதாப்பாத்திரம் கொண்டாடப்படுகிறது. அதற்காக ஹீரோயின் ரோல் வேண்டாம் என்றில்லை. வாய்ப்பு கிடைத்தால் அந்த அவதாரம் எடுக்கவும் ரெடி.

# அரபி குத்து பூஜா ஹெக்டேயின் ஆசை



தெலுங்கில் மிகவும் வரவேற்பை பெற்ற நடிகை பூஜா ஹெக்டே தனது மனதில் இருக்கும் ஆசையை பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

நடிகை பூஜா ஹெக்டே விஜய்க்கு ஜோடியாக பீஸ்ட் திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில், செல்வராகவன், விடிவி கணேஷ், அபர்ணா தாஸ், யோகிபாபு என அனைத்து நடிகர்களும் நடித்துள்ளனர்.

நெல்சன் இயக்கி உள்ள இத்திரைப்படம் நேற்று வெளியாகி பல நெகட்டிவ் கருத்துக்கள் இணையத்தில் பரவி வருகின்றன. மிகப்பெரிய அளவில் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட பீஸ்ட் திரைப்படம் ஏமாற்றத்தை அளித்துள்ளதால் தளபதியின் ரசிகர்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

இந்நிலையில், நடிகை பூஜா ஹெக்டே அளித்துள்ள பேட்டியில், என்னுடைய சினிமா வாழ்க்கை ஆரம்பித்ததே தமிழில் இருந்துதான். முகமூடி படத்திற்கு பிறகு எனக்கு எந்த திரைப்படத்திலும் நடிக்கும் வாய்ப்பு வரவில்லை. ரோலர் கோஸ்ட் போல எனது திரைவாழ்க்கையில் பள்ளம் மேடுகள் இருந்தன. பல போராட்டங்களுக்கு பிறகு ஸ்டார் நடிகை என்ற பெயர் கிடைத்துள்ளது என்றார்

நீண்ட ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் தமிழில் என்ட்ரி ஆனதற்கு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதுவும் பீஸ்ட் படத்தில் விஜய்யுடன் இணைந்து நடித்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி. விஜய் சார் ரொம்ப அமைதி அவரோட படத்தில் நடித்ததே நல்ல அனுபவமாக இருந்தது. பீஸ்ட் படத்தில் விஜய்யுடன் எனக்கு கெமிஸ்டிரி நன்றாக இருந்தது என்றார்.

புட்டபொம்மா பாடல் எனக்கு மிகப்பெரிய ரசிகர் பட்டாளத்தை பெற்றுக் கொடுத்தது. ஆனால், இதைவிட இரண்டு மடங்கு உலகம் முழுவதும் புகழை ஏற்படுத்திக் கொடுத்தது அரபிக்குத்து பாடல். உலகநாடுகள் பலவற்றிலிருந்து சோஷியல் மீடியாவில், அரபிக்குத்துக்கு டான்ஸ் ஆடுவதை பார்க்கும் போது அந்த பாடல் எவ்வளவு பிரபலமாகி உள்ளது என்பதை பார்க்க முடிகிறது என்றார்.

தொடர்ந்து பேசிய பூஜா ஹெக்டே, தமிழில் படவாய்ப்புகள் இல்லாமல் இருந்த போது கூடதொடர்ந்து தமிழ் படங்களை பார்த்தேன். விஜய் சேதுபதியின் 96 திரைப்படம் எனக்கு பிடித்த படங்களில் ஒன்று, தொடர்ந்து தமிழ் படங்களில் நடிக்க வேண்டும்,அதுவும் கதாநாயகிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களில் நடிக்க வேண்டும் என்பது எனது ஆசை என்றார். என் அப்பா கமல்ஹாசனின் தீவிர ரசிகர், அவருக்கு நாயகன் படம் பிடிக்கும், அந்த படத்தை டிவியில் எப்போ போட்டாலும் அப்பா அவ்வளவு ஆர்வமாக பார்ப்பார் என்றார்.



## பெண் எழுத்தாளர் 30

**ஈழவள நாட்டின் மகுடமாம் யாழ்ப்பாணத்தில் வயல்களும் தோட்டங்களும் கோவிலும் குளங்களும் சூழ்ந்த ஒரு அழகிய கிராமமான புத்தூரை பிறப்பிடமாக கொண்ட இவர் தற்போது சுவிஸ்லாந்தில் வசித்து வருகிறார்.**

# சுவிஸ்லாந்த் சங்கரி சிவகணேசன்

இவரது கணவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரி முன்னாள் விரிவுரையாளராவார்.

இவரது கவிதைப் பயணம் தொடர்வதற்கு உந்துசக்தியும்

அதை நூலாக்கம் செய்வதற்கு முதற்காரணமும் முதல் வாசகரும் தனது கணவர்தான் எனக் கூறுகிறார்

இவரது தந்தை யாழ் பல்கலைக்கழக மெய்யியற்துறை முன்னாள் பேராசிரியராவார்.

இவர் எழுத்துறையில் கால் வைப்பதற்கு அவரின் சிந்தனைகளும் பேச்சாற்றலும் தான் முக்கிய காரணம். தன் கவிதைகளின் முதல் விமர்சகரும் வழிகாட்டியும் தந்தைதான். இவரது தந்தையின் தந்தை ஒரு தமிழ் பண்டிதர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




இவர் ஆரம்பக் கல்வியை (15) யாழ் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியிலும் பின்பு (6 12) சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் கற்றார்.

பின்னர் தேசிய டிப்ளோமா மென்பொறியியலாளர் *higher national diploma in software engineering* முடித்துவிட்டு

சிறிது காலம் வலம்புரி பத்திரிகையில் பணிபுரிந்தார்.

பாடசலைக்காலங்களிலிருந்தே கவிதை எழுதுவதில் ஆர்வமுடைய இவர் கவிதைநூல்கள் படிப்பதும் கவிதைகள் எழுதுவதையும் பழக்கப்படுத்திக் கொண்டார்.

உயர்தரம் படிக்கும் போதே வலம்புரி பத்திரிகை கவிதைக்கலசம் பகுதியிலும் தினமுரசு வாரமலரிலும் இவரது கவிதைகள் பிரசுரிக்கப்பட்டன.

அதன் பின்னர் இணையத்தளங்கள் முகநூல் ஊடாகவே இவர் கவிதைகளை பதிவிடுவதோடு

மின்னிதழல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என பல்வேறு தளங்களிலும் இவரது கவிதைகள் பதிவிடப்படுகின்றன.

இவரது படைப்புக்கள் இயற்கை, காதல், பெண்ணியம், சமூகம், வாழ்வியல், ஈழம் போன்றவற்றை சார்ந்ததாகவே அமைந்துள்ளது. காலத்தின் எல்லையை இவர் கடந்த பின்பும் தன்





**உயர்தரம் படிக்கும் போதே வலம்புரி பத்திரிகை கவிதைக்கலசம் பகுதியிலும் தினமுரசு வாரமலரிலும் இவரது கவிதைகள் பிரசுரிக்கப்பட்டன.**




கால்தடங்கல் அழியாதிருக்க வேண்டுமென்றே தனது கவிதைகளை நூலாக்கம் செய்தார்.

இவர் "உன் நிலம் நோக்கி நகரும் மேகம்" எனும் கவிதை நூலொன்றை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற சென்னைப் புத்தகக் கண்காட்சியில் எழிலினிப் பதிப்பகத்தால் இவர் கவிதை நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது..

சுவிஸ்லாந்தில் சப்கவுசன் மாநிலத்தில் அந்நூலின் அறிமுகவிழா 03.04.2022 அன்று பல புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்களோடு வெகு விமர்சையாக நடைபெற்றது.

இவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பான "அரூப நிழல்கள்" முழுக்க முழுக்க பெண் வாழ்வியலின் தேவைகளை இடர்களை கவிதைகளாய் வடித்துள்ளார். இந்நூல் இன்னும் சில மாதங்களில் தன் தந்தையால் தன் தாய்நிலத்தில் வெளியீடு செய்யப்படவுள்ளதாக கூறினார்.

மேலும் ஏன் கவிதை எழுத வேண்டும்? எனும் கேள்வியானது இன்று பலராலும் கேட்கப்படும் கேள்வியாக உள்ளது.

காதலை கனிவை ஆத்மார்த்த உணர்வுகளை,

மறக்கப்பட்ட, மறக்கடிக்கப்பட்ட சுதந்திரங்களை, விலக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட விடுதலைகளை,

கவிதைகளாக கதைகளாக படைக்கும் போது

காலத்தின் எல்லையை அந்த படைப்பாளி கடந்துவிட்ட பிறகும், எழுத்துக்களின் வழியே காலம் தாண்டி நிலை பெறச்செய்யும் ஓர் உன்னத கலைதான் இந்த எழுத்துக்கலையும்.

காலத்தின் நீட்சியில் கலைந்து போகாமல் பதியப்பட வேண்டியவைதான். சமூகத்திலுள்ள அத்தனை மாற்றங்களும் ஆதலால் கவிதையாகவோ கதையாகவோ படைப்புகள் வெளியாக வேண்டும் எனக் கூறுகிறார்.

மேலும் குறிப்பிடுகையில் கவிதையானது கண்டுணர்ந்தவை, கேட்டறிந்தவை, வாசிப்பின் மூலம் பெற்றவை என சிந்தனைகள் அருந்துகின்ற அருவங்களை, உருவங்களாக மனது ஏற்றுக் கொள்ளும் பொழுது விரல்கள் அழகின் படிமங்களை நெய்யத் தொடங்கிவிடுகின்றன. அவை படிப்போர் மனதில் இலகுவாக பதியக்கூடிய வகையில் எளிமையாக லாவகமான விதத்தில் ஒரு கவிதை அமைய வேண்டும் என்பது தனது கருத்து எனக் கூறுகிறார்.

**மஜினா உமறு லெவ்வை**
**மாவடிப்பள்ளி.**

# செல்ஃபி உலா


சாரீக் அமீன் மடவளை — பஸார்


கிஷாலன் — மோதர கடற்கரை


வர்ஷாலினி வன்கோல் பேஸ்


ஆமிர் டான் — பொத்துவில்


சாரா ஷாலினி — வத்தளை


ஜெஸ்லி


வாணி — கொட்டாஞ்சேனை


பிரவீன் சதா


இராமன் — வத்தளை



டிவோனா — கொட்டாஞ்சேனை

## 06 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





## நிறம் தீட்டுங்கள்



## What am I ?

What am I?

I have four legs.

I love to go for walks.


I say 'woof woof'.



## பழங்களின் பெயர்களை எழுதுங்கள்



## வழிகாட்டுங்கள்



# இணைய வானொலி ஊடாக தனக்கென தனியிடம் பிடித்த நாகராசா தருஜன்

**இன்றைய சமூகத்தில் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி பொறுப்பற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் சில இளைஞர்கள் மத்தியில் தனது இருபதாவது வயதில் சுய தொழில் முயற்சியாக பசங்க எப்.எம். இணைய வானொலியை ஆரம்பித்து இன்று யாழ்ப்பாணம் நெல்லியடி பகுதியில் பிரபல்யமான ஊடகமாகவும், மக்களால் விரும்பப்படும் நபராகவும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவரே நாகராசா தருஜன்.**




**கேள்வி:** உங்களைப் பற்றிய அறிமுகம்

**பதில்:** நான் நாகராசாதருஜன் உயர்தர கல்வியில் தொழில்நுட்பப் பாடப் பிரிவில் கல்வி கற்றேன். எனக்கு 22 வயது. தற்போது யாழ்ப்பாணம், நெல்லியடியில் பசங்க இணைய வானொலியை நடத்தி வருகின்றேன்.

**கேள்வி:** இணைய வானொலியை ஆரம்பிப்பதற்கான காரணம் என்ன?

**பதில்:** வாழ்க்கையில் மற்றவர்களிடமிருந்து தனித்துவமாக என்னை வெளிக்காட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த இணைய வானொலி என்னும் தொழில் முயற்சியை நான் ஆரம்பித்தேன். எனக்கு மற்றவர்களிடம் வேலை செய்வதில் அவ்வளவாக விருப்பமில்லை. நான் சுயமாக தொழில் செய்து உரிமையாளராக இருக்க வேண்டும் என்பதே எனது ஆசை. இதன் அடிப்படையிலேயே நான் ஒரு இணைய வானொலியை ஆரம்பித்தேன்.

**கேள்வி:** இணைய வானொலியில் வருமானத்தை ஈட்டிக் கொள்வது அவ்வளவு எளிதான விடயமல்ல இருப்பினும் இந்தத் துறையை தொழில் துறையாக தெரிவு செய்தமைக்கான காரணம் என்ன?

**பதில்:** நிச்சயமாக இணைய வானொலியில் அவ்வளவாக வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியாது. ஆனால் சில நுட்பங்களும், திட்டமிடல்களும் இணைய வானொலி ஊடாக வாழ்க்கையை நடத்துவதற்கு ஏற்ற வகையிலான வருமானத்தை பெற்றுக் கொள்ள வழிவகுக்கும். அது எமது முயற்சியிலேயே தங்கியுள்ளது.

**கேள்வி:** இணைய வானொலியை நடத்துவதில் பொருளாதார சிக்கல்களை சந்தித்துள்ளீர்களா?

**பதில்:** நிச்சயமாக! மிகவும் பொருளாதார நெருக்கடிக்கு உட்பட்ட நிலையில் எமது இணைய வானொலி காணப்பட்டது. நாங்கள் ஆரம்பத்தில் எவ்வித மூலதனமும் இல்லாமல் ஒரு கடனுதவி மூலமாகவே இணைய வானொலி நடத்துவதற்கான தொழில்நுட்ப கருவிகளை பெற்றுக்கொண்டோம். நாம் இணைய வானொலி நடத்த வேண்டும் எனில் மூலதனம் இல்லாமல் நடத்த முடியாது. வேறு ஒரு தொழிலில் ஈடுபட்டு கொண்டு நடத்த முடியும். சிறிது காலத்திற்குப் பின்னர் வேண்டுமென்றால் இதை மாத்திரம் தொழிலாக வைத்துக்கொள்ள முடியும்.

**கேள்வி:** எவ்வாறான வழிமுறைகள் ஊடாக இணைய வானொலியில் வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும்?

**பதில்:** முதலில் நாம் மக்களிடம் எமது இணைய வானொலியை பிரபல்யமடைய செய்ய வேண்டும். அவர்களிடம் எமது நிகழ்ச்சிகளைக் கொண்டு சேர்க்க வேண்டும். இதன்மூலம் நேயர்களே ஒருசில நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை வழங்குவார்கள். அதுமட்டுமில்லாமல் பொதுவாகவே ஊடகங்கள் என்றால் அவர்களுக்கான அடித்தளம் வருமானத்தை பெற்றுக் கொடுப்பது விளம்பரங்களாகும். எமது பசங்க இணைய வானொலியை பார்த்தோமானால் நாங்கள் எமது நெல்லியடிநகரத்திற்குள் விளம்பரங்களையும் தகவல்களையும் வழங்குவதற்கு ஒலிபெருக்கி வைத்து செயல்படுகின்றோம். இதனூடாக விளம்பரங்களை ஒலிபரப்பி வருமானத்தை பெற்றுக்கொள்கின்றோம்.

**கேள்வி:** இணைய வானொலிக்கான ஊடக பரப்பு எவ்வாறு உள்ளது?

**பதில்:** இணைய வானொலியை பார்த்தால் அதற்கென்று ஒரு இணையதள முகவரி காணப்படுகின்றது. அதேநேரம் செயலிகள், இணைய வானொலிக்கானமுகப்புத்தகபக்கம், யூடியூப்தளங்கள் என்பன காணப்படுகின்றன. இணையத்தில் மாத்திரமல்லாமல் இவற்றினூடாக வானொலிகளின் நிகழ்ச்சிகளை உலக அளவில் எம்மால் கொண்டு சேர்க்க முடிகின்றது.

**கேள்வி:** பண்பலை வானொலிகளோடு இணைய வானொலிகளை எவ்வாறு வேறுபடுத்தி பார்க்கின்றீர்கள்?

**பதில்:** பண்பலை வானொலிகளில் அவர்களுடைய நேயர்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்து அவர்களுடைய திறமைகள் தேசிய அளவில் காணப்படும். ஆனால் இணைய வானொலியை பொருத்தவரையில் ஒரு நாடு கடந்து உலக அளவில் பல உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளமுடியும். சுயமாக, சுதந்திரமாக செயல்படக் கூடிய ஒரு தன்மை இணைய வானொலி அறிவிப்பாளர்களுக்கு கிடைக்கின்றது. ஒவ்வொருவரும் தங்களுக்கு விருப்பமான நேரங்களை தாங்கள் தெரிவு செய்து கொண்டு தனக்கென்று ஒரு பாணியை உருவாக்கிக் கொண்டு சுதந்திரமாக இணைய வானொலியில் செயற்பட முடியும்.

**கேள்வி:** இணைய வானொலி மூலம் உங்களுக்கு எவ்வாறான வாய்ப்புகள் கிடைக்கின்றன?

**பதில்:** இணைய வானொலி மூலம் எமக்கு நிறைய உறவுகள் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கின்றனர். அதேநேரம் விருப்பமான நிகழ்ச்சிகளை நேயர்களுக்கு ஏற்ற வகையில் வழங்கக் கூடியதாக இருக்கின்றது. நேயர்களுடைய இணைதல் செயற்பாட்டின் ஊடாக திட்டமிட்டுசெயற்படக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. எங்களுடைய இலக்குபெறுனர்கள் புலம்பெயர்ந்த தமிழர்களாக காணப்படுவதால் உள்நாட்டு மக்களுக்கு நிறைய நிதி உதவிகளை, நிவாரண உதவிகளை பெற்றுக் கொடுக்கக் கூடிய வாய்ப்புகள் இணைய வானொலி ஊடாக கிடைக்கின்றது.

**கேள்வி:** இணைய வானொலிகள் ஊடாக ஏற்படக்கூடிய சவால்கள் என்னவென்று நினைக்கின்றீர்கள்?

**பதில்:** நிச்சயமாக இணைய வானொலிகளுக்கு பொருளாதார சிக்கல் என்பது பெரிய சவாலாக காணப்படுகின்றது. இணைய வானொலியை நடத்துவதற்கான இடவசதி அதற்கான வாடகை, மின்சாரக் கட்டணங்கள் மற்றும் தொழில் புரியும் அறிவிப்பாளர்களுக்கான சம்பளம் வழங்குதல். இதைத்தவிர விளம்பரங்களை பெற்றுக்கொள்வதற்கு மக்களை சென்றடைய வேண்டும்.மக்களுக்கு விருப்பமான நிகழ்ச்சிகளை தேர்ந்தெடுத்து வழங்க வேண்டும். இல்லையெனில் மக்கள் இணைய வானொலிகளை நாடி வரமாட்டார்கள். எனவே பல சிக்கல்களின் மத்தியிலே இணைய வானொலியை நடத்த வேண்டும்.

**கேள்வி:** இளம் வயதில் ஒரு ஊடகத்தின் உரிமையாளராக இருந்து குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளீர்கள். நீங்கள் இளம் சமுதாயத்திற்கு கூற விரும்புவது?

**பதில்:** இளம் சமுதாயத்தினர் நமக்கான ஒரு தனித்துவமான அடையாளத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும். சுதந்திரமாக செயல்படும் தன்மையை உருவாக்க வேண்டும். சுயதொழில் முயற்சி என்பது ஆரம்பத்தில் கடினமாக இருந்தாலும் பிறகு நமக்கான அடையாளத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாக இருக்கும் எனவே சுதந்திரமாக செயற்படுவதற்கான சுய தொழில் முயற்சிகளை மேற்கொள்வது வாழ்க்கைக்கு சிறப்பாக அமையும்.

**செ.எழிலன்**
**ஊடகக் கற்கைகள்துறை**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com






# சரும அழகை மேம்படுத்தும் வைட்டமின் ஈ மாத்திரை

**உடலின் சீரான இயக்கத்திற்கு வைட்டமின்களின் பங்களிப்பு முக்கியமானது. உடல் உள் உறுப்புகள் மற்றும் சருமத்தின் ஆரோக்கியத்திற்கும் வைட்டமின்கள் உறுதுணையாக இருக்கின்றன.**



சரும அழகை மேம்படுத்துவதற்கு வைட்டமின் ஈ அவசியமானதாக இருக்கிறது. வைட்டமின் ஈ மாத்திரைகளை பயன்படுத்தி சருமத்தை மெருகேற்றலாம். அதனை எப்படி பயன்படுத்துவது என்பது பற்றி பார்ப்போம்.

★சூரிய வெப்பத்தாக்கத்தை பிரதிபலிக்கும் புற ஊதாக்கதிர்களிடம் இருந்து சருமத்தை காப்பதற்கு வைட்டமின் ஈ உதவுகிறது. சரும சுருக்கத்திற்கும் நிவாரணம் அளிக்கிறது. இரண்டு வைட்டமின் ஈ மாத்திரைகளுடன் சிறிதளவு ஆலிவ் ஆயில் சேர்த்து இரவில் தூங்க செல்வதற்கு முன்பு சருமத்தில் தடவிக்கொள்ள வேண்டும். காலையில் எழுந்ததும் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும்.

★ பிரசவத்தின்போது வயிற்றில் உருவாகும் கோடுகளை வைட்டமின் ஈ மாத்திரையால் போக்கலாம். ஒரு டேபிள்ஸ்பூன் தேங்காய் எண்ணெய்யை எடுத்து லேசாக சூடுபடுத்தி அதனுடன் வைட்டமின் ஈ மாத்திரையை சேர்த்து குழப்பி தழும்புகள் உள்ள இடத்தில் தடவி மசாஜ் செய்துவிட வேண்டும். 10 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். தினமும் இரண்டு முறை இவ்வாறு செய்து வந்தால் தழும்புகள் மறைய தொடங்கும்.



★ சிறிதளவு எலுமிச்சை சாறுடன் ஐந்து வைட்டமின் ஈ மாத்திரைகளை சேர்த்து குழைத்தும் தழும்புகளில் தடவி மசாஜ் செய்யலாம். 30 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும்.

★ வெது வெதுப்பான நீரில் 1 டேபிள்ஸ்பூன் எலுமிச்சை சாறு, சிறிதளவு தேன் மற்றும் வைட்டமின் ஈ மாத்திரையை கலந்துகொள்ள வேண்டும். அந்த நீரில் கை, கால்களை 15 நிமிடம் முக்கி வைக்க வேண்டும். பின்னர் விரும்பிய மாய்ச்சரைசரை தடவிக்கொள்ளலாம். தினமும் அவ்வாறு செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.





# பிரெட் சீஸ் பைட்ஸ்



### தேவையான பொருட்கள் :

பிரட் 4
சீஸ் துருவல் தேவையான அளவு
சோள மாவு 3 தேக்கரண்டி
பிரெட் தூள் 1/2 கப்
எண்ணெய் தேவையான அளவு

### செய்முறை:

பிரெட்டின் ஓரங்களை வெட்டி விட்டு முக்கோண வடிவில் வெட்டிக்கொள்ளவும்.

அடுத்து அதன் மீது துருவிய சீஸை தூவி, அதன் மேல் மற்றொரு பிரெட்டை வைக்கவும்.

சோள மாவில் தண்ணீர் சேர்த்து கரைத்து கொள்ளவும்.

சீஸ் வைத்த பிரெட் துண்டை சோள மாவில் நனைத்து பிரெட் தூளில் பிரட்டி வைக்கவும். இவ்வாறு அனைத்தையும் செய்து வைக்கவும்.

கடாயில் எண்ணெய் ஊற்றி சூடானதும் செய்து வைத்த பிரெட்டை போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்கவும்.

இப்போது சூப்பரான பிரெட் சீஸ் பைட்ஸ் ரெடி.

# மதுரை வீரனுக்கு 66 வயது

**"மருதூர் கோபால மேனன் ராமச்சந்திரன்" என்ற தமிழக மக்களின் "இதயத்துடிப்பு" எம்ஜியாரின் சினிமாத்திரை வாழ்வில் பெரும் திருப்பு முனைகளை மட்டுமன்றி தென்னக திரைச் சரித்திரத்தையே மாற்றியமைத்த வெற்றிக் காவியம் "மதுரை வீரன் "..!**

மக்கள் திலகம் எம்ஜியாரின் மகத்தான வெற்றிப் படங்களில் ஒன்றான "மதுரை வீரன் "திரைக்கு வந்து 66 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.(13.04.1956).

சாதி அடிப்படையில் ஒடுக்கப்பட்டவர்களின் கடவுளாக இன்றளவிலும் கோவில் அமைத்து வழிபடும் காவல் தெய்வமான "மதுரை வீரன்" வரலாறானது,16ஆம் நூற்றாண்டில் மதுரை திருமலை நாயக்கர் மன்னன் காலத்தில் நடந்த உண்மையான சரித்திரமாகும்.கையில் வாளுடன்,அரிவாள் மீசையுடன், பொம்மியம்மாள், வெள்ளையம்மாள் என இரு மனுவியர்களுடன் கம்பீரமாக வீற்றிருப்பவரே "மதுரை வீரன்". இக்காவியமானது மதுரையில் வாழந்த ஓர் மாவீரனின் வீர வரலாறாகும்.மதுரையம் பதி வரலாற்றில் இடம் பெற்ற

"கொலைக் களங்களின் வாக்குமூலம்"

என்பதன் ஆய்வுகளை சான்றுகளுடன்

அருணன் என்ற பேராசிரியர் எழுதிய உண்மைச் சம்வங்களைக் கொண்டு சினிமாவுக்கேற்ப திரைக்கதை அமைத்து உருவான வெற்றிப் படமே "மதுரை வீரன் " ஒடுக்கப்பட்ட அருந்ததியர் குலத்தில் பிறந்த ஒருவன் பெயர்" வீரன்".

பெயருக்கேற்றாற்போல் சுத்த வீரனாகவே திகழ்ந்தவன். ஒரு பாளையக்காரன் மகளான பொம்மியையும்,வெள்ளையம்மாள் என்ற ஆடல் அழகியையும் காதலால் சிறைப் பிடித்த வீரன்,இறுதியில் உண்மைக்குப் புறம்பான வகையில் குற்றம் சாட்டப்பட்டு மாறு கை மாறு கால் வெட்டப்பட்ட நிலையில் மரணமாகின்றான். இவ்வுண்மைச் சம்பவத்தை சிறு மாறுதல் செய்து,கதாநாயகனை ஒடுக்கப்பட்ட அருந்ததியராக சித்தரிக்காமல், அரசகுலதவராக மாற்றி சினிமாத் திரைக்கதைக்கு ஏற்ப கவியரசு கண்ணதாசன் திரைக்கதை வசனம் எழுதி "மதுரை வீரனா"க மக்கள் திலகம் எம்ஜியார் நடித்த படமே "மதுரை வீரன் "...

திரைக்கதைப்படி, ஒரு மன்னருக்கு அழகிய ஓர் ஆண் குழந்தை வாரிசாக பிறக்கின்றது.கொடி சுற்றி பிறந்த இக்குழந்தையால் அரசுக்கு பெரும் ஆபத்து ஏற்படுமென அரண்மனை ஜோதிடர்கள் ஆரூடம் கூறியபடியால் இக்குழந்தையை வனத்தில் விட்டு விடுகின்றனர்.வாரணாசிப்பாளையம் என்ற பகுதியில் இருக்கும் அருந்ததியர் குலத்தைச் சேர்ந்த ஒரு குடும்பம் இக்குழந்தைக்கு "வீரன்"என பெயர் சூட்டி எடுத்து வளர்க்கின்றனர்.

வீரன் வளர்ந்து வாலிபனான பின் அப்பகுதியை ஆளும் மன்னன் மகளான பொம்மி ஒரு சமயம் ஆற்றுச் சுழலில் மூழ்கி விடுகின்றாள்,வீரன் பொம்மியை காப்பாற்றவே, இருவருக்கும் காதல் அரும்புகின்றது. பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் வீரன் பொம்மியை சிறைபிடிக்கின்றான்.

வீரனின் வீரப்பிரதாபங்களை அறிந்த திருமலை நாயக்க மன்னன் தன் நாட்டில் கள்வரகளின் கொட்டத்தை அடக்க வீரனை நியமிக்கின்றான்.

அப்போது அங்கே ஆடல் அழகியாக நடனமாடும் வெள்ளையம்மாளுக்கும்

வீரனுக்கும் காதல் மலரவே, வெள்ளையம்மாளை மணக்கின்றான் வீரன். இடையில் நரசப்பன் எனபவனின் சூழ்ச்சியாலும், வீரனுக்கெதிரான புனையப்பட்ட குற்றச்சாட்டுகளாலும் மரண தண்டனைக்காளாகி உயிர் விடுகின்றான் வீரன். பொம்மியும், வெள்ளையம்மாளும் வீரனுடன் தங்கள் உயிர்களையும் விடுகின்றனர். முடிவில் மூவரும் சிலைகளாக உருவெடுத்து காவல் தெய்வங்களாகின்றனர்....!




வாரணாசிப்பாளையம் எனும் இடத்தில் ஆரம்பித்த கதை இறுதியில் மதுரை மாமன்னின் கொலைக்களத்தில் முற்று பெறும்.

கவியரசு கண்ணதானின் கூர்மையான அனல்கக்கும் வசனங்கள் "மதுரை வீரன்" படத்தின் வெற்றிக்கு கட்டியம் கூறிற்று.இவரின் வசனங்கள் நகைச்சுவையிலும் வல்லமை புரிந்தது.ஒரு கட்டத்தில் நரசப்பனாக நடிக்கும் டி.எஸ்.பாலையா, "நாங்கள் வீரனை பின் நோக்கி துரத்திச் சென்றோம் அவனோ எங்களை முன் நோக்கிச் சென்று விட்டான்" என கூறும் காட்சிகளில் கவியரசின் நையாண்டி வரிகள் நறுக்கென இருக்கும். மதுரை வீரனாக மக்கள் திலகம் அருமையாக வியாபித்திருப்பார். பத்மினி,பானுமதி வாள் சண்டையில் காட்டும் வீராவேசக் காட்சிகள் அக்கால ரசிகர்களை ஆச்சர்யத்துடன் ரசிக்கத் தூண்டியது. படத்தில் இடம்பெற்ற வாங்க மச்சான் வாங்க, ஏச்சிப் பிழைக்கும்,நாடகமெல்லாம் கண்டேன் போன்ற பாடல்கள் படு ஜனரஞ்சகம். மதுரை வீரன் தென்னக சினிமா வரலாற்றில் பல திரையரங்குகளில் நூறு நாட்களுக்கு மேலாக ஓடி சாதனை படைத்தது. மாநகராட்சி,

நகராட்சி,ஊராட்சி ,சாதாரண சினிமா கொட்டகை,கிராமங்கள் என பல இடங்களில் வரலாறு காணாத வசூல் மழையில் நனைந்தான் "மதுரை வீரன்". இப்படத்தின் வெற்றிக்குப் பின் எம்ஜிஆர் வசூல் ராஜா என பட்டம் பெற்றார். அதிக ரசிகர் மன்றங்கள்,அதிக பட ஒப்பந்தங்கள் என எம்ஜியாரின் சினிமா வாழ்க்கை தரம் உயர்ந்தது. இதற்கு முன்னதாகவும் படங்கள் ஓடியிருக்கின்றன. வசூல் குவிந்திருக்கின்றன. ஆனால் "மதுரை வீரன்"போல் அப்படியொரு வசூலை அதற்கு முன்பு வேறு எந்தப் படங்களும் கொடுத்ததில்லை எம்ஜிஆருக்கு. அதேபோல், அவரை ரசிக்கத் தொடங்கிய கூட்டம் முன்னமே இருந்தது. ரசிகர் மன்றங்களும் கூட முன்பே வைக்கத் தொடங்கி

விட்டார்கள்தான். ஆனால், "மதுரை வீரன்" படம் வந்த பிறகுதான், எம்ஜிஆரின் திரை வாழ்வு பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கியது.

இன்றைக்கும் தென் மாவட்டங்களில் பலராலும் வணங்கப்பட்டு வரும் தெய்வம்... மதுரை வீரன். தமிழ் கூறும் நல்லுலகில், மதுரை வீரன் குறித்தும் அவருடைய மனைவியர் குறித்தும் கர்ண பரம்பரைக் கதைகள் பல


உண்டு. அந்தக் கதைகளையே ஆதாரமாகக் கொண்டு, மிகப்பெரும் தயாரிப்பாளரான கிருஷ்ணா பிக்ஸர்ஸ் லேனா செட்டியார், எம்ஜிஆரின் கால்ஷீட்டை வாங்கி, 'மதுரை வீரன்' படத்தை பிரம்மாண்டமாக உருவாக்கினார்.

அநேகமாக, எம்ஜிஆருக்கு மிகப்பெரிய வெற்றியும் 'யாரது எம்.ஜி.ராமசந்திரன்?' என்று எல்லோரும் வியந்து கொண்டாடியதுமான முதல் படம், முக்கியமான படம் 'மலைக் கள்ளன்' திரைப்படமாகத்தான் இருக்கும். திரையிட்ட அரங்குகளிலெல்லாம் நூறுநாட்களைக் கடந்து ஓடியது.

இதையடுத்து மொடர்ன் தியேட்டர்ஸின் 'அலிபாபாவும் 40 திருடர்களும்' திரைப்படமும் மிகப் பெரிய வெற்றியைச் சந்தித்தது. 'அண்டாகா கஸம், அபூக்கா ஹுகும், திறந்திடு சீசேம்' என்கிற வசனத்தைச் சொல்லாத தமிழ் ரசிகர்களே இல்லை. தமிழின் முதல் கேவா வண்ணப் படத்தில் நடித்த பெருமையும் இதனால் எம்ஜிஆருக்கு வந்து சேர்ந்தது.

எம்ஜிஆரின் வேகத்தையும் சுறுசுறுப்பையும் முக வசீகரத்தையும் முக்கியமாக அவரின் தெள்ளுத் தமிழ் வசன உச்சரிப்பையும் கண்டுணர்ந்த டி.ஆர்.ராமண்ணா, 'குலேபகாவலி' திரைப்படத்தை எடுத்து எம்ஜிஆரை புலியுடன் மோதவிட்டு சாகசக்காரனாக்கினார்.இந்த சமயத்தில்தான் லேனா செட்டியாரின் 'மதுரை வீரன்' படத்தில் நடிக்க ஒப்பந்தமானார் எம்ஜிஆர்.

ஆரம்பத்தில் புராணக்குறிப்புகள் அதிகமாக காணப்பட்டதால் இப்படத்தில் நடிக்க எம்ஜியார் மறுத்து விட்டார். பின்னர் ஆர்.எம்.வீரப்பன், கவியரசு கண்ணதாசன் போன்றோரின் வற்புறுத்தாலும், ஆழமான கதைக் களத்தின் வளங்களி




னாலும் இப்படத்தில் நடித்தார் மக்கள் திலகம். நகைச்சுவையுடன் நகரும் திரைக்கதை, படத்துக்குப் பலம் சேர்த்தது. ஜி.ராமனாதனின் எல்லாப் பாடல்களும்,பின்னணி இசையும் மிகப்பெரிய வெற்றியை அளித்தன.இந்தப் படம் தமிழகமெங்கும் நூறு நாட்களைக் கடந்து, இருநூறு நாட்கள், அதற்கும் மேலே என்றோடி மிகப்பெரிய வசூல் சாதனை செய்தது. 'மதுரை வீரன்' திரைப்படம், முக்கியமாக மதுரை சிந்தாமணி தியேட்டரில் தொடர்ந்து ஹவுஸ்புல் காட்சிகளாக, 200 நாட்களைக் கடந்து ஓடியது. இந்தப் படத்தின் மூலமாக எம்ஜிஆருக்கு மூன்றுவிதமான வெற்றி கிடைத்தது என்கிறார்கள் ரசிகர்கள். அதாவது, எம்ஜிஆருக்கு இந்தப் படம் வெளிவந்த கையோடு, தமிழகமெங்கும் நூற்றுக்கணக்கான ரசிகர் மன்றங்கள் தொடங்கப்பட்டன. 'மதுரை வீரன்' படத்துக்குப் பிறகு எம்ஜிஆரின் சினிமா சந்தையும், சம்பளமும் திரையுலகில் கூடியது.



**ஆக்கம்:எஸ். கணேசன்**
**ஆச்சாரி சதீஷ் கம்பளை**

## காலிமுகத் திடலில்...

அழுத்திச் சீவிய
மண்ணிறச் சிரட்டையில்,
நுரைகள் முளைத்து,
பொங்கி வழிய,
உடனிறக்கிய
பனங் கள்ளை
உனக்குப் பரிசளித்தேன்.
நீயோ...
கீழிருந்து விரிந்து மேலொடுங்கும்,
ஒரு வெண்ணிறக் குடுவையில்,
குட்டி நீர்க்குமிழிகள்
அடர்த்தியாய் மேலெழ,
அக்கணமே இறக்கிய
கித்துல் ராவைப் பரிசளித்தாய்.
என்னவொரு
அழகான போதை ஏறியது
நம்மிருவருக்கும்...
அடேயப்பா..!
நான் 'மால ஹிரவியே...' இசைக்க,
நீயோ 'என்னடி ராக்கம்மா' இசைத்தாய்...
அன்ப...!
இருவரும் சேர்ந்து
எதைப் பரிமாறினோம் என்பதை
இப்போதாவது அறிவாயா...?
சொல்கிறேன் கேள்...!
என் அப்பனும்
உன் அப்பனும்
ஒருவருக்கொருவரர்
'மாத்தையா' ஆகினர்!
என் அப்பனுக்கு நீயும்
உன் அப்பனுக்கு நானும்
'புத்தா' ஆகினோம்!
இவற்றுக்கும் மேலாக,
உனதும் எனதுமான
நம்மிரு அம்மாக்களையும்
நாமிருவரும் 'அம்மா'
என்றே அழைத்தோம்.
அறிவாயா? பின் இருண்ட பொழு
தொன்றில்... என்னை நீயோ...
கீரிமலைக்குரியவன்
என்று குரைத்தாய்!
நானோ உனக்கு...
சிவனொளிபாத மலையிலேதான்
சூரியோதயத்தைக் காண விரும்புகிறேன்,
மகாவலி கங்கையில்தான்
உடலாறக் குளிக்க விரும்புகிறேன்,
களனிக் கங்கையோரந்தான்
காலாற நடக்க விரும்புகிறேன்,
கட்டுநாயக்காவில் இருந்துதான்
விமானம் எடுத்துப் பறக்க விரும்புகிறேன்,
என்றெல்லாம் மறுபடியும்
மறுபடியும் கூறினேன்.
நீயோ
என் முகத்தில், என்னையே நோக்கி
'நீ கீரிமலைக்குரியவன்!
என்று பலமுறை கூவி அறைந்தாய்...
காலத் தீயில்
இருவரும் எரிந்தோம்!
அதன் பின்பும் நீயோ,
கீனயானம், மகாயானம் மறுத்து,
மயானமே வழியெனத்
தேர்ந்தாய்...
நாம் இருவரும்
கண்ணயர்ந்த போது...
உனது 'பத்'தும்
பொலஸ் கறியும்
கால் மாஸும் பருப்பும்
பாணும் காணாமல் போயிற்று...
வற்றிய உனது வயிற்றில் எழும்
பசியின் அழுகுரலால்,
காலிமுகத்துக் காற்று,
ஓவென்று இரைந்தது!
அன்ப! நாம் இருவரும் நமக்குள்
'மாத்தையா' ஆக வேண்டாமா?
சிவனொளி பாதத்தில்
சூரிய உதயமும்
கீரிமலைக் கடலில்
அதன் மறைவும்
நாமிருவரும்
காண வேண்டாமா!
காலிமுகத்து அலைக் கூதலில்
இப்போது
புரட்சி போதையாகியதா?
அல்லது
புகைக்க விருப்பமில்லையா?

செ.சுதர்சன்

# உடப்பு கிராமத்தில் 'சித்திரைச் செவ்வாய் முளைக் கொட்டு'





உடப்பு கிராமத்தில் மழை வேண்டி மாரியம்மனை மங்கல மங்கையர் ஆடிப் பாடி கும்மியடித்து வழிபடும் முறை இந்த கிராமத்திற்கே உரிய ஒரு வழிபாட்டு முறையாகும். பெண்கள் ஒரே வர்ண சேலை அணிந்து வரிசையாக வலம் வந்து இரு கைகளாலும் ஓசை உண்டாக்கி செவ்வாய் கொட்டுவார்கள். இந்தக் கண் கொள்ளாக் காட்சி உடப்பு கிராமத்தில் மட்டும் பார்ப்பவரை கவரும் வண்ணம் நடைபெறுகின்றது. சித்திரைச் செவ்வாய் சடங்கு நிகழ்ச்சி இலங்கையில் ஏனைய எந்தவொரு பிரதேசத்திலும் இருப்பதாக அறிய முடியவில்லை.

(கலைச்சுடர், கலாவிபூஷணம் க. மகாதேவன்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.